காவோ

ஏப்ரல், 1960



50 காசு

வாடாத இளமை யழகு
வாராதோ விரலசைந்தால்!

வெயிலும் புழுதிக் காற்றும் உங்கள் இளமை யழகைப் பறித்துச் செல்வானேன்? ஹிமாலயா புக்கே ஸ்நோவின் மூலம் உங்கள் சருமம் இயற்கை மெருகுடன் சோபிக்கட்டும். சோர்வுற்று வரண்ட சருமங்கூட துளிர்த்தெழும் புதுமலர்ச்சி யோடு தளதளப்புடன் மிளிரக் காண்பீர்கள்! முகப்பருக்களும், சுருக்கங்களும் வராமல் பாதுகாப்பது ஹிமாலயா புக்கே ஸ்நோ. கண்ணுங்கருத்துமான பராமரிப்புக்கு . . .

ஹிமாலயா புக்கே ஸ்நோ

HBS.18-50 TM

லண்டனிலுள்ள இராஸ்மிக் சார்பாக இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

63
2-60

உங்கள் தோட்டத்தை நவீன முறையில் அமைக்க
நீண்டகாலம் நிலைப்பதும் தீயினால் கெடாதது
மான கான்க்ரீட்டை உபயோகியுங்கள்

ஏஸிஸி அல்லது சங்கர் பிராண்ட் ஸிமெண்டுதான் வேண்டுமென்று கேளுங்கள்

உங்கள் ஸிமெண்ட் தேவைகளுக்கு ஸி.எம்.ஐ. ஸ்டாக்கிஸ்டுகளையோ அல்லது இந்த விலாஸத்திலோ விசாரியுங்கள் : தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட், 9 மவுண்ட் ரோடு, மதருஸ். 6/12, ரேஸ் கோர்ஸ், கோயமுத்தூர்.

கான்க்ரீட் வேலை சம்பந்தமான எல்லாவித ஆலோசனைகளையும் இலவசமாகப்பெற இந்த விலாஸத்துக்கு எழுதுங்கள் : தி கான்க்ரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 9 மவுண்ட் ரோடு, மதருஸ்.

ACC | SANKAR IC BRAND

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி
ஆப் இந்தியா பிரைவேட் லிட்.

தி அஸோஸியேடட் ஸிமெண்ட்
கம்பெனீஸ் லிமிடெட்

தி இந்தியா ஸிமெண்ட்ஸ்
லிமிடெட்



உங்கள் சொந்தத்

தொழிலை ஆரம்பியுங்கள்

சீரான வாழ்க்கை நடத்தவும்

நீங்களும், நாட்டு மக்களும் வேலை வாய்ப்பைப் பெறவும்

நாட்டு உபயோகத்திற்கும், ஏற்றுமதிக்கும் அதிகப் பொருள்களை உற்பத்தி செய்து வசதிகளைப் பெருக்கவும்

நாடு மேலும் சுபிக்ஷத்துடன் விளங்கவும்

தற்சமயம் இருந்துவரும் சிறு தொழில்களை விஸ்தரிக்கவும், புதிய தொழில்களை அபிவிருத்தி செய்யவும், ராஜ்ய, மத்திய அரசாங்கங்கள் பலவித திட்டங்களை நடைமுறையில் கொண்டுவந்துள்ளன.

1 ஒரு தொழிலை தேர்ந்தெடுப்பது, அதற்கான இடம் நிர்ணயிப்பது, தேவையான மெஷினரி மற்றும் தொழில் நிபுணர்களை பொறுக்குவதற்கு ஆலோசனை கூறுவது

2 பலவித தொழில்பேட்டைகளிலும், காலனிகளிலும் மின்சாரம், தண்ணீர், நீராவி, கழிவுநீர் செல்ல, ஆகிய வசதிகளுடன் கூடிய தொழில் இடங்களை அமைப்பது.

3 அரசாங்க இலாக்காக்கள், பாதி (செமி) அரசாங்க நிலையங்கள், பெரிய தொழில் ஸ்தாபனங்களுக்கு சாமான்கள் சப்ளை செய்வதற்கான ஆர்டர்களை பெற உதவி புரிவது.

4 புதிய மெஷின்களை கையாளும் முறைகளை நடமாடும் வாகனங்களில் சென்று விளக்கிக் காட்டுவது. பிராந்தியத்தில் உள்ள எக்ஸ்டென்ஷன் சென்டரின் நிகர வேலையையும் விளக்கிக் காட்டுவது.

5 சொற்ப கட்டணத்தில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு சேவை வசதிகளை அளிப்பது.

- i மர வேலை
- ii பொது என்ஜினியரிங் மற்றும் வார்ப்படச்சாலை பயிற்சி
- iii மெஷின் ஷாப் பயிற்சி
- iv எலக்ட்ரோ பிளேட்டிங் மற்றும் பினிஷிங்
- v கண்ணாடி மற்றும் மண்பாண்டம்
- vi தோல் பதனிடுதல்
- vii பாத அணிகள் தயாரிப்பு
- viii பழம் பாதுகாப்பு—முதலியன

மேற்கொண்டு விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள எக்ஸ்டென்ஷன் சென்டர், சூப்பரின்டெண்டெண்ட், அல்லது உங்கள் ஜில்லாவில் உள்ள தொழில், வாணிப இலாகா உதவி டைரக்டரை அணுகுங்கள். அவர்கள் எல்லா விவரங்களையும் மகிழ்வுடன் தந்து உதவுவார்கள்.

: உதவிக்கு நாடுங்கள் :

சிறு தொழில்கள் சேவா நிலையம்

சென்னை

காவேரி

பொருளடக்கம்

விகாரி-ஹு மலர் 19	ஏப்ரல் — 1960	பங்குனி இதழ் 8

டில்லித் தபால் ...	கே. ஸ்ரீநிவாஸன் ...	5
வித்தை ...	க. பஞ்சாபகேசன் ...	9
இதுதானு நாகரிகம்? ...	ராமயோகி ...	14
நினைவின் எதிரொலி ...	எஸ். லக்ஷ்மி சுப்பிரமணியம் ...	17
தொழில் துணுக்குகள் ...	விசால்தேவ் ...	22
சப்தபதி (புதிய தொடர்கதை) ...	சரஸ்வதி ராம்னுத் ...	25
அருள்மொழி வர்மன் ...	திருவரங்கம் அமிழ்தன் ...	33
ஆகாயக் கோட்டை ...	அ. சுப்பையா ...	41
கடவுள் எங்கே? ...	க. தி. ஜகந்நாதன் ...	49
காதலிக்க நேரமில்லை! ...	'பரதேசி' ...	55
அழகும் ஆணவமும் ...	இதயன் ...	61
வஜ்ர வீணை (தொடர்கதை) ...	கே. சுந்தராம்பாள் ...	65
விஞ்ஞானத் துணுக்குகள் ...	நா. கி. நாகராசன் ...	73
இன்பமே இங்கே வா! (தொடர்கதை) ...	தி. சேஷாத்திரி ...	76
பெண்களுக்கு மட்டும் ...	எஸ். விஜயா ...	81
சிறுவர் பகுதி ...	எஸ். விசாலாட்சி ...	86
நீரழிவைப் போக்கும் பஞ்ச மூலிகைகள்	அ. ராம்கோபால் ...	90
திரை உலகம் ...	விச்வம் ...	94

குறிப்பு: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

லைப்பாய் இருக்குமிடம்
அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!

ஆஹா ஹா! லைப்பாய் ஸ்நானத்தின் இன்பமே இன்பம்! உங்களைக் கிளுகிளுக்க வைக்கும் ஆரோக்கியப் புதுமலர்ச்சி...'எல்லாம் இன்ப மயம்'! செழிப்பு மிக்க லைப்பாய் நுரை, அழுக்குடன் கிருமிகளைக் கழுவிக் களைந்து உங்கள் உடல் நலனைப் பாதுகாக்கிறது; வேலை செய்யும்போதும் சரி, விளையாடும்போதும் சரி, அழுக்கிலிருந்து தப்பி வாழ யாரால் முடியும். ஆகவே, இன்றுமுதல் லைப்பாய் உபயோகிக்கத் தொடங்குங்கள்; ஆம், குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருமே!

J. 10-X52 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

காவேரி

விகாரி-ஹூ மலர் 19	"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் — கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"	பங்குனி இதழ் 8

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

சாதாரணமாக கொலை வழக்குகளில் மக்கள் கவனம் செலுத்துவது சகஜம். ஏனென்றால், மர்மக் கதைகள் முதல் சதி செய்து உயிர் பறிக்கும் கேஸ்கள் வரை விவரங்களும், வாதப் பிரதிவாதங்களும் ஜனங்களுக்குச் சிரத்தை கொடுப்பது இயல்பு. சென்னை மாகாணத்தில் கருங்குழி பார்ஸல் கேஸ் முதல், லக்ஷ்மீகாந்தம் வழக்குவரை அவைகளை இறுதியில் விசாரணை செய்யும் செஷன்ஸ் நீதிபதி மன்றத்தில் விசேஷ அக்கறை காண்பிக்கப்பட்டது. ஆனால், எந்த கேஸும் சமீபத்தில் முடிவான ஸ்ரீ நானாவதி கேஸைப்போல் அகில இந்திய அளவில் பரபரப்பை உண்டாக்கவில்லை.

நானாவதி வழக்கில், மற்ற வழக்குகளைப் போல் கொலை சம்பந்தப்பட்டவரை, மிகவும் சாமர்த்தியமாக எதுவும் செய்யப்படவில்லை. ஸ்ரீ நானாவதி இந்தியக் கப்பற்படையில் கமோடோர் பதவி வகிப்பவர். இவருக்கு ஆங்கிலேய மனைவி. இவர் சமுத்திரத்தில் உத்தியோக சம்பந்தமாகச் செல்லும் பொழுதெல்லாம் ஸ்ரீமதி பம்பாயில் பிரபல தனிகரான ஸ்ரீ அஹுஜா என்ற ஒரு பரம்பரை காமலோலனுடன் காதல் லீலை நடத்துவது வழக்கம். இது ஸ்ரீ நானாவதிக்குத் தெரிந்ததும் அவர் கப்பற்படைத் தலைமைக்காரியாலயத்துக்குச் சென்று, சில ரவைகள் சகிதம் ஒரு கைத் துப்பாக்கியைத் தன் உத்தியோக ஹோதாவில் பெற்று, ஸ்ரீ அஹுஜாவின் வீட்டுக்குச் சென்று, ஸ்னான கட்டடத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த ஸ்ரீ அஹுஜாவைக் கொன்று, பிறகு போலீஸாரிடம் அடைக்கலம் புகுந்தார்.

இந்தக் கேஸில் மர்மமோ, புரியாத விஷயமோ எதுவும் கிடையாது. எல்லாம் ஸ்பஷ்டமாகத் தெரிந்த விஷயம். முதல் முதலில் கதையைக் கேட்பவருக்கு ஸ்ரீ அஹுஜாவிடம் அனுதாபம் ஏற்படாது தான். இருந்தாலும், இந்தக் கேஸில் ஆதிமுதல் தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கப்பட்டு வந்த விஷயம், எவ்வளவு கிராதகனானாலும் சரி, அவனுடைய உயிரை வாங்க எந்தத் தனி நபருக்கும் உரிமை இல்லை என்பதாகும். இது நீதிமன்றங்களில் அவ்வப்பொழுது வற்புறுத்தப்படும் விஷயமுமாகும். ஆனால், ஸ்ரீ நானாவதி கேஸில் பம்பாயின் பிரபல வாரப் பத்திரிகை ஒன்று அபார சிரத்தை காட்டி, கேஸ் விசாரிக்கப்படு முன்னரே "ஸ்ரீ நானாவதி குற்றமற்றவர்; கொடுங்கோல் நீதி முறை ஒன்றுதான் அவரைக் கைதியாக்கி, கொலையாளியாக்கி உலகத்தின் முன் நிறுத்திற்று" என்று பிரசாரம் செய்தது. இதைத்தவிர, ஸ்ரீ நானாவதி பார்ஸி சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது பொதுஜன அபிமானம் உண்டாக்க நடத்தப்பட்ட கிளர்ச்சிக்கு ஒரு காரணம். ஆகவே, கேஸ் ஆரம்பமாகி முடிவடைவதற்குமுன் மக்கள் சார்பில் நியமிக்கப்படும் பாமர ஜூரிகள் ஸ்ரீ நானாவதி குற்றமற்றவர் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். "இந்த முடிவு அனர்த்தமானது; சட்ட

முறைக்கு ஹானி விளைவிக்கக்கூடியது” என்று செஷன்ஸ் நீதிபதி அத்தக்கேஸை மேலே உயர்தர நீதி மன்றத்துக்கு அனுப்பிவைத்தார். இந் நீதிபதிகள் கொண்டகோர்ட் ஸ்ரீ நாணுவதி குற்றவாளி என்ற முடிவுக்கு வந்தது.

இதுவரை சரிதான். இந்தக்கட்டத்தில் தான் ஒரு ருசிகரமான மாறுதல். ஹைக்கோர்ட் ஸ்ரீ நாணுவதியைக் கைதுசெய்ய வாரண்ட் பிறப்பித்தது. வாரண்டு நிறைவேறுமுன் எங்கேயோ பம்பாயில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிந்த கவர்னர், அரசியல் சாஸனத்தின் கீழ்த் தனக்குள்ள விசேஷ அதிகாரத்தைப் பிரயோகித்து ஹைக்கோர்ட்டின் ஆயுள்தண்டனை உத்திரவை நிறுத்திவைத்தார். சமீபகாலத்தில், இம்மாதிரி தலையீடு விஷயங்களில் அபாரத் திறமையுடன் வாதம் செய்யும் ஆச்சாரிய கிருபளானி, பார்லிமெண்டில் இந்தச் சம்பவத்தைப் பிரஸ்தாபித்துக் கவர்னரைக் கண்டித்தார். வழக்கம்போல் பொறியில் அகப்பட்ட எலியைப்போல் பண்டிதநேரு “நான்தான் இந்தத் தலையீட்டுக்குப் பொறுப்பாளி” என்று கொஞ்சமும் மனதில் பதியாதவாறு சமாதானம் சொன்னார்.

இந்தச் சம்பவம் பண்டிதருக்கு ஜனநாயகத்திலோ, அல்லது அம்முறைகளிலோ உள்ள அசிரத்தையைக் காட்டுகிறது. பார்லிமெண்டு, நீதி வர்க்கம், பொது உத்தியோக பொறுக்கும் கமிஷன், பத்திரிகை உலகம் இவைகள்தான் ஜனநாயகத்தின் நான்கு தூண்கள். இவைகளில், கடைசித் தூணை டில்லியில் வெகு காலத்திற்கு முன்பே உடைத்து நொறுக்கித் தூள் செய்துவிட்டார். லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் விசாரணைக்குப் பிறகு நீதிபதிகளின் நேர்மைக்குத் தன் அவசர சர்வ வல்லமை தொனிக்கும் ஒரு பிரசங்கம் மூலம் விகல்பம் கற்பித்தார். இப்பொழுது ஒரு சுயேச்சை உள்ள நீதி வர்க்கத்தின் முடிவில் நிர்வாகம் தலையிட்டு விட்டது.

பம்பாய் ஹைக்கோர்ட் அவ்வளவு சுலபமாக பண்டிதருக்குச் சர்வாதிகாரம் கொடுக்கத் தயாராக இல்லை. ஸ்ரீ நாணுவதியின் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்ய அனுமதி கோரிய மனுவை பம்பாய் ஹைக்கோர்ட் நிராகரித்துவிட்டது. இப்பொழுது பார்க்க வேண்டும் நம் “சர்வாதிகாரி” என்ன செய்வார் என்று.

* * * *

சென்ற மாதம் ஜனநாயக வாதிகளை சந்தோஷப்படுத்த நடந்த மற்றொரு கழ்ச்சி சுப்ரீம் கோர்ட்டின் தீர்மானம் ஒன்றாகும். ஸர் பிரோஸ் கான் நூன் (இறுதி பாக் ஜனநாயகப் பிரதமர்) ஸ்ரீ நேருவுடன் கிழக்குப் பாகிஸ்தான் சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் முடிவு பாகிஸ்தான் சில பகுதிகளை இந்தியாவுக்கும், இந்தியா சில பகுதிகளைப் பாகிஸ்தானுக்கும் கொடுக்க ஒப்புக்கொண்டன. இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றவும் நிறைவேற்றினார்கள். இந்த ஸ்தல மாற்றத்தை பார்லிமெண்டுக்கு முன்னால் வைத்த பொழுது, எதிர்த்தரப்பு மெம்பர்கள் இந்தக்கொடுக்கல்,வாங்கலில் இருந்த ஒரு பெருங் குறையை எடுத்துக் காட்டினார்கள். இந்த விட்டுக்கொடுக்கும் வியாபாரத்தில் முதலில் வங்காள சட்டசபையையும், பிறகு பார்லிமெண்டையும் கலந்து கொண்டிருக்க வேண்டுமென்று மெம்பர்கள் சொன்னார்கள். இந்த எதிர்ப்பை உத்தேசித்து மத்திய சர்க்கார் இந்த விஷயத்தைச் சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பி அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டார்கள்.

சுப்ரீம் கோர்ட்டு இந்த விவகாரத்தை நன்கு ஆராய்ந்தபின்னர் மத்தியசர்க்காருக்கு ஒரு சதுர அங்குல நிலத்தைக்கூட மற்ற எந்த நாட்டுக்கும் விட்டுக்கொடுக்க சுதாவாக அதிகாரம் கிடையாது என்றும், அரசியல் சாஸனப்பிரகாரம் அதில் கண்டுள்ள மாகாண ஷரத்துக்களை முதலில் திருத்த வேண்டும் என்றும், அதற்கு முன் சம்பந்தப்பட்ட மாகாண சட்டசபையின் சம்மதம் வேண்டும் என்றும், இவைகளை எந்த பரிவர்த்தனையை அமுல் செய்யுமுன்னும் கண்டிப்பாக அனுஷ்டித்தாகவேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட்டு தன் அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கிறது. இந்தஅபிப்பிராயத்தின் பயனாக பண்டித நேரு இனி தன்னிஷ்டப் பிரகாரம் எந்த ஸ்தல பரிவர்த்தனையையும் செய்யமுடியாது; குறிப்பாக, இந்திய, சீனப் பிரச்னை சம்பந்தமாக நடக்கப்போகும் சம்பாஷணைகளில் அவர் தன் போக்கில் எந்த முடிவையும் செய்ய முடியாது. இந்த மட்டிலும் நாட்டிற்கு க்ஷேமம்.

* * * *

பணத்தை எப்படிச் செலவழிப்பது என்று தெரியாதவர்களுக்கு மேலும் மேலும் வரிப் பளுவை அதிகரிப்பதற்கு உரிமை கிடையாது என்று ராஜாஜி வற்புறுத்தி வருகிறார். வெள்ளைக்காரர்கள் அரசுபுரிந்த நாட்களில் ஒரு பியூன் உபரியாக நியமிக்க வேண்டும் என்றால்கூட நிதி இலாக்காவின் சம்மதம் தேவை. இன்றோ எந்த நாட்டிலாவது ஒரு புதிய ஸ்தானீகம் நிறுவவேண்டும் என்றால்கூட பண்டித நேரு தன் சகாக்களைக் கூடக் கலந்துகொள்வதில்லை. பெயரளவில், யூனியன் ஸர்விஸ் கமிஷனுக்கு (ரூ. 300-க்கு மேற்பட்ட உத்தியோகங்கள்) தெரியப்படுத்தப்பட்டுஅக்கமிஷன் சிபார்சு செய்யும் நபர்களைத்தான்நியமிக்கவேண்டும். இரியாம்சையில் ரூ. 2,000 கொண்ட உத்தியோகங்களுக்குக்

கூட "தகல்பாஜி" மூலம் காலி ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன. குடந்தையில் பள்ளிக்கூடத்திற்குக் கட்டிடம் இல்லாத குறையால் சர்க்கார் அங்கீகாரம் இல்லாமல் தவிக்கலாம். ஆனால், டில்லியில் உள்ள நாகரிக நவமண்டல வனிதைகளின் கண்கள் அசைந்தால் பத்தாயிரம், லக்ஷம் என்று பணம், தான்தோன்றி நாடகம், நாட்டியம், சங்கீதக் கல்லூரிகளுக்குக் கிட்டிவிடுகின்றன. கட்டிடம் கட்டி சில நபர்கள் ஹாய்யாக அதில் போதிக்கும் சிரமம் இல்லாமல் மங்களம் பாடிக்கொண்டு இருக்கிறார்கள். சங்கீதத்திற்கும், நாடக நாட்டியத்திற்கும் வெகுதூரம் உள்ளவர்கள்தான் ஜனாதிபதியின் வருடாந்திரப் பரிசுகளுக்குக் கலைஞர்களைப் பொறுக்குகிறார்கள். எந்த நேயருக்காவது சந்தேகம் இருந்தால் நான் இந்த நாரீமணிகளின் பெயர்களையும் அவர்கள் புரளும் கட்டிடங்களின் விலாசங்களையும் கொடுக்கத் தயார்.

இதை ஏன் சொல்ல வந்தேன் என்று வாசகர்கள் ஊகித்துக் கொண்டிருக்கலாம். இவ்வருஷ பட்ஜெட்டை சமர்ப்பித்த ஸ்ரீ மொரார்ஜி தேசாய் முதலாளிகளின் நண்பர் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. ஆகவே, அவர் தன் நண்பர்களின் பைகளில் கை வைக்காமல் விட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால், புல் சுட்டு கரி சேர்ப்பதைப்போல் அவர் சைக்கிள்களையும், மின்சார விசிறிகளையும் விலை ஜாஸ்தியாக்கியிருக்க வேண்டாம். மத்திய பட்ஜெட்டில் துண்டு ஏராளமாக விழும் என்பது எதிர்பார்க்கப்பட்ட விஷயம். ஆனால், பொதுவாக பெருவாரியான கண்டனத்துக்குள்ளான சமூக அபிவிருத்தி மந்திரி இலாக்காவை ஒழித்துக் கட்டி இந்த இலாக்கா புரட்டுவதை மாகாணங்களிடம் ஒப்படைத்திருக்கலாம்.

ரயில் நிர்வாகம், லாரி பஸ்களுடன் போட்டி போட முடியவில்லை என்பது சென்ற வருஷத்திலிருந்து தெளிவான விஷயம். சென்ற வருஷத்திலேயே சக்கரங்கள் இயங்கத் தேவையான டயர்களையும், டியூப்களையும் வரி பளுவிற்குள்ளாக்கி அவைகளை விலையுயர்ந்ததாக்கினார்கள். இந்த வருடம் டீஸல் எண்ணெய்க்கு மேலும் வரி. இவைகளை மிகவும் நாஸூக்காக பொதுஜனங்களைப் பாதிக்காத வரிகள் என்று நிதி மந்திரி இலாக்கா எடுத்துக் காட்டியிருக்கிறது. உண்மை என்னவென்றால் எந்த உயர்வையும் பலமடங்காக்கி அவைகளைப் பொது மக்களிடமிருந்து வசூல் செய்வதில் சமர்த்தர்கள் வர்த்தகத்துறையில் ஈடுபட்டவர்கள். மத்திய சர்க்கார் நிர்வாகம் "யானையும் ஆறு குருடர்களும்" என்ற கதையை நமக்கு நினைவூட்டினால் தவறு நம்முடையதா?

* * * *

சென்ற சில மாதங்களாக ஸ்ரீ ஸி. டி. தேஷ்முக் மத்திய மந்திரிகளைப் பற்றியும், மாகாண மந்திரிகளைப்பற்றியும் விசாரிக்க ஒரு தேசிய விசாரணைக்குழு தேவை என்று அலறி வருகிறார். அவருடைய கக்ஷி மிகவும் தெளிவானது. மக்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை ஊன்ற வேண்டுமென்றால் மந்திரிகளின் நடத்தை அப்பழுக்கு இல்லாததாக இருக்கவேண்டும். மந்திரிகளே ஊழல்களுக்கும், லஞ்சத்துக்கும் காரண பூதர்களாகயிருக்கும்பொழுது போலீஸைவிட்டு ஏன் கீழ்த்தரச் சிப்பந்திகளை மாத்திரம் விரட்டிக்கொண்டிருக்க வேண்டும்?

ஊழல் என்பது பணம் காசு வாங்குவது மட்டும் அல்ல. தனது உறவினர்களுக்கோ, அல்லது சிநேகிதர்களுக்கோ உத்தியோகங்களில் சலுகையோ, அல்லது முதலாளி நண்பர்களுக்கு சலுகைகளோ காட்டினால் அச்செய்கைகளும் ஊழல்களே. இம்மாதிரி பல செய்கைகள் ஸ்ரீ ஸி. டி. தேஷ்முக்கிடம் புகார் செய்யப்பட்டுள்ளன. "ஒரு விசாரணை மன்றம் ஏற்படுத்துங்கள்; நான் விவரங்கள் கொடுக்கிறேன்" என்று கரடியாகக் கத்தி வருகிறார் ஸ்ரீ தேஷ்முக். இதற்கு பண்டித நேருவின் பதில்: "உம்மிடம் இருக்கும் தகவல்களை எனக்குத்தெரிவிக்கவும். நான் விசாரிக்கிறேன்." இதற்கு ஸ்ரீ தேஷ்முக் உடன்பட இணங்காததில் ஆச்சரியம் இல்லை. தகவல்கள் கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட மந்திரிகள் ருஜுக்களையும் சாக்ஷிகளையும் ஒழிக்க முற்படுவார்கள். பிறகு கேஸே இல்லை என்ற நிலைமை ஏற்படும் என்பது சென்ற சில வருஷங்களில் கண்கூடாகக்கண்ட அநுபவம்.

பஞ்சாபில் ஸ்ரீ பிரதாப்ஸிங் கெய்ரானுக்கு விரோதமாக கிட்டத்தட்ட அம்மாகாணமே இருக்கிறது. ஸ்ரீ கெய்ரானின் நேர்மையின்மை பல தலைகள் கொண்ட திவட்டி. இருந்தும் பண்டித நேரு அதைப்பற்றி ஒன்றும் செய்யத் தயாராக இல்லை. உத்தரப் பிரதேசத்தில் "பிரஷ்டாசாரம்" என்கிற அருமையான ஹிந்தி சொல்லுக்கு சங்கேதமான அர்த்தம் உண்டு. லஞ்சம் வாங்குதல், தன் சொந்தக்காரர்களுக்குச் சலுகை காட்டுதல், உத்தியோகங்களில் ஒழுங்கின்மை, சத்தியத்துக்கு முரண் இத்தியாதி. அம்மாகாணத்தில் கிட்டத்தட்ட 100 காங்கிரஸ்காரர்கள் 'ரிஹந்த்' அணைத் தேக்கம் சம்பந்தமாக அம்மாகாணப் பாசன மந்திரி மிகவும் கேவலமான பிரஷ்டாசாரத்தில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டினார்கள். இதைச் சாங்கோபாங்கமாகப் புள்ளி விவரங்களுடன் தெரிவித்தார்கள். நடந்தது என்ன? பண்டித

நேரு தானே நேரடியாக அம்மந்திரியின் நடத்தையை விசாரிப்பதாகச் சொல்லிக் கடைசியில் 'ஒன்றுமே இல்லை' என்றுவிட்டார். இதனால் இன்னும் ஸ்தாபனத்தில் உள்ள காங்கிரஸ்காரர்கள் மனம் உடைந்து விடுகிறார்கள். மகாத்மா காந்தி "யாராயிருந்தால் என்ன? நேர்மை தவறியவர் நேர்மையற்றவரே" என்ற கொள்கையைக் கடைப்பிடித்துக் காங்கிரஸை ஹிமாலயத்துக்கு ஒப்பான ஸ்தாபனமாக்கினார். அவருடைய வாரிசு தனிப்பட்டவர்களுக்குத் தாக்ஷிண்யம் காட்டி ஸ்தாபனத்தைக் கிட்டத்தட்ட மூடும் நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டார்.

இம்மாதிரி நிலைமையால் காங்கிரஸின் எதிரிகளுக்குத்தான் பிரயோசனமே தவிர காங்கிரஸுக்குப் பிரயோசனம் ஏதுமில்லை.

* * * *

மாணவர்களிடையே ஒழுங்குக் குறைவு ஒரு பெரிய பிரச்னையாகிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, உத்தரப் பிரதேசத்து சர்வ கலாசாலைகளில் இந்தப் பிரச்னை, கல்விக்கே ஒரு பெரிய உலை வைத்துவிடும் கட்டத்திற்கு வந்துவிட்டது. லக்னௌ சர்வ கலாசாலையில் சென்ற இரண்டு மாதங்களாக நடக்கும் கலாட்டாவைக் கவனித்தாலே போதும்.

இந்த சர்வ கலாசாலையில் உள்ள மாணவர் சங்கம், ஒரு முதிர்ந்த வயதுள்ள ஆசான் நடத்தை தவறினார் என்று ஒரு அபாண்டப் புளுகு புளுகிற்று, இதையொட்டிக் கல்லூரிகளில் கதவடைப்பு ஏற்பட்டதுடன் மாணவர்கள் கிளர்ச்சியொன்றும் ஏற்பட்டது. கிட்டி முட்டி வரும்பொழுது யாரும் துர்நடத்தைக் குற்றச்சாட்டை நிரூபிக்க முன்வரவில்லை. உண்மையில் குற்றம் சாட்டிய மாணவர் சங்கம், "தான் அப்படிப்பட்ட குற்றம் எதுவும் சாட்டவில்லை" என்று கட்சியாடிற்று. சர்வகலாசாலை அதிகாரிகள், சம்பந்தப்பட்ட மாணவர் தலைவர்கள் மேல் ஒழுங்கு நடத்தை எடுத்து அவர்களைச் சர்வகலாசாலையிலிருந்து வெளியேற்றினார்கள். உடனே, வெளியேற்றினவர்களைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று மற்றொரு கிளர்ச்சி நடந்தது. அதைத் தொடர்ந்து ஒருமாணவர் "சாகும்வரை பட்டினி" விரதம். கடைசியில் சர்வகலாசாலை அதிகாரிகள் விலக்கிய மாணவர்களைத் திரும்பவும் சேர்த்துக் கொண்டார்கள்.

உண்மை என்னவென்பதைக் கடைசிவரை வெகு சிலரே அறிந்தார்கள். உத்தரப் பிரதேசத்துச் சர்வகலாசாலைகளில் அரசியல் வாதிகளின் செல்வாக்கு உண்டு. சுதந்திரப்போர் நாட்களில் இவர்களுக்குச் சர்வகலாசாலைகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக் காரணம் இருந்தது. அதற்குப் பிறகும் ஒரு காங்கிரஸ் தலைவர், பின்னளில் மந்திரியானவர், தன்பிடியைச் சர்வ கலாசாலையில் தளர்த்தாமல் வைத்துக் கொண்டதுடன் ஆசான்கள் தன்னிடம் விசுவாசம் கொள்ளவேண்டும் என்று சுமார் 13 வருடங்களாக அட்டகாசம் செய்து வந்தார். சென்றபொதுத் தேர்தலிலும், அதற்குப் பிறகு நடந்த உபதேர்தலிலும் இவருடைய கெட்டபெயர் காரணமாக இவர் தோற்கடிக்கப்பட்டார். இதனால் அவருக்குச் சர்வகலாசாலையில் இருந்த பிடி தளர்ந்தது. அவரை எதிர்த்துவந்த புரொபஸர் காளி பிரஸாத் என்பவர். இவர் அடுத்தபடியாக உப அத்யக்ஷகராகக்கூடிய சான்ஸ் இருந்தது. இவருக்கு இந்த சான்ஸ் கிடைக்காவது என்று அந்த அரசியல்வாதி மாணவர்களைக் கிளப்பிவிட்டு அந்தப்புரொபஸரின் பெயருக்கு இழுக்கு உண்டாக்கினார். அவர் கொடுத்த பணத்துக்கு ஆசைப்பட்டு சில மாணவர்கள் (கிளர்ச்சியையே தொழிலாகக் கொண்டவர்கள்) சர்வகலாசாலையில் ஒரு ஸ்தம்பனத்தையே உண்டாக்கிவிட்டார்கள்.

இதன் படிப்பினையையும், மற்ற சர்வகலாசாலைகளில் உள்ள ஒழுங்கின்மையையும் சர்வகலாசாலை படியளக்கும் கமிஷன் ஆராய்ந்து வருகிறது. சர்வகலாசாலைகளில் கட்டாயமாக மாணவர் சங்கம் இருப்பதை நிறுத்திவிட வேண்டும் என்பது இதனுடைய கருத்து. தவிர, இம்மாதிரி மாணவர்களுக்கு (சம்பந்தம் இல்லாத விஷயங்களில் கிளர்ச்சி செய்யும் மாணவர்கள்) சாதாரணமாக ஒரு பட்டம் பெற்று மற்றொரு பட்டத்திற்குப் படிப்பவர்கள், கிளர்ச்சியில் ஈடுபடுபவர்களின் பட்டத்தை பறித்துவிடவேண்டும் என்பது மற்றொரு சிபாரிசு. இவைகளைச் சீக்கிரமே அமல் செய்தால் மாணவர் சமூகத்துக்கே நன்மை.

பாலைவனச் சோலை
ஜி. எஸ். மணி
எழுதும்
அடுத்த (மே)
இதழில்
புதிய தொடர்கதை ஆரம்பம்.....

வித்தை

க. பஞ்சாபகேசன்

மண்ணுக்கு அடியில் ஜீவ கங்கை உள்ளது. ஊற்றுப் பறித்தால் நீர் சுரக்கிறது; ஆழக்கிணறு தோண்டினல், கண்களைப் போல் ஊற்றுகளிலிருந்து நீர் தளும்புகிறது. மண் பொய்ப்பதில்லை; தானியங்களைத் தருவதில் மட்டுமல்ல, ஜீவ கங்கையைத் தருவதிலும்.

கிராமத்தில் பரபரப்புக் குடி கொண்டிருந்தது. காரணத்தை இரண்டு வகையாகச் சொல்லலாம்: உயர் மிராசுகள் குடியிருந்த தெருவின் நடு மத்தியிலிருந்த ஒரு கிணற்றில் ரொம்ப நாள் தண்ணீரே இல்லாமலிருந்து, இன்று முழங்கால் அளவுக்குத் தண்ணீர் நின்றது ஒரு காரணம்.

ஊரைச் சுற்றி நசித்துப்போன சேதிகளைச் சேகரிக்கும் மாது, அன்று காலையில் அந்தக் கிணற்றுச் சுவரில் உட்கார்ந்து ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த கருடப் பறவையைக் கண்டு கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

உள்ளே கிணற்றுக்குள்ளிருந்து 'சளசள' வென்ற சத்தம் வந்தது. மாதுவுக்குப் புல்லரித்தது. உலகமெல்லாம் பொய்க்காத மண் அந்த ஊரில் அந்தவொரு இடத்தில் மட்டும் பொய்த்து விட்டதாக நீரே சுரக்காத வெறுங் கிணருகவே இருந்து வந்தது அது; மழை பெய்தால் தொட்டியில் நிரம்புவது மாதிரி நீர் தங்கும்; அடுத்த நாளே கிணற்று அடி மண்ணுக்கு எத்தனை யுக தாகமோ அத்தனை நீரையும் உள்ளுக்குப் பருகிவிடும்.

மாது கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். ஆச்சரியம்! அவன் முகமும் பரட்டைத் தலையும் தெரிந்தன! துவைத்துத் துவைத்துக் காவி ஏறிப்போயிருந்த மேற்துண்டுக்குள்ளே, பழைய அமுது சாப்பிட்டுச் சாப்பிட்டு உருண்டிருந்த தோள்களும் தெரிந்தன.

"வேம்பு மாமா...!" என்று அடுத்த கணமே கூவிக்கொண்டு, கிணற்றை ஒட்டி எதிரே இருந்த காரை வீட்டுக்குள் விஷயத்தைச் சொல்ல ஓடினுன் மாது.

ஊர்ப் பரபரப்புக்கு மற்ருெரு காரணம் இது: அன்று மாலை வீரபத்திரய்யர் ஊருக்கு வருகிருராம்.

பக்கத்துக் கிராமங்கள் பறைசாற்றி விட்டிருந்தன வீரபத்திரய்யரின் மந்திர தந்திர மகிமைகளை. கட்டைவிரல் நகத்தால் நீலமாகக் கோடு கிழிப்பாராம்; பெருவிரல் நகத்தால் அதன் அருகிலேயே சிவப்பு நிறக் கோடாகக் கிழிப்பாராம்! நீரில் நிற்பாராம். வெறும் வாயுவில் ஸ்தம்பமாய் நிற்பாராம்!

மாலை ஐந்தரை, ஆறு மணிக்குப் பெருமாள் கோயில் முகப்பில் வீரபத்திரய்யருக்கு வரவேற்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குழந்தைகளும், பெரியவர்களும் காத்திருந்தார்கள். அவரவர் பரிசில்கள் தர தயார்செய்துகொண்டிருந்தார்கள்.

ஆண்டவன் நம் கண்ணுக் கெதிரே காட்டும் வித்தைகள் எத்தனையெத்தனை! இடி இடிக்கிறது; கண்ணைப் பறிப்பது போல் மின்னுகிறது! எத்தனை உயரத்திலிருந்து மழையாகக் கொட்டுகிறது! இரவின் கருமை, பகலின் ஒளி! தென்றலின் குளுமை! சூருவளியின் வேகம்!...இந்த வித்தைகளுக்கு முன்னே மனிதனும் வித்தை

காட்டுகிருன்! அழியா வித்தைக்கு முன்னே அழியும் வித்தை...!

திருவிழாத் தேரை வந்து பார்த்துச் செல்வதைப்போல் கிணற்றை வந்து எட்டி எட்டிப் பார்த்துவிட்டுப் போஞர்கள் ஊரார்.

அபிப்பிராயங்கள் அவரவர் உள்ளங்களிலிருந்து வெளிவந்ததென்னவோ உண்மை:

"எத்தனை சுத்தமான ஸ்படிக ஜலம்!"

"இத்தனைநாள் கொடுக்க மறந்ததைப் போல அல்லவா ஊற்றுக்கண் திறந்திருக்கிறது!"

"நச்சுப் பொய்கையாக இருக்குமோ? அசரீரிக்கும், தர்மபுத்திரருக்கும் எங்கே போகிறது?"

"ஒரு வாளி இழுத்துத்தான் குடிச்சுப் பார்ப்போமே"

இந்தக் கடைசி வார்த்தைக் காதில் விழுந்ததோ இல்லையோ, எதிரே வேம்பு மாமா வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த மாது பாய்ந்தோடிக் கிணற்றண்டை வந்தான்.

"தண்ணீரில் யாரும் கையைக்கூட நனைக்கக்கூடாது!" என்று உத்தரவு போட்டான். மாதுவை எந்த வார்த்தைக்கும் அலட்சியம் செய்பவர்கள், அவனது இந்த உத்திரவை லட்சியம் செய்ததுதான் ஆச்சரியம்.

வேம்பு மாமா தெருவுக்கு ஒரு முக்கியமான புள்ளி; ஊரில் அப்படியும் இப்படியுமான ஒரு புள்ளி.

வீட்டுக்குள் பதினைந்து குதிர்களும் நிரம்பி வேறு இடமில்லாமல் கூடத்தில் விரவிக் கிடக்கும் அபரிமிதமான நெற்சொத்துக்கு உரியவராஞலும், நெஞ்சுக்குள் அவருக்கு ஈரமில்லாமல் போயிருக்கிறதால்தான், அவர் வீட்டெதிரே வெட்டப்பட்ட கிணற்றில் நீர் ஊருமல், போய்விட்டது என்று ஊரில் அவரைப் பிடிக்காதவர்கள் பேசுவார்கள். "பக்கத்திலே வாய்க்கால் ஓடுகிறது; கூப்பிடு தூரத்திலே கொள்ளிடம் ஓடுகிறது... இந்தக் கிணற்றுக்கு மட்டும் ஏன் இந்த மலட்டுத்தன்மை? மனிதனுக்கு உள்ளம் வேண்டும்!" என்று பேசுவார்கள்.

இன்று இது என்ன விந்தை!

வெகுநாள் அழுதறியாத கண் ஆனந்தக் கண்ணீரைக் கொட்டிவிட்டதைப்போல், திறமில்லாத நீர் விநாடிக்கு விநாடி ஏறிவருகிறதே கிணற்றில்!

வேம்பு மாமா வெற்றிலைச் செல்லத்துடன் சிவப்புச் சிமிட்டி பூசப் பெற்றிருந்த வீட்டுத் திண்ணையில் சாய்வு நாற்காலியில் பெருமையுடன் உட்கார்ந்திருந்தார். ரோஸ் வண்ணச் சுண்ணும்பிருந்த புட்டியைக் 'கரகர'வென்று கழற்றிக்கொண்டே அவரிடம் பணிவுடன் நீட்டினுன் மாது.

"மாமா! போன மாதம் காசிக்குப் போய் வந்தேளே, பலன் கைமேலே கிடைத்திருக்கிறது. கங்காதேவியைக் கையிலே கொண்டு வந்துவிட்டேளே."

வெற்றிலைக் காவி தெரிய ஆனுல், குரல் வராமல் சிரித்தார் வேம்பு.

"மாது! நீ ஒரு கிணற்றுத்தவளை; உனக்கும் நாட்டு வளப்பம் தெரிந்திருக்கிறதே! தண்ணீரைப் பார்த்துப் பிரமிக்கிறதே இந்த ஜனங்கள்!"

"ஆமாம், மாமா."

"ஏண்டா மாது! நீதான் ஒரு காரியம் செய்யேன். காசிச் செம்பில் நூல் கோத்துக் கொஞ்சம் நீர் இழுத்துக் குடிச்சுப் பாரேன்,"

"நான் குடிக்கவா மாமா?"

"ஏன், குடிச்சா என்ன? நீ ஒத்தைக் கட்டை, அதிலும் ஊரில் வெறும் தண்டக் கட்டைதானே?"

"நான் இல்லாவிட்டால் ஊரில் களை இருக்காது, மாமா..."

"அது என்னடா மாது அப்படி?"

"அவனவன் படிக்கிறேன், உத்தியோகம் பார்க்கிறேன் என்று ஊரைவிட்டுப் போய் விட்டார்கள். லீவில் வருபவர்களோடே வம்புபேசி பொழுதுபோக்க நான் ஒருத்தன் தானே இருக்கேன், மாமா? இந்தத் தண்ணீர் விஷயத்தையே எடுத்துக்குவமே... போனதடவை கோடிவீட்டு ராமு கல்கத்தாவிலிருந்து லீவுக்கு வந்திருந்தான் பாருங்கோ! அவன் அங்கே வாடர் ஓர்க்ஸ் சூபர்வைசராமே! அவனிடம் கேட்டேன் இந்தக் கிணற்றைப்பத்தி. 'இது வெறும் பள்ளம்; இதில் மழைத்தண்ணீர் தேங்கிஞத்தான் உண்டு'ன்னுன். இப்போ பாருங்கோ! இவனுக்கு அறுநூறு சம்பளமாம்; பஸ்டுகிளாஸ் பிரயாண வசதியாம்?... உலகம் ஒண்ணும் சரியில்லை, மாமா!"

"நான் ஒண்ணு கேட்க நீ என்ன வெல்லாம் அளக்கிருயடா மாது .."

திடீரென்று மாது தனது குரலை இரகசியமாக்கிக்கொண்டு, சாய்வு நாற்காலியை நெருங்கி உட்கார்ந்து கொண்டே, குரலில் அழுத்தத்துடன் கூறினுன்: "மாமா! எனக்கு ஒண்ணு புத்தியிலே தோன்றுகிறது... இன்றைக்குக் கிணற்றிலே தண்ணீர் வந்திருக்கிறது ஒரு வித்தையாக இருக்குமோ?"

வேம்பு நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"என்னடா சொல்றே நீ, மாது?"

"மாமா!... சாயங்காலம் வீரபத்திரய்யர் வருகிறாரே, அவர் வருவதற்கு முன்னாடியே இப்படி ஒரு வேடிக்கை காட்டிண்டு வருகிறாரோ?"

வேம்பு நாவில் மணம் வீசும் புகையிலை அவர் சிந்தையைத் தூண்டிவிட்டது. நிமிர்ந்து அமர்ந்து, "அப்படியும் இருக்குமாடா, மாது?" என்றார் மெதுவாய்.

"வரவர் பெரிய 'மாஜிக்'காரராம், மாமா... அடுத்த கிராமத்திலே சர்க்கரையே கிடைக்கலேன்னுளாம் .. கோயில் அண்டா ஒன்றைக் கொண்டுவரச் சொல்லித் தன் மேல் துண்டைப் போட்டு மூடிக் கண் இமைக்கும் நேரத்துக்குள்ளே எடுத்தாராம்... தும்பைப் பூவாய்ச் சர்க்கரை அண்டாவையே நிரப்பி விட்டதாம்.. அவர் மனசே குறளியாம், மாமா! சொன்னபடி உலகம் ஆடுமாம்..."

"அதெல்லாம் எனக்குத் தெரியும்டா, மாது! இப்போ இது அவர் வித்தையாகத்தான் இருக்கும்னு எப்படிச் சொல்லுவே?"

"கேள்விப் பட்டதைக் கொண்டு சொன்னேன், மாமா! போன வாரம் தஞ்சாவூருக்கு முந்திரிப்பருப்பு வாங்கிண்டு வரச் சொல்லி அனுப்பியிருந்தேளே என்னை. ஜங்ஷன்லே கேள்விப் பட்டேன் இதை. தஞ்சாவூர்லே, கணபதி புரத்திலே வீரபத்திரய்யர் வருகிறதாக இருந்தது. அவர் வருவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னால் கணபதிபுரமெல்லாம் ஒரே கஸ்தூரி மணமா மணத்ததாம்; அவர் வந்ததும் ஊரிலே வசிக்கும் கஸ்தூரி என்கிற பையனைக் கூப்பிட்டு "என்ன தம்பி, ஊரெல்லாம் ஓடினயா?" என்றாராம்!......"

"மாது! நீ சொல்றபோதே எனக்குச் சிலிர்க்கிறதுடா! கட்டாயம் இது வருகிறவர், முன்னாலேயே காட்டுகிற வித்தையாகத்தான் இருக்கும்... நீ உன் ஓட்டை வாயால் இந்த அபிப்பிராயத்தை வெளியிலே பரப்பி விடாதே.. சரி, மணி பன்னிரண்டாகப் போகிறது. சிறிது தூங்குகிறேன்."

மாது அரைக் கொட்டைப் பாக்கை வாயில் இடுக்கிக்கொண்டு, எழுந்து கிணற்றண்டை வந்து எட்டிப் பார்த்தான். உச்சிச் சூரியன் 'பளீரெ'ன்று ஒளி விட்டான் நீரில். தண்ணீரைப் பார்த்ததும் தாகம் ஏற்படத்தான் செய்தது. 'ஊஹூம்' என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டே தன் வீட்டுக்கு நடையைக் கட்டினான் மாது.

பிற்பகல் மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தது. தன் வீட்டு ஓட்டுத் திண்ணையில் காரைத் தலையணையில் தலையை முட்டுக் கொடுத்துக்கொண்டு படுத்திருந்த மாதுவுக்கு எப்போதும் வரும் மத்தியானத் தூக்கம் அன்று பாதரஸமென நழுவி ஓடி விட்டது.

மேலே ஓட்டில் அங்கங்கே அநேக இடைவெளிகளில் அநேக சூரியன்கள் பிரகாசித்தாற் போலிருந்தது. மோருஞ் சாதம் சாப்பிட்டே இந்த இருபத்துஆறு வருஷ வாழ்க்கையைக் கழித்திருக்கிறான் அவன். வேறே ஓடு வேய்வதற்கு வழி கிடையாது.

இதில் அவன் தனது வாழ்க்கையில் சுவாரசியத்தை வேறு உணர்ந்து வந்தான். கிராமத்தில் அது இருக்குமிடம் தேடி அலைந்தான். வீரபத்திரய்யர் வருவது அவனது சொந்தக் கொண்டாட்டம்; ஊறாத கிணறு ஊறியபோது அதைச்சுற்றி ஆயிரம் பிரதட்சிணம் வந்துவிட்டான்.

மாது தனக்குள் சிரித்துக்கொண்டான். வேம்பு மாமா கிணற்று நீரை ருசி பார்க்கச் சொன்னபோது மாட்டேனென்று விட்டானே? ஏன், அவன் யாருக்காகத்தான் வாழ்கிறான்? அம்மை, அப்பன் கிடையாது. கேட்டால், பெருமாள் இருக்கிறார், லக்ஷ்மி தேவி இருக்கிறாள் என்பான். அவன் வசிந்து வரும் ஓட்டு வீடு ஒன்றுதான் அவனுடைய பரம்பரை விட்டு வைத்திருக்கும் சொத்து. அதை விட்டால் அவன் கிராமத்தைவிட்டு ஓட வேண்டியதுதான். வேம்பு மாமா கேட்கிறபோதுகூட, 'வீடு என் உயிர்போல' என்று கூறிவிட்டான்.

மாது மீண்டும் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

உயிர்!

ஒரே ஒருதரம், 'இந்த உயிரை விட்டுவிடலாம்' என்று அவனுக்குத் தோன்றியது. ஒன்றரை மைல் நடந்து ரயில் தண்டவாளத்துக்கு மெயில்வண்டி போகும் சரியான நேரத்துக்குக்கூடப் போய்நின்றான். ஆனாலும் அவனுக்கு வீட்டின் ஞாபகம், தனது பரம்பரையின் உயிரைச் சொல்லிக்கொள்ளக் கூடிய நினைவின் ஞாபகம் வந்துவிட்டது. தண்டவாள மேட்டிலிருந்து இரங்கிவிட்டான். மெயில் அசுரவேகத்தில் ஓடியபோது, தண்டவாளத்திலிருந்து விழுந்துவிடும் எண்ணத்துடனா அது ஓடுகிறது?

உயிர்கள் அதனதன் கூட்டுக்குள் வைக்கப்பட்டுப் பத்திரமாகப் பாதுகாக்கப் படுகின்றன. கூட்டைப் பிரிப்பதற்கு மனிதனுக்குச் சக்தி கிடையாது.

"வேம்பு மாமா தன்னைப்போய் அந்த நீரைக் குடிக்கச் சொல்லுகிறார். நல்ல நீரோ, நஞ்சோ?

வீரபத்திரய்யர் காட்டப்போகிற வித்தைகளைப் பார்க்காமல் உயிரை விட்டுவிடுகிறதா? என் உயிர் பிரமாதமில்லையாமே? ஏன், ஏன்?" மாது வாய்விட்டுச் சிரித்து விட்டான்.

மாலை நாலுமணிக்கே சோற்றை வடித்து வைத்துவிட்டான் மாது. சிறிது நேரத்தில் வீரபத்திரய்யர் வருகிறார், அப்புறம் வேடிக்கைகள், சமைக்கப்பொழுதில்லை...

வாசலில், "மாது, மாதூ..." என்று சில குரல்கள் கலவரத்துடன் கேட்டன,

மேல் துண்டை விசிறிப் போட்டுக் கொண்டு வாசலுக்கு ஓடிவந்தான் மாது. இரண்டு மூன்று பேர்வழிகள்,

"கிணத்தண்டை வாயேன், மாது..."

"செத்த தவளையை எடுத்து வெளியே போட்டிருக்கிறோம்..."

"அது தண்ணீரில்லேடா, மாது! நஞ்சு!"

மாது புறப்பட்டுக் கொண்டே, "நீங்களெளாம் மனுஷாளா?" என்று உறுமினான்.

மாலை வெயிலில் கிணற்றண்டை குழுமியிருந்தவர்களின் நிழல்கள் தெருவின் பாதிக்கு நீண்டு தெரிந்தன; அவர்களுடைய உள்ளங்களோ பலவிதமாயிருந்தன. அதன் விளைவாக வெளிவந்த அபிப்பிராயங்கள்:

"மலட்டுக்கிணறு நஞ்சுக் கிணறாயிடுத்தா?"

"மனசு அத்தனை மோசமாயிருந்திருக்கு..."

"இந்த மண்ணிலிருந்து அந்த மண்ணுக்குப் பாய்ஞ்சு மத்தக் கிணறெல்லாம் நஞ்சாயிடப் போறது".

"இதை தூர்த்துப்பிடணும் இப்பவே!"

"நாம் எக்கேடு கெட்டும் போகிறோம்; நம்ம குழந்தை குட்டிகள் வாழ வேண்டாமா?"

"ஆளுக்கு ஒரு கூடை மண் கொண்டு வந்தால் நாலு கிணத்தைத் தூர்த்துடலாமே?"

வீட்டுத் திண்ணையில் நின்றுகொண்டிருந்த வேம்பு கோபத்தால் உடல் துடித்துக் கொண்டிருந்தார். வார்த்தைகள் அவர் உள்ளத்தைப் பந்தாடிக்கொண்டிருந்தன.

இந்த சமயத்தில் அங்கே போய்ச் சேர்ந்தான் மாது.

கிணற்றங் கரையில்—

நீர்க்கோலத்துக்கு நடுவே இறந்த தவளை மல்லாந்து படுத்திருந்தது.

ஊரில் வெறும் வெட்டியாகக் கருதப்பட்ட மாதுவை எல்லோரும் ஏன் அப்படிப் பார்த்தார்கள். அவனுக்கும் அந்தக் கிணற்றுக்கும் என்ன சம்பந்தம்? காலையில் அவன்தான் கிணற்றில் தண்ணீரைக் கண்டுபிடித்தான் என்பதாலா?

இதற்குள் பெருமாள் கோயில் மூலையிலிருந்து ஓர் ஆள் ஓடி வந்தான். வீரபத்திரய்யர் அன்று வரவில்லையாம்! இன்னும் ஒரு வாரத்துக்கு அவரால் வரமுடியாதாம்!

வேம்பு மாதுவைப் பார்த்தார்; மாது வேம்புவைப் பார்த்தான்.

எல்லோருடைய கண்களும் தன் மேல் நிலைகுத்தியிருந்தது மாதுவுக்குப் புரிந்தது.

நிலவியிருந்த நிசப்தத்தில் அவன் குரல் கேட்டது.

"கிணற்றுத் தண்ணீர் நிச்சயம் நஞ்சுதான் என்கிறீர்களா?"

"சந்தேகமில்லை.. தவளை சொல்கிறதே..."

"தவளை சொல்கிறதா? ஆளைக் கொல்றது!"

மாது மறுபடியும் கத்தினான்.

"அனுவசியக் கதையெல்லாம் அளக்க வேண்டாம். இந்தத் தண்ணீர் நஞ்சில்லைன்னு நான் சொல்றேன்..." சொன்ன பிறகு எப்படிச் சொன்னோம் என்று மாதுவுக்கும் புரியவில்லை, அவனுக்கு வியர்த்தது, ரோமாஞ்சலி ஏற்பட்டது.

அதுவரை அவன் ஊருக்குத் தனிப்பட்டவன்; இப்போதும் தனிப்பட்டவன்தானா?

"நாங்கள் சொல்கிறோம். நீ யார் நஞ்சில்லை என்று சொல்ல?" ஒரு குரல்.

"பெருமாள் கொடுத்த தண்ணீரை நஞ்சென்று சொல்லாதீர்கள்; பாவம் வரும்..." மாது கதறினான். தன்னை எந்தச் சக்தி இயக்குகிறதென்று அவனுக்குப் புரியவில்லை.

"பாவம் வரட்டும்; ஆனால், உயிர் போக வேண்டாம்;..."— இன்னொரு குரல்.

"நான் சொல்லுகிறதைக் கேளுங்கள். இது நம் ஊருக்கு இன்று வரவிருந்த வீரபத்திரய்யர் தாம் வருமுன்பே செய்திருக்கிற வித்தையாகும். இப்படித்தான் தஞ்சாவூரில் கணபதிபுரத்தில்—" மாதுவை முடிக்கவிடாமல் சீறியது இன்னொரு குரல்.

"இப்போதுதான் பெருமாள் கொடுத்தது என்றான்; இப்போது வித்தை செய்தார்கள் என்கிறான்....."

மாது பல்லைக் கடித்துக் கொண்டான். 'பெருமாள் தந்த நீர்' அவன் தான் சொன்ன

வார்த்தைகளையே திரும்பி எண்ணிப் பார்த்தான்.

அவன் கண்கள் திரும்பின.

தெருக் கோடியில் பெருமாள் கோயில். உயரே 'பளிச்' சென்ற கும்பம் தெரிகிறது... போன வருஷம்தான் கும்பாபிஷேகம் செய்து பிரதிஷ்டை செய்திருந்த கலசம் மாலை மஞ்சள் வெயிலில் பளபளத்தது. அந்த அபிஷேக நீரை வாங்கி ஊருக்கெல்லாம் உற்சாகத்துடன் வினியோகித்தானே மாது? நீரைப் படைத்தளிக்கும் பெருமாள் நச்சு நீரென்று ஊருக்கிடையில், தெருவுக்கு நடுவில் படைத்துவிடுவாரா?

மாதுவின் கண் இமைகள் நீரில் சற்றே நனைந்து படபடத்தன... அந்த வினாடி அங்கே கோயில் கும்பத்தில் அவனெதிரே தெரிந்த காட்சி... ஒரு கருடப் பறவை கும்பத்தை வட்டமிட்டுப் பறந்தோடியது... மாதுவின் நெஞ்சில் ஒரு சிலிர்ப்பு; இலேசாய் ஏற்பட்ட ஒரு ஞாபகம் அவனுள்ளத்துக்கு ஊட்டியது ஒரு துணிவை.

அன்று காலையில் கிணற்றங் கரையில் உட்கார்ந்தபோது, மேலே ஆகாயத்தில் கருடப் பறவையைக் கண்டு கன்னத்தில் போட்டுக்கொண்டதும் அப்போது உடனே கிணற்றிலும் 'சளசள' வென்ற சத்தம் கேட்டுக் குனிந்து பார்த்ததும் நினைவுவந்தது.

இப்போது ஞாபகத்தில் ஓர் அழுந்திய நினைப்பு: அந்த கருடன் தன் கால்களுக்கிடையில் ஏதோ வொன்றை இடுக்கிக்கொண்டிருந்ததும் கிணற்றுக்கு மேலே வட்டமிட்டுப் போனபோது கிணற்றுக்குள் அதை நழுவவிட்டதைப் போலவும், பிறகு நீரில் 'சள சள' வென்ற சத்தம் கேட்டதும்...

மாதுவுக்குச் சில வினாடிகளே பிடித்தன இத்தனை எண்ணங்கள் வரவும்.

"இந்தக் கிணற்றுத் தண்ணீரை நான் குடித்துக் காண்பிக்கிறேன்" என்றான் இரைந்து.

கூடியிருந்தவர்களில் குரல் கொடுத்தவர் எவருமில்லாதபோது, வேம்புமட்டும் கத்தினார்:

"மாது! வேண்டாமடா! இந்தக்கிணறு நாசமாய்த் தூர்ந்துபோகட்டும்; உன் உயிர் போகவேண்டாம்..."

மாதுவுக்குக் கண்ணில் ஆனந்த நீர் சுரந்தது. 'உயிர் போகட்டும்' என்றவர் 'போகக் கூடாது' என்கிறார். எல்லாம் பெருமாள் கருணை! கத்தினான் அவன்:

"குடத்தையும் கயிறையும் கொண்டுவாருங்கள்..."

வேம்பு மாமா திண்ணையிலிருந்து பாய்ந்தோடி வந்து மாதுவின் கரங்களைப் பிடித்துக்கொண்டார்:

"ஏய் அசடு! மத்தியான்னம் நான் சொன்னேன் என்கிறதற்காகச் செய்கிறாயா? பழிக்காளாக்காதே என்னை!"

"மாமா! நான் சாகமாட்டேன்.. இது அமுதகங்கை. நிச்சயம் எனக்குத்தெரியும்!"

குடத்திலிருந்து தண்ணீரை 'சள சள' வென்று சரித்தான் மாது. உண்மையில் அவனுக்குத் தாகமே. தீருமட்டும் குடித்துச் சிரித்தான்.

"இந்த இனிப்பைக் குடிக்கக் கொடுத்து வைத்திருக்கவேண்டும்" என்றான்.

கிணற்றின் கரையிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மாது செய்து காட்டியதை அரியதொரு வித்தையாகவே கருதிப் போனார்கள். வீரபத்திரய்யர் காட்டும் வித்தைகள் எல்லாம் இனி அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

அன்றிரவு மாது தன் வீட்டு ஒட்டுத்திண்ணையில் படுத்துக்கொண்டபோது பெருமாள் கோயிலிலிருந்து பெற்று வந்திருந்த துளசியில் ஓர் இலையைக் கிள்ளி வாயில் போட்டுக்கொண்டான்.

சுரக்காத ஊற்று சுரந்தது இறைவனின் பெருங்கருணை; அதை விடவும் மனித உள்ளத்தில் நஞ்சை விலக்கி அமுதத்தை ஊறச் செய்ததும் அவனது கருணையே.

இந்தக் கருணையே வித்தையானால் அதை விடவும் அதிசயிக்கத்தக்க வித்தை இந்த உலகத்தில் வேறே இருக்க முடியாது என்ற தெளிவுடன் மாது நிச்சிந்தையாக உறங்கத் துவங்கினான்.



இதுதானா நாகரிகம்?

ராமயோகி

பெரு முயற்சிக்குப் பின் அவனுக்கு எப்படியோ வேலை கிடைத்து விட்டது. முன்னால் வேலை பார்த்து வந்த இடம் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஒன்று சம்பளம் குறைவு; வேலை அதிகம். இரண்டாவது, அவன் முதலாளி அசாத்திய முன் கோபக்காரன். வசவு, திட்டோடு நிற்பதில்லை; சில சமயம் கையும் வைத்து விடுவான். அத்தகைய காட்டுமிராண்டியுடன் மனோஹரைப்போன்ற நாகரிகம் வாய்ந்தவன் எப்படி ஒத்துப்போக முடியும்? எனவே, ஒரு மாதங்கழித்து அவனுக்கு மிஸ்டர் குப்தாவின் வீட்டில் டிரைவர் வேலை கிடைத்தது, என் முயற்சியின் பேரில்.

மிஸ்டர் குப்தா மிகப் பிரசித்தி வாய்ந்தவர். அவருக்கு இங்கு ஒன்றும், அகமதாபாத்தில் ஒன்றுமாக இரண்டு ஆலைகள் இருந்தன. தாயின் வாத்ஸல்யத்தை மிகச் சிறுபிராயத்திலேயே இழந்துவிட்டவர். போதாக்குறைக்குப் போன வருஷம் அப்பாவும் போய்விட்டார்.

மிஸ்டர் குப்தா தமது இல்லாளுடனும், ஐந்து ஆண்டு நிரம்பிய வீணாவுடனும் ஸிவில் லைனில் உள்ள ஒரு பங்களாவில் வசித்துவந்தார். வீணாவைக் கவனித்துக் கொள்ள ஒரு ஆயா நியமித்திருந்தார். மனோஹருக்குத் தமது காம்பௌண்டுக்குள்ளேயே ஓர் அறையும், இரண்டு வேளை உணவுடன் எண்பது ரூபாய்ச் சம்பளமும் கொடுத்துவந்தார்.

இந்த வேலை மனோஹருக்கு மிகுந்த மனமகிழ்ச்சியை அளித்திருக்கும் என்று எண்ணியிருந்தேன் நான். ஏனெனில், எனக்குப் பிடித்திருந்தது அந்த வேலை. ஆனால், ஒருநாள் சர்தாரி வந்து "நேற்று மனோஹரைப் பார்த்தேன். மிகவும் வாட்டமாயிருந்தான். காரணம் கேட்டதற்குத் தான், அந்த வேலையை விட்டுவிடப் போவதாகச் சொன்னான். ஆனால், விடப்போகும் காரணத்தை எவ்வளவோ கேட்டும் சொல்லவில்லை" என்றான்.

அதைக்கேட்டு எனக்கு ஆச்சரியமாயிருந்தது. என் முதலாளியிடம் விடுமுறை வாங்கிக்கொண்டு, மனோஹரைச் சந்திக்க குப்தாவின் மாளிகைக்குச் சென்றேன். அவன் தன் அறையில் ஒரு சமுக்காளத்தில் படுத்திருந்தான். என்கால் ஓசையைக் கேட்டு எழுந்து உட்கார்ந்தவன் ஒரு வரட்டுச் சிரிப்புச் சிரித்தான். அதுவும் அடுத்த கணமே மறைந்துவிட்டது. அவனது அந்த நிலையைக் கண்ட எனக்கு ஏதோ நடக்கக்கூடாத நிகழ்ச்சி ஒன்று நடந்திருப்பதாகப்பட்டது. நான் அவன் அருகில் அமர்ந்து முதுகைத் தட்டிக் கொடுத்த வண்ணம், "ஏன், மனோஹர்! ஏன் இப்படி வாட்டமாயிருக்கிறாய்?" என்று கேட்டேன்.

அவன் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்ட வண்ணம், "ஒன்றும் இல்லை" என்று மூடி மெழுகினான்.

"நீ இருக்கும் நிலைமையைப் பார்த்தால், ஏதோ வருத்தமுற்றிருக்கிறாய் என்று நன்றாகத் தெரிகிறது. நீயோ என் நண்பன். உன் இந்த நிலையைப் பார்த்தபின் எனக்கு அமைதி எப்படி ஏற்படமுடியும்? நண்பர்கள் என்றால் எதற்கு இருக்கிறார்கள்? கஷ்ட காலத்தில் உதவி புரியத்தானே? உன் மனதில் உள்ளதை ஒளிக்காமல் சொல், அப்பா!" என்றேன்.

"நான் இந்த வேலையைப் பார்க்க முடியாது!"

"ஏன்? அந்தக் காரணத்தைத்தானே கேட்கிறேன்!"

"எனக்கு என்னவோ இந்த வேலையில் நிம்மதியே இல்லை. காரணம் எனக்கே விளங்கவில்லை!" என்று சொல்லி மௌனம் சாதித்தான்.

"உனக்கு இந்த வேலை பிடிக்காமற் போனதன் காரணத்தை நீ சொல்லித்தான் ஆகவேண்டும்!" என்று நான் விடாப்பிடியாக வற்புறுத்தவே அவன் கூறலானான்:

"ஸேட்ஜிக்கு இங்கு ஒன்றும் அகமதாபாத்தில் ஒன்றுமாக இரண்டு ஆலைகள் இருக்கின்றன என்பது உனக்குத் தெரி

யும். அதனுல், மாதத்துக்கு இரண்டு மூன்று நடை அவர் அங்குபோய் வருகிருர். அங்கு தங்கினுலும் அவருக்கு அதிக வேலை கிடையாது. பன்னிரண்டு மணிக்கு ஆலைக்குப் போனுல், இரண்டு மணிக்குத் திரும்பிவிடுவார். அப்படி ஏதாவது வேலை வந்தாலும் தொலை பேசியில் மானேஜருக்கு உத்தரவு போட்டுவிடுவார். அதனுல்,எனக்கும் அதிக வேலை இருப்பதில்லை. அறையிலேயே எத்தனை நாழிகைதான் அடைந்து கிடப்பது வேலைவெட்டியின்றி? மாலை ஏழு மணிக்குக் கிளப்புக்குப்போனுல் இரவு பன்னிரண்டு மணிக்குத்தான் வீடு திரும்புவார். அவரோடு அவர் மனைவியும் போவதுண்டு, இரவு அத்தனை நேரம் தங்கும் காரணம் என்ன, தெரியுமா?"

"வேறு என்ன? அவர்கள் சூதாடுவார்கள்; குடிப்பார்கள். கிளப்புகள் எல்லாம் இதற்காகத்தானே ஏற்பட்டிருக்கின்றன! பணம் உள்ளவர்கள் கிளப்பில் உட்கார்ந்து குடிக்கலாம்; சூதாடலாம். சமூகத்திலே அவர்கள் மதிப்பு எள்ளளவும் அதனுல் குறையாது. ஆனுல், உன்னையும் என்னையும் போன்ற ஏழைகள் இப்படிச் செய்தால் போலீஸ் பிடித்துக்கொண்டு போய் விடும். இது ஒன்றும் புதிய விஷயம் இல்லையே!" என்றேன் நான்.

"குடியும், சூதும் தவிர அங்கே கூத்தும் உண்டு. ஆண்களும், பெண்களும் கை கோத்துக் கொண்டு ஆடுவார்கள். ஓர் ஆண்பிள்ளை எந்தப் பெண்பிள்ளையோடு வேண்டுமானுலும் ஆடலாம். ஒரு கட்டு திட்டம் கிடையாது. அது மட்டும் இல்லை. பதினெரு மணி சுமாருக்குப் 'பால்ரூம்' வெளிச்சத்தை அணைத்து விடுவார்கள். இரண்டு நிமிஷத்திற்குத்தான். அந்த இரண்டு நிமிஷத்துக்குள்ளே கூச்சலையும் கொம்மாளத்தையும் சொல்லி முடியாது. முதன் முதலாக நான் போனபொழுது இப்படித்தான் விளக்குகளை யெல்லாம் அணைத்து விட்டார்கள். கூச்சலைக்கேட்டு நான் 'பால்ரூம்' பக்கம் ஓடினேன். 'பைரா', "உள்ளே விட முடியாது!" என்று தடுத்து நிறுத்தி விட்டான். "இவ்வளவு கூச்சலாயிருக்குதே" என்று நான் சொன்னதற்கு, "அப்படித்தான் இருக்கும். நீ புது ஆள்போலிருக்குது. போ,போ, போய் உன் வேலையைப் பாரு!" என்று சொல்லி விட்டான்.

"நான் காரண்டை வந்து விட்டேன். மற்ற டிரைவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்ருல். யாரையுமே காணேம். எங்கேதான் போய்த் தொலைந்தார்களோ, தெரியவில்லை. குப்தாவைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று இருந்து விட்டேன். பன்னிரண்டு மணி சுமாருக்குக் குப்தாவும், அவரது மனைவியும் ஆடித் தடுமாறிக்கொண்டே வந்தார்கள். நான் விரைவாகக் காரின் கதவைத் திறந்து விட்டேன். அவர்கள் இருவரும் ஏறி உட்கார்ந்ததும், டிரைவர் ஆசனத்தில் அமர்ந்து காரை ஓட்டத் தொடங்கினேன் வீட்டை நோக்கி. அந்தச் சத்தத்தைப் பற்றிக் குப்தாவிடம் கேட்கலாமா என்று நான் எண்ணமிட்டுக் கொண்டிருந்தபொழுதே, கணவனும் மனைவியும் பேசத் தொடங்கி விட்டார்கள்

"டார்லிங்! இன்று வெகு ஆனந்தம், போங்கள்! நான் மிஸ்டர் கன்னுவுடன் நடனமாடினேன்!" ஒரு புல்லரிப்புடன் கூறினுள் குப்தாவின் மனைவி.

"இன்று கொஞ்சம் அதிகம் குடித்துவிட்டாயோ?" என்று கேட்டார் குப்தா.

'ஆமாம், ஒரு 'பெக்' அதிகம்தான்; இருந்தாலும் என்ன?" என்று அலட்சியமாய் பதில் சொன்னுள் அவர் மனைவி.

"சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுதலாம்? உன் உடல் நலத்தைக் கவனித்துக் கொள்ளவேண்டாமா?" என்று கேட்டார் மிஸ்டர் குப்தா.

"டார்லிங்! கவலைப்படாதீர்கள். இப்பொழுதெல்லாம் எனக்கு ஒன்றும் ஏற்படுவதில்லை?"

"அப்படியானுல் நல்லதுதான். இருந்தாலும் இரத்தக் கொதிப்புக்குக் கொஞ்சம் பத்தியமாக இருக்கவேண்டும்."

"அது மெய்தான். இன்று ஸ்ரீமதி மேஹ்ராவுடன் உங்கள் நடனம் எப்படி இருந்தது?" மிஸஸ் குப்தா பேச்சை மாற்ற முயன்ருள்.

"அவ்வளவு ஒன்றும் சுகப்படவில்லை. என்ன இருந்தாலும் ஸ்ரீமதி கோஸ்லாவுக்கு அப்புறம் தான் யாரும்?"

"சொல்லமாட்டீர்களா நீங்கள்? மிஸஸ் கோஸ்லா, உங்கள் பழைய கூட்டாளி ஆயிற்றே! இருந்தாலும் அந்தப் பழைய இனிமை இப்பொழுது இராது! பாழ் மண்டபம் ஒன்று, ஒரு காலத்தில் நான் மாட

மாளிகையாக இருந்தேன் என்று சொல்லிக் கொண்டால் எப்படியிருக்குமோ, அந்தக் கதைதான்!"

"பழைய பாழ்மண்டபத்துக்கு இருக்கும் மவுசு இந்தக் காலத்தில் புதுக் கட்டடத்துக்குக்கூடக் கிடையாது. அதன் காலில் கட்டி அடிக்கவேண்டும் மற்றதை!"

அவர்கள் பேச்சைக் கேட்ட எனக்கு, 'இது கணவனும் மனைவியும் பேசிக்கொள்ளும் பேச்சா?' என்றே தோன்றியது. பேச்சு தடையுருமல் மேலும் தொடர்ந்தது.

"ஆனால், உங்களுடைய அந்தப் பழைய பாழ் மண்டபம், மிஸ்டர் கன்னு நம்மோடு நடனமாட வரமாட்டாரா என்று ஏங்கித் தவித்தது எனக்கல்லவா தெரியும்? முடியாது என்று திட்டமாக அவர் மறுத்துவிட்டார். இனி நடனமாடினால் என்னுடன் ஆடுவது என்றும் அவர் உறுதி பூண்டுவிட்டார்."

"அப்படியா?"

"ஆமாம். எனக்குக்கூட நடினமாடினால் அவருடன் ஆடவேண்டும், இல்லாவிட்டால் ஆடவேகூடாது என்றுதான் தோன்றுகிறது."

"இதற்குமேல் என்னால் காதுகொண்டு கேட்கமுடியவில்லை. எனக்கு மூச்சுத்திணறியது; மூளை கிறங்கியது. கடவுள் புண்ணியத்தில் காரை எங்கும் மோதாமல் கொண்டு சேர்த்தேன். எனக்கு இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. காதுகளிலே அவ்வொலி இடைவிடாமல் ஒலித்தது. கண்களிலோ மிஸஸ் குப்தாவும் மிஸ்டர் குப்தாவும் உரையாடும் காட்சி திரைப்படமெனத் தோன்றியது. அதற்குப்பின் தினம் தினம் அதே நிகழ்ச்சி. ஆனால், நான் அந்தக்கூச்சல் காதில் விழாமல் இருப்பதற்காக மற்ற டிரைவர்களுடன் உலாவப் போய்விடுவேன். ஆனால், என் மனத்தில் ஒருவிஷயம் புகுந்துவிட்டது நான் மறக்க முயல முயல, அது ஆழப் பதிந்துவிட்டது. நான் பிடுங்கி எறிய எறிய அது கிளைவிட்டுத்தழைத்தது.

"நான் நாளடைவில் ஒருவிதமாக என் மனத்தைத் தேற்றிக்கொண்டேன். ஆனால், ஒருநாள் நடந்த நிகழ்ச்சி என் அறிவைத் திகைத்துப் போகும்படி செய்துவிட்டது."

"என்ன நடந்தது?" நான் ஆவல் தாளாமல் குறுக்கே கேட்டேன். அவன் சொன்னான்:

"ஒருநாள் கணவனும் மனைவியும் கடைத்தெருவுக்குப் போனார்கள். கடைத்தெருப் பாதையைப் புதிதாகச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள் அப்பொழுது. அதனால், நான் காரை ஓர் ஒதுப்புறத்தில் நிறுத்திவிட்டுக் காருக்குக் காவலாக உட்கார்ந்துவிட்டேன். அவர்கள்மட்டும் போனார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் கடைத்தெருவில் பெருங்கூச்சல் கேட்டது. நான் கூச்சல் வந்த திக்கை நோக்கி ஓடினேன். ஏககக்கூட்டம் கூடியிருந்தது. அக்கூட்டத்தின் நடுவிலிருந்து யாரோ அழுங்குரல் கேட்டது. இடித்துப் பிடித்துக்கொண்டு கூட்டத்துக்குள் நுழைந்தேன். ஒரு நோஞ்சல் ஆசாமியைக் குப்தா கையால் அடித்து, காலால் உதைத்து வாயால் வைது கொண்டிருந்தார். கூட்டத்தில் ஒருவரிடம் நான் விஷயத்தை விசாரித்தேன்.

"புதிதாகப்பாதை செப்பனிடப் படுவதால் இங்கேபோவோர் வருவோரின் கூட்டம் அதிகமாயிருக்கிறது. இந்த ஆளின் தோள்பட்டை அவரது மனைவியின்மேல் இடித்துவிட்டது. இதற்காகத்தான் அவர் இவனை அடித்து நொறுக்கிக்கொண்டிருக்கிறார்" என்றார் அவர்.

நையப் புடைக்கப்பட்டுக் கொண்டிருந்த மனிதனை ஒருமுறை பார்த்தேன். "ஸேட்ஜீ! ஆண்டவன்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். நான் வேண்டுமென்றே தீண்டவில்லை. என் தாய்க்கு உடம்பு குணம் இல்லை. அவளுக்காக மருந்து வாங்கிக்கொண்டு அவசரமாகப் போய்க்கொண்டிருந்தேன். தெரியாமல் தவறுதலாகப்பட்டுவிட்டது" என்று அவன் சொல்லிக்கொண்டிருந்தான்.

ஏழையின் சொல்லை யார் கேட்கிறார்கள்? அவன் கெஞ்சக் கெஞ்சக் குப்தாவின் கோபம் அதிகரித்தது. பலம் கொண்டமட்டில் 'மூஞ்சிமோரை' பார்க்காமல் அவர் அடிக்கலானார். அவன் அலறலை என்னால் கேட்கமுடியவில்லை. அதற்காக நான் என்ன செய்துவிடமுடியும்? அடித்து அடித்துக் கை ஓய்ந்துபோன குப்தா தலை தூக்கிச் சுற்றுமுற்றும் பார்த்தார். என்னைக் கண்டதும், "போய் யாராவது போலீஸ்காரரை அழைத்துவா! இந்தப்பயலைச் சிறைக்கு அனுப்பிவிட்டுத்தான் மறுகாரியம். இந்த மாதிரிச் சோதாப்பயல்களால்தான் கண்யமுள்ள குடும்பப் பெண்கள் வெளியிலேயே வரமுடிவதில்லை" என்றார்.

நான் பதில் பேசாமல் போலீஸ்காரரை அழைத்து வந்தேன். அவர் குப்தாவின் பிடியிலிருந்து அவனை விடுவித்து நியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோனார். மெய்யாகவே இந்த ஏழைகள் கண்யமுள்ளவர்களை வெளியே தலைகாட்ட விடுவதில்லையா? கிளப்புக்குப் போகத்தெரியாதவர்கள், குடிக்கத் தெரியாதவர்கள், சூதாடத்தெரியாதவர்கள். இவர்களுக்கு ஏது உரிமை, கண்யமுள்ள பணக்காரவீட்டுப் பெண்மணிகளைத் தொட்டு அவர்களது மாசுமறுவற்ற நடத்தையைக் கெடுக்க? அதற்கு ஒரு தகுதி வேண்டாமா? நண்பா! என்னால் இங்கு இருக்க முடியாது. என்னைத்தடுக்காதே. தடுத்தால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்."

—ஓர் உருதுக்கதை

நினைவின் எதிரொலி

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

தாம்பரத்திலிருந்து காரில் திரும்பி வந்து கொண்டிருந்தவன் வழியில் கடைத் தெருவில் யாரோ கை காட்டியதைப் பார்த்ததும் நிறுத்தினேன்.

"எழும்பூருக்குத்தானே போகிறீர்கள்?" என்ற குரலைக்கேட்டதும், காரை நிறுத்தியது டாக்டர் நிர்மலா என்று புரிந்து கொண்டேன்.

"ஆமாம்! உட்காருங்கள்." என்று கதவைத் திறந்துவிட்டேன். காரும் புறப்பட்டது.

"எங்கே? யாரையாவது கவனிப்பதற்காக வந்தீர்களா என்ன?" என்று கேட்டேன்.

"இல்லை. தெரிந்தவர்கள் வீட்டுக்கு வந்திருந்தேன். அவ்வளவுதான். மாதம் முப்பது நாளும் வேண்டிய நோயாளிகள் வீட்டுக்கே வந்துகொண்டிருப்பது போதாதா? வெளியே இங்கேயும் அவர்களைத் தேடிவரவேண்டுமா?" என்று டாக்டர் அலுத்துக்கொண்டது எனக்கு வேடிக்கையாக இருந்தது.

டாக்டர் நிர்மலாவின் திறமையும், சாதுரியமும், நயமான பேச்சும் அவளுக்கு நல்ல பெயர் கிடைப்பதற்கு உதவியாக இருந்ததென்னவோ உண்மை. அலுத்துக்கொள்ளும் அளவுக்கு வாடிக்கையும், வரும்படியும் மிகுந்து இருந்ததும் மெய்தான். ஆனால், டாக்டர் நிர்மலா ஓரளவு மனோதத்துவத்தையும் உணர்ந்து வைத்தியம் செய்வது என்னைப்போன்ற சிலருக்குமட்டுமே தெரியும்.

"சமீபத்தில் ஏதாவது சுவாரசியமான கேஸ் உண்டா டாக்டர்?" என்று ஆவலோடு கேட்டேன்.

கொஞ்ச நேரம் பதில் இல்லை. பிறகு "உண்டு. ஒரு விநோதமான கேஸ். நான் அதற்கு மருந்தும் சொன்னேன். ஆனால், நோயாளி அதை ஏற்றுக்கொள்ளவில்லை." என்று ஆரம்பித்தாள்.

"வேடிக்கையாக இருக்கிறதே? அதுயார்? எனக்குத்தெரியுமா?"

"உங்களுக்கென்ன! எல்லோருக்கும் தெரியும். நடிகை காந்தாமணிதான் அது."

"காந்தாமணியா?"

"ஆமாம். கேளுங்கள்." என்று டாக்டர் சொல்லத்தொடங்கினாள்,

"அன்று மாலை நான் வெளியே போவதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது டெலிபோனில் செய்திவந்தது. "நடிகை காந்தாமணிக்கு உடல்நிலை சரியில்லை. நீங்கள் தயவு செய்து இங்கே வரவேண்டும்." என்று அவளுடைய காரியதரிசி போனில் சொன்னார். எனக்கு அவசரமான வேலை இருந்தது.

"எனக்கு அவசர வேலை இருக்கிறது. நான் திரும்பிவர இரவு எட்டுமணி ஆகும்," என்று சொன்னேன்.

"எட்டுமணிக்குப் பிறகு இங்கேவர முடியுமா?" என்று அவர் கேட்டார்.

"மன்னிக்கவும். மிகவும் அவசியமானாலொழிய இரவு வேளைகளில் நான் வெளியே போவதில்லை. அவர்களையே இங்கு வந்துவிடச்சொன்னால் நல்லது." என்று சொன்னேன்.

"கேட்டுச் சொல்கிறேன்." என்று அவர் போனைக்கீழே வைத்துவிட்டார்.

இரவு நான் வீடு திரும்பியபோது எனக்காகச் செய்தி காத்துக்கொண்டிருந்தது. சமையற்காரப்பையன் காகிதத்தில் குறித்து வைத்திருந்தான். நடிகை காந்தாமணி அன்று இரவே ஒன்பதுமணிக்கு வருவதாகப் பதில் அனுப்பி இருந்தாள்.

எனக்கு ஓரளவு ஆச்சரியமாக இருந்தது. என்வீட்டுக்கு வரக்கூடியநிலையில் இருந்தால் அந்தக் கேஸ் அவ்வளவு மோசமானதாக இருக்க நியாயமில்லை. ஆனால், அவள் மறுநாள் காலைவரையிலும் பொறுத்திருக்கத் தயாராக இல்லை. சாதாரண கேஸாக இருந்தால் காரியதரிசியிடம் சொல்லி அனுப்பி இருந்தாலும் போதும். சாப்பிட்டுவிட்டு ஒன்பது மணியை ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன்.

காந்தாமணி வந்ததும் என் அறைக்கு அழைத்துப் போனேன். பார்வைக்கு அவளுக்கு ஏதுவும் நோய் இருந்ததாகப் புலப்படவில்லை. வாசலில் நான் வரவேற்றபோது புன்னகையோடு அவள் கை கூப்பியபடி இறங்கி உள்ளே வந்தாள். அப்பொழுது அவள் முகத்தில் ஏதும் சங்கடமான நிலை இருப்பதற்கான அறிகுறிகூட இல்லை,

இருவரும் அறையில் உட்கார்ந்ததும் கையால் முகத்தைத் தாங்கியபடி அவள் பேசாமல் இருந்தாள். ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பது போலத் தோன்றியது. சொல்லுவதற்குத் தயக்கம் இருப்பது போலவும்பட்டது.

"நீங்கள் என்னிடம் எதையும் சொல்லலாம். என்னால் ஆனதைச் செய்ய முயலுவேன். வேறு யாரையும் பற்றியதானாலும் நான் அதை வெளியிடுவேனோ என்ற பயமும் உங்களுக்கு வேண்டாம்" என்று சொன்னேன்.

என் பேச்சு அவருக்குத் தைரியம் கொடுத்திருக்க வேண்டும். சட்டென்று ஆவலோடு நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் நீர் துளித்திருந்தது. ஆழ்ந்த மனவேதனை அதில் எனக்குப் புலனாகியது.

"எனக்கு ஓய்வே இல்லை டாக்டர்!"

"உண்மைதான். உங்களைப்போல புகழ் வாய்ந்த நடிகைக்கு எத்தனையோ படங்களில் வேலை இருக்கக்கூடும்."

"நான் அதைப் பொருட்படுத்தவில்லை. இப்போது அதைக் குறிப்பிடவும் இல்லை."

"பிறகு?"

"என்னால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை."

"தூக்கம் வருவதில்லையா?"

"ஓரளவுக்கு மாத்திரையை விழுங்கிவிட்டுத் தூக்கத்தை வருவித்துக் கொள்கிறேன். ஆனால், தூக்கத்தில்தான் நிம்மதி இல்லை."

"ஏன்?"

அவள் ஒருகணம் தயங்கினாள். நான் புரிந்து கொண்டேன்.

"ஏதேனும் சங்கடமான கனவுகளா?"

"ஆமாம்."

"என்னிடம் சொல்லலாமா?"

"அதற்குத்தான் வந்திருக்கிறேன். உங்களால் என்னைக் குணப்படுத்த முடியுமா?"

"சொல்லுங்கள். என்னால் ஆனதைச் செய்யலாம்."

"கேளுங்கள். ஒரு மாதமாகவே என்னால் இந்த இக்கட்டிலிருந்து மீள முடியவில்லை. அநேகம் தடவைகள் எனக்கு எழுந்ததும் எதுவும் நினைவு இருப்பதில்லை. உடல் வியர்த்துக் கொட்டும். மூச்சு வாங்கும். மனம் குழம்பிக் கிடக்கும். இதனால் என்னால் வேலை செய்யக்கூட முடிவதில்லை. என் பாடங்களைக் கவனித்துப் படிக்கவும் முடிவதில்லை,"

"சமீபத்தில் உங்கள் அனுபவம் ஏதாவது ஒன்றை நினைவிருந்தால், சொல்ல முடியுமா? அதை நான் தெரிந்து கொள்வது உங்களைக் குணப்படுத்த உதவியாக இருக்கும்."

அவள் முகம் சிவந்தது. உடல் வெட்கத்தால் குன்றியது. சிறிது நேரம் பேசத் துணிவு வரவில்லை. என்னை அவள் நம்புவதற்குச் சிறிது தயங்கினாளோ என்னவோ? பிறகு பேசத் தொடங்கினாள்.

"நேற்று நிகழ்ந்த கனவு இது. அதனால் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, சொல்கிறேன் கேளுங்கள்.

வெளியே படப் பிடிப்புக்காகப் போயிருக்கிறோம். மலைச்சாரல் போலத் தெரிந்தது. அழகான சூழ்நிலை. மனதைக் கவரும் இயற்கைக் காட்சிகள். என் மனதில் சொல்ல முடியாத மகிழ்ச்சி. உடலில் கிளர்ச்சியினால் எழுந்த துடி துடிப்பு.

படப்பிடிப்பு முடிந்ததும் நான் மட்டும் தனியே போய் வருவதாகச் சொல்லிவிட்டு வருகிறேன். உலாவிக்கொண்டே வரும் வழியில் ஒரு சிற்றருவி. திரை திரையாக விழும் தூயநீர். சிதறித் தெறிக்கும் நீர்த் துளிகள். கற்பாறையில் விழுந்து ஓடும் நீரின் அடக்க இயலாத கவர்ச்சி.

என் ஆவலை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தப் பாறையில் உட்கார்ந்து குளிக்க நினைக்கிறேன். மற்றவர்களுக்குத் தெரிந்தால் என்னை அனுமதிக்க மாட்டார்கள். என் உடல்நிலை கெட்டுப்போனால் படப்பிடிப்பு தடைப்பட்டுப் போகும். அவர்களுக்குத் தெரியாமல் என் ஆவலை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். என் அலங்காரங்களைக் கலைத்துவிட்டு அருவியினடியில் போய் உட்கார்ந்து கொள்கிறேன்.

அருவியின் தன்மை என்னைத் திக்குமுக்காட வைக்கிறது. மகிழ்ச்சியில் திளைத்துப் போகிறேன். என்னை மறந்து குழந்தையைப்போல விளையாடுகிறேன். திடீரென்று யாரோ வரும் சத்தம் கேட்கிறது. பாறையிலிருந்து எழுந்து மறைந்துகொள்ள விரைகிறேன்.

யாரோ சிரிக்கும் சப்தம். மறைவிலிருந்து பலர் என்னையே பார்ப்பதுபோன்ற உணர்ச்சி. ஆடை நெகிழ்ந்த நிலை. என் உடல் அவமானத்தால் குறுகிநிற்க நான் மறைவை நாடி ஓடுகிறேன்.

சட்டென்று விழித்துக் கொண்டேன். என் உடல் துடிப்பு அடங்கவில்லை. மனம் படபடத்து நின்றது. குழப்பம் என்னை மறுபடி தூங்கவிடவில்லை. இரவு முழுவதும் கண் விழித்தபடி உட்கார்ந்திருந்தேன்."

நான் கேட்டபடி அசையாமல் உட்கார்ந்திருந்தேன். காந்தாமணி பேசி முடிந்ததும் "வேறு கனவு எதாவது உங்களுக்கு நினைவிருக்கிறதா?" என்று கேட்டேன்.

"இல்லை."

"அப்படியானால் உங்களுக்கு மறுபடியும் இதைப்போன்ற அனுபவம் ஏற்பட்டதும் வாருங்கள். ஒத்திட்டுப் பார்த்தால்தான் என்னால் இதன் காரணத்தை ஆராய்ந்து பார்க்கமுடியும் என்று நினைக்கிறேன்" என்று சொன்னேன்.

அவள் முகத்தில் ஏமாற்றம் தென்பட்டது. ஆனால், நான் எதுவும் செய்ய இயலாத நிலையில் இருந்தேன். ஆறுதலாக இரண்டொரு வார்த்தைகள் மட்டும் சொல்லி அனுப்பினேன். ஒரு வாரம் ஆகியிருக்கும். நான் ஒரு முக்கியமான கேஸ் விஷயமாக வெளியே போய்விட்டுத் திரும்பியபோது எனக்காகக் காந்தாமணி காத்துக்கொண்டிருந்தாள். அவள் முகம் வெளுத்திருந்தது. தூக்கமின்மையால் கண்களில் அயர்ச்சி தென்பட்டது. அவள் என்னைப் பார்த்ததும், என் பதிலுக்காகக் காத்திராமல் எழுந்து உள்ளே வந்தாள். என் உடைகளைக்கூடக் களையாமல் கைப்பெட்டியைப் பையனிடம் கொடுத்துவிட்டு என் அறைக்கு அழைத்துப் போனேன்.

"அதற்குப் பிறகு கனவு ஏதேனும் வந்ததா?" என்று கேட்டேன்.

"தினந்தோறும் அதே தொல்லைதான். ஆனால், சரியாக நினைவில்லை. நேற்று நிகழ்ந்ததை உங்களிடம் சொல்லலாமென்று வந்தேன்."

"சொல்லுங்கள்."

அவள் சிறிதுநேரம் பேசாமல் யோசித்தபடி உட்கார்ந்திருந்தாள். அறுந்துபோன நினைவுகளை மறுபடியும் சேர்த்து உருவம் கொடுக்க முயலுவதுபோலத் தோன்றியது. மறுபடி அவள் பேசியபோது அவள் குரல் தடுமாறியது.

"இதுவும் கிட்டத்தட்ட அதேபோன்ற கனவுதான்.

ஒரு முக்கியமான படப் பிடிப்பு நடந்துகொண்டிருக்கிறது. எல்லோருடைய கவனமும் என்பேரில் இருக்கிறது. கதாநாயகனைத் தவிர மற்ற நடிகர்களும், டைரக்டரும், காமிராமேனும் என் செய்கைகளையே கவனிப்பது எனக்குப் புலனாகிறது. எனக்கே தெரியாமல் எதையோ பேசுகிறேன். சுற்றிலும் எல்லோரும் சிரிப்பது தெரிகிறது. படப்பிடிப்பு தடைபட்டுப் போகிறது. நான் தலைகுனிந்து கொள்கிறேன். சிரிப்பு அதிகமாகிறது. அவமான உணர்ச்சியை என்னால் சமாளிக்க முடியவில்லை. கால் தடுமாறுகிறது. எப்படியோ உள்ளே ஓடிப்போய்விடுகிறேன்.

கனவிலிருந்து விழித்து உட்கார்ந்தேன். இதயத் துடிப்பு அடங்கவில்லை. மறுபடி மறுபடி விவரிக்க முடியாத ஒரு அச்சம் என்னைக் கலங்கவைத்தது. என்னால் மறுபடி தாங்கமுடியவில்லை."

நான் காந்தாமணியின் முகத்தைப் பார்த்தேன். எனக்கே பரிதாபமாக இருந்தது. அவள் முகத்தில் களை இல்லை. உடல் ஓய்ந்துபோயிருந்தது. தொடர்ந்த வேலையும், ஓய்வில்லாமல் கவலைப்படுவதால் உண்டாகும் அலுப்பும் அவளை வாட்டுவதை என்னால் உணர முடிந்தது. நான் யோஜித்துச் சொல்லி அனுப்புவதாகக் கூறி அனுப்பினேன். அவளுக்குத் திருப்தி இல்லை.

நான் கேட்டதிலிருந்து ஒரு விஷயம் என்னால் ஊகிக்கமுடிந்தது. காந்தாமணியின் மனதில் ஒரு அச்சம் இருக்கிறது. பகிரங்கமாக அவமானம் ஏற்பட்டால் அவளால் பொறுக்க முடியாது. அந்த பலவீனத்தை அறிந்துகொண்டவர்கள் யாரோ அவளை எதற்காகவோ பயமுறுத்திக் கொண்டிருக்கலாம். அதை அடக்கவும் முடியாமல், விலக்கவும் முடியாமல் அவள் தத்தளித்துக்கொண்டிருக்கக்கூடும். அந்த மனக் கவலையே, அந்த நினைவின் எதிரொலியே அவள் தூக்கத்தில் கனவுகளாக வந்திருக்கக்கூடும்.

ஒவ்வொரு முறையும் கனவின் மூலப் பொருள் அவளை அவமானப்படுத்தும் ஒரு நிகழ்ச்சியாகவே இருந்தது. பொதுவாகக் கனவுகள் அவளைத் துன்புறுத்தினாலும் அத்தகைய நிகழ்ச்சிகளே அவள் மனத்தில் ஆழப்பதிந்தன. அவைகளைமட்டுமே நினைவில் வைத்துக்கொண்டு அவள் என்னிடம் விவரமாகச் சொல்லமுடிந்தது.

காந்தாமணிக்கு வியாதி எதுவும் இல்லை. மனோவியாதிகூட இல்லை. ஒரு விநோதமான சூழ்நிலை விளைவித்த அச்சமே அவளைத் துன்புறுத்திக்கொண்டிருந்தது. அதை மாற்றிவிட்டால் அவளைக் குணப்படுத்திவிடக்கூடும். கேஸில் இந்தப்பகுதியை அவள் என்னிடம் வெளிப்படையாகச் சொல்லவில்லை. சொல்லாமல் மறைப்பதுபோலவும், அவள் தயக்கத்திலிருந்து எனக்குத்தோன்றியது. அதை நான் விசாரித்துத் தெரிந்துகொண்டாலொழிய என்னால் இதில் செய்வதற்கு ஒன்றுமில்லை.

காந்தாமணிக்குச் சொல்லி அனுப்பினேன். அவள் நிலை பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. நெற்றியில் சுருக்கங்கள் தோன்றி

அவள் இளமையை மறைத்தன. தூக்க மின்மையால் கண்களைச் சுற்றிப்படர்ந்தது கருவட்டம்.

அவள் வந்ததும் "மறுபடி ஏதாவது கனவு இருந்ததா?" என்று கேட்டேன்.

"நேற்று மறுபடியும் தூக்கமில்லாமல் உட்கார்ந்திருக்க நேரிட்டது."

"என்ன கனவோ?"

அவள் பதில் சொல்லவில்லை. நான் பேசினேன்.

"நான் சொல்கிறேன். கேளுங்கள்! நீங்கள் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அங்கே பொதுமக்கள் கூடி இருக்கும் இடத்தில் உங்கள் மனத்தில் அதிர்ச்சியை உண்டாக்கும் வகையில், அவமானம் ஏற்படுத்தக் கூடிய முறையில் ஒரு நிகழ்ச்சி ஏதோ நடக்கிறது உண்மைதானு?"

"உங்களுக்கு எப்படித்தெரிந்தது?"

"நான் சொல்வதற்கு முன் உங்களிட மிருந்து ஒரு தகவல் தெரியவேண்டும்."

"என்னது?"

என் ஊகத்தைச் சொன்னேன். அவள் முகம் பாலாக வெளுத்தது. பதில் பேச முடியவில்லை. முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு அழத்தொடங்கினுள்.

அவள் அழுது ஆறுதலடையும் வரையில் பொறுத்திருந்தேன். மறுபடி அவளிடம் அதே கேள்வியைக் கேட்டேன் எனக்கு சரியான விவரம் தெரிந்தாலொழிய எதுவும் செய்வதற்கு இல்லை. என்பதையும் சொன்னேன். மிகவும் வற்புறுத்தியதின் மேல் அவள் பதில் சொன்னுள்.

டாக்டரின் கதை இந்த இடத்தில் தட்டுப் பட்டு நின்றது. ஆவல் மிகுந்த குரலில் "காந்தாமணி என்ன சொன்னுள்?" என்று கேட்டேன். டாக்டரிடமிருந்து பதில் இல்லை. ஏதோ யோசிப்பதுபோலத் தோன்றியது.

கார் எழும்பூரை நெருங்கிவிட்டது. டாக்டர் நிர்மலாவின் வீடு அருகாமையில் தான் இருந்தது. அதிகம் பேச இடமும் இல்லை; நேரமும் இல்லை. டாக்டர் மறுபடியும் தொடர்ந்து பேசினுள்.

"நான் காந்தாமணிக்குச் சொன்ன யோசனையை அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வளவுதான்."

கதை சட்டென்று குறையாக நின்று விட்டதுபோலப் பட்டது எனக்கு. மறைமுகமாக நின்ற ஒரு பகுதியை என்னுல் ஊகிக்கமுடியவில்லை. டாக்டர் நிர்மலாவின் முகத்தில் குறும்புப் புன்னகைப் படர்ந்தது.

காரை வெற்றிலைப்பாக்குக் கடையின் முன்னுல் நிறுத்தினேன். "நீங்கள் கதையை ஒழுங்காக முடிக்காவிட்டால் நான் உங்களை வீட்டில்கொண்டுபோய்ச்சேர்க்கமாட்டேன்" என்று பிடிவாதமாகச் சொன்னேன்.

கடையின் முன்புறம் ஒளிர்ந்த விளக்கொளியை என் பார்வை நாடியது. தொங்கவிட்டிருந்த பத்திரிக்கைகளையும், விளம்பரங்களையும் மேலெழுந்தவாரியாகப் படிக்க முயன்றேன்.

"நடிகை காந்தாமணியின் திடீர் மறைவு!" என்று கொட்டை எழுத்தில் பிரசுரமாகி இருந்தது.

திடுக்கிட்டவனுய் "டாக்டர்! அங்கே பாருங்கள்." என்று சுட்டிக்காட்டினேன்.

அலுங்காத குரலில் டாக்டர் "எனக்கு அது தெரியும்." என்று சொன்னது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது.

"எப்போது?"

"இந்தக்கதையை உங்களிடம் ஆரம்பிப்பதற்குமுன்பு. இல்லாவிட்டால் நான் இந்த அந்தரங்கமானகேஸ் உங்களிடம் சொல்லி இருப்பேனென்று நினைக்கிறீர்களா? இப்போது என் பேச்சு யாரையும் பாதிக்கமுடியாது."

"அப்பொழுது பாக்கி விவரங்களையும் என்னிடம் சொல்லலாமல்லவா?"

"சொல்கிறேன். உங்களால் ஊகிக்க முடிகிறதா என்று பார்த்தேன்."

என் தோல்வியை ஒப்புக் கொண்டேன்.

"காந்தாமணி சிறு வயதிலேயே மணம் செய்து கொண்டவள். அவள் விருப்பத்துக்கு விரோதமான மணம் அது. கணவனுடைய கொடுமையையும், துன்புறுத்தலையும் அவளால் பொறுக்க முடியவில்லை. நடிக்க வேண்டுமென்ற ஆர்வமும் அவளிடம் இயல்பாக இருந்தது.

கணவனுக்குத் தெரியாமல் நாடகக் கம்பெனி ஒன்றில் சேர்ந்து விட்டாள். பெயரையும் மாற்றிக் கொண்டாள். நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தவரை அவளைப் பற்றிய விவரம் அவள் கணவனுக்குத் தெரியாமலே இருந்தது. அவளுக்கு மணமான தகவலே யாருக்கும் தெரியாமலும் இருந்தது.

காந்தாமணிக்குச் சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவளால் அந்த ஆசையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அழகான முகவெட்டும், இயல்பான திறமை

யும் அவளுக்குப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தன. அவள் பெயர் பிரபலமாயிற்று. அவளுடைய படங்கள் எல்லா ஊர்களிலும் வெற்றிகரமாக ஓடின.

கண் காணாத இடத்தில் கிராமத்தில் இருந்த கணவனை அவளிடம் மறுபடி கொண்டு வந்து சேர்ப்பதற்கும் அதுவே காரணமாக இருந்தது. அதை அவள் எதிர் பார்க்கவில்லை. அவனை அவளால் விலக்க முடியவில்லை. அவனைச் சேர்த்துக்கொள்ளா விட்டால், அவளைப் பகிரங்கமாக அவமானப் படுத்திவிடப் போவதாக அவன் பயமுறுத்தத் தொடங்கினான். அவள் போகுமிடங்களுக்கெல்லாம் பின் தொடர்ந்து போக ஆரம்பித்தான்.

நான் சொன்ன யோசனை இதுதான். கணவனைப் பகிரங்கமாகச் சேர்த்துக்கொண்டு விடவேண்டியதுதான். அதற்கு அவளுக்கு இருந்த தயக்கத்துக்குக் காரணம் அவள் நடிப்பில் அவளுக்குக் கிடைத்த புகழ்தான், அதுவே அதற்குத் தடையாக இருக்குமானால் அவள் தன் தொழிலிலிருந்து விலகிவிட வேண்டியதுதான். அப்படி அவள் விலகி விட்டால் அப்புறம் எந்த சம்பவமும் அவளுக்கு அவமானம் ஏற்படுத்தி அவள் புகழைப் பாதிக்கும் என்ற பயமும் இல்லை. அவள் மனதில் பாரமாக நின்ற ஓயாத கவலைக்கும் இடம் இல்லை."

"காந்தாமணி என்ன சொன்னாள்?"

"அவள் என் யோசனையை ஒப்புக்கொள்ள வில்லை. அவளால் தன் கவலையிலிருந்தும் மீளமுடியவில்லை. தூக்கத்திலேயே அதிர்ச்சியில் இறந்துபோனாள்."

நான் செய்தித்தாள் அன்று வாங்கிப் பார்த்தேன். செய்திக்கு அடியில் சிறிய எழுத்துக்களில் மற்றொரு செய்தியும் பிரசுரமாகி இருந்தது.

"நடிகை காந்தாமணியின் கணவரென்று சொல்லிக்கொள்ளும் சித்தம் கலங்கிய மனிதர் ஒருவர் இன்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார். இதற்கும் நடிகையின் மரணத்துக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்று சொல்லப்படுகிறது."

நான் சிரித்துக்கொண்டேன்.

"அவன் நினைத்தபடி நடக்காமற் போனதால் ஏற்பட்ட ஏமாற்றம் அவனுக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்கவேண்டும்" என்றாள் டாக்டர் நிர்மலா.

டாக்டரை வீட்டில் கொண்டுபோய் விடுவதற்காகக் காரைக் கிளப்பினேன்.

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி கோளாறுகளை குணமாக்கும் நிபுணர்கள்

ஜம்மியிடம் கலந்தாலோசிக்கவும்

அடிக்கடி அஜீரணம் ஏற்படும். மலம் வெள்ளை நிறமாக இருக்கும். பசியிராது, அடிவயிறு சாத்திருக்கும் இவை ஈரல் கோளாறுகளின் முதல் அறிகுறிகளாகும். இந் நிலையில் ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்காதீர்கள். உடனே ஜம்மியிடம் காட்டி கலந்தாலோசியுங்கள்.

சுமார் 60 வருஷ அனுபவத்தைக்கொண்டு ஒவ்வொரு வருஷமும் 10 ஆயிரம் குழந்தைகளுக்கு மேல் சிகிச்சை செய்து அவர்கள் மகத்தான சேவைசெய்து வருகின்றனர். நோயை உடனே கண்டுபிடித்துச் சொல்கிறார்கள். அவர்களின் சிகிச்சை முறை மிகுந்த பலனைக் கொடுத்து பிரசித்தி அடைந்துள்ளது.

ஜம்மியின் டாக்டர் உங்களுக்கு அருகேயுள்ள நகரத்திற்கும் பிரதி மாதமும் விஜயம் செய்கிறார். சுற்றுப் பிரயாணத் திட்ட விவரத்துக்கு எழுதவும்,

ஜம்மியின் லிவர்க்யூர்



குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி கோளாறுகளுக்கு

ஜம்மி வேங்கடரமணய்யா & ஸன்ஸ்

சென்னை-4 — கும்பகோணம் — திருச்சிராப்பள்ளி

தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

பூண்டுப் பவுடர்

பூண்டு வெப்ப நாடுகளில் பயிராவதொன்றாகும். ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ பயிராவதில்லை. ஆனால், அந்நாடுகளில் சமையலுக்கும், வைத்தியத்திற்கும் வெகுவாக அது தேவைப்படுகிறது. இதற்காக அவர்கள் நம் நாட்டைப் போன்ற வெப்ப நாடுகளிலிருந்து பூண்டு இறக்குமதி செய்கிறார்கள். ஆனால், பூண்டோ அதிக நாள் கெடாதிருக்கும் ஒரு பொருளல்ல. ஆகையால், அங்கே அவர்கள் பூண்டைப் பவுடராக்கி வைத்துக் கொள்ளுகிறார்கள். இவ்விதம் பூண்டைப் பவுடராக்கும் தொழில் அந்நாடுகளில் வெகுவாக வளர்ச்சியடைந்துள்ளது. நாம் மேல் நாடுகளுக்குப் பூண்டாக ஏற்றுமதி செய்வதைவிடப் பூண்டைப் பவுடராகத் தயார் செய்து அனுப்பினால் நல்ல லாபம் கிட்டும். நாளாக ஆக பூண்டு கெட்டுப் போவதாலும் அதன் நீர் அம்சம் சுண்டுவதாலும் நம் மொத்த பூண்டு உற்பத்தியில் சுமார் 20 சதவிகிதம் வீணாகி விடுகிறது. பவுடர் தயாரிப்பதை நாம் மேற்கொண்டால் இவ்விதமாக ஏற்படும் சேதத்தையும் தவிர்க்கலாம்.

நம் நாட்டில் இப்பொழுது சிறு அளவில் சிலர் பூண்டுப் பவுடர் தயாரிக்கிறார்கள். பூண்டின் மேல் தோலை அகற்றி உள்ளே உள்ள சதையைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, உலர்த்தி இடித்துத் தூள் செய்வதே அவர்கள் இதற்குச் சாதாரணமாகக் கையாளும் முறையாகும். இது சரியான முறையல்ல. இதனால் இவ்விதம் கிடைக்கும் பவுடர் நல்லதரமாக இருப்பதில்லை.

மைசூரில் உள்ள மத்திய உணவு ஆராய்ச்சிக்கழகம் இப்பொழுது இதற்கு நவீனமுறை ஒன்றைக் கண்டறிந்திருக்கிறது. பூண்டுகளைக் கையால் தேய்த்து மேல்தோலைப் போக்கி பற்களைத் தனித் தனியாகப் பிரித்து, இரண்டு அல்லது மூன்று மடிப்புள்ள ரோல் மில்லில் (Roll Mill) அரைத்து அகலமான தட்டுகளில் பரப்பிக் காய வைக்கவேண்டும். இவ்விதம் காய்ந்த பிறகு சாதாரண மாவு அரைக்கும் மில்களில் கொடுத்து நயமான பவுடராக்கி டப்பாக்களில் அடைத்து விற்பனைக்கனுப்பலாம். இவ்விதம் தயாரிக்கப்பட்ட பூண்டுப் பவுடர் உணவுத் தயாரிப்புகளில் சேர்ப்பதற்கு மட்டுமின்றி பலவகை மருந்து தயாரிப்புக்கும் பயன்படும். இப்பொழுது நம் சமவெளிகளில் வெகுவாக விளையும் ஒரு வகைப் பூண்டை நாட்டுப் பூண்டு எனச் சொல்லுகிறோம். மலைப்பூண்டைவிட நாட்டுப் பூண்டு சீக்கிரம் கெட்டுப் போகக்கூடியதொன்றாகும். ஆகையால், மலைப்பூண்டைவிட அதன் விலையும் மிக மலிவு. இந்நாட்டுப் பூண்டுகளைப் பவுடராக்கும் தொழில் நாம் தொடங்கி நடத்தினால் நல்ல லாபகரமானதாக இருக்கும்.

மலிவான காற்றாடி பம்புசெட்

மேல் நாடுகளில், முக்கியமாக ஹாலண்டு தேசத்தில் காற்றாடியால் மின்சாரம் உற்பத்தி செய்து விளக்கு எரிப்பது, பலவிதத் தொழில்கள் நடத்துவது, விவசாயத்துக்காகவும் குடிநீருக்காகவும் பம்பு செட்டுகள் அமைப்பது போன்ற காரியங்கள் வெகுகாலமாக நடந்து வருகிறது. இவ்விதமான காற்றாடிகள் மணிக்கு 15 மைல் அல்லது அதற்கு அதிகமான வேகத்தில் காற்றடிக்கும் இடங்களில் மட்டுமே லாபகரமாக இயங்குகின்றன. ஆனால், நம் நாட்டிலோ பெரும்பாலான இடங்களில் மணிக்கு 6–10 மைல் வேகத்திற்குமேல் காற்றடிப்பதில்லை. இதனால் மேல்நாட்டு முறையைப் பின்பற்றி இங்கு அமைக்கப்பட்ட காற்றாடிகள் சரியாக இயங்கவில்லை. இப்பொழுது நம் நாட்டில் புதிய வகைக் காற்றாடி மின்சார உற்பத்திக் கருவி (Wind generate) ஒன்றை டில்லியில் உள்ள விஞ்ஞானத் தொழில் ஆராய்ச்சிக் கவுன்சில் கண்டுபிடித்திருக்கிறது. 6–10 மைல் வேகத்தில் காற்றடித்தாலே அக்காற்றாடி இயங்கி மின்சாரம் உற்பத்தி செய்யும். அந்த மின்சாரத்தின் உதவியைக்கொண்டு மணிக்கு ஆயிரம் காலன் தண்ணீர் இறைக்கலாம். 1000 காலன் தண்ணீர் இறைக்க மூன்று நயாபைசா செலவாகும். அதாவது ஒரு ஏக்கரில் ஓரங்குல மழை பெய்த அளவு நீர்ப் பாசனம் செய்ய சுமார் 11 அணாவாகும். இந்த விதமான காற்றாடி பம்பு செட் அமைக்க ரூ. 2500 செலவாகும்.

முகப்பவுடர்

முகப்பவுடர் தயாரிப்பது மிகச் சிறு முதலீட்டுடன் சுலபமாக ஏற்று நடத்தக்கூடிய ஒரு தொழிலாகும். இதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது "டால்க்" என்ற பவுடராகும். இது ஒருவகைக் கல்லின் மாவு. அக்கல்லை ஆங்கிலத்தில் "ஸ்டியடைட்"

(Steatite) அல்லது "சோப் ஸ்டோன்" (Soap stone) எனவும் சொல்லுவார்கள். இக்கல்லை மாவாக அரைத்து விற்கிறார்கள். கல்லை வாங்கிச் சொந்தமாக மாவாக்கியும் கொள்ளலாம். சொந்தமாகப் பவுடர் தயாரிப்பதானால் அக்கல்லைப் பால் மில்லில் அரைத்துப் பட்டுத் துணியில் சலித்துக்கொள்ள வேண்டும். பட்டுத் துணிக்குப் பதிலாக 200 மெஷ்—அதாவது ஒரு சதுர அங்குலப் பரப்பில் 200 துவாரங்கள் உள்ள—சல்லடையிலும் சலித்துக்கொள்ளலாம்.

டால்க் நீக்கி ஜிங் ஆக்சைடு (Zinc oxide), ஸ்டார்ச், பொரேக்ஸ், போரிக் பவுடர், சால்சிலிக் ஆஸிட், மாக்னீசியம் கார்பனேட் (Magnesium Carbonate) பிரசிபிடேட் சாக் ஆகியவை சிறிதளவு தேவைப்படும். இவற்றைப் பவுடரில் சேர்ப்பதன் நோக்கம் அதற்கு மருந்து குணம் ஊட்ட வேண்டும் என்பதேயாகும். ஆகையால், இப்பொருள்கள் கலந்த பவுடரை "மெடிகேடட்" (Medicated) அதாவது மருந்து குணம் ஊட்டப்பட்ட பவுடர் எனக்கூறுவது வழக்கம். ஆனால், உண்மையில் அச்சரக்குகளைச் சேர்ப்பதால் பவுடருக்கு மருந்துகுணம் எதுவும் ஏற்பட்டுவிடுவதில்லை. ஆனால், கோடை காலங்களில் குழந்தைகளுக்கு அதிகமாகக் காணும் வியர்க்கூருக்கு இப்பொருள்கள் கலந்த பவுடர் நல்ல பலனளிக்கும். ஆனால், அதற்கு மேலேகண்ட எல்லாப்பொருள்களும் சேர்க்கவேண்டும் என்பது அவசியமல்ல, போரிக் ஆஸிட் அல்லது சால்சிலிக் ஆஸிட் இரண்டில் ஏதாவதொன்று கலந்தாலே போதுமானது.

பவுடருக்கு மணம் ஊட்ட அதோடு ரோஜா அல்லது மல்லிகை (Jasmine) அத்தர் கலப்பது நல்லது. சிலர் இதற்கு லவெண்டர், யலாங் யலாங் அத்தர்களும் சேர்ப்பதுண்டு. சிறிது பவுடர் எடுத்து அதில் சில துளிகள் அத்தர் கலந்து ஒரு கல்வத்தில் அப்பவுடரை இட்டு நன்கு கடைய வேண்டும். இவ்விதம் சிறிது பவுடரில் அத்தர் துளிகள் கலந்து கலந்து கல்வத்தில் கடைந்து கடைந்து பூரா பவுடரையும் வாசனையுடையதாக மாற்றிவிடலாம். அத்தர் எவ்வளவு சேர்க்கவேண்டும் என்பது அத்தரின் தரத்தையும், அதன் வாசனை வேகத்தையும் பொறுத்ததாகும். சாதாரணமாக ஒரு ராத்தல் பவுடருக்கு ஒரு ட்ராம் அத்தர் போதுமானது.

இப்பொழுது சிலவகை மலிவான முகப் பவுடர்கள் தயாரிக்கும் முறையைக் கீழே தருகிறேன்.

(1)

நயமான டால்க் பவுடர்......22 ராத்தல்
மாக்னிசியம் கார்பனேட்......$2\frac{3}{4}$,,
வாசனை அத்தர்......விருப்பம்போல்

முதலில் மாக்னீசியம் கார்பனேட் பவுடரில் சிறிது சிறிதாக அத்தர் சேர்த்துக் கடையவும். பிறகு அதோடு டால்க் பவுடரையும் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கடைந்து கொள்ளவும்.

(2)

டால்க் பவுடர்...... 16 அவுன்ஸ்
அத்தர்...... விருப்பம்போல்
செய்முறை மேலே கூறியபடி

(3)

டால்க் பவுடர்...... 16 அவுன்ஸ்
ஸ்டார்ச் அல்லது அரிசிமாவு...... 8 ,,
மாக்னிசியம் கார்பனேட்......... 4 ,,
அத்தர் ... ... விருப்பம்போல்

முதலில் மாக்னீசியம் கார்பனேட் பவுடரில் அத்தர் கலந்து கடையவும். பிறகு அதோடு டால்க் பவுடரையும், கடைசியாக ஸ்டார்ச் அல்லது அரிசிமாவையும் சேர்த்துக் கடைந்துகொள்ளவும்.

(4)

	லேசு	மத்தியமம்	கனம்
டால்க்	50 ராத்	65 ராத்	40 ராத்
மாக்கார்ப்	—	—	5 ,,
ஜிங் ஆக்சைடு	—10 ,,	15 ,,	10 ,,
,, ஸ்டியரேட்	— 10 ,,	10	5 ,,
அரிசிமாவு	—	—	10 ,,
சைனுக்களிமண்	-10 ,,	20	30 ,,
பிரசிபிடேட்சாக்	--5 ,,	5	—

அத்தர் — 6 லிருந்து 8 அவுன்ஸ்.
ராத்—ராத்தல்.

லேசு, மத்திமம், கனம் என்பதை ஆங்கிலத்தில் முறையே (Light, medium, heavy) பவுடர் எனக்கூறுவார்கள். சைனுக் களிமண்ணை கேஓலின் (Kaolin) எனவும் சொல்லுவார்கள். இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

கனரகப் பவுடர் தயாரிக்க ஜிங் ஆக்சைடில் அத்தரைக் கலந்து கடைந்து பிறகு ஒன்றன் பின் ஒன்றாக முறையே டால்க் ஜிங் ஆக்சைடு, ஜிங் ஸ்டியரேட், அரிசிமாவு, சைனுக் களிமண் ஆகியவைகளைக் கலந்து கடைந்து கொள்ளவும்.

மத்தியம,லேசுரகப் பவுடர் தயாரிக்கப் பிரசிபிடேட்டட் சாக் பவுடரில் அத்தரைக் கலந்து கடைந்து பிறகு ஒன்றன்பின் ஒன்றாக முறையே டால்க், ஜிங் ஆக்சைடு, ஜிங் ஸ்டியரேட், சைனுக் களிமண் ஆகியவைகளைக் கலந்து கடைந்துகொள்ளவும். பிரசிபிடேட்டட் சாக் பவுடர் கிடைக்காதுபோனால் அதற்குப் பதில் அரிசி மாவை உபயோகிக்கலாம்.

(5)

போரிக் ஆஸிட்	90 பங்கு
பிரஞ்சு சாக்	100 „
ஜிங் ஆக்சைடு	200 „
ஆரிஸ் ரூட்	200 „
ரோஸ் ஆயில்	1 „
பர்கமாட் ஆயில்	6 „
நிரோலி ஆயில்	2 „
ஹெலியோட்ரோபின்	1 „

முதல் நான்கு பவுடரையும் 200 மெஷ் சல்லடை அல்லது பட்டுத்துணியில் சலித்து ஒன்ருகக் கலந்துகொள்ளவும். நான்கு வாசனைத் திரவியங்களையும் ஒன்ருகக் கலந்து, பவுடர் கலவையில் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கடைந்து கொள்ளவும். இவ்விதம் தயாரிக்கப்பட்ட பவுடர் பொரேட்டட் டாய்லெட் பவுடர் (Borated Toilet Powder) எனப்படும்.

மேலே குறிப்பிட்ட சரக்குகளில் டால்க் சேர்ப்பது பவுடருக்கு மிருதுத் தன்மை கொடுக்கிறது. மாக்னிசியம் கார்பனேட் வாசனையை உறிஞ்சி வெகுநாள் வரை வைத்திருக்கும் இயல்பு பெற்றிருப்பதோடு பவுடரை அளவில் அதிகமாக உப்பச் செய்கிறது. லேசாகவும் ஆக்குகிறது. ஜிங் ஆக்சைடு அதிகநேரம் முகத்தில் பவுடர் பளபள என ஒட்டிக் கொண்டிருக்க உதவுகிறது.

வாஷிங் சோப்

இதைத் தயாரிக்கக் கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படும்.

தேங்காய் எண்ணெய்	...	15	பங்கு
கடலை எண்ணெய்	...	20	,,
காஸ்டிக் சோடா	...	20	,,
ரோசனம்	...	5	,,
சோடா சிலிகேட்	...	30	,,
தண்ணீர்	...	10	,,

காஸ்டிக் சோடாவை சோடியம் ஹைட்ராக்ஸைடு (Sodium hydroxide) எனவும் சொல்லுவார்கள். வெள்ளை நிறப்பவுடராக அல்லது கட்டிகளாக இது கிடைக்கும். தண்ணீரில் இதைக் கரைத்தால் அந்தக் கரைசல் "லை" (Lye) எனப்படும். சோடியம் சிலிகேட்டை, வாட்டர் கிளாஸ் (Water Glass) எனவும் சொல்லுவார்கள். வெள்ளை நிறத்தில் தேன் போன்ற கெட்டித் திரவமாக இது இருக்கும்.

ஒரு வாயகன்ற பெரிய பாத்திரத்தில் தேங்காய் எண்ணெய் கடலை எண்ணெய் இரண்டையும் கலக்கவும். மொத்தம் உள்ள காஸ்டிக் சோடாவை 5 பங்காகப் பிரித்து நான்கு பங்கை ஜலம் விட்டுக் கரைக்கவும். பிறகு பாக்கியுள்ள மற்ருெரு பங்கு காஸ்டிக் சோடாவை தனியாக ஜலம் விட்டு வேறு ஒரு பாத்திரத்தில் கரைத்துக்கொள்ளவும்.

தேங்காய் எண்ணெய் கடலை எண்ணெய் கலவையை அடுப்பேற்றிக் கொதிக்க வைக்கவும். எண்ணெய் கொதிக்கக் கொதிக்க அதோடு சிறிது சிறிதாக நான்கு பங்கு சோடா கரைத்த கரைசலைச் சேர்க்கவும். அதே சமயம் மற்ருெரு பாத்திரத்தில் ரோசனத்தையும், ஒரு பங்கு சோடா கரைத்த கரைசலையும் சேர்த்துக் கொதிக்க வைக்கவும். அது நன்கு கொதித்ததும் எண்ணெய் கொதிக்கும் பாத்திரத்தில் ரோசனத்தை ஊற்றவும். பிறகு சோடியம் சிலிகேட்டை, ஜலம்விட்டுக் கரைத்து அதையும் எண்ணெய் கொதிக்கும் பாத்திரத்தில் சேர்க்கவும். சிறிது நேரத்தில் எல்லாம் சோப்பாக மாறிவிடும். அச்சுகளில் ஊற்றி ஆறவிட்டுச் சோப்பாக அறுத்துக் கொள்ளலாம்.

நீங்கள் கேட்டவை

நான் சோப் செய்யும் தொழிலைச் செய்ய மிகவும் ஆவலுள்ளவனுக இருக்கிறேன். ஆகையால், தாங்கள் வருகிற ஏப்ரல் மாதக் 'காவேரி'யில் தொழில் துணுக்கில் சோப் செய்யும் முறையைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கரூர்
14-3-60 } — *என். காத்தவேலு நாடார்*

தங்கள் விருப்பப்படி இவ்விதழில் சோப் செய்யும் முறை ஒன்றை வெளியிட்டிருக்கிருேம். இதுவன்றி சோப் செய்ய ஏராளமான வேறு பல முறைகளும் உண்டு. 'காவேரி' வாசகர்கள் பலரின் விருப்பிற்கிணங்க, அவற்றில் முக்கியமான சிலவற்றைத் தனிக் கட்டுரை உருவில் ஜூன் இதழில் வெளியிடுவதாக இருக்கிருேம். தாங்கள் சோப் செய்யும் தொழிலை மேற்கொள்ள அதில் காணும் விவரங்கள் பல தங்களுக்கு மிகுந்த உதவியாக இருக்கலாம் எனக் கருதுகிருேம்.

தாங்கள் 'காவேரி'யில் பிரசுரித்த கம்பி மத்தாப்பு செய்வதெப்படி என்பதைப் படித்தேன். அதேபோல் கொம்புவாணம் செய்யும் முறையையும் பிரசுரிக்கக் கோருகிறேன்.

பெங்களூர் 8
14-3-60 } — *என். துரைசாமி*

வாணம், மத்தாப்புக்கள் தயாரிப்புப் பற்றிய விரிவான விவரங்கள் மே இதழில் வெளியிடுகிருேம்.



தொடர் கதை

ஸப்தபதி

மூலம்: தாராசங்கர் பானர்ஜி.

தமிழில்: சரஸ்வதி ராம்னுத்

"வம்ஷி எங்கே?"

காவற்கார ராமசரணனின் மகன்தான் வம்ஷி. அவனுக்குக் குஷ்டம் கண்டிருந்தது. கிருஷ்ணசாமி ஓர்நாள் இவ்வழியாக வந்த சமயம் இச்சிறுவனின் முகத்தைப் பார்த்தே அவனுக்கு இப்பயங்கர நோய் கண்டிருப்பதை அறிந்துகொண்டார். விஷயத்தை வெகுநேரம் எடுத்துச்சொல்லி வைத்தியம் செய்துகொள்ள இசைய வைத்தார். இந்நோய் நீங்கச் செய்யப்படும் இன்ஜெக்ஷன் மிக உபாதையளிக்கும். அதனால்தான் வம்ஷி பயந்து பெரும்பாலும் எங்கேனும் ஓடிவிடுவான். அவனை ஆசைகாட்டி வசப்படுத்த கிருஷ்ணசாமி, கையில் ஏதாவது கொண்டு வருவார்.

கிருஷ்ணசாமி சைக்கிளைச் சுவற்றிலே சாற்றி வைத்தார். திண்ணைமீது ஏறி வந்ததும் ராமசரணனின் மனைவி அறையிலிருந்து வெளியே வந்து மோடாவை எடுத்துப்போட்டாள். கிருஷ்ணசாமி மோடாவின்மீது உட்கார்ந்துகொண்டவர் தன் நீண்ட அங்கியிலிருந்து ஓர் புல்லாங்குழலை எடுத்தார்.

பாதையின் எதிர்புறத்திலிருந்த பெரிய மாமரத்தின் மீதிருந்து வம்ஷி, தடால் எனக் கிழே குதித்தான். மூச்சு வாங்க, .."அதோ பாபா! அவள் வருகிருள்; அவளேதான் பாடா, அவளேதான்" எனக் கூவினன். மிதமிஞ்சிய ஆவலிலும், உற்சாகத்திலும் அவனுக்கு மூச்சுத் திணறியது. சற்று வீங்கியிருந்த முகம் மேலும் சிவந்தது. இரு கண்களும் எரிதழல்போல் சிவந்தன.

"யார் யார் வருகிருர்கள் வம்ஷி?" . கிருஷ்ணசாமி சிரித்துக்கொண்டே வினவினர்.

"இதோ பார்! உனக்காகக் குழல் கொண்டு வந்திருக்கிறேன்." ஆனல், வம்ஷியின் மனம் குழலில் செல்லவில்லை. அவன் பார்வை எதிரேயுள்ள பாதையில் பதிந்திருந்தது. அடிக்கடி அப்பாதையின் முனையை நோக்கித் திரும்பியது, சுழன்றது.

"அதேபெண்தான். தலையிலே பளபள வென்ற பட்டுக்குட்டை கட்டிக்கொண்டிருக்கிருளே அவளேதான். மரத்தின்மேலேயிருந்து நான் பார்த்தேன். வண்டி புயல் வேகத்தில் வந்தது. அந்தப்பட்டுக்கைக்குட்டைக்காரிகூட அதிலேயேதான் உட்கார்ந்திருக்கிருள். வெயில் தாங்காது, தவித்துக்கொண்டிருக்கிருள்." வம்ஷி தன்பாட்டில் பேசிக்கொண்டேபோனன்.

பாதையின் மறுகோடியில் ஜீப்பின் உறுமல் கேட்டது. உண்மைதான்; ஜீப்தான் வருகிறது. புழுதிப்படலத்தின்நடுவே ஆழ்ந்த சிவப்புநிறத்தொப்பிகூட தெரிந்தது.

"எத்தனையோ பேரைப்பார்த்திருக்கிறேன். பாபாசாகப்! ஆனல், எங்கப்பன், பாட்டன் காலத்திலேகூட இப்படியொரு பெண்ணைக் கண்டதேயில்லை. துரைசானிதான் பாபா! துரைசானியேதான்" என்ருன் ராமசரண். கிருஷ்ணசாமி சிரித்தார்.

"வேட்டி, துண்டு அணியும் இந்த நாட்டில், முழத்துண்டு கட்டிவாழும் ஏழை ராமசரணனும், அவன் மகன் வம்ஷியும் விசித்திரமான உடையிலிருக்கும் இந்த மேனாட்டு நங்கையைக்கண்டதுமே வியப்பினுல் தங்களை மறந்துவிட்டார்கள்போலும்" என்று எண்ணித்தான் அவர் நகைத்தார்.

ஜீப் புயல்போல் சீறிக்கொண்டு வந்தது. அவள் முன்சீட்டிலே உட்கார்ந்திருந்தாள்.

அவள் நல்ல வெளுப்புதான். அவள் அருகே அமர்ந்திருந்தவன் நல்ல பலிஷ்டனுகயிருந்தான். அவனும் வெள்ளையன்தான். உடலில் வெறும் பனியன்தான் அணிந்திருந்தான். தலையிலே ராணுவ ஆபீசர்கள் அணியும் தொப்பியிருந்தது. திடீரென வண்டியின் வேகம் குறைந்தது. ரெயில்வே

கேட்டைத்தாண்டியது. வீட்டருகில்வந்ததும் திடீரென ஓர் குலுக்கலுடன் நின்றது. பிரேக்போட்ட அதிர்ச்சியில் அப்பெண் விழுந்துவிடுபவள்போல் கவிழ்ந்தாள். ஆனால், அவள் சட்டென்று தன்னைச்சமாளித்துக்கொண்டாள். மெல்ல வண்டி பின்னோக்கி நகர்ந்தது... ராமசரணனின் வீட்டின் முன்னேவந்ததும் நின்று விட்டது. அந்த ராணுவ அதிகாரி, கீழே இறங்கினான்: அவனுடைய உடையின் பளபளப்பைக் கண்டதுமே கிருஷ்ணசாமிக்கு அவன் அமெரிக்க ராணுவத்தைச் சேர்ந்தவன் எனத் தெரிந்துவிட்டது.

"ஏய், மேன்! வாட்டர், வாட்டர். தண்ணீர்." அந்தப்பெண் உடைந்த குரலில் ஆனால், உத்தரவிடுபவள்போல் கூவினாள். "தண்ணீர் கொண்டுவா! "யூ-you-you காதில் விழவில்லை உனக்கு!"

கிருஷ்ணசாமி எழுந்து நின்றார். கூலிங் கிளாசைக் கழற்றிக் கொண்டே திண்ணையிலிருந்து கீழேயிறங்கினார். அவர் வைத்த கண் வாங்காது அப்பெண்ணைப் பார்த்தவாறு ஜீப்பை நெருங்கினார். விசித்திரமான உடை. மேனாட்டு நாகரீகப் பாணியில் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். சிவப்புநிற பாண்ட், ஸ்லாக்ஸ், டென்னிஸ் காலர் வைத்த அரக்கைச் சட்டை, பளபளக்கும் சிவப்புநிற பட்டுக் கைக்குட்டையைத் தலையைச் சுற்றிக் கட்டியிருந்தாள். நல்ல அழகு, இச்சையைத் தூண்டிவிடக் கூடிய பருவப் பூரிப்பு, கவர்ச்சிகரமான தோற்றம், நாணம் தழுவாத உடல்.

அமெரிக்கன், பாண்டின் ஜேபியிலிருந்து ஓர் நோட்டை உருவி அதை நீட்டினான். "Don't you understand - man - water, Bring-water".

அந்தப் பெண்ணும் கூடவே கத்தியது—"you swine — you ..."

அமெரிக்கன் அவளை அதட்டினான்—"you Bitch Stop. I say you stop."

கிருஷ்ணசாமி புன் சிரிப்புத் தவழ அவர்களை நோக்கி ஆங்கிலத்தில் கூறினார். "please Don't Abuse her like that. She is ill..."

Nothing—you Don't know man. "இந்தக் குட்டி ஓர் பாட்டிலைக் கடகடவெனக் குடித்துவிட்டாள். சும்மா வெறும் போதைதான். கொஞ்சம் வாட்டர் கொடு. வழியிலே ஏதாவது குளம், குட்டையிருந்தா இவளை ஓர் முக்கு போடலாம் என்று பார்த்தேன். நல்லவேளை; வீட்டைப்பார்த்ததும் ஜீப்பை நிறுத்தினேன். மூர்ச்சையாகி விடுவாளோ என்று பயந்தேன். போதை-நல்லபோதை-" என்றான் அமெரிக்கன்.

"நான் டாக்டர். அவளுக்கு உடம்பு சரியில்லை என்று எனக்குத்தெரியும். நான் சொல்வதைக்கேள். முதலில் அவளைக்கீழே இறக்கிவிடு. அவளை உடனே கவனிக்கவேண்டும். என் பெட்டியில் மருந்துகள் இருக்கின்றன. ஓர் டோஸ் மருந்து முதலில் தருகிறேன். என்னை நம்பு. நானும் மெடிக்கல் காலேஜில் படித்தவன்தான்."

கிருஷ்ணசாமி அவளிடம் பேசிக்கொண்டிருக்கையிலேயே அப்பெண் சுருண்டு விழுந்துவிட்டாள்.

சட்டென்று கிருஷ்ணசாமி தன் கரங்களை முன்னே நீட்டி அவளைத்தாங்கிக்கொண்டார்.

"ஏய் ...ராமசரண் கட்டிலைப்போடு"... அப்பெண்ணை உற்று நோக்கிய கிருஷ்ணசாமி அம்முகத்திலிருந்து தன் விழிகளையகற்றாமலேயே "மிஸ்டர். தயவு செய்து தலையில் கட்டியிருக்கும் துணியை அவிழ்த்துவிடுகிறீர்களா?" என்றார்.

அந்த ஆபீஸர் சற்று வேகமாக வெடுக்கெனத் தலைத்துணியைப் பற்றி இழுத்தான். என்ன ஆச்சர்யம்?

கருத்தடர்ந்த கேசம். அலை அலையாய் புரண்டது. குழல் கற்றைகள் அலைமோதின.

கிருஷ்ணசாமி அவளை ஜாக்கிரதையாக கட்டிலில் படுக்க வைத்தார். வெகு நேரம் ஏதேதோ சிகிச்சைகள் செய்தபின் அப்பெண் நேராக மூச்சு விடலானாள். நினைவு வரும் முன்னர் வாந்தி எடுத்தாள். உடை எல்லாம் நனைந்து நாசமாகி விட்டது. கிருஷ்ணசாமி நிதானமாக யாவற்றையும் துடைத்துச் சுத்தப் படுத்தினார்.

அந்த அமெரிக்கன் எதிலும் தான் சம்பந்தப்படாதவன்போல் தூர உட்கார்ந்திருந்தான். சிகரெட், பெட்டி பெட்டியாகக் காலியாகிக் கொண்டிருந்தது. அவன் நடு நடுவே பேசினான். ஆனால், திடீர் திடீர் என மனத்திலே எழும் கேள்விகளைப்போல் ஒன்றுக்கொன்று தொடர்பற்று, சம்பந்தமற்றிருந்தது அவன் பேச்சு.

அந்தப்பெண் அசையாது கிடந்தாள். முற்றிலும் சுயநினைவை இழந்தவளாகவே தோன்றினாள்.

திடீர் என்று அந்த அமெரிக்கன் கேட்டான். "is n't she beautiful eye fine eyes and litts. Hay what do you say?"

"Yes. she has got a very sweet face..." என்றான் கிருஷ்ணசாமி.

உண்மையிலேயே அப்பெண் மிக அழகாகத்தானிருந்தாள். கண்டோரைக் கவ



ரும் மோகன ரூபமும், கருத்தடர்ந்த கேசமும், சுடர் விழிகளும், கருத்தடர்ந்த இமைகளும் மிகமிக கவர்ச்சிகரமாக அதியசயிக்கத்தக்க அழகுடன் விளங்கின. நீண்டு அடர்ந்த அந்த இமைகள், நீள் விழிகளுக்குப் பின்னும் சோபையூட்டின.

சற்றுநேர மௌனத்திற்குப் பிறகு "ஏதாவது ரொம்ப சீரியஸ்ஸா" என்றான் அந்த அமெரிக்கன்.

"அப்படி நேரிடுவதற்கும் இடமிருந்தது. குடிப்போதை மட்டுமல்ல, வெயிலின் கடுமையும் சேர்ந்து பாதித்திருக்கின்றது. இன்னும் ஆபத்து முற்றிலும் நீங்கி விடவில்லை. பார்க்கலாம்" என்றார் கிருஷ்ணசாமி.

சில நிமிடங்கள் கழிந்தன. மீண்டும் கேள்வி பிறந்தது. "நீ டாக்டர் என்று கூறினாய் அல்லவா? பட்டம் பெற்ற டாக்டர் என்றுதான் நினைக்கிறேன். ஆனால், ஏனிப்படி உடை அணிந்திருக்கிறாய்?"

"நான் துறவி. எங்கள் நாட்டில் துறவிகள் பல முறையில் உடை அணிவார்கள். ஆனால், நிறமென்னவோ இதுதான்."

"டாக்டர் மட்டும் தானா?"

"இல்லை. நான் ஓர் துறவியும் கூட."

அமெரிக்கன் மீண்டும் மௌனமானான். பிறகு மௌனத்தைக் கலைத்தவாறே, "இந்த மாதிரிப் பெண்கள் உங்கள் நாட்டில் எத்தனை பேர்கள் என்று உன்னால் கூற முடியுமா? முதன் முதலில் இவளைப் பூரியில்தான் சந்தித்தேன். கடற்கரையில் நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம். ஒருமணி நேரத்திற்குள்ளேயே மிக மிக நெருங்கியவர்களாகிவிட்டோம். குடித்தால் எப்படிக் குடிக்கிறாள் தெரியுமா?"...சிகரெட்டை ஓர் முறை உறிஞ்சிப் புகையை வெளியிட்டவாறே அவன் தொடர்ந்து பேசினான். "அன்றிலிருந்தே இவள் என்னுடன்தான் சுற்றுகிறாள்."

கிருஷ்ணசாமி அப்பெண்ணின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்.

"மூர்ச்சை தெளிந்து கொண்டிருக்கிறது. உன்னிடம் கொஞ்சம் ஒயினிருக்கிறதா?"

ஒயின் உள்ளே சென்றதும் அவள் முகத்தைச் சுளித்துக்கொண்டாள்;

"வாட்டர்! ப்ளீஸ் வாட்டர்" என உதடுகள் முனகின.

கிருஷ்ணசாமி குளிர்ந்த நீரை வாயில் ஊற்றினர். அவள் மீண்டும் மீண்டும் வாயைத் திறந்தாள். இரண்டொரு வாய் தண்ணீர் அருந்தியபின் அவளுக்கு மீண்டும் உயிர் வந்தது போலிருந்தது.

புன்சிரிப்புடன் அவளுடைய கண்களின் கீழே விரலைவைத்து அழுத்திக் கண்களை உற்றுப் பார்த்தவாறே "Let me look at your eyes, Look at my face"...என்றார் கிருஷ்ணசாமி.

அப்பெண்ணின் புருவங்கள் உயர்ந்தன. விழிகள் கூர் அம்பாகின.

அமெரிக்கன். இதைக் கண்டதும் உரத்த குரலில் அவளை நோக்கி, "ஏய். Don't... அப்படிச் செய்யாதே do you hear..."என்று கத்தினன். பிறகு கிருஷ்ணசாமியின் பக்கம் திரும்பி "இவள் இப்படித்தான். திடீர் திடீர் என்றும் சீறுவாள். கூச்சலிடுவாள்" என்றான்.

அப்பெண் சட்டென்று எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

"you blackil leave me... leave me" என்று கீச்சுக் குரலில் கத்தினாள். அவள் முகம் சிவந்தது. இமைகள் படபடத்தன.

"Shut up you bitch — Shut up I say" அமெரிக்கனும் கத்தினன்.

உதட்டில் புன்னகை தவழக் கிருஷ்ணசாமி அசையாது நின்றார். அவர் கரம் அப்பெண்ணின் நெற்றியை மெல்ல வருடின.

"உனக்கு உடம்பு சரியில்லை. நான் டாக்டர் நான் சொல்வதை நீ கேட்டுத்தாளுக வேண்டும். கொஞ்சம் படுத்துக்கொள். எல்லாம் சரியாகி விடும். உனக்குத் தலையை வலிக்கின்றது என்று எனக்குத் தெரியும். இந்தா இந்த மாத்திரையை முழுங்கிவிடு பார்க்கலாம். ப்ளீஸ்."

பெண் கண்களை மூடிக்கொண்டாள். பளிங்கு போன்ற அவள் நெற்றியில் சுருக்கங்கள் தோன்றின.

"இந்தா இதை முழுங்கி விடு."

மாத்திரையை முழுங்கிய பின் இரண்டொரு நிமிடங்கள் கழிந்தன.

அப்பெண் எழுந்து உட்கார்ந்தாள்.

"A smok please" அவள் கரம் நீண்டது. நீண்ட மெல்லிய விரல்களின் நுனியில் "நிகோடின்" கறை படிந்திருப்பது கிருஷ்ணசாமியின் பார்வைக்குத் தப்பவில்லை.

"Now. She is O. K. get up my honey" அமெரிக்கன் குதூகலத்துடன் எழுந்தான்.

"அவளுக்குச் சரியாகி விட்டது டாக்டர்! O. K. நாங்கள் வருகிறோம். ரொம்ப ரொம்ப வந்தனம்" எனக் கிருஷ்ணசாமியிடம் கூறிய வாறே இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை உருவி நீட்டினன்.

"வந்தனம். மன்னிக்கவும். இது என் கடமை. ஏசுவின் பெயரால் உங்களிடம் கேட்டுக் கொள்ளுகிறேன். இது எனக்குத் தேவையில்லை."

அத்தியாயம் 3

வியப்பினல் கண்கள் விரிய, லால்சிங்கையும் சிந்துவையும் நோக்கியவண்ணம் ஜும்கி கிசுகிசுத்தாள். "ஏ-சிங்! பாபாவிற்கு என்ன வந்துவிட்டது?"

ஜும்கி கூறியதைக் கேட்டதும் திடுக்கிட்டு "என்ன வந்துவிட்டது? என்ன நடந்தது?" என்றான்.

"என்னவோ? தனக்குள்ளேயே பேசிக் கொண்டிருக்கிறார். மந்திரம், கிந்திரம் படிக்கிறாரோ என்னவோ, என் காதால் கேட்டேன். பயந்து ஓடிவந்துவிட்டேன். தேநீர் கூட இன்னும் கொடுக்கவில்லை. போ! நீ போய் கொடுத்துவிட்டு வா" என்று ஒரே மூச்சில் பேசினள் ஜும்கி.

தேநீர் கோப்பையுடன் லால்சிங் கிருஷ்ணசாமியின் அறை வாயிலில் போய் நின்றான். பாபா சாகப் சில சமயம் பைபிளை உரத்த குரலில் படிப்பதை அவன் பார்த்திருக்கிறான்.

ஆனல், இன்று?

கிருஷ்ணசாமி தன் அறைக்குள்ளேயே சுற்றிச்சுற்றி நடந்துகொண்டே பைபிளைக் கூறிக்கொண்டிருந்தார். பைபிள் அல்ல அது. கவிதைதான் அது.

It is the cause—it is the cause my soul.
Yet me not name it to you, you chastestar's
I'll is the cause.
Let I'll not shed her blood.
Nor scar that whiter skin of her's than snow.

ஷேக்ஸ்பியரின் 'ஒதெல்லோ'விலிருந்து சில வரிகளைக்கூறிக்கொண்டிருந்தார் கிருஷ்ணசாமி. இன்று ராமசரணனின் வீட்டில் தான் திடீரென அவ்வரிகள் நினைவுக்குவந்தன. அந்தப் பெண்ணுடன் பேசும்போதுகூட



இடையிடையே எத்தனையோ வரிகளைக் கலந்து பேசினர்.

"Let me look at your eyes. look at my face peace and be still."

இது கூட ஒதெல்லோவில் வரும் ஓர் சம்பாஷணைதான்.

"Patience you young rose lipped. made'" இதெல்லாம் அந்த அமெரிக்கனுக்கு எங்கே புரிந்திருக்கப்போகிறது?

"ரீனா—ரீனா பிரவுனுக்குக்கூடவா என்னைத் தெரியவில்லை? என் சொற்களை செவிமடுத்த பின்னுமா அவளுடைய நினைவுகளின் திட்டி வாசல் திறக்கவில்லை? ஆச்சர்யந்தான்!

இல்லை. இதில் ஆச்சர்யப்படுவதற்கென்ன யிருக்கிறது? குடிபோதை அவளுடைய சுய நினைவை, அறிவை, அவளையேமூடி மறைத் திருந்ததே...ரீனா—ரீனாபிரவுன்."

லால்சிங் சத்தமிடாது தேனீர் கோப்பையை மேஜையின்மீது வைத்துவிட்டு திரும்பிச்சென்றான். பாதிரியார், ஏசுநாதரைத் தியானம் செய்துகொண்டிருக்கிறார். லால்சிங் மௌனமாக வெளியேறினான்.

பாதிரியாருக்கு, இதே ரீனா பிரவுனுக்கு முன்னால்...ஒரு காலத்தில் கடவுள்கூட துச்சமாகத் தோன்றினார். அப்பொழுதெல்லாம் "கருப்புச்சந்திரன்" (பாதிரியாரின் முந்திய பெயர்) நாத்திகன். அவன் கடவுளிருப்பு தாக ஏற்றுக்கொண்டதில்லை. அவனுக்கு கடவுளிடம் நம்பிக்கை கிடையாது. கருப்பாகயிருந்ததால் யாவரும்-கருப்புச் சந்திரன் என்றழைத்தனர்!

கிராமத்திலிருந்து வந்த பையன். நல்ல கருப்பு. ஒல்லியான ஒசிந்த உடல். நல்ல கட்டான அமைப்பு. பெரிய பெரிய கண்கள். நெற்றியில் வந்து விழும் கற்றையான மயிர்ச் சுருள்கள்.

மேற்கு வங்காளத்தில் பிரசித்திபெற்ற வைத்தியர் குடும்பத்தில் பிறந்தவன் சந்திரன். சந்திரனின் தந்தைக்கு வைத்தியத் தொழிலில் ஈடுபடுவதைவிட நிலபுலன்களைக் கவனிப்பதிலும் பூஜா அனுஷ்டானங்களில் ஈடுபடுவதிலுமே அவர் மனம் பெரிதும் விரும்பியது. ஆயினும், தன் ஒரே மகனை சந்திரனை டாக்டருக்குப் படிக்க வைக்க வேண்டுமென்று அவர் மிக ஆசை கொண்டிருந்தார். கிராமப்பள்ளியில் மெட்ரிக் படிப்பை முடித்துக்கொண்டு சந்திரன் இன்டர் படிக்கக் கல்கத்தா செயிண்ட் சேவியர் கல்லூரியில் போய்ச் சேர்ந்தான். இன்டரை முடித்ததும் மெடிக்கல் காலேஜில் சேர வேண்டும் என்றுதான் கல்கத்தா வந்திருந்தான்.

கிருஷ்ணசந்திரனின் சுபாவமே அலாதி. சின்னஞ்சிறு விஷயத்திற்குக்கூட உரக்க ஹா.. ஹா...என்று சிரிப்பான். தடதடவென சத்தம் செய்துகொண்டு படிகளிலிறங்கி வருவான். வகுப்பில் உள்ள மாணவர்களில் பெரும்பான்மையினரைவிட அவன் உயரம். எழுந்து நின்றால் யாவருக்கும் மேலே அவன் தலை தெரியும்.

திடீரெனக் கிருஷ்ண சந்திரனின் பெயர் கல்லூரியில் பிரமாதமாக அடிபடலாயிற்று. அந்தக் காலத்தில் செயிண்ட் சேவியர் கலாசாலைக் கட்டிடமே வேறுவிதமானது. அது பழைய கட்டிடம். கலாசாலையின் தென்புறம் ஓர் விசாலமான விளையாட்டு மைதானமிருந்தது. அந்த மைதானத்தில் சிற்றுண்டி நேரத்தில் பையன்கள் புட்பால் ஆடுவது வழக்கம். கல்கத்தா வாசிகளான பையன்கள்தான் பெரும்பாலும் ஆடுவார்கள்.

கிருஷ்ணசாமி, ஓர் நாள் வராந்தாவிலிருந்து இறங்கி மைதானத்திற் கருகில் வந்து நின்றான். கோல் வாயிலுக்கு சமீபத்தில் நின்று கொண்டான், இலேசாக மழை பெய்திருந்ததால் மைதானம் சறுக்கலாகயிருந்தது. ஆடுபவர்கள் பந்தை ஓங்கி உதைக்கும் முயற்சியில் மீனைப்போல் வழுக்கி விழுந்துகொண்டிருந்தனர். வேடிக்கை பார்த்தவர்கள் உரக்க நகைத்தனர். கைதட்டினர்.

ஓர் சிக்ஸ்யார்ட் ஷாட். கோல்கீப்பர் பந்தை சரியான இடத்தில் வைத்துவிட்டு நகர்ந்துகொண்டான். புல்பாக் பந்தை உதைக்கக் காலைஓங்கியதும் வழுக்கிவிட்டது. அவன் எட்டப்போய்விழுந்தான். கிருஷ்ண சந்திரன். உடனே தன் பூட்சைக் கழற்றினான். ஓர் நொடியில் ஓடிப்போய் பந்தை ஓங்கி ஓர் உதை கொடுத்தான். நல்ல ஷாட். தேர்ந்த ஆட்டக்காரன் போன்ற நல்ல ஷாட். பந்து உயர எழும்பி சென்டர் லைய

லைனைத்தாண்டி மறுபக்கம் ஹாப்பாக்லயனுக்கு முன்னால்போய் விழுந்தது.

"யார் இந்தப் பையன்? யாரது" என்ற கேள்வி எங்கும் பிறந்தது. மூன்றாம் வருடம் படிக்கும் காலேஜ் காப்டன் ஆஷுதாஸ் முன்னே வந்து நின்றான். "உன் பெயரென்ன? எங்கே விளையாடியிருக்கிறாய்? எந்த இடத்தில் விளையாடுகிறாய்? மாட்ச் விளையாடியிருக்கிறாயா?" கேள்விகள் சரமாரியாகப் பிறந்தன.

"மாட்சா? ஓ-நிறைய விளையாடியிருக்கிறேன். இத்தனை-நிறைய நிறைய மெடல்கள் கிடைத்திருக்கின்றன. சிவுடி,-வர்த்தமான், காஞ்சனலதா, சாந்திநிகேதன் இங்கெல்லாம்கூட மாட்ச் விளையாடியிருக்கிறேன். பெஸ்ட் பிளேயர்ஸ் மெடல் ஐந்திருக்கின்றன என்னிடம். லெவ்ட் அவுட்டாக விளையாடுகிறேன். கார்னர் கிக் கொடுத்து பந்தை கோலுக்குள் போட்டுவிடுவேன். புல் பாக்காககூட விளையாடுவேன். லெவ்ட் பேக், சென்டராகக்கூட விளையாடுகிறேன். கோல்போடுவேன். எங்கே? ஒரு கார்னர் கிக் கொடுங்கள் பார்க்கலாம், செய்துகாட்டுகிறேன். கொடுக்கிறீர்களா?"

"கொண்டு வாப்பா பந்தை; எங்கே கொண்டா" கார்னர் கிக் கொடுத்ததுமே பந்து உண்மையிலேயே கோலுக்குள் போய் விழுந்துவிட்டது. பந்து போன விதமே அலாதியானது. கோலுக்கு 6 கஜம் முன்னாலிருந்து பாய்ந்து உள்ளே சென்ற பிறகு வளைந்து மூலை வழியாகக் கோலுக்குள் போய்விட்டது. இதுதான் கிருஷ்ண சந்திரனின் திறமைக்கு ஒரு சான்றாகயிருந்தது எனலாம்.

கிருஷ்ண சந்திரனை லெவ்ட் அவுட் விளையாடச் சொன்னார்கள். வாட்ட சாட்டமான உருவம் கொண்ட கிருஷ்ண சந்திரன் தன் நீண்ட கால்களைத் தூர தூர வைத்தவாறே பந்தைத் தூக்கிக்கொண்டு ஓடினான். அவன் ஓடியது அம்பு 'விர்' எனப் பறந்து சென்றது போலிருந்தது. மறு பக்கத்து லயனினருகே நின்று ஒரே மூச்சில் பந்தை வீசி எறிந்தான். பந்து சரியாக கோலுக்கு எதிரே போய் வீழ்ந்தது. கால் வழுக்கியதால் இரண்டொரு முறை சறுக்கி விழுந்தான். யாவரும் நகைத்தனர். ஆனால், கிருஷ்ண சந்திரன் எதையுமே பொருட்படுத்தவில்லை. திரும்பிப் பார்க்கவுமில்லை. காதில் வாங்கிக் கொள்ளவுமில்லை. திடீரென நடுவே கோபம் கொண்டவனாய் சென்டர் பார்வேடை நோக்கிக் கூவினான். "ஒருகோல் கூடவா போடமுடியவில்லை? என்னைச் சென்டரில் விளையாட விடுகிறாயா?"

கிருஷ்ணசந்தர் சென்டருக்கு வந்து விட்டான். வந்ததுமே பந்தை எட்டிப் பிடித்து கோல் கீப்பரின் கையில் விழும்படியாக லாகவமாக வீசினான்.

கோல்கீப்பர் பந்தைப்பிடிக்கக் கைகளை நீட்டினான். அதற்குள் கிருஷ்ணசந்தர் எகிறி தன் தலையால் பந்தைத் தட்டிவிட்டுவிட்டுக் கோல் கீப்பரின்மேல் விழுந்துவிட்டான். இருவரும் மண்ணில் புரண்டனர். ஆனால், பந்தென்னவோ கோலுக்குப் போய்விட்டது.

மற்றொரு முறை கோல்கீப்பர் அவனை அடித்துவிட்டான்; மூக்கிலிருந்து ரத்தம் கொட்டியது. ஷர்ட் நனைந்துவிட்டது. இரண்டொரு நிமிடம் பேச்சு மூச்சற்று விட்டான். ஆனால், உடனே எழுந்து மண்ணிலும் குருதியிலும் நனைந்த கரங்களினால் தலையைக் கோதியவாறே மைதானத்திற்குள் வந்து நின்றான்.

அவனைக் கண்டதுமே காப்டன் ஓடிவந்தான். "இல்லை இனி வேண்டாம். நமக்குள் அடித்துக்கொள்வது சரியல்ல."

கிருஷ்ண சந்தர் நகைத்தான். "நான் அடிதடி ரகளை செய்வேன் என்பது உமக்கு எப்படித் தெரிந்தது?

"நாங்களும் விளையாடுபவர்கள் தானே" எனச் சிரித்துக்கொண்டே கூறினான் காப்டன்.

இந்தச் சம்பவம் நடந்த தினத்தன்றே கிருஷ்ணசந்திரன் பிரசித்தி அடைந்துவிட்டான். ஆனால், அவனுடைய பிரதிநிதி இத்துடன் நின்றுவிடவில்லை. இது நடந்து ஒரு மாதமிருக்கலாம். ஓர்நாள் வகுப்புக்குள் நுழைந்த வங்காளி ஆசிரியர் திகைத்து நின்றுவிட்டார். அவர் நல்ல ரசிகர். இலக்கியப் பற்றுடையவர்.

வகுப்பில் யாரோ உரத்த குரலில் கவிதை பாடிக்கொண்டிருந்தனர். திடீர் புகழ்பெற்ற நம் கிருஷ்ணசந்திரன் தான் இரு வகுப்புகளுக்கிடையே ஆசிரியரின் ஸ்தானத்தில் ஏறி நின்று கவிதைப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தான். வகுப்பில் முதல் ஸ்தானம் பெற்றவன் ஓர் முஸ்லீம். ஓர் முசல்மான் தலைவருடைய மகன். அவன் வகுப்பில் நிறைய குறும்புத்தனம் செய்வான். எதிர்பாராது அன்றைய வங்காளி வகுப்பில் கிருஷ்ணசந்தர் வந்து சேர்ந்தான். வங்காளி வகுப்பில் ஹலீமில்லை. அவன் அதைப் பாடமாக எடுத்துக் கொள்ளவில்லை.

கிருஷ்ணசந்தர் கவிதை பாடினான்.

"இவ் வைகறையிலே ஓ காலைப்பறவையே!
நீ இசைத்த கீதமென்னவோ?
தொலைவிலே; எட்டாததூரத்திலே, வான
வெளியிலே மிதந்துவரும் கீதமென்னவோ?"

கிருஷ்ணசந்தர் கூவினான். "கேளுங்கள்! சகோதரர்களே! என் நண்பர்களே! காம்ரேட்ஸ்! கேளுங்கள்!"

"காம்ரேட்" என்ற சொல் அந்தக்காலத்திலேயே கல்லூரிக்குள் வந்துவிட்டிருந்தது. 1938, 1939-வது வருஷத்து விஷயம்.

"நான் கவிதை படிக்கிறேன், கேளுங்கள். ரவீந்திரரின், "நீரோடையின் சிதைந்த கனவு" என்ற பாடலைக்கேளுங்கள்."

கிஷ்ணசந்திரனுக்கு அவ்வளவாகக் குரல் நன்றாகயிராது. இனிமையுமில்லை. குரல் உடைந்து மாறும்பருவம். ஆனால், இதையெல்லாம் அவன் பொருட்படுத்தியதேயில்லை.

கிருஷ்ணசந்திரனின் குரல் நடுங்கியது. மின் வேகத்தைப்போல கேட்பவர்களின் உள்ளத்திலே ஆவேசத்தை, உணர்ச்சியையூட்டியது.

"இவ்வைகறையிலே, கதிரவனின் கிரணங்கள் உயிரின் உணர்விலே விரவிநிற்பது எப்படியோ?"

குரல் உயர்ந்தது. திரண்டுவரும் மேகங்கள்போல் உணர்ச்சிவேகம் எழுந்தது. குமுறியது. கிருஷ்ணசந்தர் கடைசி அடிக்கு வந்துவிட்டான்.

"என்னதென்று தெரியவில்லையே?
என்னுயிர் விழிப்படைந்து விட்டதே!
தொலை தூரத்திருந்தே......
பெருங்கடலின் இன்னிசையும்,
மேலும்
என்னைச்சுற்றிலும்.
பயங்கரமான இச்சிறைச்சாலையும்.
ஓ-ஓ... உடைத்தெறியுங்கள்; பயங்கரமான சிறைக்கதவை; உடையுங்கள், தாக்குங்கள்."

பாடலை முடித்தவுடன் கிருஷ்ணசந்திரன் ஆசனத்திலிருந்து கீழே குதித்து அறையின் வாயிலை நோக்கிச் சென்றவன் மூடியிருந்த கதவுகளை முஷ்டியால் தட்டித் தம்—தம், என்ற ஓசையை எழுப்பினான். பையன்கள் தங்கள் தங்கள் மேஜைகளைத் தட்டினார்கள். ஒரே ஆரவாரம்.

வெளியேறி நின்ற ஆசிரியர் கதவைத் திறந்துகொண்டு உள்ளே பிரவேசித்தார். முழக்கம் திடீர் என ஓய்ந்தது.

ஆசிரியர் நின்றார்: "இது முறையல்ல. நண்பர்களே! கிருஷ்ணசந்தர்! நீ மிக அழகாக கவிதையைக் கூறுகிறாய்" என்றார்.

இதன்பின் மீண்டும் ஓர்முறை கிருஷ்ணசந்திரனின் பெயர் கல்லூரி முழுவதும் அடிபட்டது. கல்லூரிகளுக்குள் நடந்த கவிதைப் போட்டிக்கு அவன் சேவியர் கல்லூரி பிரதிநிதியாக அனுப்பப்பட்டான். சம்ஸ்கிருத, வங்காளி-கவிதைகளை ஒப்புவித்தான். பரிசு

வேப்பம் சக்தி இணையற்றது

2,000 வருட காலமாக இதன் கிருமிநாசன சக்தி நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாக வைக்கவும் பற்களைப் பலப்படுத்தவும்

நீம் டூத் பேஸ்ட்

வேப்பம் குச்சியின் அற்புத கிருமி நாசன சக்தியும், பல் சுகாதாரத்திற்கான நவீன பொருள்கள் அடங்கிய ஒரே பற்பசை.

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட், கல்கத்தா-29.

தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, மதராஸ்-1

NT-186 HP-Tamil

கிடைக்கவில்லையே தவிர, அவன் சமஸ்கிருத கவிதையைக் கூறிய முறையை யாவரும் பாராட்டினர். குரல் மட்டும் சரியாக இருந்திருந்தால் பரிசு கிடைத்திருக்கும்.

விளையாட்டு மைதானத்திலிருந்து ரெஸ்டாரெண்ட் வரை, கிருஷ்ணசந்திரனின் குரல் எதிரொலித்தது. ஹாஸ்டல், கல்லூரி எங்கும் அவனுடைய கம்பீரமான குரல் கேட்கும். அவனுடைய வேகத்தில், உற்சாகத்தில், ஆவேசத்தில், சூழ்நிலையே கலகலத்தது. அந்த வருட முடிவில், கிருஷ்ண சந்திரன் பரிக்ஷையில் தேறவில்லை. முடிவு தெரிந்ததும் அவன் வேறு கல்லூரிக்குப் போகப் போவதாக நண்பர்களிடம் கூறிக் கொண்டான். காலேஜ் டீம் காப்டன் ரெக்டர் தன் சிபார்சின்மேல் அவனுக்கு தேர்வு தரும்படி செய்தான். கிருஷ்ணசந்திரனை, தனியே அழைத்து, "நீ இனி கவனமாக யிருக்கவேண்டும் கிருஷ்ணசந்தர், நீ டல் ஸ்டூடண்ட் இல்லையே..." என்றான். கிருஷ்ணசந்திரன் பதில் கூறவில்லை.

அன்றுதான் கிருஷ்ணசந்திரனுக்கு தன் அம்மா; அப்பாவின் நினைவு வந்தது.

கிருஷ்ணசந்திரனின் தந்தை அதிகமாகப் பேசமாட்டார். கம்பீரமான தோற்றம். இரண்டொரு வார்த்தை கூறுவார். பூஜை ஜப, தப, அனுஷ்டானங்களில்தான் அதிகமாக ஈடுபடுவார். பூஜையறையில் நமஸ்கரிக்கும்போது அக்கம்பக்கத்தில் ஒருவருமில்லாவிடில் தனக்குள்ளே கூறிக்கொள்வதுண்டு.

"என்னை மன்னித்துவிடு பிரபோ! நான் தகுதியற்றவன். உனக்கு அளிக்கும் நைவேத்தியங்களைக்கூடக் குறைத்து விட்டேன். இத்துன்பத்தை உன்னைத் தவிர வேறு யாரிடம் கூறுவேன்?"

கிருஷ்ணசந்திரனின் தாய் மகிழ்ச்சியே உருவானவள். கற்பக விருக்ஷந்தானென்று சொல்லலாம். அவன் எச்சமயத்தில் எது விரும்பினாலும் அது அவனுக்குக் கிடைத்து விடும். அவள் தருவாள்.

அம்மாதான் கிருஷ்ணசந்திரனுக்கு நீந்தக் கற்றுக்கொடுத்தாள். அவளுக்கு நீந்தத் தெரியும். அவள் குளித்துவந்த தடாகத்தில் நிறைய தாமரைகள் பூக்கும். சந்திரன் தினமும் அம்மலர்கள் வேண்டுமென்று பிடிவாதம் செய்வான். அம்மாவும் பறித்துத் தருவாள். நீராடச் செல்லுகையில் சந்திரன் உடன் செல்லுவான். அவன் கொஞ்சம் பெரியவனானதும், அவள் "இந்தா நீ நீந்தக் கற்றுக் கொள். போய் தாமரைப் பூ பறித்து வா" என்றாள். "முடியாது" எனக் கூறிவிட்டான். நீந்தக் கற்றுக்கொள்ளவேண்டுமே என்ற பயத்திலே சந்திரன் சில நாட்கள்வரை தாமரை என்ற பெயரையே உச்சரிக்கவில்லை. சிலநாட்கள் கழிந்தன. ஓர் நாள் அவன் அம்மா, கரையிலிருந்த மரத்தில் கயிற்றைக் கட்டி, அதைத் தன் இடுப்பிலே சுற்றிக் கொண்டாள். குடத்தை நீரில் மிதக்கவிட்டவாறே "வாடா! வா! பூப்பறிக்கலாம்" என்றாள். சந்திரன் பயந்துகொண்டே நீரில் இறங்கினான். இருவரும் நீந்திச் சென்றார்கள். அவன் அம்மா குடத்தைப் பலமுறை முன்னால் தள்ளிவிட்டாள். "இந்தா, போடா! போய் பிடித்துக்கொள்" சந்திரன் தவித்தான். தாவினான். நீந்தினான்.

இதற்குப்பிறகு பிரதி தினமும் பூஜைக்குத் தாமரைமலர் பறித்துவருவது அவனுடைய வேலையாகிவிட்டது.

அம்மா அவனைப் பக்கத்தில் படுக்கவைத்துக்கொள்ளுவாள். எதிர்காலத்தைப் பற்றி அவனிடம் என்னென்னமோ பேசுவாள். "அடேய்! நீ பெரிய டாக்டர் ஆகவேண்டுமடா என்பாள். வெளிநாடெல்லாம் நீ போய் வரவேண்டும். ஜெர்மனிக்குப்போய்வா! நிறையச்சம்பாதி. பெரியவீடு கட்டவேண்டும். தெரியுமா? ஆள் படை எல்லாம் வைத்துக் கொள்ளவேண்டும். மோட்டார் வண்டி எல்லாம் வாங்கவேணுமடா சந்திரா." என்றெல்லாம் கூறுவாள்.

சந்திரனுக்கு முன்னால் ஓர் புதிய உலகமே விரிந்துகிடக்கும் "ஏனம்மா! அயல் நாடு போனால் நம் ஜாதி போய்விடாதா?" என்பான்.

"அந்தக்கால மெல்லாம் போய்விட்டது; அப்படிப்போனால்தான் போகட்டுமடா. ஜாதியை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறாய்? உன் அப்பாமாதிரி ஒவ்வொன்றையும் அலம்பிக் கழுவிக்கொண்டா இருக்கப்போகிறாய்?"

"அப்பா அனுமதிக்கமாட்டாரே அம்மா!" அவரிருக்கட்டும்; நீ புறப்பட்டுப்போய்விடு. இல்லாவிட்டால் நாமிருவருமே தனியாக இருந்துவிடுவோம். என்ன? பிருந்தாவனத்திற்குப் போய்விட்டால் போகிறது. நீ பெரியவனாக, பெரியமனிதனாக ஆகவேண்டுமடா சந்திரா." என்பாள் அவள்.

பரிக்ஷையில் பெயில்ஆன அன்று கிருஷ்ண சந்திரனுக்கு இவையெல்லாம் நினைவு வந்தன. இந்த நினைவை அவன் மீண்டும் மறந்துவிடவில்லை. இண்டர் படித்து முடிக்கும்வரை மறக்கவேயில்லை. முதல் வகுப்பில் தேறிவிட்டான்.

மெடிக்கல் காலேஜிலும் சேர்ந்துவிட்டான். மெடிக்கல் காலேஜில் சேர்ந்ததும் அவன் தன் பெயரை மாற்றிக்கொண்டான். கிருஷ்ணசந்திரகுப்தா– கிருஷ்ணேந்து குப்தா வானான். இண்டர் பரிக்ஷைக்கு முன்னரே கலாசாலைக்கு ஓர் விண்ணப்பம் எழுதிவிட்டு, கோர்ட்டிலும் ஓர் வாக்குமூலத்தைப் பதிவு செய்துவிட்டு அவன் தன் பெயரை மாற்றிக் கொண்டுவிட்டான். (தொடரும்)

மாலைப்பொழுது மறையப்போகும் நேரம்! காலையிலிருந்து தஞ்சை பெரிய கோயில் கோபுரத்தின் நிழலை, தரையிலே சாய்த்துக் காட்ட, கதிரவன் முயன்றான்! அவன் ஜம்பம் ஒன்றும், பிரகதீச்சுவரரின் கோபுரத்திடம் சாயவில்லை! நாளைக்கு ஒரு கை பார்த்து விடுவோம் என்ற நப்பாசையுடன் ஆதவன் அயர்ந்துறங்கப் போய் விட்டான்.

கோயில் முழுவதும் நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன. கூட்டம் கூட்டமாக மக்கள், வந்து கொண்டே இருந்தனர். வைகாசிப் பெரு விழாவிற்காக, மன்னனும் தமது குடும்பத்தாருடன் வந்தான்.

ஐம்பத்து நான்குஅடி சுற்றளவும், ஆறடி உயரமும் உள்ள இராஜராஜேச்சுவர முடை

அருள்மொழி வர்மன்

திருவரங்கசம் அமிழ்தன்

யாரை, பெருஞ்சண்பக மொட்டு, ஏலஅரிசி, விலாமிச்சவேர், பன்னீர் புஷ்பம் முதலியவைகள் ஊறிய திருமஞ்சன நீரால் அபிஷேகம் செய்வித்தனர். அமுது வகைகள் பல நிவேதிக்கப்பட்டன.

நாற்பத்தெண்மர் திருப்பதியம் விண்ணப்பம் செய்தனர். தேவர் மொழியையும், செந்தமிழையும் ஓதினர். கனபாடிகள் சர்மகானம் செய்தனர்! காந்தர்விகள் பதம் பாடி ஆடினர்! மொரலியம், வங்கியம், உடுக்கை முத்திரைச் சங்கம், சகடைமுதலியவைகள் முழங்கின.

கர்ப்பூரதரிசனம் நடந்தது. கருவூர்ச் சித்தர் பெருமான், இறைவனை நோக்கிப் பாடத் தொடங்கினர்;

உலகெலாந் தொழவந் தெழுக திர்ப்பரிதி
ஒன்று நூறாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
அங்கனே அழகிதோ வரணம்
பலகுலாம் படை செய் நெடு நிலை மாடம்
பருவரை ஞாங்கர் வெண் திங்கள்
இலை குலாம் பதணத் திஞ்சி சூழ் தஞ்சை
இராச ராசேச்சரத் திவர்க்கே

திருவிசைப்பா முடிந்து விடவில்லை! மேலும் மேலும் பாடல்கள் தொடர்ந்து கொண்டே சென்றன.

திருவிசைப்பாவின் இன்னிசைத் தமிழை, அருந்திக் கொண்டிருக்கிறனே, இவன் தான் சோழ மன்னன் அருள் மொழி வர்மன்.

அருகில், அவனது திருமுக மண்டலத்தை நோக்கிக் கொண்டிருப்பவள் பட்டத்தரசி உலக மாதேவியார். பளிங்கு விழிகளால், களங்க மில்லாமல் எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கிற இந்தப் பால்வடியும் முகத்தினன்தான், இராஜ ராஜசோழனின் திருப்புதல்வன்— பட்டத்து இளவரசன்— இராஜேந்திரன்!

எதிர்வரிசையில் நிற்பவர்கள்; அமைச்சர்கள், அந்தரங்கஆலோசகர்கள், அத்தியந்த நண்பர்கள்! அரசாங்கத்தில் பொறுப்புள்ள பதவிகளை வகிப்பவர்கள்.

எல்லோரும் தங்களையே மறந்து தமிழ்த் தேனை சுவைத்துக் கொண்டிருக்கின்றனர்! ஆனால், அருள்மொழி வர்மன் மட்டும் யாரையோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

"எங்கே தமக்கை குந்தவைப்பிராட்டியாரைக் காணோம்? ஆலயத்திற்கு உடன் வந்தார்களே!"

குந்தவைப் பிராட்டியாரை, பிரகாரத்தில் தேடிப் பார்க்கலாம் என்றாலோ, இந்த சமயத்தில் இயலாத காரியம்!

குந்தவைப்பிராட்டியார் எங்கே சென்றிருப்பாள்? நந்தி பகவானின் கம்பீரத் தோற்றத்தில் புத்தியைப்பறி கொடுத்து நிற்கிறார்களா?

என்ன இது பெரிய வம்பாய்ப் போய் விட்டது.

என்ன ஏமாற்றம்! குந்தவைப்பிராட்டியாரை, இங்கேயும் காணவில்லையே! அப்படியானால், எங்கே சென்றிருப்பாள்?

சிலையுருவில், தியானத்தில் ஆழ்ந்திருக்கும் கலை மடந்தையின் மடியில் தலை சாய்த்து குந்தவைப்பிராட்டி ஏன் அழுது கொண்டிருக்கிறாள்?

குந்தவைப் பிராட்டியாரே! தங்களுக்கு நேர்ந்திருக்கும் துன்பங்கள் என்ன? எதற்காக இந்தத் துயரக்கோலம்?

தங்கள் விழிகள் வடிக்கும் ஒரு சொட்டுக் கண்ணீரின் சிறு துளியை, ஆலயத்திற்குள்ளிருக்கும் அருண்மொழிவர்மன் நோக்கியிருந்தால், துடிதுடித்துப் போயிருப்பானே! துள்ளியெழுந்து, துன்பத்தைத் தூள் தூளாக்கியிருப்பானே!

"ஆதித்த கரிகாலா! உன்னை அழித்தவள் இந்தப் பாவிதான்!... நான்தான் கொலைகாரி!...இந்தப் பாதகிக்கு நிம்மதியே கிடையாதா? சொல் கரிகாலா! சொல்லமாட்டாயா?" குந்தவைப் பிராட்டியார் புலம்பினாள்! பிறகு நினைவிழந்து துவண்ட பூமாலையைப்போல் கிடந்தாள்!

இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தர சோழனுக்கு மூன்று குழந்தைகள். மூத்தவன் ஆதித்த கரிகாலன். அவனுக்கு அடுத்துப் பிறந்தவள், குந்தவைப் பிராட்டி. மூன்றாவதாக ஜனித்தவன்தான் அருண்மொழிவர்மன். (இராஜராஜசோழன் என்று சிறப்புப் பெயர் பெற்றவன்.)

எதிரிகளுக்கு ஆதித்த கரிகாலன், 'யமனைப் போன்றவன்! ஆண்மையில் யானையின் தன்மை பெற்றவன்! அவனுக்கு வாள்-வேல் முதலிய இரும்புக்கருவிகள், தேவையே இல்லை!

ஆதித்த கரிகாலனின் கண்பார்வைக்கு எதிர்நோக்குக் கொடுப்போர் எவருமிலர்! அவனுக்குப் போர்க்களம் புகுவது என்பது கருத்துக்கிசைந்த காதலியோடு வெண்ணிலவில் விளையாடுவது போன்றது.

இராஜாங்கம் நல்ல முறையில் நடைபெற தந்தை சுந்தர சோழனுக்கு ஆதித்த கரிகாலன் உதவி புரிந்தான். அதனால், சுந்தர சோழன், ஆதித்த கரிகாலனுக்கு அவன் பெயராலேயே கல்வெட்டுகள் ஏற்படுத்திக்கொள்ள, அனுமதி அளித்தான்.

என்ன காரணத்தினாலோ என்னவோ, ஒருநாள் திடுதிப்பென்று தனது தந்தை

சுந்தர சோழனைச் சிறையில் அடைத்தான். ஆதித்தகரிகாலன், அரசாங்கத்தைக் கைப்பற்றி, சர்வாதிகாரியானுன்!

குந்தவைப்பிராட்டி, கொதித்தெழுந்தாள். தனது தம்பி அருண்மொழிவர்மனையும் தன்னேடு சேர்த்துக்கொண்டு, சிறையிலிருந்து சுந்தரசோழனை விடுதலை செய்ய வேண்டுமென்று நாட்டில் கிளர்ச்சி செய்தாள். ஆதித்த கரிகாலன் எதையும் பொருட்படுத்தவில்லை. அலட்சியமாகவே இருந்தான்.

ஆதித்தகரிகாலன் அன்றையிலிருந்து தானே நேரிடையாக சுந்தரசோழனை அடைத்து வைத்திருக்கும் காராக்கிரகத்தை காவல் புரியத் தொடங்கினுன்.

... ...

நள்ளிரவு! அமாவாசை இருட்டு வேறு துணை புரிந்தது. எப்படியாவது இரவு முடிவதற்குள் தந்தையை சிறையிலிருந்து மீட்டு வந்துவிட வேண்டுமென்று அரசிளங்குமாரி குந்தவைப்பிராட்டி திட்டமிட்டாள்!

தனது சிற்றப்பன் மதுராந்தகனை, சிறு படையுடன் சிறைச்சாலையை நோக்கி அனுப்பிவிட்டு, தம்பி அருண்மொழிவர்மனுடன் பின் தொடர்ந்தாள் குந்தவைப் பிராட்டி. அவளுக்குப் பின்னுல் பீடுநடைப் போட்டு வந்தன சிறுபடைகள்!

சிறைச்சாலையிலே...!

சுந்தரசோழக்கிழவர் பஞ்சணையில் நிம்மதியாகக் கால்களை நீட்டி உறங்கிக் கொண்டிருந்தார்!

பஞ்சணைக்குப் பக்கத்திலுள்ள யானை மருப்பு இருக்கையில் அமர்ந்து, ஆதித்த கரிகாலன் அவசரமாக எதையோ ஓலை நறுக்குகளில் எழுதிக் கொண்டிருந்தான்! அங்கு எரிந்து கொண்டிருந்த தீவட்டி வெளிச்சத்தில் அவனுடைய வேதனைமுகமும், எழுத்தாணி பிடித்து எழுதும் அவன் கை வேகமும் தெரிந்தன.

இத்தகைய சூழ்நிலையைத்தான் மதுராந்தகன் எதிர் பார்த்திருந்தான்! நல்ல சமயம் வாய்த்து விட்டது! சுந்தரசோழனை விடுதலை செய்ய வேண்டிய முயற்சியில் ஈடுபட வேண்டியதுதான்.

ஆனுல், மதுராந்தகன், அந்த முயற்சியில் ஈடுபடவில்லை! சுந்தரசோழனைக் கொல்ல வேண்டிய முயற்சியில் ஈடுபட்டான்! அவன் இன்றைக்குத்தானு, இத்தகைய இழிச்செயலில் ஈடுபடுகிருன்? எத்தனையோ வருடங்களாக ஈடுபட்டு வருகிருன்!

இன்றைக்கு அவனுடைய எண்ணம் ஈடேறப் போகிறதா? இதோ, கைவேலால் சுந்தரசோழனைக் கொல்ல, மதுராந்தகன் குறி பார்க்கிருனே!

ஐயய்யோ! சண்டாள மதுராந்தகா! உயிர் உள்ள கைவேலை வீசி எறிந்து விட்டாயேடா!

ஐயோ. தெய்வமே! இது உனக்கு அடுக்குமா?

ஆதித்த கரிகாலன், தனது தந்தையை நோக்கிப் பாய்ந்துவரும் கூர்வேலை, சட்டென்று தடுத்தான்! இரும்புக் கேடயத்தாலா?

இல்லை. தனது இதயத்தால்—எலும்புக் கூடுகளை மூடியுள்ள மார்பால்!

ஆதித்த கரிகாலனின் மார்பிலிருந்து குபு குபுவென்று இரத்தம் கொட்டியது! பாய்ந்திருக்கும் வேலை, மெல்ல எடுக்க முயற்சித்தான்; முடியவில்லை!

தனது தந்தையின் உயிரை ஆதித்தகரிகாலன் காத்தான்! உதிரத்தை ஊட்டி வளர்த்தவனுக்கு, தனது உதிரத்தைச் சிந்தி, அவனுடைய உடலையும் உயிரையும் காப்பாற்றிவிட்டான்!

ஒரு மகன், தந்தைக்குச்செய்யும் மகத்தான தியாகம், இதைத்தவிர. வேறு ஏதாவது உள்ளதா?

மதுராந்தகன் படைகளுடன் மறைந்தான்!

தமையன் ஆதித்தகரிகாலன், குருதிச் சேற்றில் கிடப்பதையும், தந்தை சுந்தர சோழன் தவித்துக் கொண்டிருப்பதையும் குந்தவைப் பிராட்டி ஒரு கணம் கண்டாள். கிறு கிறுவென்று தலை சுற்றியது! ஐய்யோ ஆதித்தகரிகாலா...! என்று கத்தினள். பயத்தால் உடல் நடுங்கியது.

ஆதித்தகரிகாலன், கையிற்தரித்திருந்த ஓலை நறுக்குகளை, குந்தவைப் பிராட்டியிடம் கொடுத்தான்.

குந்தவைப் பிராட்டி— பதைபதைக்கும் நெஞ்சத்துடன், பரபரக்கும் விழிகளால் படித்தாள்.

"என்னருமைத் தங்கை குந்தவை தேவியே!

எனது உள்ளத்து உண்மைகளை, உன்னிடம் சொல்லுகிறேன். உலகத்தாருக்காக, நான் சொல்லவில்லை.

எனக்குப் பின்னல் பிறந்த நீ, என்னை பகைவன் என்று கருதிவிட்டாய்! உனக்குப் பின்னல் பிறந்த அருண்மொழி வர்மனும், நாம் மூவரும் ஒரே திரு வயிற்றில் ஒரு காலத்தில். குடியிருந்து வெளிவந்தோம் என்பதை மறந்துவிட்டான்!

நீங்களிருவரும் தந்தையிடம் காட்டும் அன்பை நினைந்து அகமகிழ்கிறேன்? தந்தையிடம் நானும் அன்பு கொண்டவன், என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமது தந்தையாருக்கு, இராஜாங்ககாரியங்கள் யாவற்றிலும் தோள்கொடுத்து உதவினேன்! ஏன் இந்தச் சிறைக்கூடத்தில் அடைத்து வைத்திருக்கிறேன்? தெரியுமா?

கொற்றத்தை கொள்ளைகொண்டு, செங்கோலைக் கைக்கொள்ள வேண்டுமென்பதற்காகவா? அல்ல! அல்ல!!

இந்தச் சோழநாட்டில் சதிகாரர்கள் நடமாடுவதாகவும் நமது தந்தை சுந்தரசோழரை கொல்லுவதற்குச்சமயம் பார்த்துக்கொண்டு வருவதாகவும் கேள்வியுற்றேன்!

வரவிருக்கும் பேராபத்திலிருந்து தந்தையைக் காக்கக் கருதினேன்! சிறைக்கூடத்தைக் காட்டிலும், வேறு பாதுகாவலான இடம்வேறு ஏதாவது உளதா சொல்! ஆகையினல்தான், இதனைத் தேர்ந்தெடுத்தேன்.

நானே சிறைக் கூடத்தை காவல் புரிந்து வருகிறேன். நீயும் தம்பியும், சிற்றப்பன் மதுராந்தகனேடு தந்தையை மீட்க வருவதாகக் கேள்விப்படுகிறேன்.

நீ, தந்தையை மீட்க வரவில்லை குந்தவை தேவி! நமது தந்தையை எமன் கையில்

ஒப்படைக்க வருகிறாய்! மதுராந்தகன் என்ற யமதூதனோடு வருகிறாய்!

எனது உயிரைக் கொடுத்தாவது, நமது தந்தையாரைச் சாவிலிருந்து மீட்பேன்! நிச்சயம் மீட்பேன்."

அன்புள்ள

ஆதித்த கரிகாலன்.

"தந்தையைக் காத்துவிட்டாய் கரிகாலா! உன்னைத் தான் காக்கமுடியாமல், காலன் கையில் ஒப்படைத்துவிட்டோம். ஆதித்த கரிகாலா! உன் சாவுக்குக் காரணம் நான் தான், நானேதான்?"

ஆதித்த கரிகாலன், சுற்றத்தாரை ஒரு முறை உற்றுப்பார்த்தான். உதடுகள் ஒரு வித வெற்றிச்சிரிப்பை உதிர்த்தன! வீரம் கொப்பளிக்கும் விழிகள் இலேசாக மூடிக் கொண்டன! விண்ணுலக வீர சொர்க்கத்திற்கு ஆதித்த கரிகாலன் சென்றுவிட்டான்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, நாட்டில் துரிதமாக காரியங்கள் நடைபெற்றன!

உள் நாட்டில், கலகங்கள் பெருகின! அருண்மொழிவர்மனையே பட்டம் கட்டிக்கொள்ள வேண்டுமென்று மக்கள் கிளர்ச்சி செய்தார்கள்.

தமையன் இறந்த பிறகு, சாம்ராஜ்யம்வேண்டாமென்று, அருண்மொழிவர்மன் மறுத்து விட்டான்.

மதுராந்தகன், தான் செய்த துரோகத்திற்காக வருந்தி இனிமேல், உத்தமனாக வாழ்வேன், என்று சபதம் செய்தான்.

உத்தம சோழன் என்றே பெயர்கொண்டு, சோழ சாம்ராஜ்யத்தின் மன்னனாக முடி சூட்டிக்கொண்டான்! மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, அருண்மொழிவர்மனும், இளவரசு பட்டம்ஏற்றான்.

உத்தம சோழன் மதுராந்தகன் கி. பி. 969 ம் வருடத்திலிருந்து கி. பி. 985-வரை இராஜ்ய பரிபாலனம் செய்தான். கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் ஒரு தொகுதி படுத்தினான்! பொற்காசுகளின் இருபுறங்களிலும், ஒருபடித்தாகவே நடுவில் ஒரு புலி உட்கார்ந்துகொண்டு வலப்புறமுள்ள மீனை (பாண்டியர் சின்னம்) நோக்குமுறையில் அமைத்து நாணயங்களை வெளியிட்டான்.

பதினாறு ஆண்டுகள் பறந்தன!

கி. பி. 985-இல், அருண்மொழிவர்மன் சோழப்பேரரசுக்கு, மன்னனாக மகுடம் ஏற்றான்! ஆட்சியின் பத்தொன்பதாவது ஆண்டில், தில்லை வாழந்தணர், "இராசராசன்" "சிவபாதசேகரன்" என்னும் பட்டங்களை, இவனுக்கு அளித்தார்கள். செல்வத்திற்சிறந்த குபேரனை குறிக்கின்ற பெயர்களில் ஒன்றுதான் "இராசராசன்" என்பது.

கி. பி. 1003-ல் தொடங்கி, கி. பி. 1009-ல் ராஜராஜேச்சுரம் என்ற கற்கோயிலைக் கட்டினான். தமிழ்நாட்டுக் கோயிலுக்குள்ளே தலை சிறந்த பெரியகோயிலாகத் திகழ்கின்றது.

எத்தனையோ வருடங்கள் சென்றும், குந்தவைப் பிராட்டிக்கு மட்டும், ஆதித்த கரிகாலனின் கொலை நிகழ்ச்சி மனதைவிட்டு அகலவில்லை! இரவும் பகலும் நிம்மதியில்லாமல், துடித்தாள்.

ஓரிரவு குந்தவைப்பிராட்டி பயங்கரக்கனவு கண்டாள்! ஆதித்த கரிகாலன் வந்தான்! 'நான், உயிரோடு இருந்திருந்தால், இந்த உலகத்தையே. எனது காலடிக்குள் கொண்டு வந்திருப்பேன்! எல்லாம் உனது அவசரப் புத்தியால், அழிந்துவிட்டது!' என்று கூறி மறைந்தான். குந்தவைப்பிராட்டி கண் விழித்தாள்!

உன் நெஞ்சிலுள்ள நினைவுகள்தான், பயங்கரக் கனவாக உருவெடுத்தன என்று குந்தவைப் பிராட்டியிடம் கூறுபவர் ஒருவருமில்லையே!

தரணி புகழும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு, அருண்மொழிவர்மனின் குடும்பத்தாருடன், குந்தவைப் பிராட்டி வந்தாள்.

இறைவனின் முன்புபோய் நிற்பதற்கே பயந்தாள்! அதனால் குந்தவைப் பிராட்டி, பிரகாரத்திலுள்ள கலை மடந்தையின் சிலை முன்னே நிலைகுலைந்து விழுந்தாள்!

ஆலய வழிபாடு முடிந்தது! அருண்மொழிவர்மன் பிரகாரத்தைச் சுற்றிவந்தான். ஓரிடத்தில் அவனுடைய அருமைத்தமக்கை, குந்தவைப் பிராட்டி அலங்கோலமாக நினைவிழந்து கிடக்கும் காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது!

அருகில், கருங்கற் தொட்டியில் தேங்கிக் கிடந்த அபிஷேகதீர்த்தத்தைக் கையிலெடுத்து குந்தவைப்பிராட்டியின் சௌந்தர்ய முகத்தில் தெளித்தான்.

சிறிது சிறிதாக குந்தவைப்பிராட்டி உணர்வு பெற்றாள். கோபுரவாயிலில் நின்ற ஏழு புரவிகள் பூட்டிய இரதம் மெதுவாக அரண்மனையை நோக்கிச் சென்றது!

கருவூர்ச் சித்தர் பெருமான், குந்தவைப் பிராட்டியைக்காண வந்தார். எழுந்து மரியாதை செய்ய குந்தவைப்பிராட்டி முயற்சித்தாள்! கருவூர்ச்சித்தர் வேண்டாமென்று கையமர்த்தி, அருகிலுள்ள ஆசனத்தில் அமர்ந்தார்.

"உடம்பு எப்படியிருக்கிறது! தாயே" சித்தரின் கேள்வியிலே உருக்கமும் கவலையும் ஒன்று கூடி ஒலித்தன.

"உடலுக்கு என்ன வந்தது, சித்தர் பெருமானே! உள்ளத்திற்குத்தான் ..." குந்தவைப் பிராட்டியை அதற்கு மேல் பேசவிடாமல், பெருமூச்சு தடுத்தது.

"உடல் நோயை மருந்தால் போக்கலாம்! உள்ளத்து நோயை அறிவுரைவிருந்தால் போக்கலாம்!" என்றார்.

"சித்தர் பெருமானே, என் மனநோய் தீர்வதற்குச் சாவுதான் மருந்து! பற்றி எரிக்கும் நெருப்புதான் விருந்து!"

கட கடவென்று கண்ணீர் மழையைக் குந்தவைப் பிராட்டியின் விழி மேகங்கள் பொழிந்தன.

நாளொரு
மேனியாக...
ரெக்ஸோனாவில் அடங்கியுள்ளது கேடில்-
சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்கள்
இணைந்த விசேஷத் தைலமாகிய கேடில்,
சருமத்திற்கு ஊட்டமளித்து, மழமழப்பாகவும்
மென்மையுடனும் மிளிரச் செய்கிறது!
ரெக்ஸோனாவின் எடுப்பான நறுமணம்
இணைபிரியாமல் உங்கள்மீது கமழ்ந்து இளங்காலைப்
புதுமலர்ச்சியுடன் நாள் முழுதும் உங்களை
விளங்கச் செய்கிறது. உங்கள்
அன்றாட அழகுசாதனமாக
ரெக்ஸோனா உபயோகியுங்கள்!
Rexona
BLENDED WITH CADYL
...ரெக்ஸோனா உங்கள் மேனியெழிலை ஓங்கச்செய்கிறது
ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனா ப்ரொ. லிமிடெட் சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது,
RP. 164-X52 TM

"சோழகுலத்துச் செல்வியே! மனதை இவ்விதம் தளர விடலாமா?"

"என்னுடைய துன்ப துயரங்கள், தங்களுக்குத் தெரியுமா, ஸ்வாமி?"

"தெரியும் குந்தவைப் பிராட்டியாரே! ஆதித்தகரிகாலன், படுகொலைசெய்யப்பட்டதற்கு காரணம் தாங்கள் என்று நினைத்து, தவித்துக்கொண்டிருக்கிறீர்கள்!"

"அல்லும் பகலும் மனச்சாட்சி ஈட்டிகளால் தாக்கப்பட்டு, அவதிப்பட்டுக்கொண்டிருக்கும், இந்த அபலையின் உயிர்த் துடிப்பை, தங்களுக்கு யார்ஸ்வாமி சொன்னார்கள், யார் சொன்னார்கள்?"

"மன்னர்பிரான்"

"யார்? என் தம்பி அருண்மொழிவர்மனா, தங்களிடம் சொன்னான்?"

"ஆமாம்; அரசியாரே!"

"இந்தக்கொலையைப்பற்றி, அருண்மொழி வர்மன் என்ன சொல்கிறான்?"

"தங்களுக்கும், ஆதித்தகரிகாலர் கொலைக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லையென்கிறார், மன்னர் பெருமான்!"

"நான் கொலைக்குச்சம்பந்தம் இல்லையென்றால், தானே கொலைக்குக் காரணமென்கின்றானா?"

"இல்லை குந்தவைப்பிராட்டி! இல்லை! அரசருக்கும் அந்தக் கொலைக்கும் சம்பந்தமேயில்லை!"

"அப்படியானால் ஆதித்தகரிகாலனின் கொலைக்கு காரணம் யார்?"

"விதி தாயே, விதி!"

"விதி!......விதியல்ல—சித்தர் பெருமானே, விதி அல்ல! அன்றைக்கு மட்டும், சிறைக்கூடத்திற்கு, வஞ்சக மதுராந்தகனை அனுப்பாமல் இருந்திருந்தால்... என் ஆதித்தகரிகாலன் இறந்திருக்கமாட்டான்! என் தமையன், இன்று முடிசூட்டிக்கொண்டு மூவுலகத்தையும் ஆண்டுகொண்டிருப்பான்!"

"இனிமேல் வருந்தி என்னபயன்! எல்லாம் விதிப் பிரகாரமே நடக்கும் தாயே!"

"வாழ்வில், நல்லது வரும்போது அதிர்ஷ்டம் என்கிறோம்; பொல்லாதது நேரும்போது விதியென்கிறோம்! அதிர்ஷ்டமும் விதியும் ஒன்றுதான்! சம்பவத்திற்கு ஏற்றபடி பெயர் பெறுகிறது"

"அப்படியானால் இந்த விதியை ஆட்டிப் படைப்பவன் யார்?"

"ஆண்டவன்! மனித இனத்திற்கு சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் ஏற்படுத்தி, விதியைப் புகுத்தி, காரியத்தைச்சாதித்துக் கொள்கிறான்!"

"அப்படியா!"

குந்தவைப்பிராட்டி, உண்மையை உணரத் தொடங்கியிருக்கிறாள், என்பதை கருவூர்ச் சித்தர் உணர்ந்தார்! மேலும் சில அறிவுரைகளைக்கூறி, அவள் மனதைத் தேற்றிவிட வேண்டுமென்று நினைத்தார். "ஒருசில தீய காரியங்களை மனிதர்களைக் கொண்டே செய்கின்றான்! பின்னால் வரப்போகிற நன்மைக்கு வித்திடவே செய்கிறான். அதை நம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஆதித்த கரிகாலனின் அகால மரணத்திற்கு மதுராந்தகனைப் பயன்படுத்தினான்! அதில், தங்களையும் சம்பந்தப்படுத்தினான்.

இறைவன் ஒருவருக்கு மனிதன் மூலமாகத் தான் நன்மை செய்யவேண்டும்! தீமையையும் மனிதன் மூலமாகத்தான் செய்யவேண்டும்!

அவன் ஆட்டுவிக்கும் நட்டுவன்! நாமெல்லாம் அவன் இச்சைப்படி ஆடும் பதுமைகள்! அவனே ஆடும் ஆனந்தக்கூத்தன் கூட!"

குந்தவைப் பிராட்டியாருக்கு குப்பென்று வியர்த்துக் கொட்டியது! இதயத்தில் புத்தொளி புகுந்தது! உள்ளத்தில் பூகம்பமும் எரிமலைகளும் மறைந்து, புதுப்பூங்கா தோன்றியது! தென்றல் உலவியது! திங்கள் தோய்ந்தது! தேன்மலர்கள் வெடித்தன! இன்ப வண்டுகள், மொய்த்தன

பெரு உடையாரின் கோயிலில் அந்திபூஜை ஆரம்பமாயிற்று! அபிஷேகம் நடந்தது! ஆராதனைகள் நடந்தன! மறைகள் ஓதப்பட்டன! மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கி, கருவூர்ச்சித்தர்பெருமான் திருவிசைப்பாவைப் பாடினார்!

அருண்மொழிவர்மனின் அருகில் நின்று, உலகத்தையே மறந்து, குந்தவைப்பிராட்டியார், பக்திப்பெருக்கில் திளைத்திருந்தாள்.

சிறு நாவல்

சென்ற இதழ் தொடர்ச்சி

A. சுப்பையா

சிறிது நேரத்தில் டெலிபோன் மணி ஒலித்தது. முரளி எழுந்து சென்று ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தான். எதிர்முனையிலிருந்து பேசப்பட்டதை யெல்லாம் கேட்ட பின்பு, "எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே; கொஞ்சம் இருங்கள் .... என் மனைவியைக் கலந்து பேசிய பின்பு உங்களுக்குப் போன் செய்கிறேன்" என்று சொல்லி ரிஸீவரை வைத்துவிட்டு மாடிக்குச் சென்றான்.

மாடியில், படுக்கையறையில் தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு எதையோ பற்றி ஆலோசித்துக் கொண்டு இருந்தாள், லதா.

"லதா! காசியாத்திரா ஸ்பெஷல் கம்பெனியாருக்கு நீ போன் செய்தாயா?"

"காசி யாத்திரா ஸ்பெஷலா? அது நம் சாஸ்திரியின் கம்பெனி தானே"

"ஆமாம், நீ அவர்களுக்குப்போன் செய்ய வில்லையா?"

"இல்லையே!"

"காலையில் நீ போன் செய்தாய் என்று சாஸ்திரியார் சொல்லுகிறாரே?"

"நானா?"

"ஆம், காசி யாத்திரைக்கு இரண்டு முதல் வகுப்பு டிக்கட் புக் செய்து கொள்ளும்படி நீ சொன்னாயாம். உன்னுடைய குரல்தான் என்று சாஸ்திரியார் உறுதியாகச் சொல்லுகிறார். நீ போனில் என்ன சொன்னாய் என்பது ஒரு வார்த்தை பிசகில்லாமல் அப்படியே அவருக்கு நினைவிருக்கிறதாம்."

லதா இமை கொட்டாமல் கணவனைப் பார்த்த வண்ணம் சிலை போலாகி விட்டாள்.

"ஏதோ ஆபத்து வேகமாக நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. யாரோ நம்மைப் பழிவாங்கத் திட்டமிட்டு வேலை செய்கிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது" இதைச் சொல்லும்பொழுது லதாவின் உதடுகள் உண்மையிலேயே நடுங்கின.

"இதன் முடிவு என்ன என்பதைப் பார்த்து விடுகிறேன். நாளுக்கு நாள் புதிது புதிதாக வளர்ந்து கொண்டே யிருக்கிறதே!" பைத்தியம் பிடித்தவன் போலக் கதறினான் முரளி.

லதா எழுந்து வந்து கணவனின் எதிரில் நின்றாள். அவளது கண்களில் நீர்த் திவலைகள் அரும்பி நின்றன.

முரளி, அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு "நீ எதற்கும் பயப்படாதே! எவன் இம்மாதிரி நம்மிடம் ஆட்டங் காட்டுகிறானே அவனை எப்படியாவது நான் பிடித்து விடுகிறேன். நீ எதற்கும் கவலைப் படாதே! வெள்ளம் அணையை உடைக்கும் முன்பே நாம் தகுந்த நடவடிக்கை எடுக்காதபோனால் பலனில்லை. அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விட்டு நீ அமைதியாக ஓய்வெடுத்துக் கொள். ஒரு தடவை நம் டாக்டரிடம் போய் வரவேண்டும். இன்று போனால் ரொம்ப நல்லது. இன்று சாயங்காலம்

உன்னை அழைத்து வருவதாகக்கூட நான் டாக்டருக்குப் போன் செய்திருக்கிறேன்" என்ருன்.

"எதற்கு?"

"உன் உடம்பைப் பரிசோதிப்பதற்கு."

"என் உடம்பையா?"

"ஆம். உனக்கு உடம்பு சரியில்லையல்லவா!"

"ஏன்? என் உடம்பிற்கு என்ன வந்திருக்கிறது?"

"உன் தலைவலி எப்படி யிருக்கிறது?"

"இப்பொழுது ரொம்பவும் அதிகமாக இருக்கிறது."

"அதற்காகத்தான்."

லதா, கணவனை உற்றுப் பார்த்தாள். "நம் வீட்டில் நடைபெற்ற இந்த விசித்திர சம்பவங்களைப் பற்றியெல்லாம் நம் டாக்டர் அவதானியிடம் சொன்னீர்களா?"

"ஏன் கேட்கிருய்?"

"சொல்லியிருப்பீர்கள், இல்லையா?"

"நேற்று நடந்ததை மாத்திரம் சொன்னேன்"

"ஏன்?"

"பேச்சு வாக்கில் என்னை அறியாமலே சொல்லிவிட்டேன். சொல்லி வைப்பதும் ஒருவகையில் நல்லதுதானே? அவரிடம் நீ மருந்து வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிருய். அதனுல் அவர் நமக்கு ஏதாவது உதவி செய்யக்கூடும்."

"என்ன உதவி? எதற்காக?"

"ஒரு வேளை..."

"ஒரு வேளை! உம்...சொல்லுங்கள்!"

"ஊ...ஹூம்! ஒன்றுமில்லை."

"என்னைப் பாருங்கள்" என்று தன் கணவனின் முகத்தைப் பிடித்துத் தன் பக்கமாகத் திருப்பி, "நான்தான் எல்லோருக்கும் போன் செய்திருப்பேன் என்று நீங்கள் சந்தேகிக்கிறீர்களா?" என்று பரிதாபமாக வினவினுள் லதா.

"சீ! சீ! அத்தகைய சந்தேகம் இதுவரையில் எனக்கு ஒன்றுமில்லை. ஆனுல்..."

"ஏன் நிறுத்தி விட்டீர்கள்! சொல்லவந்ததை சொல்லி முடித்து விடுங்கள்."

"இன்று காலையில் காசிக்கு இரண்டு டிக்கட்டுகள் ரிசர்வ் செய்யும்படி சொல்லியது நீதான், உன்னுடைய குரல்தான் அது என்று சாஸ்திரி உறுதியாகச் சொல்கிருர். இந்தச்சிறிய விஷயத்திற்கு அவர் பொய்சொல்வாரா? அவர் அப்படிப்பட்ட மனிதர் இல்லையே என்றுதான் யோசிக்கிறேன்."

"சாஸ்திரி தவருக நினைத்திருப்பார். இதுவரையில் நான் மொத்தத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகள்தான் போனில் அவரிடம் சம்பாஷித்திருக்கிறேன். அந்த இரண்டு தடவை பேசியதிலிருந்து என்னுடைய குரலை அவர் கண்டுபிடித்துவிட்டார் என்பதை என்னுல் நம்பமுடியவில்லை. இதோ பாருங்கள்! நான் எந்தக்கோவிலில் வேண்டுமானுலும் பிரமாணம் செய்யத் தயார்; அந்தப் பர்னிச்சர் கம்பெனிக்கோ, தீயணைக்கும் படையினருக்கோ, அல்லது சாஸ்திரியாருக்கோ நான் போன் செய்யவே இல்லை!"

சில வினுடிகள் மௌனம் நிலவியது.

"என்ன பேசாமல் இருக்கிறீர்கள்?" லதா மௌனத்தைக் கலைத்தாள்.

"உன் வார்த்தையை நான் பரிபூரணமாக நம்புகிறேன்" என்று கூறிய முரளி சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு ஒரு பெருமூச்சுவிட்டு "சரி நீ போ! போய் பேசாமல் படுத்துக்கொள்" என்ருன்.

"படுப்பதா?" அந்த வேதனையிலும் லதாவிற்கு எப்படியோ சிரிப்பு வந்தது:

"எனக்கு இனிமேல் ஒரே படுக்கைதான். நிரந்தரமான படுக்கை!"

"இதென்ன பேச்சு, லதா! இப்படியெல்லாம் பேசாதே!"

"இந்த நேரத்தில் என்ன படுக்கை வேண்டியிருக்கிறது?"

"படுக்க விருப்பமில்லையானுல் ஏதாவது ஒரு சோபாவில் சாய்ந்து உட்கார்ந்து கொள்."

"உங்களிடம் நான் ரொம்ப விஷயம் பேச வேண்டும்."

"இப்ப முடியாது. எனக்கு ஆபீஸில் வேலை இருக்கிறது. எல்லாக் கடிதங்களையும் அப்படியே மேஜையின்மீது போட்டுவிட்டு ஓடிவந்தேன். இன்னும் இரண்டு தினங்களில் நான் 'காம்ப்' போகவேண்டுமல்லவா?"

"காம்ப்பா? வேண்டாம்! என்னைத் தனிமையில் விட்டுவிட்டுப்போய்விடாதீர்கள்."

"ஏன்?"

"எனக்கென்னமோ பயமாக இருக்கிறது. என்னை இந்த நிலைமையில் விட்டுப் போக வேண்டாம்."

'போகாமல் இருக்கமுடியாதே, லதா. உத்தியோக தர்மம்."

"பாழாய்ப்போன உத்தியோகம்! இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் இந்த உத்தியோகத்தைக் கட்டி- அழப்போகிறீர்கள்? போனால் போகட்டும்."

"பார்த்தாயா . இதைத்தான் நான் அப்பொழுதிலிருந்தே உன்னிடம் அடித்துக் கொள்ளுகிறேன். அந்தப்பணம் நம் கைக்கு வரும்வரையில் அதைப்பற்றி நீ மனத்தினாலும்கூட நினைக்கக்கூடாது. நினைத்தாயானால் உன் புத்தியே நிதானமிழந்துவிடும்."

"இப்பவே மூளை குழம்பிவிட்டது."

"குழம்பிவிட்டதா?" என்று முரளி அவளை ஒரு தினுசாக நோக்கினான்.

"நீங்கள் மாத்திரம் என்னை விட்டுப் போகாதீர்கள். 'காம்ப்'புக்குப் போக வேண்டாம்."

"அட பைத்தியமே! இனிமேல் உனக்கந்தப் பயம் இல்லை. இனிமேல் அத்தகைய விபரீதங்கள் எதுவும் நடைபெறாது."

"நடைபெறாதா?"

"ஆம்."

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"எனக்கு அப்படித் தோன்றுகிறது."

லதா நகைத்தாள்.

"அத்தகைய கெடுபிடிகள் எதுவும் நடைபெறாத வகையில் தக்க ஏற்பாடுகள் செய்து விடுகிறேன். நீயே பாரேன். மீண்டும் ஏதாவது விபரீதம் நடந்தால் உடனே போலீசுக்குத் தெரிவித்து விடுவோம்."

"போலீசுக்கா?"

"ஆம். ஏன்?"

"அதனால் நமக்குச் சங்கடம் ஏற்படாதா?"

"இப்பொழுதுள்ள சங்கடத்தைவிட அதிகமாகவா ஏற்படப் போகிறது?"

"வேண்டாம் அந்த யோசனை."

"சங்கடத்திற்குப் பயந்து எவ்வளவு காலந்தான் நம் எதிரியின் ஆட்டங்களுக்குப் பலியாகிக்கொண்டு இருப்பது? 'பூனைகளுக்குக் கொண்டாட்டம்; எலிகளுக்குத் திண்டாட்டம்' என்பார்கள்! அந்தப் பூனைகளைப் பிடிப்பதற்கு இதுதான் சரியான வழி."

"எப்படி?"

"நீ பார்த்துக் கொண்டேயிரு!" என்று சொல்லி தன் மனைவியின் கன்னத்தில் லேசாக ஒரு தட்டுத் தட்டி, "நான் போய் வரட்டுமா! நீ நன்கு ஓய்வு எடுத்துக்கொள். உம்! நான் வரட்டுமா!" என்று மெதுவாக நகர்ந்தான் முரளி.

லதா பெருமூச்சு விட்டவாறு, "சீக்கிரம் வந்துவிடுங்கள்" என்றாள்.

* * *

"அப்படியானால் அந்தச் சதங்கைச் சத்தத்தை நேற்றிரவு நீங்கள் மாத்திரம்தான் கேட்க முடிந்ததாக்கும்," என்று சிரித்துக்கொண்டே லதாவிற்கு ஒரு 'கால்ஷியம் இன்செக்ஷன்' போட்டார் டாக்டர் அவதானி. அவள் உடம்பெல்லாம் வியர்த்தது, தலை சுற்றியது.

ஊசி குத்திய இடத்தை டிங்சர் துவைந்த பஞ்சினால் துடைத்தவாறு, "கொஞ்சநேரம் அசையாமல் இதே இடத்தில் படுத்துக் கொள், அம்மா" என்று டாக்டர் அவதானி முரளியின் பக்கம் திரும்பினார்.

"வாருங்கள், சார். கீழே போவோம்." என்று டாக்டரைக் கீழே அழைத்துவந்து கம்மிய குரலில் கூறினான் முரளி. "அந்தச் சதங்கைச் சத்தத்தைப்பற்றிச் சொன்னாளா? உம் ....ஏற்கனவே லதா ஹிஸ்டீரியா பேஷன்ட். அதற்கேற்றாற்போல அடிக்கடி தலைவலி. போதாத குறைக்கு அந்த எண்பதாயிர ரூபாய் சொத்து வரப்போகிறது என்று தெரிந்ததிலிருந்து அவள் மனத்தில் விபரீதமான மாறுதல்கள் தோன்றிவிட்டன. ஆளே மாறிப் போய்விட்டாள். எப்பொழுதும் அந்தச் சொத்தைப் பற்றிய சிந்தனை தான், அதனால்தான் அவள் மூளை குழம்பி விட்டதோ என்று நான் சந்தேகிக்கிறேன். டாக்டர். சொந்த வீடு வாங்கி அதில் குடி போகவேண்டும் என்றாள். நான் சரி என்றேன். புதிய வீட்டிற்கு நல்ல பர்னிச்சர்கள் வாங்கவேண்டும் என்று ஆசைப்பட்டாள். அப்படியே செய்வோம் என்றேன், கொஞ்ச நாட்கள் காசிக்குச் சென்று கங்காஸ்நானம் செய்துவரவேண்டும் என்றாள். 'பணம் கைக்கு வரட்டும், பார்ப்போம்' என்று நான் சொன்னேன். முந்தாநாள் இரவில், திடீரென்று அவளுக்கு என்ன தோன்றியதோ, "எதிர்பாராத விதமாக நம் புதிய வீட்டில் தீப்பற்றிக் கொண்டால் என்ன செய்வது?" என்று கேட்டாள். தீயணைக்கும் படையினர் வந்து தீயை அணைத்துவிடுவார்கள் என்றேன் நான். எப்பொழுதும் இத்தகைய விஷயங்களே அவள் மனத்தில் சுழன்று கொண்டிருப்பதால் அவளது மூளை கோதிப் படைந்துவிட்டதோ என்னவோ தெரியவில்லை. தனக்குத் தெரியாமலே அவள் ஒரு பர்னிச்சர் கம்பெனிக்கும், காசி யாத்

திரா ஸ்பெஷல் கம்பெனிக்கும், கடைசியாக தியணைக்கும் படையினருக்கும் போன் செய்திருக்கிறாள் என்று நான் எண்ணுகிறேன்" என்று சொல்லி அந்த சம்பவங்களையும் டாக்டரிடம் விவரித்துக் கூறினான். கடைசியாக, "டாக்டர்! லதாவிற்குப் பைத்தியம் பிடித்துவிடுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது" என்றான் பரிதாபமாக.

டாக்டர் அவதானி தலை குனிந்தவண்ணம் "சில சமயங்களில் எதிர்பாராத விதமாக நிறைய ஐஸ்வரியம் வரப்போகிறது என்று தெரிந்த மாத்திரத்திலேயே சிலருக்கு-குறிப்பாக ஹிஸ்டீரியா நோய் உடைய பெண்களுக்கு இத்தகைய விபரீதமான நிலை ஏற்படுவது சகஜம். உண்மையில் ஹிஸ்டீரியா நோய் ஏன் வருகிறது தெரியுமா? நிறைவேறாத ஆசைகளின் காரணமாகத்தான்! அந்தச் சொத்து கைக்கு வந்ததும் அவளது மனோநிலையும் தானாகவே நிதானத்திற்கு வந்துவிடும். அதனால், நீங்கள் சிறிதும் அதைரியப் படவேண்டாம்" என்று முரளிக்குத் தைரியம் கூறினார்.

"என்னவோ, டாக்டர்! எனக்கு ஒரே புத்தி முட்டாக இருக்கிறது. நீங்கள் தவறாக நினைக்காதிருந்தால் உங்களிடம் ஒரு விஷயம் சொல்கிறேன்,"

"என்ன விஷயம்?"

"நகத்தால் கிள்ளி எறியவேண்டிய ஒன்றை, கோடரியால் வெட்டும் அளவிற்கு வளரவிடுவது நல்லதில்லை, அல்லவா? லதாவின் வியாதி முற்றிவிடாமல், இப்பொழுது இந்த ஆரம்ப தசையிலேயே சரிப்படுத்திவிடவேண்டும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். உங்களுக்குத் தெரிந்த மனோதத்வ நிபுணர்கள் யாரேனும் இருந்தால் அவருக்கு ஒரு கடிதம் எழுதித்தாருங்கள். லதாவை அழைத்துச் சென்று காண்பிக்கிறேன். நான் கூறிய விவரங்கள் யாவற்றையும் அந்தக் கடிதத்தில் தெரியப்படுத்தி, அவளுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று நாம் ஐயப்படுவதாகவும் தெரியப்படுத்துங்கள்."

"சில நாட்கள் வரையில் நானே லதாவிற்கு வைத்தியம் செய்தால் நன்றாயிருக்கும்..."

"நீங்களும் மருந்து கொடுங்கள்; அதை வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஒரு அவசரமான ஆபீஸ் வேலையாக இன்று மத்தியானம் விமானம் மூலம் நான் பம்பாய்க்குப் போகிறேன். லதாவை இந்த நிலையில் விட்டுவிட்டு எப்படிப் போவது என்று எனக்கு ஒரே திகிலாக இருக்கிறது. அதனால் நான் போவதற்கு முன்பே அவளை யாரேனும் ஒரு மனோதத்துவ நிபுணரிடம் காண்பித்தால், நான் கவலையில்லாமல் பம்பாய்க்குப் போய் வர முடியுமல்லவா? ஆகவே தயவு செய்து நீங்கள் ஒரு சிபார்சுக் கடிதம் எழுதித் தாருங்கள்,"

"சரி" என்று சொல்லி டாக்டர் அவதானி தனது தோல் பையிலிருந்து ஒரு காகிதத்தை வெளியில் எடுத்தார். "டாக்டர் லோகநாதன் என்று எனது நண்பர் ஒருவர் இருக்கிறார். இம்மாதிரி கேசுகள் எத்தனையோ அவர் குணப்படுத்தியிருக்கிறார். அவருக்குக் கடிதம் தருகிறேன், போய்க் கலந்து பாருங்கள்."

"இப்பொழுதே போய்ப் பார்க்கிறேன்" என்றான் முரளி.

* * *

டாக்டர் லோகநாதனைச் சந்தித்தான் முரளி. டாக்டர் அவதானி தந்த கடிதத்தை அவரிடம் கொடுத்து தனது மனைவியைப் பற்றிய விவரங்களையெல்லாம் தெளிவாகக் கூறினான்.

லோகநாதன் சொன்னார்: "இன்று ஒரு நாளைக்குள் நான் அவளைப் பரிசீலனை செய்து என்ன சொல்லிவிட முடியும்? தொடர்ச்சியாக ஒரு வாரமாவது பரிசீலனை செய்ய வேண்டும். அதற்காக உங்கள் பிரயாணத்தை நீங்கள் நிறுத்தவேண்டியதில்லை. என்னை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று உங்கள் மனைவிக்கு அறிமுகம் செய்துவிடுங்கள். நான் மனோதத்துவ சாஸ்திரத்தில் நிபுணன் என்பதை அவளிடம் சொல்லவேண்டாம். ஹிஸ்டீரியா வியாதியைக் குணப்படுத்துவதில் அனுபவம் பெற்றவன் என்று கூறினால் மாத்திரம் போதும். அதற்குப் பிறகு நான் தினசரி உங்கள் வீட்டிற்குச் சென்று பார்த்துக்கொள்கிறேன். பாரத்தை என்மீது போட்டுவிட்டு நீங்கள் நிம்மதியாகப் பம்பாய்க்குப் போய் வரலாம்."

முரளி, "சரி ஸார், அப்படியே செய்யுங்கள். வாருங்கள் போவோம்" என்றான்.

* * *

முரளி பம்பாய்க்குச் சென்று மூன்று தினங்கள் ஆகிவிட்டன. இந்த மூன்று தினங்களிலும் டாக்டர் லோகநாதன் குறித்த நேரத்திற்கு முரளியின் வீட்டிற்குச் சென்று லதாவின் எதிரில் சிலமணி நேரங்கள் ஒரு சோபாவில் அமர்ந்துகொண்டு, பற்பல சம்பாஷணைகளில் அவளை ஈடுபடுத்தி ஏதேதோ கேள்விகள் கேட்டு, விதவிதமான முறையில் அவளைப் பரிசீலனை செய்ய ஆரம்பித்தார். ஆனால், லதாவைப்பற்றி எத்தகைய நிர்ணயத்திற்கும் அவரால் வரமுடியவில்லை. அவருடைய கேள்விகளுக்கெல்லாம் வில்லிலிருந்து அம்பு பாய்ந்தாற்போல பதில் சொன்னாள். "நீங்கள் இப்படிக் கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருக்கிறீர்களே தவிர மருந்து தந்து என் ஹிஸ்டீரியா வியாதியைக்

இரண்டாவது

கட்டம்

1958, அக்டோபர் முதல் தேதி நாட்டின் எல்லா ராஜ்யங்கள், யூனியன் பிரதேசங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளிலும், கட்டுப்பாடான சந்தைகளிலும் மெட்ரிக் எடைகள் அமுலுக்கு வந்துள்ளது. இவ்விடங்களில் அத்தேதி முதல் இரண்டாண்டிற்குள் சகல எடைகளும், அளவுகளும் பூராவாக மெட்ரிக் முறைக்கு மாற்றப்படும்.

இந்த இரண்டாண்டுகள் முடிந்தவுடன், அதாவது 1960 செப்டம்பர் 30ந் தேதிக்குப் பிறகு, இப்பகுதிகளில் மெட்ரிக் எடைகள் கட்டாயமாக அமுலில் இருக்கும்.

இச்சீர்திருத்தத்தின் இரண்டாவது கட்டம் தொடங்கப்பட்டுள்ளது. நாட்டில் மீதியுள்ள பகுதிகளில் மெட்ரிக் முறையை விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கேரளம் முழுதும் ஏற்கனவே மெட்ரிக் எடைகள் புழக்கத்துக்கு வந்துவிட்டது. மற்ற ராஜ்யங்களில் மீதிப் பகுதிகளிலும் விரைவில் மெட்ரிக் முறை விஸ்தரிக்கப்படும்.

சுலபமான
ஒரே சீரான

மெட்ரிக் முறையை

பின்பற்றுங்கள்

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது.

DA 59/545

குணப்படுத்தப் போவதாகத் தெரியவில்லை?" என்றுகூட ஒருதடவைக் கேட்டுவிட்டாள்.

"மருந்து எதுவும் கொடுக்காமலே ஹிஸ்டீரியா வியாதியைக் குணப்படுத்த முடியும் என்று மேல்நாட்டு அறிஞர்கள் ஒரு நூதனமான சிகிச்சை முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். வியாதியஸ்தர், எத்தகைய மனக் குழப்பத்திற்கு ஆளாகியிருக்கிறார் என்பதைக் கண்டு பிடித்து, அந்தக் குழப்பத்திலிருந்து விடுவிப்பதற்குமுயலுவதுதான் அந்த நூதன முறை."

"ஓஹோ!...அதனால்தான் நீங்கள் என்னை, கண்ணை மூடிக்கொண்டால் ஏதேனும் சக்கரங்கள் தெரிகின்றனவா; நீ ஆஸ்பத்திரியில் பிறந்தாயா-வீட்டில் பிறந்தாயா?' என்று சிறு குழந்தைகளிடம் கேட்பது போலக் கேட்கிறீர்களோ? உம் ..! இதற்கு என் கணவர் எவ்வளவு பீஸ்' உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்?" என்று லதா வினவினாள்.

"பணத்தைப்பற்றி இப்பொழுது என்ன கவலை? அதைப்பற்றியெல்லாம் நீங்கள் சிந்திக்கக்கூடாது. அனாவசியமான விஷயங்களில் நீங்கள் மனத்தைச் செலுத்தவே கூடாது. நன்கு ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும். விரைவில் உங்கள் உடம்பு குணமாகி விடும்."

"சரி, நான் ஓய்வெடுத்துக்கொள்ளுகிறேன்; நீங்கள் போய் வாருங்கள்!"

"நான் இங்கிருப்பது உங்களுக்கு விருப்பமில்லையென்றால் நான் போகிறேன். மீண்டும் நாளைக் காலையில் வந்து பார்க்கிறேன்." என்று சொல்லி டாக்டர் லோகநாதன் எழுந்து, "நான் வரட்டுமா?" என்றார்.

லதா பேசாமல் இருந்தாள்.

லோகநாதன் வெளியேறினார்.

* * *

லதா உள்ளம் உடைந்து கண்ணீர் வடித்துக் கதறிக் கொண்டிருந்தாள். அவள் எதிரில், பம்பாயிலிருந்து வந்த 'எக்ஸ்பிரஸ்' கடிதம் ஒன்று கிடந்தது.

ஆங்கிலத்தில் 'டைப்' செய்யப்பட்டிருந்த அக்கடிதத்தில் கண்டது இதுதான்:

"திருமதி லதா அம்மையாருக்கு,

உங்களுக்கு எப்படி எழுதுவதென்றே தெரியவில்லை. முதலில் உங்களுக்குத் தந்தி கொடுக்கலாம் என்று நினைத்தேன். ஆனால், நீங்கள் ஏதோ வியாதியால் கஷ்டப்படுகிறீர்கள் என்றும், அதனால் தந்தி கொடுக்காமல் இவ்வாறு கடிதம் எழுதினால் போதும் என்றும் உங்கள் கணவர் முரளிதான் தடுத்துவிட்டார்.

உங்கள் மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு இந்தக் கடிதத்தைப் படிப்பதற்கு முயலுங்கள்.

நடந்த விஷயத்தை அப்படியே தெரிவித்தால் உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்று பயந்து விஷயத்தைச் சுற்றி வளைத்துக் கூறும்படியான அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

முரளி என்னுடைய பால்ய நண்பன். விமான நிலையத்தில் விமானத்திலிருந்து இறங்கியதும் அவனை நான் சந்தித்தேன். நீண்ட காலத்திற்குப் பிறகு அவனைச் சந்தித்ததால் எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஆனால், அந்த ஆனந்தம் வெகுநேரம் நீடித்திருக்கவில்லை.

ஏதோ ஒரு ஹோட்டலில் தங்கப்போகிறேன் என்று முரளி சொன்னான். என் வீடு இருக்கும்போது ஹோட்டலில் தங்கவிடமாட்டேன் என்று சொல்லி பலவந்தமாக அவனை என் வீட்டிற்கு அழைத்து வந்தேன். என் வீட்டில் கால் வைத்ததுமே, 'உடம்பில் ரொம்பக் குளிர் அடிக்கிறது' என்றான். கையை வைத்துப் பார்த்தேன். உடம்பு ஒரே சூடாக இருந்தது. படுத்துக்கொள்ளும்படி சொன்னேன். திடீரென்று ஒருதடவை ரத்தமாக வாந்தி எடுத்தான். நான் பயந்து போய்விட்டேன். உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனேன். டாக்டர் பரிசோதனை செய்தார். 'இந்தமாதிரி அடிக்கடி ரத்த வாந்தி வருவதுண்டா' என்று டாக்டர் கேட்டதற்கு முரளி 'ஆம்' என்றான். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று தடவை வாந்தி வரும் என்றும் இந்த விஷயம் தன்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றும், ஹிஸ்டீரியா வியாதியால் துன்பப்படும் தன் மனைவிக்கு இந்த விஷயம் தெரிந்தால் அவளுடைய நிலைமை மிகவும் விபரீதமாகிவிடும் என்று பயந்து அவளிடமும் சொல்லாமல் மறைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதாகவும் கூறினான். வியாதிக்குத் தக்க சிகிச்சையை உடனே செய்யாமலிருந்ததைப்பற்றி டாக்டர், முரளியை மிகவும் கடிந்துகொண்டார். திடீரென்று முரளி, 'தாகம்! தாகம்!' என்று கத்தினான். இரண்டு கூஜா தண்ணீர் குடித்தான். அதனால் குடல் வேலை செய்வது நின்றுவிட்டது என்று டாக்டர் தெரிவித்ததால், உங்களை வரவழைப்பதற்கு தந்தி கொடுக்க நினைத்து, உங்கள் விலாசத்தை முரளியிடம் கேட்டேன். 'அவளுக்குத் தந்தி கொடுக்காதே! அவள் ஹிஸ்டீரியா வியாதி உள்ளவள். தந்தியைக் கண்டதும் இதயம் வெடித்துச் செத்துப்போய்விடுவாள்; விஷயத்தைத் தெரிவிப்பதற்கு ஒரு கடிதம் எழுதினால் போதும். ஒருவேளை நான் இறந்துவிட்டால்

கூட அவளுக்குத் தந்தி கொடுக்கவேண்டாம். என் பிணத்தை அவள் வந்து பார்க்கும்வரை யில் வைத்திருக்கக்கூடாது. தகனக் கிரியை கள் யாவும் முடிந்த பின்பு அவளுக்கு ஒரு எக்ஸ்பிரஸ் கடிதம் எழுதிவிடு, போதும்' என்று முரளி சொல்லிவிட்டான். எனக்குக் கோபம்கூட ஏற்பட்டுவிட்டது. 'என்ன முரளி, இப்படியெல்லாம் பேசுகிருய்? உன் உயிருக்கு ஆபத்தொன்றும் வராது. தைரிய மாக இரு' என்று நான் சொன்னேன். முரளி வேதனையோடு சிரித்தான். அவ் வளவுதான்; அடுத்த விநாடியில் இருமி ஞன். மேல்மூச்சு வாங்க ஆரம்பித்தது. வாய் மூடிவிட்டது. கண்கள் ஏறச் செருகி விட்டன. கையால் ஏதோ சைகை செய் தான். அதன் அர்த்தம் என்னவென்று எனக்கு விளங்கவில்லை. பின்பு விக்கல் ஆரம் பித்தது. தாகம் எடுத்ததோ என்னவோ. தண்ணீர் வேண்டுமென்று வாயைத் திறந் தான். பக்கத்தில் நின்ற நர்ஸ் கொஞ்சம் 'குளுகோஸ்' நீரை அவன் வாயில் விட்டாள். ஆனல், வாய்க்குள் சென்ற தண்ணீர் மறு விநாடியில் வெளிப்பட்டுவிட்டது. முகத் தின் ஜோதி மறைந்துவிட்டது. அவனை இயக்கிக் கொண்டிருந்த பிராணவாயு, வெளிப்புறக் காற்றுடன் கலந்துவிட்டது....

முரளியின் இறுதி வேண்டுகோள் பிர காரம் இன்றையதினம் அவனது சவத்திற்கு இறுதிச் சடங்குகளை முடித்துவிட்டு இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

என் நண்பன் முரளி, என் வீட்டில், என் முன்னிலையில் சாகவேண்டும் என்பது கடவுளின் இச்சைபோலும். எல்லாம் அவன் செயல். துக்கப்படுவதன்மூலம் நம் உடல் நலந்தான் கெடுமே தவிர அதற்காக மாண்ட வர்கள் மீண்டும் வரப்போவதில்லை. அதனல் நீங்களும் அதிக துக்கத்திற்கு இடங்கொடுக் காதீர்கள். உடல்நலம் மிகவும் சீர்கெட்டுப் போய்விடும்.

நாளை மறுநாள் விமானத்தின்மூலம் நான் அங்கு வந்து உங்களைச் சந்திக்கிறேன்.

இப்படிக்கு
பி. தனபால்,
36, கபூர்மான்ஷன்ஸ்,
பம்பாய்-16"

காற்றில் பறந்த அந்தக் கடிதத்தை எடுத்து உறையில் போட்டுவிட்டு லதா மிகவும் சோர்வுடன் எழுந்து நின்ருள். அதிகமாக அழுததாலோ என்னவோ அவள் கண்கள் சிவந்து எரிந்தன. தலைவலி இன் னும் அதிகமாகிவிட்டிருந்தது. வயிற்றிலும் ஒருவித பிசைதல் ஏற்பட்டது.

"அம்மா!"

கையில் காப்பியை ஏந்திக்கொண்டு அறை யின் வாசலில் நின்றிருந்த வேலைக்காரியின் பக்கம் திரும்பினுள் லதா.

"ஏனம்மா இப்படி அழுதுகொண்டேயிருக் கிறீர்கள்? அய்யா வந்துவிடுவார், அம்மா. நீங்கள் கொஞ்சம் காப்பி சாப்பிடுங்கள்" என்று சொல்லிக்கொண்டே லதாவின் எதிரில் வந்தாள் வேலைக்காரி.

அவ்வளவுதான், லதாவின் துக்கம் பொங்கி எழுந்தது. அவளால் அந்த இடத்தில் நிற்கவே முடியவில்லை. பக்கத்து அறைக்குள் விரைந்து சென்று சோபாவில் 'தடால்' என்று விழுந்தாள்.

அவ்வாறு எவ்வளவுநேரம் அந்த சோபா வில் விழுந்து கிடந்தாளோ லதாவிற்கே தெரியாது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மெதுவாக எழுந்தாள். கால்களை இழுத்துக் கொண்டு நகர்ந்து டெலி போன் அருகில் சென்ருள். தன் கணவன் வேலை செய்த பீமா கம்பெனிக்கு போன் செய்து தனக்கு பம்பாயிலிருந்து எமதூதன் போன்று வந்த கடிதத்தின் விவரத்தை விம்மி விம்மி அழுதுகொண்டே தெரிவித் தாள்.

பின்பு ரிஸீவரை வைத்துவிட்டு, ஹாலுக்கு வந்தாள் லதா. ஹாலில் சுவரில் தொங்கிக் கொண்டு இருந்த அவளது கணவனின் போட்டோக்கள் தென்பட்டன. அவளது கண்களில் நீர் பொங்கியதால் அந்த போட் டோக்களின்மீது பனி படர்ந்தாற் போல அவளது கண்களுக்குத்தோன்றி மறைந்தன.

சடாரென, "ஐயோ!" என்று பயங்கர மாகக் கத்திக்கொண்டு, மயக்கமுற்று கீழே சாய்ந்துவிட்டாள்.

வேலைக்காரி அந்த சத்தத்தைக் கேட்டு பதறிப்போய், "அம்மா! அம்மா!" என்று அலறியடித்துக்கொண்டு ஓடி வந்தாள்.

அதே சமயத்தில் ஒரு கார் வந்து வாசலில் நின்றது.

வேலைக்காரிக்கு எஜமானியின் சரீரத்தில் கையை வைத்து உசுப்பியவாறு, "அம்மா! அம்மா!" என்று சொல்வதைத் தவிர வேறென்ன செய்வதென்று விளங்கவில்லை. காரிலிருந்து இறங்கி வீட்டிற்குள் வந்த டாக்டர் லோகநாதனை பரிதாபமாக நோக்கி னள் அவள்.

"அடே!......என்ன, என்ன நடந்தது?" என்று டாக்டர் லோகநாதன் பரபரப்புடன் கேட்டார்.

"மயங்கிக் கீழே விழுந்து விட்டார்கள்" என்ருள் வேலைக்காரி.

"சரி, போய் உடனே கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா" என்று வேலைக்காரிக்கு உத்தர விட்டுவிட்டு லதாவின் கைநாடியைப் பரிசீலனை செய்தார் டாக்டர்.

தண்ணீர் கொண்டுவந்து டாக்டரிடம் கொடுத்த வேலைக்காரி மங்கம்மா, "தபால்காரன் வந்து ஒரு கடிதம் கொடுத்துச் சென்றான். அதைப் பார்த்ததிலிருந்து அழுது கொண்டே இருக்காங்க" என்றாள்.

லதாவின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார் டாக்டர். சில விநாடிகளில் லதாவின் கண்கள் திறந்தன. பைத்தியம் பிடித்தவள் போல 'திருதிரு'வென்று விழித்தாள். "நான் இன்னும் உயிருடன்தான் இருக்கிறேனா?" என்று புலம்பினாள்.

"ஏனம்மா அப்படிப் பேசுகிறாய்?" அன்பு கனியப் பேசினார் டாக்டர்.

"மலை போன்றிருந்த மணவாளனே போய் விட்ட பின்பு நான் இந்த உலகத்தில் ஏன் இருக்கவேண்டும்?" கிணற்றுக்குள்ளிருந்து பேசியது போலிருந்தது லதாவின் குரல்.

"என்னம்மா சொல்கிறாய்? உனது கணவர் இறந்துவிட்டாரா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் லோகநாதன்.

"ஆம்."

"எப்பொழுது? எங்கே?"

"பம்பாயில்."

"அங்கிருந்து தந்தி வந்ததா?"

"இல்லை; கடிதம் வந்தது."

"யார் எழுதியிருக்கிறார்கள்?"

"அவருடைய நண்பர் ஒருவர் எழுதியிருக்கிறார். அவர் வீட்டில்தான் என் கணவர் தங்கியிருந்தாராம்."

"ஆச்சரியமாயிருக்கிறதே! உடம்பிற்கு ஏதாவது நோய் வந்ததா?"

"ரத்தமாக வாந்தி யெடுத்தாராம்..."

இதற்குமேல் லதாவால் பேசமுடியவில்லை. அழத் தொடங்கிவிட்டாள்.

"அந்தக் கடிதம் எங்கே? நான் பார்க்கலாமா?" என்று டாக்டர் வினவினார்.

அந்த ஹாலில் சோபாவின் பக்கத்தில் கிடந்த கடிதத்தைச் சுட்டிக்காட்டினாள் லதா.

டாக்டர் லோகநாதன் அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தார்.

"பிரியமுள்ள லதாவிற்கு,

நான் சௌகரியமாக பம்பாய் வந்து சேர்ந்தேன். என் உடல் மாத்திரம் உன்னை விட்டுப் பிரிந்திருக்கிறதே தவிர என் உயிர் உன்னிடத்தில்தான் இருக்கிறது. கூடிய விரைவில் நான் திரும்புவதற்கு முயற்சி செய்கிறேன். நீ சிறிதும் கவலைப்படாதே. டாக்டர் லோகநாதன் தினசரி நம் வீட்டிற்கு வந்து உன்னைப் பார்த்துச் செல்வார். சீக்கிரத்தில் உன் வியாதி பூரண குணமடைந்துவிடும். நான் வரும்போது நீ வாங்கிக்கொண்டு வரும்படிச் சொன்ன எல்லா சாமான்களையும் கட்டாயம் வாங்கி வருகிறேன். உடம்பை நன்கு கவனித்துக்கொள். நன்றாக ஓய்வெடுத்துக்கொள்.

இப்படிக்கு
முரளி,
ரூம் நெ. 10, ரிட்ஜ் ஹோட்டல்.
பம்பாய்."

(தொடரும்)

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு		மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு	
	ரூ.	நயா பைசா	ரூ.	நயா பைசா
ஒரு வருஷம் (தீபாவளி மலர் உள்பட)	7	50	9	00
தனிப் பிரதி	0	50	0	62

கடவுள் எங்கே?

க. தி. ஜகந்நாதன்

"கடவுள் எங்கே இருக்கிறாரப்பா?" என்று அறிவழகனாரைப் பார்த்து அவருடைய மகன் செல்வம் கேட்டான்.

மகனின் கேள்வியைக் கேட்ட அறிவழகனார் சற்றே அதிர்ச்சியடைந்துவிட்டார்.

"இத்தகைய கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வது? கடவுள் இருக்கிறார்; அவர் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்று சொன்னால் 'பிரகலாதன் கதை' என்ற புராணக் கதையாகிவிடும். கவிஞர்களின் பாணியில் "கண்டவர்கள் சொன்னதில்லை. சொன்னவர்கள் கண்டதில்லை" என்று பதில் அளித்தாலும் நம் மகன் செல்வத்துக்குத் திருப்தியளிக்காதே! அவன் சாதாரணப் பையனா? ஏதாவது ஒரு பதிலைக் கேட்டு மௌனமாக இருந்து விடுவதற்கு! தமிழகத்தின் வருங்கால அறிஞனல்லவா அவன்! இம்மாதிரி கேள்விக்கு எப்படிப் பதில் அளிப்பது? என்ன பதில் சொல்வது?..." என்றெல்லாம் அறிவழகனார் எண்ணிக்கொண்டேயிருந்தார்.

"என்ன அப்பா? பதில் சொல்லாமல் இருக்கிறீர்களே!" என்றான் செல்வம்.

கேட்ட கேள்விக்கு பதிலளிக்காத தன் தந்தை ஏதோ சிந்தனையில் மூழ்கிவிட்டதைக் கண்ட செல்வம் எழுந்து தன் அறைக்குச் செல்லத் திரும்பினான்.

அவன் எழுந்திருப்பதைக் கவனித்துவிட்ட அறிவழகனார், "இரு செல்வம்! உன் கேள்விக்கு பதில் சொல்லவில்லையே நான்!" என்றார்.

செல்வம் மீண்டும் உட்கார்ந்தான். "இயற்கை தான் கடவுள்; கடவுள்தான் இயற்கை. எனவே, நீ உதயசூரியனைக் கடவுளாக எண்ணி வணங்கு. வாழ்வை அளிக்கும் அந்த சூரியன்தான். இப் புவியை இயக்கும் இறைவன் என்று நீ எண்ணிக்கொள் செல்வம்!" என்று பதிலளித்தார் அறிவழகனார்.

செல்வம் மௌனமாகவே தன் அறையை நோக்கிச் சென்றான்.

அறிவழகனார் செல்வக் குடும்பத்தில், ஒரே மகனாகப் பிறந்தவர். மேல்நாடுகளுக்குச் சென்று, சட்டப்படிப்பு படித்துவிட்டுத் திரும்பிய அவர், நம் மக்களின் வாழ்க்கை நிலை உயராமலிருப்பது கண்டு வருந்தினார். நம்மவர்கள், நிகழ்காலத்தையும்-வருங்காலத்தையும் நினைக்காமல், பழமையின் பெருமையைப் பற்றிப் பேசிப் பேசியே காலங்கடத்தி வருவதையும், கண்டு வருந்தினார்.

ஆனாலும், தம்முடைய மண வாழ்வின் பத்தாண்டு காலத்துக்குப் பின்னும், 'மகன் ஒருவன் இல்லையே, நம் வாழ்வில் மணம் வீசி மகிழ்விக்க!' என்று ஏங்கியபோது, தம்முடைய 'கர்நாடக' மனைவியின் விருப்பப்படியே, 'வேங்கடம் முதல் குமரிவரை உள்ள கோயில்களுக்குச் சென்று கடவுளை வரம் கேட்டு வரலாமா' என்ற எண்ணமும் தோன்றியதுண்டு அவருக்கு!

அறிவழகனாரின் மனதில் இந்த எண்ணம் தோன்றியதே போதும் என்று எண்ணியோ என்னவோ, இறைவன், அறிவழகனார் தம் எண்ணத்தை செயலாக்கு முன்பே, அவருக்கு மகவுச் செல்வத்தை அளித்தார்.

மகனை அளித்த அந்த இறைவனே, அல்ல அல்ல! இயற்கையை தம் மனைவி எய்தியதை எண்ணிக் கலங்கினார். மகன் பிறந்த மகிழ்ச்சியையும் மனைவி இறந்த மனவேதனையையும் ஒருங்கே பத்தாண்டுகளுக்கு முன்னர் அனுபவித்த அந்நாளை இன்று நினைத்துக் கொண்டபோது அவர் கண்கள் கலங்கின!

செல்வத்தின் ஆசிரியர் தம்முடைய பங்களாவின் 'கேட்'டைத் திறந்து கொண்டு உள்ளே வருவதைக் கலங்கிய கண்களுடன் கவனித்தார்.

"என்னங்க, செல்வம் படிப்பில் எப்படி இருக்கிறான்?" என்று ஆசிரியரைப் பார்த்துக் கேட்டார் அறிவழகனார்.

"புகழ்ச்சிக்காக சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள்.

இந்த வயதிற்குள்ளேயே திருக்குறளைப் படித்துவிட்டிருக்கின்றான்; சரித்திரம் பூகோளம், விஞ்ஞானம், எல்லாவற்றிலுமே அவனுக்குள்ள ஆர்வத்தைக் கண்டு, அந்த புத்தி கூர்மையைக் கண்டு என்னால் வியக்காமலிருக்கமுடியவில்லை! அவனை நீங்கள் பள்ளியில் சேர்த்தால்......"

ஆசிரியர் பேச்சை முடிக்குமுன்பு அறிவழகனார் குறுக்கிட்டார்.

"செல்வத்தை நான் ஏன் தெரியுமா பள்ளியில் சேர்க்கவில்லை? அங்கே அவன் மற்ற பிள்ளைகளுடன் பழகி 'கெட்டு' விடுவானோ என்ற பயமும்; வருங்காலத்தில் 'அறிஞனாக' அவன் விளங்கவேண்டும் என்ற என் எண்ணமுமே காரணமாகும். அவன் நிறையப் படிக்கவேண்டும்; அதற்குப் பள்ளிக்கூடத்தில் படிப்பதைவிட, வீட்டிலேயே உங்களைப் போன்ற சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு படிக்கவைக்கலாம்."

ஆசிரியர் மௌனமாக எழுந்து தம் பணியை ஆற்ற செல்வத்தின் படிப்பறையை நோக்கிச் சென்றார்.

"பாடங்களை யெல்லாம் படித்தாயா செல்வம்?" என்று கேட்டுக்கொண்டே நாற்காலியில் உட்கார்ந்தார் ஆசிரியர்.

ஆசிரியர் அன்று நடத்தவேண்டிய பாடங்களை நடத்திவிட்டு இரவு எட்டு மணிக்குப் போனார். அவர் சென்றதும் இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டுவந்த செல்வம், சீக்கிரமாகவே படுத்துக்கொண்டான்.

புள்ளினங்கள் உதய கீதம் பாடின.

செல்வம் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்தான். ஜன்னல் வழியாக கீழ்வானத்தை நோக்கினான்.

ஆதவன் உதயமாகிக்கொண்டிருந்தான். உதய சூரியனைக் கடவுளாக எண்ணி வணங்கும்படித் தன் தந்தை கூறியது செல்வத்தின் நினைவிற்கு வந்தது. கரங்குவித்து வணங்கினான்.

எப்போதோ ஒரு புத்தகத்தில் படித்த சில வரிகள் நினைவுக்கு வந்தன.

"கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியாது; ஆகவேதான் அவர் 'தாய்மை'யை உலகில் உண்டாக்கினார்!"

"சின்னஞ் சிறு குழந்தையின் உள்ளமும் உதடும், ஆண்டவனை 'அம்மா' என்று பெயரிட்டுத்தான் அழைக்கிறது!"

"அப்படியானால் என்னைப்போன்ற சிறுவனுக்கு, அம்மாதான் ஆண்டவனா?...ஐயோ, எனக்கு அம்மா இல்லையே! ஆண்டவனும் என்னிடம் இல்லையா? என்னை மட்டும் விட்டு ஆண்டவனும் அம்மாவும் ஏன் போய்விட்டார்கள்?" இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டிருந்த செல்வத்தின் கண்கள் கலங்கின.

கன்னங்களின்மீது வழிந்தோடிய கண்ணீரைக்கூட துடைக்காமலே, வானத்தையே வெறித்த நோக்குடன் பார்த்துக்கொண்டிருந்த செல்வத்தைப் பார்த்து அறிவழகனார் திகைப்படைந்தார். "என்ன செல்வம்! அழுதாயா என்ன?" என்று கவலையுடன் கேட்டார்.

கண்களைத் துடைத்துக் கொண்டே, செல்வம் புன்னகையுடன்; "திடீரென்று எனக்கு அம்மா இல்லையே என்று நினைத்தேன். அழுதுவிட்டேன்; அழுதால் மட்டும் இறந்து போன அம்மா வந்து விடுவாளா என்ன? சில சமயங்களில், இப்படித்தான் பைத்தியக்காரத்தனமாக அழுதுவிடுகிறேன் அப்பா!" என்றான்.

"சரி, செல்வம்; வா, டிபன் சாப்பிட்டு விட்டு இன்று உன் பாட்டி வீட்டுக்குப் போய் வா!" என்றார்.

செல்வம் தன் தந்தையுடன் படுக்கை அறையை விட்டு வெளியே சென்றான்.

அறிவழகனாரின் பங்களா, கோடம்பாக்கம் ரயில் நிலையத்துக்கு அருகாமையிலே இருந்ததினால், மின்சார வண்டியில் செல்வமும், வேலைக்காரக் கிழவனும் ஏறி மாம்பலத்திலிருந்த செல்வத்தின் தாத்தா வீட்டுக்கு வந்தனர்.

"வாடா கண்ணு செல்வம்!" என்று வரவேற்றாள் அவன் பாட்டி.



"வந்துவிட்டேன் பாட்டி! உங்களிடம் ஒரு விஷயம் தெரிந்துகொண்டு போகத்தான் வந்தேன்!" என்ருன் செல்வம்.

"என்னடா கண்ணு?" என்ருள் பாட்டி.

"என் அம்மா எப்போது-எப்படி இறந்து விட்டார்கள்?"

"செல்வம், அந்தக் கதையை இந்தச் சிறிய வயதிலேயே நீ தெரிந்துகொள்ள வேண்டுமா? உம். சரி கேட்டுக்கொள்!" என்ற பீடிகையுடன் பாட்டி பேச ஆரம்பித்தாள்.

"உன் பெற்ருேருக்கு கல்யாணமாகி பத்தாண்டுகளுக்குப் பிறகே நீ பிறந்தாய். நீ பிறப்பதற்கான அறிகுறிகள் ஒருநாள் இரவு ஒரு மணிக்குத் தோன்றின. உன் அப்பா டாக்டருக்கு போன் செய்தார். உடனே காரில் புறப்பட்டு விடுவதாகச் சொன்ன டாக்டர், இரவு ஒண்ணரை மணியாகியும் வரவில்லை. அவர் வருவதற்கு முன்னர் நீ பிறந்துவிட்டாய்; ஆனுல், உன் தாயாரின் உடல்நிலை கவலைக்கிடமாகி விட்டது.

டாக்டர் இரண்டேகால் மணிக்கு, வரும் போது "சரியாக ஒண்ணரை மணிக்கு திடீரென்று கார் நின்றுவிட்டது ஸார்; அதனுல் தான் இவ்வளவு 'லேட்'டாகிவிட்டது!" என்று கூறிக்கொண்டே வந்தார்.

உன் அம்மாவின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது! நாடியைப் பரிசோதித்துவிட்டு உன் தந்தையிடம் "மன்னிக்கவும்; ஒண்ணரை மணிக்கே வந்திருந்தால் ஒருவேளை உங்கள் மனைவி பிழைத்திருக்கக்கூடும்!" என்று கூறிஞர். அவர் அறையைவிட்டு வெளியே வந்ததும் உன் அம்மாவின் உயிர் போய்விட்டது!

இதுதான் செல்வம் உன் அம்மா இறந்த கதை! நீ இவ்வளவு புத்திசாலியான பையஞக வளர்வதை அவள் கண்டு களிப்படைவாள்! பாவி கொடுத்து வைக்கவில்லை!..."

சமையலறைக்கு கண்களைத் துடைத்துக்கொண்டே பாட்டி போவதற்கும் எங்கேயோ வெளியே சென்றுவிட்டு அவனுடைய தாத்தா வீட்டுக்குள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.

தாத்தா ஹாலிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தவுடன் அவர் அருகிலிருந்த மற்ருெரு நாற்காலியில் உட்கார்ந்தான் செல்வம்.

"எப்போது வந்தாய் செல்வம்?" என்ருர் தாத்தா.

"இப்போதுதான் வந்தேன் தாத்தா!"

"பாடமெல்லாம் நன்ஞ படிக்கிருயா?"

"உம்; படிக்கிறேன் தாத்தா...ஒரு கேள்வி கேட்கலாம்னு இருக்கிறேன் தாத்தா. நீங்கதான் அதுக்கு பதில் சொல்லணும்!" என்ருன் செல்வம்.

"என்ன கேள்வி?"

"கடவுள் எங்கே இருக்கிருர் தாத்தா?"

"நல்ல கேள்வி கேட்டாய் செல்வம்! இந்தக் கேள்விக்குப் பதிலாக நான் ஒரு கேள்வியைக் கேட்கிறேன். அந்தக் கேள்வியே உன் கேள்விக்குச் சிறந்ததொரு பதிலாக அமையும்!" என்ருர் தாத்தா.

செல்வம் தன் தாத்தாவின் முகத்தையே ஆவலுடன் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

"காற்று எங்கே இருக்கிறது செல்வம்?" என்ருர்.

"இப்புவியைச் சூற்றி எங்கும் இருக்கிறது காற்று!" என்ருன் செல்வம்.

"காற்று உன் கண்களுக்குத் தெரிகிறதா?"

"இல்லை!"

"பின் எப்படி நீ காற்று இருக்கிறது என்று சொல்கிருய்?"

"தென்றல் வீசும் போதும், புயல் அடிக்கும் போதும், மரங்களின் இலைகள் சலசலக்கும் போதும், காற்றை உணர்கிறோம்?"

"இப்பொழுது தெரிகிறதா செல்வம்? காற்றை நாம் எப்படி காணமுடியாதோ அதைப்போல் கடவுளையும் நாம் காணமுடியாது; காற்றை நாம் எப்படி உணர்கின்றோமோ அதைப்போல் கடவுளையும் நாம் உணரலாம்."

"இதனால் கடவுள் எங்கும் இருக்கிறார் என்றாகிறதல்லவா-காற்றைப்போல!"

"ஆமாம்!"

"பின் ஏன் அவருக்காகக்கோயில்கள் பல கட்டி, விக்கிரகங்கள் வித விதமானதாக உருவாக்கி- வழிபடுகிறார்கள்? கோயிலில் தான் கடவுள் இருக்கிறார் என்று எண்ணச் செய்து விடுகிறதே இந்த விக்ரகவழிபாடு! அப்பாவுக்கு இது தான் பிடிக்கவில்லை. யோசித்துப்பார்க்கும்போது எனக்கும் பிடிக்கவில்லை!" என்றான் செல்வம்.

"விக்ரக வழிபாட்டின் தத்துவத்தை நீங்கள் இருவரும் உணரவில்லை. அதனால் தான் உங்களுக்கு இந்த முறை பிடிக்கவில்லை" என்று சொல்லிவிட்டு தாத்தா நாற்காலியை விட்டு எழுந்து ஹாலை அடுத்திருந்த அறைக்குள் சென்றார். சில நிமிடங்களுக்குப் பிறகு ஒரு "நடைவண்டி"யைக் கொண்டு வந்தார்.

"இது என்ன தெரிகிறதா செல்வம்?" என்றார் தாத்தா.

"இதுதான் நடைவண்டி. குழந்தைகள் நடை பயில உபயோகிக்கப்படுகிறது; ஏன் தாத்தா! நான்கூட இதைப் பிடித்துக் கொண்டுதானே முதலில் நடக்கக் கற்றுக் கொண்டேன்!"

"ஆம்; எப்படி குழந்தைகளால் 'நடை வண்டி'—இல்லாமல் நடப்பதற்கு முதலில் தெரியாதோ அதைப்போலவே, முக்தியை நோக்கிச் செல்லும் பக்திப் பாதையிலே நடக்க, "விக்ரகம்" என்ற நடைவண்டி தேவைப்படுகிறது!"

செல்வம் சிறிதுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். "வாடா செல்வம்—சாப்பிடலாம்!" என்று செல்வத்தின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள் பாட்டி.

பாட்டி வீட்டிலிருந்து தன் வீட்டுக்கு அன்று மாலை நாலு மணிக்கு வேலைக்காரக் கிழவனுடன் புறப்பட்டான் செல்வம். பக்கத்துத் தெருவின் திருப்பத்திலே ஒரு பிணத்தை அப்போதுதான் இடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர்.

செல்வம் வேலைக்காரக்கிழவனைப் பார்த்து, "ஏன் தாத்தா! இறந்துவிட்டால் நாம் எங்கே போவோம்?" என்று கேட்டான்.

கிழவன் சிரித்துக்கொண்டே, "நம்ப உயிர் கடவுள் கிட்டே போவுது; மண்ணிலிருந்து வந்த உடல் மண்ணுக்கே போகிறது!" என்றான்,

மின்சார ரயில் வருவதற்கு நேரமாகிவிட்டது. கூட்டம் ஸ்டேஷனில் அதிகரித்து விட்டது. அங்கேயிருந்த மனிதர்களைப் பார்த்த செல்வம், "இத்தனை பேரையும் சிருஷ்டித்தவன் இறைவன்தான். ஆனால், ஒருவருக்கொருவர் எவ்வளவு வித்தியாசங்கள்—வேறுபாடுகள்!..." இப்படியோசித்துக் கொண்டிருந்த செல்வத்தின் கண்களுக்கு ஒரு சிறுவனின் உருவம் தெரிந்தது.

அச்சிறுவன் ஒரு பிச்சைக்காரன். அவன் உடலமைப்பு ஒரு புதுமையதே—பார்த்தவுடனே மனதிற்கு வேதனையும் அனுதாபத்தையும் தோற்றுவிக்கும் புதுமையாக அமைந்திருந்தது.

"கடவுள் எல்லோரையும் சிருஷ்டி செய்தான். இவனைமட்டும் ஏன் இப்படி சிருஷ்டித்தான்? கடவுள் அன்பின் உருவம் என்றால் அந்த அன்பு இவனைமட்டும் ஏன் இந்தத் துன்பம் தரும் வகையில் படைக்கவேண்டும்? ஏன்? ஏன்?" என்று மனதிற்குள்ளேயே சிந்தித்துக்கொண்டிருந்தான்.

"இதோ நிற்கிறானே இந்தச் சிறுவன், இவன் என்ன பாபம் செய்தான்? கடவுள் ஏன் இவனை இப்படிப் படைக்கவேண்டும்?" என்று கேட்டான் செல்வம்.

கோடம்பாக்கம் ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்கு வரும்போது இந்த சம்பவங்களைப் பற்றியே எண்ணமிட்டுக்கொண்டிருந்தான் செல்வம்.

"பூர்வ ஜன்மம் என்று ஒன்று இருக்கிறதா? பூமியில் பிறக்குமுன்பு நான் எங்கிருந்தேன்? இறந்தபின் நான் எங்கிருப்பேன்? இறந்து விட்டால் உயிர் நிச்சயமாக கடவுளிடம் போய்ச்சேருமா?" இப்படியெல்லாம்தான் அந்த பத்து வயது 'பிஞ்சு' மனம் சிந்தனை செய்தது!

அன்று இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு செல்வமும் அவன் தந்தை அறிவழகனும் வழக்கம்போல பங்களாவின் முன் ஹாலில் உட்கார்ந்துகொண்டிருந்தனர். சில நிமிடங்கள் தந்தையும் மகனும் மௌனமாகவே இருந்தனர். அந்த மௌனத்தை செல்வம்தான் கலைத்தான்.

"அப்பா!"

"என்ன செல்வம்?"



"பிறப்பதும் இறப்பதும் இயற்கையின் செயல்தானே அப்பா?"

"ஆமாம்!"

"பிறப்பதற்குமுன் நாம் எங்கிருந்தோம்? இறந்தபின் எங்கிருப்போம்?"

"செல்வம்! இன்றைய விஞ்ஞானம் வான வீதிக்கு நாயையும் குரங்குகளையும் அனுப்பி விந்தை பல புரிகிறது; மனிதனையும் சந்திர மண்டலத்துக்கு அனுப்ப திட்டங்கள் வகுக்கிறது; ஆனால், உன்னுடைய கேள்விக்கு விஞ்ஞானம் இன்றுவரை பதிலளிக்கவில்லை!"

"பிறப்பதற்குமுன் நாம் கடவுளிடமிருந்தோம். இறந்த பிறகு கடவுளிடம் செல்வோம்!" என்று சிலர் சொல்லுகிறார்களே அப்பா!

"பலர் அப்படித்தான் சொல்வார்கள். நம் நாட்டில் சிலர்தான் படித்தவர்கள்–படிக்காதவர்கள் பலர். படிக்காதவர்களிடம்தான் இந்த 'மூட' நம்பிக்கைகள் இருக்கும். பிறப்பதும் இறப்பதும் இயற்கையின் நிகழ்ச்சியே தவிர வேறு எதுவுமில்லை!" என்றார் அறிவழகனார்.

சிறிது நேரம் செல்வம் மௌனமாகவே இருந்தான். மேலும் அவன் அங்கேயே உட்கார்ந்திருந்தால் ஏதாவது கேள்விகள் கேட்பான் என்று எண்ணி, "செல்வம்! போய் படுத்துக்கொள் நேரமாகிவிட்டது!" என்றார்.

செல்வம் தன்னுடைய படுக்கை அறைக்குச் சென்றான். தன் படுக்கையில் படுத்துக்கொண்டான்......

திறந்திருந்த ஜன்னல் வழியாக நட்சத்திரங்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன. ஒரே ஒரு நட்சத்திரத்தை உற்றுப்பார்த்தான். அதன் பிரகாசம் வரவர அதிகமாகிக்கொண்டே வருவதுபோல உணர்ந்தான். அந்த நட்சத்திரம் நெருங்கி தன்னை நோக்கி வருவது போலவும் அதில் ஹாலிலிருந்த தன் தாயின் புகைப்படத்தைப்போலவே ஒரு படம் இருப்பது போலவும் தெரிந்தது! இன்னும் நன்றாக உற்றுப்பார்த்தபோது தன் தாயே அந்த நட்சத்திரத்தில் உட்கார்ந்துகொண்டு தன்னை அன்பும் பாசமும் மிதக்கும் கண்களால் "வா வா! ஓடிவா! என் செல்வமே!" என்று அழைப்பது போன்றதொரு பிரமை ஏற்பட்டது......

"சே! இது என்ன பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள்!" என்று எண்ணியபடியே படுக்கையைவிட்டு எழுந்தான். பக்கத்து அறைக்குச்சென்று விளக்கைப்போட்டான். மணியைப்பார்த்தான். இரவு சரியாக 12. மணியாகியிருந்தது. ஷெல்பிலிருந்து ஒரு புஸ்தகத்தை எடுத்தான். பிரித்தான். படித்தான். மறுபடியும் மேஜையருகே புத்தகத்துடன்வந்து யோசனை செய்தான்.

நாற்காலியில் உட்கார்ந்தான். ஒரு காகிதத்தை எடுத்து எதையோ எழுத ஆரம்பித்தான்.

பொழுது புலர்ந்தது.

அறிவழகனார் தம் படுக்கையை விட்டு எழுந்து மகனுடைய படுக்கை அறைக்கு வந்தார்.

செல்வத்தை படுக்கையில் காணவில்லை.

காரணமறியாத ஒரு பயம், பீதி எல்லாம் தோன்றியது! "எங்கே செல்வம்? எங்கே? எங்கே?..." என்று அந்த பெற்றமனம் ஒரு நிமிடத்துக்குள் ஓராயிரம் முறை கேட்டது.

அவன் படிக்கும் அறைக்குச்சென்றார். மேஜைமேல் ஒருகடிதம் இருப்பது தெரிந்தது. அதையெடுத்தார். பிரித்தார்.

"அப்பா!

கடிதத்தின் ஆரம்ப வார்த்தையைப் படிக்கும்போது அறிவழகனாரின் கரம் லேசாக நடுங்கியது. நடுங்கும் கைகளுடனும் கலங்கிய கண்களுடனும் அவர் கடிதத்தைப் படித்தார்,

நீங்கள் என்னை ஓர் அறிஞனாக்க விரும்பினீர்கள். ஆனால், நான் அறிஞனாகாமலேயே உங்களைவிட்டுப்போய் விடுகிறேன்.

நான் யார்? ஏன் பிறந்தேன்? ஏன் வளர்கிறேன்? என்னை யார் படைத்தது? என்னை தோற்றுவித்தவனின் நோக்கம் என்ன?

எந்த ஒரு சக்தி மனிதர்களைப் பூமியில் தோற்றுவித்ததோ அதே சக்திதான்—இயற்கைதான்—சின்னஞ்சிறு பூச்சியான சிலந்திப் பூச்சியைப்படைத்தது. சிலந்திவலையை எவ்வளவு தடவை கலைத்தாலும் அது தன் உள்ளேயிருந்து நூல் நூற்று மீண்டும் வலை கட்டுகிறது. நூலுக்காக அது பிறரை எதிர்பார்ப்பதில்லை. உணவுக்காக அது பிறரிடம் யாசகம் கேட்கப் போவதுமில்லை. எனவே அதை யாரும் அகதியாக்க முடியவில்லை. மனிதன் மட்டும் ஏன் அம்மாதிரி இல்லை.

ஒரு சிலர் பணக்காரர்களாகவும், பலர் ஏழைகளாகவும் உண்ண உணவிற்குப் பிச்சை எடுப்பவர்களாகவும் ஏன் வாழ்கிறார்கள்?

நான் பிறக்கும்போது எந்த சக்தி என் தாயாரை காப்பாற்றுவதற்கு வந்த டாக்டரின் காரை நிறுத்தி வைத்தது?

இத்தனை கேள்விகளுக்கெல்லாம் விடை தெரிய வேண்டுமானால் படைத்தவனையே தான் கேட்க வேண்டும் என்றாகி விட்டது. அதனால்தான் கடவுள் எங்கே? என்று உங்களைக் கேட்டேன். ஆசிரியரைக் கேட்டேன். தாத்தாவையும் கேட்டேன். யாருமே எனக்கு கடவுள் எங்கே? என்ற கேள்விக்குச் சரியான பதிலைக் கொடுக்கவேயில்லை.

நம்வீட்டு வேலைக்காரன் 'இறந்து விட்டால் நம் உயிர் கடவுளிடம் போகிறது' என்று சொன்னான். உங்களைக் கேட்டபோது, "பிறப்பும் இறப்பும் இயற்கையின் நிகழ்ச்சியே தவிர, பிறப்பதற்கு முன் ஆண்டவனிடமிருந்தோம்; இறந்த பின் ஆண்டவனிடம் போவோம் என்பதெல்லாம் படிக்காதவர்களின் பேச்சு" என்று சொன்னீர்கள்.

கடவுள் எங்கே? என்ற கேள்விக்கு சரியான பதிலை அறிய நானே புறப்படத் தீர்மானித்து விட்டேன்.

அப்பா! இக்கடிதத்தை நீங்கள் படித்து முடிக்கும்போது நான் கடவுள் எங்கே என்ற கேள்விக்கு விடையைக் கண்டுபிடித்துவிட்டிருப்பேன். ஆம் அப்பா! என் உடல் இறந்துவிட்டிருக்கும். என் உயிர் கடவுளைக் கண்டுவிடும்!"

தங்கள் அன்புள்ள மகன்,
செல்வம்.

"ஐயோ செல்வம்! நீ போய்விட்டாயாடா செல்வம்!" என்று அந்த பங்களாவே அதிரும்படி கதறினார் அறிவழகனார்.

"எஜமான்! எஜமான்! நம்ம செல்வம் கோடம்பாக்கம் ஸ்டேஷன் பக்கத்திலே ரயில்லே அடிபட்டு செத்துப்போயிடுச்சு எஜமான்!" என்று வேலைக்காரக் கிழவன் அறிவழகனாரைப் பார்த்துச் சொன்னான்.

தன் மகனின் உயிரற்ற உடலைக் கண்டு அறிவழகனார் குழந்தையைப் போல கேவிக் கேவி அழுதார்.

செல்வத்தின் ஆசிரியரும், தாத்தாவும் அவருக்கு ஆறுதல் சொன்னபடி இருந்தனர்.

மணமாகிப் பத்தாண்டுகாலம் 'தவமி'ருந்து பெற்றெடுத்த தம் மகனை, மகனின் உயிரற்ற உடலை மண்ணிலே வைத்தார் அறிவழகனார்.

கடைசியாக ஒரு பிடி மண்ணை அள்ளிப் போடும்போது 'ஓ' வென்று அழுதார்! "கடவுள் எங்கே என்பதை நீ மட்டும் கண்டு பிடிக்கவில்லையடா கண்ணே! நானும் இப்போது கண்டுகொண்டேன்! கடவுளே! நீதான் எனக்கு மகனாகப் பிறந்து கடவுள் எங்கேயும் இல்லாத இடமே இல்லை. ஒவ்வொருவனுடைய உள்ளத்திலேயும் கடவுள் இருக்கிறார் என்பதை உணரும்படி செய்து விட்டு மறைந்துவிட்டாய்! என் செல்வமே! என் கடவுளே! நீ வாழ்கிறாய்! நீ சாகவில்லை. சாகவும் முடியாது! நீ வாழ்கிறாய்! வாழ்கிறாய்!..." என்று கூறியபடியே மண்ணைப் போட்டார். மயங்கித் தரையில் வீழ்ந்தார். வீழ்ந்தவர் எழவேயில்லை. ★

உயர்திரு சந்தானம் எம், ஏ. பி. எச். டி. (லண்டன்) வழக்கம்போல் பள்ளியின் விடுதலை மணி முழக்கியவுடன் தமது தலைப் பாகையைக் கழற்றி கோட் ஸ்டாண்டில் மாட்டினார். பியூன் மருதமுத்துவை அழைத்து ஹோட்டலிலிருந்து இன்றிரவு சாப்பாடு எடுத்துவர வேண்டாம் என்றார்.

"அப்படியானால் பஸ்ஸில் இடத்துக்குச் சொல்லி வைக்கணுங்களா!" என்றான் மருத

காதலிக்க நேரமில்லை!

'பரதேசி'

முத்து. இரவு தலைமையாசிரியர் சாப்பிட வில்லையென்றால் பஸ்ஸில் வெளியூர் புறப்படுவார் என்பதுதான் இதுவரையுள்ள வழக்கம். பதில் வராததால் மருதமுத்து சிறிது தயங்கி நின்றான். "ஒன்றுமில்லையப்பா! நான் வெளியூர் போகவில்லை. ஓரிடத்தில் எனக்கு விருந்து. நீ போ!...மற்ற வேலைகளைக் கவனித்துவிட்டு வீட்டுக்குப் போ!" என்றார் பரிவுடன்.

"இரவு பசும்பால் காய்ச்சி வைக்கவேண்டாமா?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டான் அவன்.

"ஆமாம்! மறந்துவிட்டேனே!... அந்தப்... பாலை நீ உன் வீட்டுக்கு எடுத்துப்போ!" என்றார். பின்பு தாமே எழுந்துவந்து தலைமையாசிரியர் என்ற போர்டின் கீழே உள்ள உள்ளே-வெளியே போர்டில் 'வெளியே'யைத் தெரியும்படி வைத்துக் கதவை உட்புறம் தாழிட்டபடி பிளாஸ்கைத் திறந்தார். "கமகம" வென்று "கல்யாண் கபே"யின் டிகிரி காபி மணம் வீசிற்று. காபியைப் பருகிய வண்ணமே தமது மாஜி மாணவன் சுப்புரத்தினமும் மாஜீ மாணவி ஹேமலதாவும் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள கடிதத்தைக் கவனித்தார்.

அன்பார்ந்த ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம், தாங்கள் எங்கள் திருமணத்திற்குத்தான் வர இயலவில்லை. கட்டாயம் இந்த விருந்துக்காவது விஜயம் செய்வீர்களென்று நம்புகிறோம். காதலித்துக் கல்யாணம் செய்துகொள்வதை இலக்கியத்தில் பாராட்டிவிட்டு அதை நடைமுறையில் செய்ததைத் தாங்களும் குற்றமாகக் கருதி விட்டீர்களோ என்று அஞ்சுகிறோம். தங்கள் ஆசியைப்பெற வேண்டுமென்று பிரத்தியேகமாகத் தங்களுக்காகவே இந்த விருந்தை ஏற்பாடு செய்திருக்கிறோம். தங்களைக் குறித்த நேரத்தில் அழைத்து வந்து உரிய காலத்தில் வீட்டில் கொண்டு சேர்க்க "டாக்ஸி"க்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

என்றும் தங்கள் பணிவுள்ள
கே. சுப்புரத்தினம்.
எஸ். ஹேமலதா.

கடிதத்தைப் படித்ததும் தலைமை ஆசிரியர் சந்தானம் அவர்கள் இதழ்க் கடையில் ஒரு புன்னகை மலர்ந்தது. அதைத் தொடர்ந்து நீண்டதொரு பெருமூச்சு வெளியேறிற்று.

2

காதலிப்பதைக் குற்றமாகக் கருதுகிறவர்களின் பட்டியலில் தன்னையும் அந்த இளங்காதலர்கள் சேர்க்கத் துணிந்தது அவர் உள்ளக் கிடங்கினடியில் இருட்டறையில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பழைய வாழ்க்கை ஏடுகளை எடுத்து விசிறிற்று.

ஆமாம்! அவரும் ஒரு காலத்தில் மாணவராக இருந்தவர்தாம்—அவர் வாழ்க்கையிலும் காதலிக்க நிறையச் சந்தர்ப்பங்கள் இருந்தன. சின்னஞ்சிறு வயதில் தந்தையை இழந்த அவர் படிப்புக்காக உற்றார் உறவினரின் ஆதரவை நாடி அலைந்தார். மன்னார்குடியில் அவர் ஹைஸ்கூலில் படித்து வந்தார். ஹரித்ராநதிக் கரையில் குடியிருக்கும் உறவினர் வீட்டிலிருந்து இரண்டு மைல் தூரத்துக்கு மேலிருக்கும் நேஷனல் ஹைஸ்கூலில் அவர் ஐந்தாம் படிவத்தில் படிக்க நேர்ந்தது, எல்லா புத்தகங்களும் வாங்கித்தரவில்லையாதலால் சில புத்தகங்களிலிருந்து குறிப்பெடுத்துக்கொள்ள சக மாணவரின் உதவியை நாடி பத்தரைமணிப் பள்ளிக்கு எட்டரை மணிக்கே புறப்பட்டு விடுவார். எட்டரை மணிக்குள் அவருக்குச் சமைத்துப் போட்டு அவர் கையில் இடைவேளைக்குச் சாதமும் கொடுத்தனுப்புவாள் அவரை ஆதரவோடு பிள்ளைபோல் கவனித்து வந்த மாமி. பள்ளிக்கருகிலுள்ள ஒற்றைத்தெருப் பிள்ளையார் கோயிலில் உட்கார்ந்து சந்தானம் படிப்பார். பள்ளிக்குள் அமைதியான சூழ்நிலை இராது. மாணவர்கள் கூச்சலும், கும்மாளமுமாக இருக்கும். இறைவணக்கத்துக்கு முன் துவக்கமணி ஒலிக்கும்போது சொல்லிவைத்தாற்போல் கோயில் வாயிலில் ஒரு கார் வந்து நிற்கும். அதிலிருந்து இறங்கும் பெரிய இடத்துப் பெண்ணொருத்தி பிள்ளையாருக்கு வணக்கம் செலுத்துமுன்பு சந்தானமிருக்குமிடம் கண்ணோட்டம் விடுவாள். பாவம்!... சந்தானம் ஒரு பாவமுமறியாத சாதுவாகப் புத்தகத்தில் புதைந்திருப்பார்.

என்றோ ஒருநாள்! அன்று பள்ளிக்கு விடுமுறை. ஆனால், பழக்கதோஷத்தால் சந்தானம் காலை ஒன்பது மணிக்கெல்லாம் பிள்ளையார்கோயிலை அடைந்துவிட்டார். குறிப்பிட்ட நேரத்தில் கார் வந்து நின்றது, புத்தகச் சுமையுடன் கீழிறங்கும் அந்த மாணவி கையில் பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு முதலியவைகளுடன் இறங்கினாள். வழக்கமாகப் படிக்கு மீடத்திலமர்ந்திருந்த சந்தானத்தை நோக்கி ஒரு புன்னகை பூத்தாள். சந்தானம் தலையெடுத்துப் பார்த்திருந்தால் கட்டாயம் அந்த அழகில் மெய் மறந்திருப்பார். அவர் இந்துதேச சரித்திரத்தின் இண்டு இடுக்குகளில் சிக்கிக் கொண்டிருந்தார். அர்ச்சனைசெய்து ஆரத்தியைத் தொட்டுக் கண்களிலொற்றிக்கொண்டு பிரசாதமும் பெற்றுத் திரும்பிய அந்தப் பெண், தன் பள்ளியில் படிக்கும் சகமாணவர் இவ்வளவு அசட்டையாக ஒரு பெண்ணைக் கவனிக்காமலிருக்கிறாரே என்று கருதியோ என்னவோ "இதோ பிள்ளையார் பிரசாதம்! எடுத்துக் கொள்ளுங்கள்" என்று தன் கையிலுள்ள தட்டை நீட்டினாள். நிஷ்டை கலைந்த சந்தானம் எதிரில் நிற்கும் சகமாணவியைக் கண்டான். பிரசாதம் எடுத்துக் கொண்டான். நெற்றியில் அவன் திருநீறு அணியும்போது "ஏன்?" இன்று பள்ளி இல்லை என்பதை மறந்து விட்டீர்களா?" என்று அவள் கல கலவென நகைத்தாள். சந்தானம் ஏதோ பதில் சொல்ல முயன்றான். ஆனால், பதில் வரவில்லை.

"ஸார்! டாக்ஸி வந்திருக்கிறது" என்று குறுக்கிட்ட குரலால் தலைமையாசிரியர் சந்தானம் அவர்களின் சிந்தனை இழை அறுந்தது என்றாலும் அவர் எண்ணினார். "ஏன்"?... நான் மட்டும் விரும்பியிருந்தால் அவளைக் காதலித்திருக்கக் கூடாதா என்ன?"

காரில் ஏறியதுமே மீண்டும் அவர் மனம் துள்ளி ஓடிற்று..... ஆமாம்!... அப்பொழுது சந்தானம் திருச்சியின் கல்லூரி ஒன்றில் பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். குடும்பத்தில் தாயையும் கணவன் வீடு சென்று கைம்பெண்ணாகத் திரும்பிய மூத்த சகோதரியையும் கவனிக்கவேண்டிய பொறுப்பு அவருக்கிருந்தது. பீ. ஏ. யை முடித்து பி. டி. பயிற்சியையும் முடித்து ஏதாவதொரு ஹைஸ்கூலில் ஆசிரியராக அமரத்தான் அவர் விரும்பினார். பொருளாதார வசதிக்குறைவால் அவர் கல்லூரி மாணவர்களுக்குரிய சுகபோகங்களை அனுபவிக்க இயலவில்லை. ஆனால், இளமையும் எழிலும் கொழிக்கும் எத்தனையோ பெண்களை அவர் சந்தித்தார். ஒரு சிலரோடு நெருங்கிப் பழகவும் செய்தார். குறிப்பாக ஸ்ரீரங்கத்திலிருந்து வந்து படித்த மிஸ்– மாலதியை அவருக்கு நிரம்பவும் பிடித்திருந்தது. படிப்பில் முதன்மையும் பழக்கத்தில் கண்ணியமும் நிறைந்துள்ள சந்தானத்தை அவளும் அன்போடு நோக்கினாள். அவள் காதலித்தாள் என்று சொல்லமுடியாது. அதைப்போலவே காதலிக்கவில்லை என்றும் சொல்லமுடியாது. மாணவர் இலக்கியக்கழகத்தின் செயலாளர் எனும் முறையில் அவருக்கு அவளுடன் நெருங்கிப்பேச வாய்ப்பும் இருந்தது. எனினும், அதை அவர் தவறாக உபயோகிக்க

வில்லை. சிறுவயதில் மன்னார்குடி ஒத்தைத்தெரு பிள்ளையாரை பரீட்சைகளில் வெற்றி பெறுவதற்காக மட்டுமே அவர் வழிபடவில்லை. அவரையுமறியாமல் அந்தப் பிள்ளையாரின் ஆதர்சபிரமசரிய வாழ்வில் அவர் மனம் லயித்துவிட்டது. தன் தம்பி குமரன் இருபுறமும் வள்ளியும், தெய்வயானையுமாக விளங்கும்போதும் அவர் தமக்கென்று ஒரு வாழ்க்கைத்துணைவி அவசியம் வேண்டுமென்று நினைக்கவில்லை. அந்த ஆதர்சம் சந்தானத்துக்குப் பிடித்திருந்தது. தன்னைக் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்த உற்றார் உறவினருக்குச் செய்ய வேண்டிய உதவிக்கெல்லாம் தமது திருமண வாழ்வு தடையாக இருக்குமென்றுகூட அவர் எண்ணினார். எனவே, மற்றொரு சந்தர்ப்பத்தில் – "ஆமாம்! நீங்கள் மேலே என்ன செய்யப்போகிறீர்கள் ? எனக்கென்னவோ என் தந்தை நல்ல வரன் தேடிக்கொண்டிருக்கிறார்" என்று அர்த்த

புஷ்டியுள்ள பார்வையையும் வசனத்தையும் தன்பால் செலுத்திய மிஸ் மாலதிக்குப் புன்னகையைத்தவிர வேறு பதிலளிக்க முடியவில்லை!......

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேரவேண்டுமென்றிருந்த அவர் வாழ்வில் தொடர்ந்து மேலே எம். ஏ.-க்குப் படிக்கவேண்டிய சூழ்நிலை வந்தமைந்தது. அகில இந்தியக் கல்லூரி மாணவர்களுக்காக அமைந்ததொரு ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டியில் சந்தானம் முதற் பரிசு பெற்றதுடன் அதன் காரணமாக ரெவரண்ட் வில்லியம் ஃபாதரின் மதிப்புக்கும் பாத்திரரானர். அவர் சந்தானத்தை மேலே எம். ஏ. படிக்கவைக்கும் பொறுப்பை ஏற்றதுடன் எதிர்காலத்தில் அவரை லண்டனுக்கு அனுப்பிவைக்கவும் தயாராயிருந்தார். ஆனல், எண்ணியபடி எல்லாம் நடைபெற வில்லை. இதுவரை மன உறுதியோடு வாழ்க்கை வழியைக் கடந்துவந்த சந்தானத்தின் லட்சிய முனைப்பில் மிஸ். வில்லியின் நிழல் விழுந்தது. அவளை அவர் காதலித்தார் என்று சொல்ல முடியாது; ஆனல், அவளைக் காணவிட்டால் அவர் ஏதோ சூன்யத்தில் சிக்கித் திணறுவார். மிஸ். வில்லி, நகரின் பிரபல சினிமா தியேட்டர் முதலாளியின் புதல்வி. சன்மார்க்க சித்சபையின் கௌரவக் காரியதரிசி சிவசங்கரன் மூலம் சந்தானத்துக்கும் அவளுக்கும் அறிமுகம் ஏற்பட்டது. சித்சபையின் அங்கத்தினராகத் தம்மையும் சந்தானம் பதிவு செய்துகொண்டார். வில்லியின் தயவால் வாரந்தோறும் அவர் முதல் வகுப்பில் அமர்ந்து ஆங்கிலப் படங்களைப் பார்த்தார். ஒரு சில சமயங்களில் மிஸ். வில்லியும் அவரருகில் அமர்ந்தது உண்டு. வில்லியின் தொடர்பால் ஏற்பட்ட சலனம் அவரை எம். ஏ. பரீட்சையில் மூன்ரும் பிரிவிலேயே தேறவைத்தது. அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்கூட நீண்ட காலமாகப் பரிசீலனைக்குரியவைகளாகவே கருதப் பட்டுவிட்டன!...

"ஸார்! இறங்குகிறீர்களா?"-என்ற டாக்ஸி டிரைவரின் குரலால் தலைமையாசிரியர் சந்தானம் நிகழ்காலத்துக்கு வந்தார். அவரையுமறியாமல் நனைந்திருந்த கண்களைத் துடைத்துக்கொண்டார். வாசலில் கார் சப்தம் கேட்டதுமே சுப்புரத்தினம் ஓடோடியும் வந்து வரவேற்ருன். ரேழியருகில் ஹேமலதா புன்னகை பூத்தபடி கைகூப்பி வணக்கம் தெரிவித்து வரவேற்ருள். "சிறுகக்கட்டிப் பெருகவாழ்" எனும் முதுமொழிக்கேற்ப அமைந்துள்ள அந்த அழகிய இல்லத்தின் அமைப்பில் மனம் லயித்தவராக சந்தானம் உள்ளே சென்ருர்.

விருந்து முடிந்தது. சந்தானம் எண்ணத்தை எங்கேயோ செலுத்திச் சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் தட்டிலுள்ளதைக் காலி செய்தார். விருந்தொன்று வைத்துப் பேச்சுத் துணைக்குக்கூட வேறு யாருமில்லாமல் செய்துவிட்டார்களே என்ற எண்ணம் அவர் இதயத்தினடியில் கரகரத்தது. அவர் முன்பு தாம்பூலத்தட்டை வைத்ததும் "இது குடும்ப ஆல்பம்" என்று ஒரு புகைப்படத் தொகுப்பை சுப்புரத்தினம் எதிரில் கொண்டுவந்து வைத்தான்—ஆமாம்! இப்படி ஒரு ஆல்பம் ஒவ்வொரு முடிசூடா மன்னன் வீட்டிலுமிருக்க வேண்டியதுதான்! ...யார் கண்டார்கள்!...நாளை அவனே இந்நாட்டின் ஜனதிபதியாக வரலாம்... அப்போது பழைய படங்களைத் தேடிப் பிடிக்க முடியுமா?......பார்த்துக்கொண்டே வந்த போது ஒரு குரூப் போட்டோவில்—வரிசையாக ஏழெட்டுப் பெண்கள் மட்டும்—அவர் கண்கள் லயித்தன. ஆமாம்!...அவருடைய மாஜிக்காதலி—சீசீ!......அப்படிச் சொல்லக் கூடாது!...—மாலதி அதே பழைய தோற்றத்தில் தென்பட்டாள்.

"இவள் யார்?" என்று குறிப்பாகக் கேட்பது அவ்வளவு நாகரீகமாக இராது என்பதால் சிறிது தயங்கினர். அருகில் அவரையே கவனித்துக்கொண்டிருந்த ஹேமலதா "அதில் என் சித்தி இருக்கிருள் ஸார்!..." என்று குறிப்பாக "மாலதி"யையே சுட்டிக் காட்டினள்!

"இவர் உனக்குச் சித்தியா?"

"ஆமாம் ஸார்!...ஏன் இவரை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியுமாவாவது......திருச்சியில் பி. ஏ. வகுப்பில் என க்ளூபில் படித்தவராயிற்றே!"

"உறவிலேயே நல்ல இடத்தில் திருமணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்—அரை மனதோடு ஒப்புக்கொண்டார்—திருமணம் நடக்கவேண்டிய முன்னேற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென்று "திருமணம் வேண்டாம்" என்று மறுத்துவிட்டார்..."

"காரணம்?"

"வேறொன்றுமில்லை!...மாப்பிள்ளையாக வர விருந்தவர் வேறு யாரோ ஒரு பெண்ணோடு திருச்சி ஹோட்டலொன்றில் தங்கியிருந்தாராம்!...அது எங்கள் சித்தி கவனத்துக்கு வந்துவிட்டது!..."

"சித்தி சித்தி என்கிறாயே!......சித்தி என்றால்?..."

"அதாவது சின்னம்மா ஸார்?......இவள் அம்மாவின் தங்கை"—என்று விளக்கினான் சுப்புரத்தினம். சந்தானம் நீண்டதொரு பெருமூச்சுவிட்டார்.

"என் சித்தியும் கூட உங்களைப் போலவே தான் வைராக்யமாக வாழ்வைத் திருமணத்தோடு ஒட்டவிடாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்—கோவையில் ஒரு பெரிய உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாக இருந்து வருகிறாள்"—என்று அர்த்த புஷ்டியுள்ள பார்வையை ஆசிரியர்மீதும் அருகிலிருக்கும் அவர் மாஜி மாணவர் மீதும் வீசினாள் ஹேமலதா.

"வருகிற பொங்கல் லீவில் கட்டாயம் அவரை இங்கே வரவழைக்கிறேன் ஸார்!... நீங்கள் பொங்கலுக்கு எங்கள் வீட்டுக்குத் தான் வரவேண்டும்" என்று முத்தாய்ப்பு வைத்தான் சுப்புரத்தினம்.

3

யார் சொன்னது? பெரியவர்களுக்குத் தான் ஆயிரம் பொய் சொல்லும் உரிமை உண்டென்று? யார் சொன்னார்கள்? வயது காலத்தில்—வாலிபத்தில்தான் திருமணம் நடைபெற வாய்ப்பு உண்டென்று?...

யாரும் சொல்லவில்லையா?

அப்படியானால் சரி!—

"மாலதி! என் வாழ்வு வீணாகவில்லையடி!" என்றார் வெகு காலங்கழித்து சந்தானம்.

"என் உத்தியோகத் தவம் வீண்போகவில்லை. எனக்குச் சந்தான பாக்யம் கிடைத்துவிட்டது. ஆனால், அந்தச் சிறுமி ஹேமலதாவை மன்னித்துவிடுங்கள். அவளுக்கு நான் எந்த ஜன்மத்திலும் சித்தி இல்லை" என்றாள் ஓய்வுபெற்ற மணப்பெண் மாலதி!

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்
பெப்ஸ் வில்லைகளை
உட்கொண்டால், உங்கள் இருமல்
உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றைச் சுவைத்து ஆவி போன்ற அதன் சத்து குணமளிக்க வேலை செய்வதை உணருங்கள். வலியைக் குறைக்கவும, தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமாகிய கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது. பெப்ஸ் உடனடி நிவர்ரணம் அளித்து விரைவில் குணமடையச் செய்கிறது.

FPY-54-TAM

பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.
எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

சோல் ஏஜண்டுகள்:
தாதா அண்டு கம்பெனி
86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3

டெலிபோன் மூலம் தந்திகள் துரிதமாக பட்டுவாடா செய்யப்படுகின்றன

தந்திகளை விலாசதாரரின் டெலிபோன் நெம்பருக்கு* விலாசமிட்டு அனுப்புங்கள். தந்தி ஆபீசிற்கு இத்தந்தி கிடைத்தவுடன் தந்தியின் செய்தியை டெலிபோன் மூலம் அவருக்கு அறிவிக்கப்படும். தந்தி சேவகர் மூலம் பட்டுவாடா செய்ய ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கலாம்.

பானர்ஜீ
*டிஎப் 31670
புது டில்லி

இது உங்களுக்கு மலிவானதும்கூட ; 'டிஎப் 31670' என்பது ஒரு வார்த்தையாக கணக்கிடப்படும்.

இந்த வசதி உள்ளூர் டெலிபோன் சர்விஸ் உள்ள இடங்களில் கிடைக்கும்.

தந்திச் செய்தியின் நகல் அதே தினம் முதல் தபால் பட்டுவாடாவில் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் தந்தியை டெலிபோன் மூலம் பெறுங்கள்

தந்தி அனுப்புபவர் உங்கள் டெலிபோன் நெம்பரை குறிப்பிடாவிட்டாலும் சில நகரங்களில் உங்கள் தந்திகளை டெலிபோன்மூலம் நீங்கள் பெறலாம். தந்தி ஆபீசில் உங்கள் டெலிபோன் நெம்பரை ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள். பிறகு உங்களுக்கான எல்லா தந்திகளும் டெலிபோன்மூலம் அறிவிக்கப்படும். தந்திச் செய்தியின் நகல் ஒன்றும் உடன் அனுப்பி வைக்கப்படும். ஆக்ரா, அஹமதாபாத், அலஹாபாத், அமிர்தசரஸ், பெங்களூர், பம்பாய், கல்கத்தா, கோயம்புத்தூர், டில்லி, இந்தூர், கான்பூர், சென்னை, நாகபுரி, புதுடில்லி, சேலம், செகந்திராபாத் ஆகிய இடங்களில் இவ்வசதி கிடைக்கும்.

உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் மற்றும் தந்தி இலாகா

DA 59/351

அழகும்

இதயன்

மக்கள் அன்பர் ஒருவரின் திருக்கைங்கர்யத்தால் அந்த ஆரம்ப உயர்நிலைப் பள்ளி இதுவரை நல்ல பெயரோடு நடந்து கொண்டிருந்தது. திருமதி ஞானேதயம் வந்துசேர்ந்த ஒரு சுபயோக சுபதினத்திற்குப் பிறகு— நல்ல எழுத்து நேரே செல்ல கோணை எழுத்து குறுக்கே புகுந்தவேதனையாய் முடிந்தது.

ஆட்களுடைய தேகவாகை ஒற்றைநாடி, இரட்டைநாடி என்று பிரித்துப் பேசுகிறார்கள். தலைமையாசிரியை ஞானேதயமோ ஒன்றரைநாடி! வயதும் 25 இருக்கும். அவள் உறங்கி விழித்ததும் பார்த்த ஒருவரின் துல்யமான கணக்கு இது. நாமும் உறுதியோடு நம்பவேண்டியதே. ஆனால், ஞானத்தைப் பார்த்தால் ‘நேற்று சிறு பெண்; இன்று பெரியவள்’ என்றுதான் பேசத்தோன்றும். படத்தில் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட நடிகையைப்போல அப்படி சொலித்தாள்.

ஒரு பெண்ணின் அழகு அவளுடைய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்கிற குணச்சிறப்பில்அடங்கியுள்ளதுஎன்பார்கள். இதெல்லாம் பழைய நூல்களைப் படித்துத் தேர்ந்த பத்தாம்பசலிகளின் கூற்று! அவளுடைய அழகு அவளது மேக்—அப்பில் உள்ளது என்று நிரூபித்தாள் ஞானம்.

நவீன அழகு சாதனங்களிடம் தன்னை அவள் அவ்வளவு சாஷ்டாங்கமாக சமர்ப்பித்துக்கொண்டு மின்னினாள். இவ்வளவுக்கும் காரணம், சாதாரண அழகுக்கும் ஒரு மாற்று குறைவாக அவள் இருந்தது தான். கருப்பு—நிறம் கூட! ஆகவே, நாளைக்கு ஒருவிதமாக தன் அழகை எடுத்துக்காட்டிக்கொண்டு வந்தாள்— உலகைக் கிறங்க அடித்தாள்.

காலமும்— பொல்லாத காலமிது. இயற்கை நிலாவை விட செயற்கை நிலா மக்களை மயக்கவருகிற காலம்! அப்படித்தான் ஆண்கள் உலகம் ஞானத்தின் செயற்கை அழகில் வயப்பட்டு சொக்கியது! பள்ளியில், இந்த வழுக்கைத்தலை வீராசாமி ஆசிரியர் கூட— ஞானத்தைப் போல ஒருத்தியை மகளாகப் படைத்தவர் அவர்— அவளிடம் இளித்து நின்றார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

அந்தப்பள்ளியில் ஐந்து ஆசிரியைமார்களும் அதைப்போல இருமடங்கு ஆசிரியர்மார்களும் இருந்தார்கள். சொல்லிவைத்த மாதிரி ஆசிரியைகள் நல்ல அழகிகள், அதாவது ஞானத்தைக் காததூரத்துக்கு விரட்டி அடிப்பவர்கள். (இந்த பொறாமையே அந்த ஞானத்தை அவ்வளவு விகாரப்படுத்தி வைத்து விட்டது போலும்) அனைவருக்கும் குடும்பம் இருந்தது. அந்த பளு காரணமாகவோ, அல்லது வருவாய் குறைவு காரணமாகவோ அவர்கள் என்றுமே பகட்டாக, பள்ளிக்கு வந்தது கிடையாது. (உள்ள அழகே போதும் என்ற திருப்தியின் காரணமாக மட்டும் அல்லவே அல்ல) இந்த விஷயத்தில் அந்தப் பள்ளி ஒரு துர்பாக்கியசாலியே!

இந்த ஐந்து நிலாக்கள் அங்கு எவரையும் கூச வைக்கவில்லை. ஆனால், அந்த செயற்கை நிலாவோ- அப்பாடி- கர்வங்கூட பட்டுக்கொண்டது. அழகு உபாசகர்கள் தனக்கு அதிகம் ஆக ஆக அதற்கு பெருமிதம் கூட. ஆணுலகை அப்படி ஆட்டிப் படைத்ததில் என்ன களி அதற்கு? வேற்று நாட்டில் இராணுவ மரியாதை ஏற்கும் ஒரு ஜனாதிபதியைப் போல அது அவர்கள் பக்தியை ஏற்று செருக்கு நடையிட்டது.

அழகுக்கு அடக்கம் உண்டென்றால் பகட்டுக்கு ஆணவம் அதிகம் போலும்?

ஆணவத்தை ஞானம் நிரூபிக்க, அடக்கத்தை அந்த ஆசிரியைமார்கள் நிரூபித்துக் கொண்டிருந்தார்கள், அந்தப் பள்ளியில்.

ஒரே ஒரு ஆசிரியன் மட்டும் இந்த ஞானத்தை அஞ்ஞானமாய் மதித்தான். இதைக்கூட ஞானம் பொறுத்துக்கொண்டாள். ஆனால், அவள் அழகை அவன் சட்டை செய்யவில்லையே? அதை எங்ஙனம் ஒருத்தி பொறுத்துக் கொள்வாள்? அதுவும் ஒரு பெண்? அதுவும் ஞானம்?

அழகி ஒருத்தி வீட்டில் கள்ளன் எவனோ புகுந்தான். அங்கு கிடைத்தவைகளையெல்லாம் சுருட்டிக்கொண்டு சென்றுவிட்டான். ஆனால், தங்கப் பிரேம் போட்ட அவளுடைய படத்தை மட்டும் மேசை மீதே விட்டுச் சென்றுவிட்டான்—இருந்தது இருந்த வாக்கிலேயே, வீடு மீண்ட அழகிக்கு ஆத்திரம் தாளவில்லை—இதைக் கண்டு, "மடையன்! என்னை இப்படி அவமானப்படுத்தவேண்டுமென்று எத்தனை நாள் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான்?" என்று கனன்று துடித்தாள்...இந்த ராசியில் வந்த ஞானம் "தேங்காய்த்தலை (அந்த ஆசிரியனுக்குக் கட்டுக் குடுமி உண்டு) என்னை அவமானப் படுத்துவதா? பாடம் கற்பிக்கிறேன்! காலடியில் பணிய வைக்கிறேன்" என்று கனன்று துடித்தாள். அழகுக்கு குரூரத்தன்மையும் உண்டு என்கிறார்கள். அது அழகுக்கு அல்ல, ஆணவத்துக்கு!

அந்தத் தேங்காய்த் தலையை ஒருநாள் அழைத்தாள். அவன் வருவதற்குள் ஒரு முறை தனது அழகை ஒப்பனை செய்து கொண்டும்விட்டாள். அவன் வந்ததும் "திருமூர்த்தி! உங்க கிராமத்திலே முட்டை சகாயமா கிடைக்கிறதாமே? ஒரு ரெண்டு டசன் வேணும்" என்றாள்.

இதற்குத்தானா இவ்வளவு அவசரமாக வந்தது? என்று எண்ணிக்கொண்டே திருமூர்த்தி, "முட்டையா? பசங்களுக்கு நான் கொடுக்கிற முட்டைதான் மேடம் உண்டு!" என்றான்.

"அப்படியானால், கோழியாவது பாருங்களேன்—சாதிக்கோழியாய்?"

"பார்க்கலாம்!" அவன் போய்விட்டான், எவ்வளவு அலட்சியம்?

பிறகு அவன் கோழியையும் கொண்டுவரவில்லை; கொக்கையும் கொண்டுவரவில்லை. இதையே—ஏன் இதையே? 'இரு டசன் அன்னம் வேண்டும்' என்று கோரியிருந்தாளானால், இத்தனை நேரம் மற்றவர்கள் கைலயங்கிரி மானஸ சரோவரத்துக்கே பறந்து போயிருப்பார்களே? (அன்னம் என்ற புள்ளினம் அங்கு உண்டு என்று கூறப்படுகிறது). இவ்வளவு ஏன்? அந்த சம்பங்கி ஆசிரியனிடம் கூறியிருந்தால் போதுமே? அன்னவாகனனை பிரம்மாவிடமே இன்னேரம் சண்டைக்குக் கிளம்பி விட்டிருப்பானே? அவன் அவ்வளவு 'தேவி' உபாசகன் ஆயிற்றே!

நல்ல கதை! ஒருவன் அவ்வளவு வெறுக்கிறான் கோரத்தை; ஒருவன் அவ்வளவு விரும்புகிறான், அதை! இருவரையுமே ஆட்டிப் படைப்பதில் ஆனந்தம் கண்டாள் அழகி!

எதையாவது சாக்கிட்டுக்கொண்டு சம்பங்கி தலைமையாசிரியையிடம் ஓடி வருவான். சொக்கி நிற்பான். அவள் விரட்டி அடிப்பாள். அவன் ஓடிப் போவான். 'தன்னாலே மூன்றும் வகுப்பைக் கட்டி மேய்க்க முடியவில்லை- 80 பொடிப் பசங்கள்!' என்று சொல்லிக்கொண்டு அன்று வந்து நின்றான்.

"ஆட்டுக்குட்டி மேய்க்கக் கூட நீர் லாயக்கில்லை. பூனைக்குட்டிதான் மேய்க்கப் போகணும்" என்று எகதாளம் பேசினாள் ஞானம்.

சம்பங்கி மனுவை நீட்டினான். அதிலே திருமூர்த்தியும் கையொப்பமிட்டிருந்தான். சம்பங்கிக்கு என்ன குறையிருந்ததோ அதே குறை அவனுடையதும். மூன்றும் வகுப்பை இன்னும் இரண்டு சப் டிவிஷன்கள் அதிகமாக்க வேண்டும், அல்லது பழையபடியே தங்களை நான்காம் வகுப்புக்குப் போட்டுவிட வேண்டும் என்று கோரியிருந்தனர் மனுவில். (வேண்டுமென்றே இவர்களை மூன்றும் வகுப்புக்கு மாற்றிப் போட்டவள் ஞானம்.) மனுவை தலைமையாசிரியை மூலமாக பள்ளிக்கூட உரிமையாளருக்கு பணிவுடன் எழுதியிருந்தார்கள். மனுவைக் குப்பைக் கூடையில் எறிந்தாள் ஞானம். கோபத்தில் அவளைப் பார்க்க வெகு அழகாய் இருந்தது சம்பங்கிக்கு. மேலே காற்றாடி சுற்றிக் கொண்டு கிடந்ததா? அது புடவைத் தலைப்பை அல்லாடவைத்து அவளது அழகுக் குவியலை வெளிச்சமாகக் காட்டியது.

சூழ்நிலை, சுற்றுப்புறம் யாவையும் மறந்து போனான் ரசிகன். பாய்ந்து, அவளைத் தழுவி கட்டிப்பிடித்து முத்தியிட்டான், ஞானம் அவனைத் தூர விலக்கினாள். சரேலென்று 'ஜோட்டை'க் கழட்டிக் கொண்டாள். சம்பங்கி வெகு வேகமாக வெளியேறிவிட்டான். அவனது முதுகிலே வந்து விழுந்தது செருப்பு. அவன் திரும்பி நின்று, "சம்யுக்தையை பிருதிவி அடித்துக்கொண்டு போன மாதிரி உன்னை ஒரு நாளைக்கு அடித்துக்கொண்டு போய் விடுகிறேன்" என்று நகை சிந்தியபடியே கூறிவிட்டு அகன்றான்.

"போன காரியம் என்னடா என்று திருமூர்த்தி விசாரித்தான்.

"ஜெயம்" என்றான் சம்பங்கி.

"நீயும் நானும் அல்லவா! சூரன்!" என்று பாராட்டினான் திருமூர்த்தி. இவன் 'ஜெயம்' என்று சொன்னதை -தங்கள் மனுவுக்கு, என்று அவன் எடுத்துக்கொண்டான். சம்பங்கியும் அதை விளக்கவில்லை!

சம்பங்கியின் நல்ல காலமோ, அல்லது ஞானத்தின் நல்ல காலமோ ஆபீஸ் அறையில் நடந்ததை ஒரு ஈ காக்கை பார்க்கவில்லை!

அன்று ஆத்திரமும் அழுகையும் பொங்க வீடுவந்து சேர்ந்தாள் ஞானம். நடந்தவற்றை கணவனிடம்கூறி வெந்து மாய்ந்தாள்.

"முன்னாடி உன் புத்தியை செருப்பால் அடிக்கணும். என்னைப்பார், என் அழகைப் பார்னு நீ போனால், எந்த ஆணுக்குத் தான் கெட்டஎண்ணம் முளைக்காது? கண்காட்சியிலேகூடப் 'பொருள்களை—கைதொடாதீர்கள்' என்று எழுதிவைப்பார்கள். பெண் அந்தமாதிரி தன் அழகுக்கு எழுதி ஒட்டிக்கொண்டு செல்லமுடியுமோ? அது இயலாததினாலேதான் எவனாவது துணிஞ்சவன் ஒருத்தன் இப்படித் தடித்தனமாக நடந்து விடுகிறான். அப்புறம் அழுது ஆகாத்தியம் பண்றது! ஒரு பெண் தன்னை அழகுபடுத்திக்கொண்டு திரிவது, அவள் வரையிலே அது கண்ணாடிப் பெட்டிக்குள் ஒய்யார நீச்சல் போடுகிற பொன்மீன் போலத்தான்! அந்த மீனுக்காக ஏங்கிக் காத்துக்கொண்டு கிடக்கிறார்கள் பூனை போன்றவர்களாகிய ஆண்கள்! பூனை மீனைப் பிடிக்க முடியாவிட்டாலும் கண்ணாடியையாவது ஒருதரம் நக்கிப்பார்த்து



விடுகிறது! இன்று உனக்கு நேர்ந்த அவகேடு இதேதான்! கண்ணுடி சேலைகட்டிக் கொண்டு போகிருயே, நேர்ந்த மானக்கேட்டைப் பார்த்தாயா?" என்று மிகுதியாகச் சீறினுன் அவள் கணவன்.

ஞானம், "புண்ணில் பொடி தூவுகிறீர்களே! ஒரு மனைவி கணவனிடம் கூறிக் கதறுகிருள். கேட்டுக்கொண்டு ரோஸம் கிளம்பலியே!" என்று கண்ணீர் வடித்தாள்.

"எனக்கா? அசடே! அதற்குமுன் உனக்கு வரட்டும்" என்று கிளம்பிஞன் ஞானத்தின் கணவன்.

அப்படி அவன் கிளம்பியதன் விளைவு, மக்கள் அன்பர் சம்பங்கியை உடனடியாக 'டிஸ்மிஸ்' செய்ததுதான்.

இதோடு விட்டிருக்கலாம் அடிபட்ட புலி. ஆனல், ஞானம் சம்பங்கிமீது வழக்கும் தொடுத்துவிட்டாள். பள்ளியின் நல்ல பெயர் பத்திரிகைகளில் அடிபட்டது. துடிதுடித்து விட்டார், மக்களன்பர்.

அழகு படுத்திக்கொள்வதிலும் அளவு வேண்டும். அதை ரசிப்பதற்கும் இந்த அளவு இருக்கவேண்டும். ஒரே அடியாக தேங்காய்த் தலையைப்போல வெறுத்துவிடவும் கூடாது, அதை ஒரேயடியாய் சம்பங்கி அளவிற்கு ரசித்துவிடவும் கூடாது!

நினைவை இப்படியெல்லாம் நெகிழவிட்டுக் கொண்டு ஞானம் நின்றிருந்தாள், நீதிமன்றில்.

தனது வக்கீல் சொல்லிக்கொடுத்ததை எழுத்துவிடாமல் சம்பங்கி கூறினுன் நீதிமன்றில். 'தான் ஞானத்திடம் 'அவ்வாறு' நடந்ததில்லை' என்று ஆணையிட்டான். ஞானத்துக்கும் மக்கள் அன்பருக்குந்தான் 'அவ்விதத் தொடர்பு' உண்டு என்றும், பள்ளி என்றும் பாராமல் 'அது' நிகழ்ந்தது என்றும், தான் அதை அப்படியே பார்க்க நேர்ந்தது அவர்களுக்குத் தலையிறக்கமாகி விட்டதென்றும், வெளியே பரவிவிடுமோ என்ற கிலி தோன்றி அதன் விளைவாகத் தன் மீதே அந்த அபாண்டத்தைச் சுமத்தி விட்டார்களென்றும்' கூறினுன். (வக்கீல் வெகு கெட்டிக்காரர்!)

இப்போது பள்ளி பெயர் மட்டுமல்ல; முதலாளியின் நல்ல பெயரும் ஏடுகளில் அடிபட்டது. ஞானம் அதிர்ந்தே போனுள். அவளுக்குக் காய்ச்சல் கூட கண்டது.

மக்கள் அன்பர், ஞானம் வீடு தேடி வந்து நின்ருர். "இந்த வழக்கை நீ வாபஸ் பெறுகிருயா? இல்லை—பள்ளிக்குச் சீல் வைத்து விடட்டுமா?" என்று பொரிந்தார்.

"வாபஸ்பெற எப்போதே ஏற்பாடுபண்ணி விட்டேன். சம்பங்கிதான் முரண்டுகிருன். அவனுக்கு வேலைபோய் விட்டதே? எப்படி விடுவான்?... நான் வெட்டிய குழியிலே நானே விழுந்து விட்டேனே?" ஞானம் கதறினுள்.

"உடம்பைக் கவனித்துக் கொள்" என்று நடந்தார் அன்பர்.

சம்பங்கியைப் பிடித்து 'ஐயா... அப்பா!' என்று கெஞ்சி, அவனை வழிக்குக் கொண்டு வந்தார். மறுக்காமல் தன் பள்ளியிலேயே வேலையும் ஈந்தார். அப்...பாடி!

அவர் பெயரையும் வழக்கு மன்றத்துக்கு இழுத்துவிட்டது வீணுகவில்லை என்று மகிழ்ந்தான் சம்பங்கி.

ஞானம், தான் வேறு பள்ளிக்கு மாற்றம் பெற்றுச் சென்றுவிட்டாள். இப்போது அவளைப் பார்த்தால் அடையாளம் தெரியாது. கியாஸ் விளக்குக் காந்தி எல்லாம் தொலைந்து, இப்போது குத்துவிளக்காய் குளிர்ந்தாள்!

தொடர் கதை

பின்னர் மேகலா, பாமினியின் பக்கத்தில் உட்கார்ந்து அவளை இழுத்து அணைத்துக் கொண்டு, "பாமினி! என்னம்மா செய்வது, நீ கொடுத்து வைத்தது அவ்வளவுதான். இனி நீதான் என் மூத்தபெண். பிறகுதான் கலா. உன் அம்மா உனக்கு தக்க ஆதரவு தேடி வைத்து விட்டே சென்றிருக்கிறாள். இனி மேல் என்னையே அம்மாவென்று அழை. உன் வாழ்வை மலரச் செய்வது என் பொறுப்பு. இதோ உன் தாயார் சடலத்தின் முன்னதாக உறுதி கூறுகிறேன். உன் மனம் போல் வாழ வசதியளிப்பேன். நீ விரும்பினால் சசி உனக்கே" என்றாள்.

சட்டென அழுகையை நிறுத்திவிட்டு, மேகலாவின் வாயைப் பொத்தினாள் பாமினி. அந்த சமயம் "பாமினி! பாமினி! அம்மா செத்துப் போய்விட்டாளாமே! நிஜமாகவா?" என்று கேட்ட வண்ணம் அவள் அருகில் வந்து நின்ற சசி, சற்று நேரம் காத்தியாயனியின் சடலத்தைப் பார்த்தவாறு நின்றான். பிறகு "ஐயோ அம்மா! நீ செத்துப் போய் விட்டாயே, நானும் பாமினியும் என்ன செய்வோம், பாமினி நாம் இரண்டு பேரும் தனியாகப் போய்விட்டோமே. இந்த வீட்டில் நாம் மட்டுமா இருக்கணும்" என்றான்.

"இல்லை, உங்கள் இருவரையும் எங்கள் கூட அழைத்துச் செல்லப் போகிறோம்" என்றார் அதுல்யம். சசியைக் கண்டதுமே அவரது துக்கம் பறந்து போய்விட்டது.

"எங்கே அழைத்துப் போவீர்கள்"

"எங்கள் ஊருக்கு, வீணாவிகாருக்கு" என்றார்.

"பாமினி! இவர்கள்கூட நாம் போகலாமா?"

"போகலாம். போகாவிட்டால் நமக்கு ஆதரவாக யார் இருப்பார்கள்" என்றாள் பாமினி.

"அப்போ எங்க பாமினிக்கு கல்யாணம் பண்ணி வைப்பீர்களா?" என்றான் சசி.

"ஓ பேஷாக. நல்ல வரனாகப் பார்த்து கல்யாணம் பண்ணி வைத்து விடுகிறேன்" என்றார்.

காத்தியாயனியின் அந்திமக் கடன்களையெல்லாம் தாமே முன்னின்று நடத்தினார். எல்லோரும் வக்கீலினிடம் எல்லாவற்றையும் ஒப்புவித்து விட்டுக் கிளம்பினார்கள். இன்னும் பத்து நாட்களில் வந்து சேருவதாகச் சொன்னார் டாக்டர்.

வீணாவிகாருக்கு வந்த பின்பும் சசி நிலையில் மாறுதலேதுமில்லை. எல்லா இடங்களுக்கும் அவனாகவே போய்வருவான்.

வீணாவிகாரின் ஆட்களில் ஒருவரையாவது புரிந்து கொள்ளவில்லை.

அவனது சிறு பருவத்திலிருந்து பழகின வேலைக்காரன் "பழனி" என்பவன் காலைக் கட்டிக்கொண்டு கதறியழுதுவிட்டான்.

"எதற்காக அழுகிறாய்? நீ யார்" என்றான். காத்தியாயனியின் விருப்பப்படி கட்டடம் ஒரு பக்கம் எழும்பிக்கொண்டிருந்தது. மறுபக்கம் சசியின் நிலைமை சரியாக வேண்டுமே என்ற கவலையும் இருந்து கொண்டிருந்தது.

இதற்கிடையில் பாமினியினிடம் அதுல்யம் "பாமினி! அரவிந்தனைப்பார்த்தாயா? என்ன சொன்னான். ஏதாவது ஏற்பாடு செய்யட்டுமா? அல்லது சசியை...."

"மாமா! தயவு செய்து இப்பொழுது என்னிடம் எதைப்பற்றியுமே கேட்காதீர்கள், சசியின் பிரமை மாறவேண்டும். கலாவிற்கு நல்வாழ்வு உண்டானால்தான் எனக்கும் வாழ்வுண்டு" என்று கூறிவிட்டாள்.

காத்தியாயனி இறந்த மறு நாள் எல்லாப் பத்திரிகைகளும், கொட்டை எழுத்தில் அவளது மறைவுபற்றியும், அவளது கொடை வண்மை, சமூகசேவா மனப் பான்மை இவைகள் பற்றியும் மேலும், ரயில் விபத்தின்மூலம் காத்தியாயனி, பாமினியுடன் சசி வந்துசேர்ந்த விவரங்களையும், காத்தியாயனியின் அந்தியகாலத்தில் அதுல்யர் வந்து சேர்ந்ததும், சசியை அவரிடம் ஒப்படைத்த விவரம் முதலியவற்றையும் குறிப்பிட்டிருந்தன.

காலைப் பத்திரிகையில் இந்தச்செய்தியைப்படித்த அரவிந்தனின் மனம், "சசி கிடைத்துவிட்டான்" என்ற சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது. வீணாவிகார் வாசிகளை ஒன்றுதிரட்டி விஷயத்தைச்சொன்னான். பிறகு தாயை இழந்த பாமினியின் மீது அவனது அனுதாபம் திரும்பியது. பாமினி இனி என்னசெய்வாள் என்று சிந்திக்கலானான். இவன் குழப்பம் தீர பாமினி அதுல்யருடன் வருவது தெரிந்ததும் அவன் மிக்க ஆறுதலடைந்தான். இனி பாமினி தனக்குக்கிடைப்பாள் என்ற நம்பிக்கையும் தெம்பளித்தது. சில தினங்களில் அதுல்யம், மேகலா, சசி, கலா, பாமினி எல்லோரும் வந்து சேர்ந்தனர். பாமினி வந்ததும் சம்பிரதாயமாக தாயின் மறைவுக்காக அனுதாபம் தெரிவித்தான். சிலநாள் சென்றபின்பு அவள் மன நிலையைப் புரிந்து கொள்ளலாமென்ற முடிவிற்கு வந்தான்.

ஒருநாள் அதுல்யர் வாழ்க்கையில் வெறுப்புற்று, "என் வாழ்விற்கு வசை பாட வந்த வஜ்ர வீணையே! உன்னை முதலில் அழித்து விட்டு என்னையும் அழித்துக் கொள்ளப் போகிறேன்" என்றவர் இரு கைகளினாலும் ஏந்தி நிற்கும் வஜ்ரவீணையை சுரைக்காயிலிருந்து குடம் வரை தனது பார்வையை ஓடவிட்டார்.

"ஹூம்! அழகிருந்து என்ன உபயோகம்; அதிருஷ்டமில்லையே உனக்கு. உன்னை கைநீட்டி பரிசாக வாங்கின என்னையுமல்லவா உன்னுடைய துரதிருஷ்டம் பிடித்துக் கொண்டு விட்டது. என்னுடனாவது விட்டதா? நான் அரும்பாடுபட்டு வளர்த்த அருமைச் செல்வங்களையுமல்லவா பற்றிக் கொண்டுவிட்டது.

உயிருக்குயிராக வளர்த்த சசி என்னைப் புரிந்து கொள்ளவில்லையே! இரண்டு மாதமாக அக்குழந்தை கலா, அவன் கால்களைப் பற்றிக் கொண்டு கதறும் காட்சி கல்லையும் உருக்கிவிடும். ஆனால், கடின சித்தமுள்ள தெய்வமும் இறங்கவில்லை. சசியும் புரிந்து கொள்ளவில்லை. பார்த்துப் பார்த்துப் பாவி என்மனம் இற்றுப்போய் விட்டது."

அன்று பௌர்ணமி. திடீரென நிச்சப்தத்தைக் கிழித்துக்கொண்டு ஆந்தையொன்று அலறிற்று. "ஆந்தையே! எனக்கு சரமகீதம் பாடுகிறாயா? நன்றாகப் பாடு!

மரஞ் செடி கொடிகளே! பக்ஷிஜாலங்களே! பறவையினங்களே! வனவிலங்குகளே! அருவியே! எல்லாவற்றையும் உன்னுள் அடக்கிநிற்கும் இயற்கையன்னையே! உங்களிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். நிம்மதியின்றித் திரிந்த எனக்கு ஒருவித சாந்தியை ஏற்படுத்திய கற்பாறையே! உன்மீதமர்ந்து பாடும் பாக்கியத்தை அளித்தாய்! மறு ஜென்மம் உண்டு என்பது நிச்சயமானால் நான் வீணாவிகாரில் பிறந்து மேகலாவை மணந்து வஜ்ரவீணையை மீட்டி நானும் மேகலாவும் இப்பாறையின்மீதமர்ந்து ஒன்றாக ராகம் பாடவேண்டும். இந்த வரம் ஒன்றே நான் யாசிப்பது. தெய்வம் உண்டென்பது உண்மையானால், சத்யம் ஜெயிப்பது தர்மவழியென்பது நடப்பில் ஏற்படுமானால் என் வேண்டுகோள் நிறைவேறும்."

குனிந்து வீணையை உற்று நோக்கினார். ஒரேஒரு பாட்டு வீணையுடன் சேர்ந்து பாடிவிட்டு பிறகு ஜலத்தில் குதித்துவிடலாம் என்ற எண்ணம் ஓட ஆரம்பித்தது.

"சே! என்ன மதியீனம்; சத்யத்தைக் காப்பவன் மனதில் தோன்றும் எண்ணமா இது? சபதம் என்ன ஆவது?" என்று கேட்டது அறிவு.

சிறிதளவு ஸன்லைட்
ஏராளமான துணிகளை வெளுக்கிறது
—காரணம், அதற்கு நுரை அதிகம்
SUNLIGHT SOAP
Rs. 10,000 Reward!
கண்ணாரக் காண்பதே மெய் : சிவகாமி வெளுத்த சட்டையின் வெண்மை நடராஜனின் முகத்தில் மகிழ்ச்சியாகப் பிரதிபலிக்கிறது. ஆடைகள், விரிப்புகள், துண்டுகள் அடங்கிய அடுக்கைப் பாருங்கள்—வெண்மையாகப் பளிச்சிடும் இவ்வளவுக்கும் அவள் உபயோகித்த ஸன்லைட் கொஞ்சம்தான்!
ஸன்லைட் சோப்பின் செழிப்பான நுரை அடித்துத் துவைக்காமலேயே அழுக்கை அறவே அகற்றி, துப்புரவாக வெளுத்துவிடுகிறது. இன்றே உபயோகித்துப் பார்த்துத் திருப்தி பெறுங்கள்!
பளிச்சென்றும், வெண்மையாகவும் சலவை செய்வது ஸன்லைட் சோப்
S.267-X52 TM
இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

உடம்பை ஒருதடவை சிலிர்த்துவிட்டுக்கொண்டு இடுப்பிலிருந்த பெல்ட்டைக் கழட்டி, வீணையைத் தன் மார்புடன் சேர்த்து அணைத்தபடி கட்டினர். கண்களை மூடி கலாதேவியைத்தியானம் செய்த வண்ணம் குதிக்கத்தயாரானர். அந்த நிமிஷம்

“நில்லுங்கள் சித்தப்பா! கலாதேவியின் மீது ஆணையிட்டுத் தடுக்கிறேன்” என்று கத்தியவண்ணம் ஓடிவந்த கலாவின் சொற்கள் அவரைக்கட்டுப்படுத்தி நிறுத்திவிட்டது. திரும்பிப்பார்த்தார். கலா, லெக்ஷ்மி, பாமினி மூவருமே குதிகால் தலையில் படும்படி ஓடி வந்துகொண்டிருந்தனர்.

“சித்தப்பா! நீங்களா இப்படிச்செய்யத் துணிந்தீர்கள்?” என்று கேட்டவண்ணம் அவர் காலடியில் உட்கார்ந்து விட்டாள் கலா. “என்னை விட்டுவிடுகலா! இனி என்னுல் தாங்கவேமுடியாது” என்ருர்.

“உங்களால் தாங்கமுடியாத விஷயம் உலகில் இருக்கவே முடியாதே! எது தாங்க முடியாத விஷயம்.

சித்தப்பா! எனக்கு நம்பிக்கை யிருக்கிறது. வஜ்ர வீணை வரவேற்பு வைபவத்தில் வாசிக்கப்படும். சசி பழைய நிலைக்கு வந்து விடுவார். நான் ஒருவருக்கும் என் மனமறிந்து ஒரு கெடுதலும் செய்ததில்லை. மனதினல் நினைத்ததுமில்லை என்று என் மனச்சாட்சி கூறுகிறது. நீ குற்றமற்றவள் பூர்வஜன்ம பாபம் சற்று துக்கத்தை அனுபவிக்கிருய் நிச்சயம் உன் குறை நீங்குமென்று. உள்மனம் கூறுகின்றது. என் குறை தீரவில்லையென்ருல் உலகில், தூய காதலுக்கு மதிப்பேது, சத்தியத்திற்குப் பொருளேது? எனக்கு நிச்சயம் நல்வாழ்வு உண்டு. வாருங்கள் வீட்டிற்கு.”

“கலா! நடந்து போன விஷயமெல்லாவற்றையும் சஹித்துக் கொள்ளும் சக்தி எனக்கு இருந்தது. ஆனல், உன் நிலைமையைக் காண என் நெஞ்சம் வெடித்து விடும் போலிருக்கிறது. என்னை விட்டு விடு!” என்று குழந்தை போல் கதறியழுது விட்டார்.

அதைக் காண சகியாத மூன்று பெண்களும் அழுது விட்டார்கள். சட்டெனத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, அவரை நிமிர்ந்து பார்த்து, “சித்தப்பா! உங்களுக்குத் தெரியாத விஷயமா? என் விதி அப்படிக் கழிக்க வேண்டு மென்றிருந்தால் அதை தைரியத்துடன் ஏற்று நடக்க வேண்டுவதுதானே வழி. நமக்குத் துணை சங்கீதம். சங்கீதத்தில் சகலத்தையும் மறந்து வாழ முடியும்.

இதே பாறையில் அம்மாவும் நீங்களும் சேர்ந்து பாடும் நாள் கண்டிப்பாக வரும். வாருங்கள், உங்கள் காலை விடமாட்டேன்”

“மாமா! ஒரே நிலைமையிலிருந்த சசியினிடம் இப்பொழுது சில மாறுதல்கள் தெரிகிறது. நிச்சயம் அவர் குணமடைவார். மாமா! வாக்குறுதியைக் காப்பாற்ருமல் நீங்கள் போவது நியாயமா?” என்ருள் பாமினி.

சற்றுநேரம் ஸ்தம்பமாக வானவெளியைப் பார்த்தவாறு நின்றவர் “ஊம். நன்மையோ, தீமையோ இன்னும் அனுபவிக்க வேண்டியது பாக்கியிருக்கிறது. அடுத்த கணம் எனன நடக்குமென்று அறிந்து கொள்ள முடியாதபடி ஆட்டுவிக்கும் விதி, இப்பொழுது என்னை நிறுத்திவிட்டது. இன்னும் ஒரே ஒரு நிமிஷம் நீங்கள் பின் தங்கி வந்திருந்தால் என்னைக் கண்டிருக்க முடியாது.”

“வழக்கம்போல மூவரும் படுக்கப்போகுமுன் கலாதேவியை வணங்க வந்தோம். ஐயோ! சித்தப்பா அவசரப்பட்டு விட்டீர்களே, என்று அலறிய வண்ணம் ஓடினுள் கலா. நாங்கள் விஷயம் புரியாமல் பின் தொடர்ந்தோம். இங்கு கண்ட காக்ஷி! கலா ஞானதிருஷ்டி படைத்தவளோ?” என்ருள் லெக்ஷ்மி.

“சரி, குழந்தைகளே வாருங்கள் போகலாம்” என்ருர் அதுல்யம்.

“எல்லாம் இன்பமயம்” என்று ஷண்முகப் பிரியா ராகத்தில் காற்றில் மிதந்து வந்த கீதம், அதுவரை கண்களை மூடி கடந்தகால சம்பவங்களை கற்பனையில் உருவாக்கிக் கொண்டிருந்த அதுல்யத்தை சுய உணர்வுக்குக் கொண்டு வந்தது.

நாளடைவில் சசி சுயஉணர்வு பெற்ருன். கலா சசியின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சந்தோஷம், துக்கம் இரண்டும் கலந்த ஓர் நிலைமையில் கண்ணீர் வடிய, “சசி! என்னை மன்னித்து விடுங்கள். இனி ஒருபொழுதும் உங்களிடம் லெக்ஷ்மியைப் பற்றி எச்சரிக்கவே மாட்டேன்” என்ருள்.

“நீதான் என்னை மன்னிக்க வேண்டும் கலா! நான் அவசரப்பட்டு விட்டேன். ரயிலில் உட்கார்ந்து ஆர அமரச் சிந்தனை

செய்த பொழுதுதான் மனம் தெளிந்தது. மறு ரயிலில் திரும்புவதென முடிவு செய்தேன். தூங்கும் பொழுது கனவு கண்டேன். படாரென மண்டையிலடிப்பட்டது. பிறகு'' என்று நிறுத்தினன். அந்த சமயம் அவ்விடம் வந்த டாக்டர், அதுல்யத்தை அவன் முன்பாகப் போகச் சொன்னர். அவரைக் கண்டதும்,

கலாவைவிட்டுவிட்டு ''சித்தப்பா! என்னை மன்னித்து விடுங்கள்'' என்று அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தான். வாரியணைத்துக் கொண்டு ''சசி! என் வயிற்றில் பால் வார்த்தாயடா'' என்ருர்.

அடுத்து வந்த மேகலாவைப் பார்த்ததும் ''அத்தை! என்னை மன்னித்து விடுங்கள்'' என்று அவளையும் வணங்கினன்.

''சசி! சசி! சசி! என்னல் பேசவே முடியவில்லை. நீ பல்லாண்டுகாலம் வாழ வேண்டும்'' என்ருள் மேகலா.

ஓரமாக நின்ற லெக்ஷ்மியின் அருகில் சென்று ''லெக்ஷ்மி! ஏன் கண்ணீர் விடுகிருய்?'' அவள் மோவாயைப் பிடித்து நிமிர்த்தியபடி கேட்டான். கண்களின் சந்திப்பு கிடைத்த பின்பு வேறு என்ன வேண்டும் பெண்களுக்கு?

கலாவின் பக்கத்தில் வந்து நின்ற பாமினியைக் கண்டதும் ''பாமினி! நீங்கள் இங்கே எப்படி ....''

டாக்டரைப் பார்த்தாள் பாமினி.

''மிஸ்டர் சசி! இப்பொழுது உங்கள் குடும்பம் ஆனந்தத்தின் எல்லையை எட்டி நிற்பதற்கு பாதை வகுத்த பாக்யசாலி பாமினிதான்.

நீங்கள் மரணப் படுக்கையிலிருக்கும் பொழுது இரவு பகல் பாராது உங்களுக்குப் பணிவிடை செய்து உயிரை மீட்டவள் பாமினி. தியாக சொரூபி என்ருல் மிகையாகாது'' என்ருர் டாக்டர்.

''அந்நன்றியை ஒருநாளும் மறக்கமாட்டேன்; நான் அவர்களுக்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டவன். உங்களுக்கு நன்றி தெரிவிக்க சந்தர்ப்பமே கிடைக்கவில்லை.'' என்ருன்,

''கலாவும் நீங்களும் சேர்ந்து நின்ற காட்சி ஒன்றே எனக்கு ஆத்ம திருப்தி. வஜ்ர வீணை வாசிக்கப்பட்டு விட்டால் என் கடமை பூர்த்தியாகிவிடும்'' அந்த சமயம்

அங்குவந்த அரவிந்தனை ஆவி சேர்த்தணைத்துக்கொண்டான்.

வீணைவிகார் ஆனந்தவாரிதியில் முழுகிக் குளித்துக்கொண்டிருந்தது.

கலாவும், சசியும் அவர்களுக்கெனக் கட்டப்பட்ட ஹாலில் எந்தக்கட்டிலின்மீது சசி! சசி! என புழுவைப்போல் துடித்து அழுது கதறினாளோ அந்தக் கட்டிலின் மீது உட்கார்ந்துகொண்டு காதல் கதை பேசும்பொழுது "அத்தான்; நான் ஒரு விஷயம் சொல்லப்போகிறேன். வரவேற்பு வைபவம், வஜ்ரவீணை வாசிப்பிற்குள் பாமினிக்கு ஒரு ஏற்பாடு......"

"அதாவது அவர்களுக்குக் கல்யாணம் நடக்கவேண்டும் என்பதுதானே?"

"ஆமாம். நாங்கள் மூவரும் சம வயதினர்கள். எங்களைப்போலவே அவளுக்கும் வாழ்க்கை அமையவேண்டும்."

"இன்று நாம் சந்தோஷமாக இருப்பது அவள் தந்த பிச்சை; அவள் உங்களை விரும்பினால் அது பற்றி நான் துளிக்கூட வருத்தப்படமாட்டேன். நீங்கள் இப்பொழுதே அவள் அறைக்குச்சென்று அவள் மனதை அறிந்து வாருங்கள். அவள் மனம் நொந்தால் நாம் மகிழ்ந்து வாழ முடியாது."

சசி, ஒரு புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்த பாமினியை ஜன்னலின்வழியே பார்த்துவிட்டு, கதவின்மீது கைவைத்தான். கதவு திறந்து கொண்டது. "ஓ நீங்களா வாருங்கள்" என்று சொல்லியவாறு எழுந்து நின்றுகொண்டு "உட்காருங்கள்" என்றாள். மேஜையருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டவன் "நீயும் உட்கார்" என்றான்.

அவள் கட்டிலில் உட்கார்ந்து கொண்டதும் "என்னை இந்த வேளையில் தேடி வந்ததைப்பார்த்தால் விஷயம்..... !"

"முக்கியமானதுதான்: முதலில் நான் கேட்பதற்கு உன் மனதில் உள்ளதை ஒளிக்காமல் என்னிடம் சொல்லுவதாக உறுதியளிக்கவேண்டும்

உன் எதிர்காலத்தைப் பற்றி என்ன திட்டம் வகுத்திருக்கிறாய்?"

"என் நிகழ்காலமும் எதிர்காலமும் ஒன்றுபோலத்தான்."

"நீ இப்படியே இருக்கமுடியாது. அப்படிச்செய்ய நான் சம்மதிக்கமாட்டேன்."

"நான் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?"

"வஜ்ரவீணை வாசித்து, அத்தையும் சித்தப்பாவும் சேர்ந்துபாடும் நாளில் உன்னை மணக்கோலத்தில் காணவே நாங்கள் யாவரும், ஆசைப்படுகிறோம்."

"மணக்கோலமா?" என நீண்ட மூச்சு விட்டாள்.

"பாமினி! இதோ உன் முன்னால் உட்கார்ந்திருக்கும் சசியின் உயிர் உன்னால் காப்பாற்றப்பட்டது"

"அதனால்?"

"என் உயிர் உடல் இரண்டுமே உனக்குத்தான் சொந்தம். நீ மனப்பூர்வமாக விரும்பினால்? உன் தாயின் கடைசி விருப்பப்படி நானே உன்னை மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன். கலா முதலிய யாவருக்குமே இப்படிச்செய்வதில் மிக சந்தோஷம்"

"இருக்கலாம். உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டீர்கள். என் அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டாமா? சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு சமயம் உங்களை அடையவேண்டும் என்ற ஆவல் அளவு மீறி இருந்தது உண்மை. தங்களை இன்னாரென்றறியாமலேயே தங்களுக்குப் பணிவிடை செய்வதில் இன்பம் கண்டேன். என் தாய் விபரம் சொல்லிப் "பழிக்குப் பழி" என்ற பொழுது துடிதுடித்துப் போனேன். என் மனம் தங்களை விரும்பினும் பிறர் பொருளை இச்சிப்பதுதவறு, என்று மனதை அடக்கப்பழகினேன்.

'உன்மீது எனக்குள்ள அன்பு அபரிதமானது. மனைவியாக ஏற்கமுடியாத பரிசுத்த அன்பு. எனக்கு மனைவியிருக்கிறாள்' என்ற வாக்கியம் என் மயக்கத்தை அடியுடன் அகற்றிவிட்டது.

அந்த நிமிஷமுதல் நான் உங்களை என் அன்பு சகோதரனாகவே உள்ளக்கோவிலில் பிரதிஷ்டை செய்து விட்டேன். அது இனி மாறாது. அண்ணா! என்னை மன்னித்து விடுங்கள்" என்று சட்டென எழுந்து அவன் பாதத்தில் தலைவைத்து வணங்கினாள். சட்டென உள்ளே வந்த கலா, பாமினியின் பக்கத்தில் உட்கார்ந்து அவளை அணைத்துக்கொண்டாள்.

நவநவமாய்
வண்ணப்பூப்
பூத்திருக்காம்

அவளழகே சிந்தனையாய்க் காத்திருக்காம்!

சோலையிலும், திருக் கோயிலிலும், கூடத்திலும், கலை மாடத்திலும் உங்கள் அழகின் சாயல் பட்ட இடத்திலெல்லாம் பசுமையோடி, அழகியென்ற உறுதியை உங்கள் உள்ளத்திற்கு உரைத்ததுண்டு. அத்தகைய உறுதியினைப் பெற்றவரே வானெங்கும் அழகுச் செல்வம் பெற்றவராவார்! பூர்த்திபெற்ற அழகியாக விளங்குவதற்கு நேர்த்தியான தேக காந்தி எவ்வளவு அவசியமானது என்ற உண்மையை நன்குணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய சாவித்திரி கூறுகிறார்: ''பற்பல சினிமா நட்சத்திரங்களைப் போலவே எனக்கும் மணங்கமழும் லக்ஸ் மீது பூரண நம்பிக்கை. வெண்ணெய் திரண்டது போன்ற மென்மை குலவும் அதன் நுரை எனது மேனியை மழமழப்பு மிக்க சோபையுடன் மிளிரச் செய்கிறது!'' உங்கள் அழகும் உன்னத அழகாக மிளிர... உபயோகியுங்கள் லக்ஸ்!

ஏவி.எம். படமாகிய 'களத்தூர் கண்ணம்மா'வில் அழகு நட்சத்திரம் சாவித்திரி

சினிமா
நட்சத்திரங்களின்
தூய, மென்மை குலவும்
அழகுசாதன சோப்

LUX
TOILET SOAP

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

LTS. 49-X52 TM

"பாமினி! அண்ணன் தங்கையை மணக் கோலத்தில் காண விரும்புகிறுன். மாலையிடும் பாக்யவான் யாரென்ருகிலும் சொல்லு. கலா, லெக்ஷ்மியைப் போலவேதான் நீயும் இருக்க வேண்டு மென்பது எங்கள் யாவருடைய விருப்பமும். தனிமரமாக நிற்க முடியது." என்ருன் சசி.

"அண்ணன் பார்த்து யாரைத் தேர்ந்தெடுத்தாலும், தங்கை தலை குனிந்து நிற்பாள்".

"அப்படியானல் அண்ணன் தேர்ந்தெடுக்கிருன் அரவிந்தனை" சரிதானே.

"அரவிந்தனு?" இவ்வளவிற்குப் பின் என்னை ஏற்க சம்மதிப்பாரா?"

"எவ்வளவிற்குப்பின் பாமினி! என் உயிர் நண்பனைக் காப்பாற்றினுயே அதற்குப் பிறகுமா?" என்று கேட்டவாறு அரவிந்தனும் அவனைத் தொடர்ந்து லெக்ஷ்மி, அதுல்யம் மேகலா மூவரும் உள்ளே வந்தார்கள். கட்டிலின் மீது பெண்கள் நால்வரும் அமர்ந்தார்கள். அதுல்யம் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். அரவிந்தனும் சசியும் மேஜை மீது சாய்ந்தவாறு நின்று கொண்டார்கள். பாமினி, அரவிந்தன் மணப் பேச்சு தொடங்கியதும், சசி, "சரி, இந்த விஷயத்தில் இதரர் தலையிடுவது சரியாகாது; அவர்களே பேசி ஒரு முடிவுக்கு வரட்டும்." என்று சொல்ல எல்லோரும் அகன்றனர். பாமினியை அணைத்து காதில் ரகசியம் கூறினுள் கலா.

அவர்கள் தலை மறைந்ததும், அரவிந்தன் "பாமினி! நான் உன்னை எப்படி நேசிக்கிறேனென்று சொல்ல பதமே கிடைக்கவில்லை. நான் உன்னைப் பூர்ணமாக நம்புகிறேன் என்று சொல்லுவது மிகையாகும். என்னை நீ நம்பமாட்டாயா? ஏற்றுக் கொள்ள மாட்டாயா" என்ருன் பாமினி! "அரவிந்தன்! என்னை மன்னித்துவிடுங்கள்" என்று சொல்லி அவனது மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"பாமினி! என் பாமினி!" அவன் கரங்கள் அவள் இடுப்பைச் சுற்றின.

அரவிந்தன், பாமினியின் கல்யாணம் பல ஆயிரம் செலவழித்து கோலாகலமாக வேதவிதிப்படி நடந்தது. வீணுவிகார், ஜனசமுத்திரத்தில் ஒலி, ஒளி அலைகளினுல் ஜோதியாகச் ஜொலித்தது. அரவிந்தன் பாமினி கல்யாணம், சசி கலா, கல்யாண வரவேற்பு; வஜ்ர வீணை வாசிக்கப்படும் என்று பத்திரிகை ஜில்லா ஜில்லாவாகப் பறந்தது. மூன்று பெண்களும் முத்தேவிமார்போல் அலங்கரித்துக் கொண்டு வருபவர்களை அகமும்முகமும் மலர அழைத்தார்கள். அரவிந்தனும் சசியும் மன்மதாகார ரூபமாக சுற்றிவந்து உபசரித்தார்கள்.

புஷ்பங்களினுலும், மின்சாரக்கலர் தீபங்களினுலும் விமானம்போல் அமைத்திருந்த மேடைமீது "வஜ்ரவீணை" ஒலிகளைப்பரப்ப, அதுல்யமும் மேகலாவும் பக்கம் பக்கமாக உட்கார்ந்து வீணை வாசித்துப்பாடிய காட்சியைப் பார்த்தகண்கள் பார்த்தபடியே இருந்தன.

ஹிந்தோள ராக தேவதை நர்த்தனமாடத்தொடங்கினுள். அதுல்யத்தின் சாரீரம் மேகலாவின் சாரீரத்துடன் ஒன்றி, வீணுநாதத்துடன் கலந்து, பக்ஷிஜாலங்கள் மயங்கிநிற்க, மலையருவி தாளகதியில் செல்ல, தூரத்தில் மரத்தின் மறைவில் நின்ற அரவிந்தன்ஜோடி, சசியின்ஜோடிகள் மனம்மகிழ மயிலினம்ஆட, குயிலினம்பாட, ஆவினம் அசைபோட வனமெங்கும் பரவி வான வெளியிலும் தனது நாதத்தினுல் வாரிஇறைத்தது வஜ்ரவீணை.

முற்றும். சுபம்.



விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

கடற்பாசியிலிருந்து ரத்தம்

விபத்திலோ, ரண சிகிச்சையிலோ, சோகை முதலிய நோய் காரணமாகவோ ரத்தத்தை இழப்பவர்களுக்கு ரத்தத்தின் ஒரு பகுதியான 'பிளாஸ்மா' என்னும் பொருளைச் செயற்கையில் உடலுக்குள் ஊட்டுகிறார்கள். ரத்தத்தின் திரவப்பகுதி பிளாஸ்மா என்பது. இதில் ஊட்டப் பொருள்களும், ரத்தத்தை உறையச் செய்யும் ரசாயனப் பொருள்களும் உள்ளன. ரத்தம் கிடைக்காத சமயங்களில் அவசரத்துக்குச் சிறிது சர்க்கரை கலந்த உப்புக் கரைசலைப் பயன்படுத்துகிறார்கள். இம்முறை இப்போது பெரிதும் வழக்கத்தில் உள்ளது. ஆனால், இதில் சில குறைகள் உள்ளன. உப்பு நீரைச் செலுத்துவதால் சில நோயாளிகளுக்குக் கல்லீரல் கோளாறு ஏற்படுகிறது தோலின் ரத்தக் குழல்களில் வெடிப்புத் தோன்றித் தொல்லை நேருகிறது. இதைவிடச் சிறந்த முறையொன்றை ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒருவகைக் கடற்பாசியிலிருந்து பிரித்தெடுக்கும் புரதப் பொருளை (Protein) நீரில் கலந்து ரத்தத்துக்குப் பதிலாக உடலில் செலுத்துகிறார்கள். பாசியிலிருந்து கிடைக்கும் இப்பொருளிலும் ரத்த மூலக்கூற்றைப் போன்ற ரசாயன அமைப்புள்ள நீண்ட சங்கிலி போன்ற புரத மூலக் கூறுகள் இருக்கின்றன. அதனால், இது ரத்தத்துக்குப் பதில் பயன்படவல்லது. இது ரத்தக் குழல்களிலிருந்து வெளியேறாமல் தங்கி, ரத்த அழுத்தம் குறையாது உடலைப் பாதுகாக்கின்றது. வயிற்று ரண சிகிச்சை செய்த பல நோயாளிகளுக்கு இம்முறையில் ரத்தச் சேதத்தின் அபாயத்தை வெற்றிகரமாகத் தடுத்திருக்கிறார்கள். உடலின் இயக்கத்தை இப்பொருள் எவ்வகையிலும் பாதிக்காது என்று சோதனைகள் தெளிவாக்குகின்றன. இப்பொருள் உடலில் சிதைந்து விபரீத விளைவுகளுக்குக் காரணமாவதில்லை. ரத்தம் உறைவதையும் பாதிப்பதில்லை. இதை எளிதில் தயாரித்துச் சேமித்து வைக்கலாம். வருங்காலத்தில் இது ஆஸ்பத்திரிகளில் பெரிதும் பயன்படலாம்.

பாறைகளின் வயது

பாறைகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய புதைபொருள்கள், பழங்கால உயிர்களின் சடலங்கள் ஆகியவற்றின் வயதை மதிப்பிடுவதற்கு அண்மையில் மிகத்திருத்தமான முறைகள் வழக்கத்திற்கு வந்திருக்கின்றன. அப்பொருள்களில் உள்ள அணுசக்திப் பொருள்கள் வெளிவிடும் கதிர்களின் வலிமை முதலியவற்றை ஆராய்ந்து அது எவ்வளவு காலமாகப் புவியில் கிடக்கிறது என்று அளவிடுகிறார்கள். ஆனால், சில சமயங்களில் இம்முறை பயன்பட முடியாது. உயிர்ப் பொருள்களில் உள்ள கரியில் ஒருவகை அணுசக்திக் கதிர்களை வெளிவிடும் தன்மையுள்ளது. இவ்வகைக் கரிதான் பொருளின் வயதைக் காட்டும் ஜாதகம் போல் அமைகிறது. இந்த 'ஜாதக' முறையின் உதவியால் 40,000 ஆண்டுகளுக்கு முன் இருந்த பொருள்களின் வயதை மதிப்பிடலாம். ஆனால், குகைகளில் வாழ்ந்த

பழங்கால மனிதனின் எலும்போ, அவன் பயன் படுத்திய மரச்சாமான்களோ பல சமயங்களில் கிடைப்பதில்லை. ஏனெனில், இத்தகைய பொருள்கள் எளிதில் எரிந்து சாம்பலாகும் தன்மை வாய்ந்தவை. மேலும், மண்ணிலே புதைந்து அழிந்து போகக் கூடியவை. ஆகையால், அணு சக்திக் கரியைக் கொண்டு மட்டும் பழங் காலத்தில் வாழ்ந்த குடிகள், விலங்குகள் ஆகியவற்றின் வயதை முடிவு செய்ய முடிவதில்லை. இப்போது இதற்கு வேறு முறையொன்றை வகுத்திருக்கிறார்கள். இம்முறையினால் சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உயிரினங்கள், தோன்றிய பாறைகள் ஆகியவற்றின் வயதை மதிப்பிடலாம். பழங்கால மக்கள் விட்டுச் சென்ற கல் ஆயுதங்கள், மண் பாண்டங்கள் முதலியவற்றை ஆராய்ந்து அவை பயன்பட்ட காலத்தைக் கணக்கிடலாம். பொருளைச் சுமார் 350 பாகை சென்டிகிரேடு வரை சூடேற்றினால் அவை ஒளிரும் நிலையை நெருங்குகின்றன. இப்போது பொருளில் தனிப்பட்டதொரு விளைவு தோன்றுகின்றது. அதில் உள்ள மின்னணுக்கள் வெளிவந்து பொருளின் மூலக்கூறுகளைத் தாக்கி அவை ஒளிருமாறு செய்கின்றன. இவ்வொளியின் தன்மையையும், வலிமையையும் ஆராய்ந்து பொருளின் வயதைக் கணக்கிட முடிகிறது. புதைபொருளியல் (Archaelogy) ஆராய்ச்சியில் இப்புதுமுறை பெரிதும் பயன்படும். தரைநூலோருக்கும் இது பயனுள்ள சாதனமாக விளங்கும்.

அண்டத்தின் வயது

நமது புவியும், மற்றக்கோள்களும், சூரியனும் கோடிக்கணக்கான நட்சத்திரங்களும் உள்ள அண்டத்தின் ஜாதகத்தைக்கணிப்பதில் பல நூற்றாண்டுகளாக வான நூலோர் அக்கறை காட்டிவந்திருக்கிறார்கள். நமது ஜாதகத்தைச் சரியாகக் கணித்துவிடலாம். ஆனால் ஜாதகபலன் சொல்வதில் கருத்து வேற்றுமை தோன்றுகிறதல்லவா? வான நூலிலும் அண்டத்தின் பிறப்பு முதலியவை பற்றிய நிலையும் இதேதான். அதிலும் அண்டத்தின் தோற்றம் எப்போது ஏற்பட்டது என்பது பற்றிய கருத்துக்கள் பலமுறை மாறி யிருக்கின்றன. சில நூற்றாண்டுகள் வரை அண்டம் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியது என்று நம்பிவந்தார்கள். வான நூல், தரை நூல், பௌதிகம் ஆகிய துறைகளில் நிகழ்ந்த முன்னேற்றத்தின் விளைவாக இக்கருத்து அறவே பிழையானது என்றும், அண்டத்தின் வயதை லட்சக்கணக்கான ஆண்டுகளில் தான் கணக்கிடவேண்டும் என்றும் தெளிவாகியது. நாம் பொதுவாகக் குறிப்பிடும் அண்டம் எனப்படுவது மாபெரும் நட்சத்திரத் தொகுதி. இரவு வானத்தில் வெள்ளிய கடல் மணல்போல் தெரியும் விரிவான நட்சத்திரக் கூட்டத்தை நாம் ஆகாச கங்கை என்றும், தவிட்டுக்கூட்டம் என்றும் கூறுகிறோம். இது நமது அண்டத்தின் ஒரு பகுதி. நட்சத்திரங்கள், அவற்றின் தொகுதிகள் முதலியவற்றின் வயதைப் பௌதிக முறைகளால் கணக்கிட்டு அண்டத்தின் வயதை மதிப்பிடுகிறார்கள். உதாரணமாக ஒரு நட்சத்திரத்தில் ஹைடிரஜன் வாயு எவ்வளவு விகிதம் உள்ளது என்று திருத்தமாக அளவிடலாம். இவ்வாயுவின் அளவு குறைவானால் நட்சத்திரத்தின் வயதும் மிகுதி என்று அறியலாம். ஏனெனில், இவ்வாயு உருமாறி வேறு பொருளாக ஆவதால் நட்சத்திரத்திலிருந்து ஒளியும் வெப்பமும் தோன்றுகின்றன. ஆகையால் நட்சத்திரத்தின் 'எரிபொருள்' ஹைடிரஜன் எனலாம்.

ரயில் எஞ்சின் ஓர் இடத்திலிருந்து புறப்படும்போது அது கரியை நிரப்பிக் கொள்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அது ஓட ஓட அதிலுள்ள கரி குறையும். ஆகையால் எஞ்சியிருக்கும் கரியை அளவிட்டு எஞ்சின் எவ்வளவு தொலைவு ஓடியிருக்கிறது என்று கணக்கிடலாம். அதைப் போலவே நட்சத்திரம் எவ்வளவு காலமாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கணக்கிடலாம். நமது அண்டத்திலுள்ள மிகப் பழைய நட்சத்திரங்களின் வயதிலிருந்து அண்டத்தின் வயதை மதிப்பிடலாம்; இத்தகைய முறைகளால் கணக்கிட்டு அண்டம் சுமார் ஆயிரம் கோடி ஆண்டுகளாக இருக்கிறது என்று நம்பி வந்தார்கள். ஆனால், அண்மையில் நடந்த சில சோதனைகளிலிருந்து இது தவறோ என நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகாச கங்கையின் ஒரு பகுதியாகதுருவ நட்சத்திரத்தின் அருகாமையில் ஒரு நட்சத்திரக் கூட்டத்தை ஆராய்ந்தார்கள். அதில் பல நட்சத்திரங்கள் தமது 'எரிபொருள்' முழுவதையும் இழந்து 'சாம்பலாய்' இருக்கின்றன. வேறு பலவற்றுள் ஹைடிரஜன் 18 சதவிகிதம் உள்ளது. சூரியனின் வயது 500 கோடி ஆண்டு. அதில் 52% சத விகிதம் ஹைடிரஜன் உள்ளது. ஆகையால் மேற்கூறிய நட்சத்திரங்கள் குறைந்தது 2,400 கோடி ஆண்டுகளாக ஒளிர்ந்துகொண்டிருக்க வேண்டும், அதனால் அண்டத்தின் வயதும் 2,000 கோடி ஆண்டுகளாவது இருக்கவேண்டும் என்றாகிறது. இக்கருத்து சரியாயின் வானவியலில் வழங்கும் பல கருத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த ஆண்டைப்பற்றிய ஜோசியம்

வார பலனும், வருஷ பலனும் வெளியிடாத சில பத்திரிகைகளில் "காவேரி"யும் ஒன்று. இக்குறை இருக்கவேண்டாம் என்று இப்போது நான் வருஷ பலன் எழுதத் துணிந்திருக்கிறேன்! இந்த ஆண்டில் விஞ்ஞான முன்னேற்றத்தால் நிகழத்தக்க மாறுதல்களைப்பற்றி அமெரிக்க விஞ்ஞானி யொருவர் கூறியிருக்கும் ஜோஷ்யம் இதோ. இந்த ஆண்டில் பிளாஸ்டிக் வீடுகள் தோன்றும். சுவரில் திரையிட ஏற்ற டெலிவிஷன் கருவியும், நொடிப்பொழுதில் ரேடியோ அலைகளால் சமைக்கும் கருவிகளும் வழக்கத்துக்கு வரும். ரசாயனப் பொருள்களிலிருந்து பெற்ற உணவுகளையும், தக்காளி ரசத்தூளைப்போன்ற புதிய உலர்த்திய பண்டங்களையும் மக்கள் பயன் படுத்தத் தொடங்குவர். அழுக்கை அண்டவிடாது தூய்மையாக இருக்கும் புதுவகைப் பருத்தி ஆடைகள் தோன்றும். கண்ணாடியையும் எஃகையும் ஒட்டத்தக்க பசைகள் கட்டடத் தொழிலில் வழக்கத்துக்கு வந்து கட்டடங்களின் அமைப்பில் பெரும் புரட்சி விளைவிக்கும். புவியைச் சுற்றும் செயற்கைச் சந்திரனிலிருந்து டெலிவிஷன் அலைபரப்பாகி உலகில் எப்பகுதியிலும் காணும் வாய்ப்பு நேரலாம். தபாலில் சேர்க்கும் கடிதத்தை ஓர் எந்திரம், பிரித்து, அதை அப்படியே எழுத்தெழுத்தாக ரேடியோ அலைகளாக மாற்றி விலாசமிட்ட ஊருக்கு அனுப்பும். அங்குள்ள எந்திரம் பழைய கையெழுத்தைச் சற்றும் பிசகாமல் அச்சிட்டுக் கடிதத்தை மூடித் தபால்காரனது பைக்குள் போட்டுவிடும். கடல் நீரைக் குடி நீராக மாற்றும் முறை பழக்கத்துக்கு வரலாம். இதுபோல் பல அதிசயங்கள் இவ்வாண்டில் நமக்காகக் காத்திருக்கின்றன என்று அவர் கூறுகிறார்.

UMESH YOGA DARSHAN

உமேஷ் யோக தரிசனம்

(முதல் பாகம்)

ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராட்டி ஆகிய நான்கு மொழிகளில்

(ஸ்ரீ யோகிராஜ் உமேஷ்சந்திரஜி எழுதியது.)

ஜீரணக்கருவி, நரம்பு, சுவாசகோசம், மூத்திர உறுப்புகள், மற்றும் வேறு அவயவங்கள் ஆகியவற்றைச் சீராக இயங்கவைக்கும் வழிவகைகளைக் கூறும் யோக சாஸ்திரத்தின் உண்மையைப் பற்றிய அருமையான விளக்கம். யோகம், இயற்கை வைத்தியம், ஜீவாணுக்களின் இயல்பான வல்லமை, மனத்தத்துவச் சிகிச்சை முதலியவற்றின் வாயிலாகப் பல வேறு நோய்களை முற்றும் குணப்படுத்தமுடியும் என்பதை, 108 அசல் யோகாசனப் படங்கள் நிரம்பிய இந்த நூல் நன்கு விளக்குகிறது. ஒவ்வொரு வீட்டிலும் ஆஸ்பத்திரியிலும் வாசகசாலையிலும் கட்டாயம் இருக்கவேண்டிய புத்தகம் இது.

விலை: ரூ. 15/-; தபாற் செலவு ரூ. 2/- தனி. வி. பி. பி. கிடையாது.

யோகாசன சித்திரப்படங்கள்

வழவழப்பான ஆர்ட் காகிதத்தில் கண்ணைக்கவரும் விதத்தில் பெரிதாகச் சித்தரிக்கப்பட்ட வரைபடமும் இங்கே கிடைக்கும். இந்த யோகாசனங்களை உங்கள் வீட்டிலேயே எளிதாகச் செய்யலாம். அவை உங்கள் உடலுக்கு வலிவும் வனப்பும் அளிக்கும். விலை ரூ. 3/-. தபால் செலவு உள்பட மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்.

ராம்தீர்த் பிராமி தைலம்

ஸ்பெஷல் நெ. 1 ரிஜிஸ்டர்டு

விலை: பெரிய புட்டி ரூ. 4/-; சிறிய புட்டி ரூ. 2/-.

எங்கும் கிடைக்கும்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

தாதர், செண்ட்ரல் ரயில்வே, பம்பாய்-14, போன்: 62899.

ராம்தீர்த் பிராமி ஆயில் டிப்போ, 25, நைனியப்ப நாய்க்கன் தெரு பார்க்டவுன், சென்னை-3.

இன்பமே இங்கே வா!

தொடர் கதை

தி. சேஷாத்திரி...

2. உடற்சேறும் கலைத்தாமரையும்

செங்கமலம் பாமாவிடம் கேட்டாள்; 'பாமா நீ என்னடி சொக்குப்பொடி போட்டாய் அர்ஜுனனுக்கு .....!'

அவள் சிரித்துக்கொண்டே பின்னாலிருந்து மிகவும் மெதுவான குரலில் கேட்டாள். வெடுக்கென்று திரும்பிப்பார்த்தாள் பாமா. செங்கமலம் கேள்வியின் பின்னால் ஆழத்தில் தொக்கிநின்ற அந்தப்பொருளை அவள் சிரிப்பின் ஒளி நன்றாகக் கண்ணுக்குப்படும்படி காட்டிக்கொண்டிருந்தது.

"என்னடி சொல்கிறாய் நீ ?"

"ஆமாமடி! பாமா? என்ன அக்கறையோடு விசாரித்தார் தெரியுமா?"

பேச்சு இனிமைக் கவர்ச்சி கொண்டதாய்ப்படவே நின்றுவிட்டாள் பாமா.

"போடி செங்கமலம்! நீ பரிகாசம் செய்; கேட்டுக்கொள்கிறேன். ஆனால், அவர் வயது, நம் வயது; அவர் நிலை, நம்முடைய நிலை இதை எல்லாம் நினைவில் வைத்துக்கொண்டு பேசு....!"

"அசடே! நீ ஏன் அவ்வளவு தூரத்துக்குப்போகிறாய். நான் நடந்ததைச் சொல்கிறேன். ராதையை வேண்டுமானால் கேட்டுப்பாரேன்!"

"ஆகா, ராதையை இனிமேல் கேட்பானேன். அவளே சொன்னாளே...!"

"என்ன சொன்னாள்?"

"சொல்லட்டுமா? நீ அவருடைய வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்தாயாம்?"

"அவள் மட்டும் அருகில் உட்காரவில்லையோ?"

"கேளேன், அவர் உன் முதுகைத் தடவிக் கொடுத்தாராம், தலைப்பின்னலை எடுத்துச் சரியாகப்போட்டாராம்!"

"அடி பழிகாரி! சரிதான், அவளே இப்படி அர்த்தம் கற்பித்தால் பிறகு கேட்க வேண்டாம்...!"

அவள் உள்ளபடி கவலைப்படுகிறாள் என்று தெரிந்தவுடன் பாமா மனது வருந்திற்று "அசடே! பார்த்தாயா? இது பொறுக்கவில்லையே உனக்கு...."

"இல்லை பாமா, நீயே சொல்— நம் இரண்டு பேருக்குள் பேசிக்கொள்கிருப் போலேயா இருக்கும்....?"

"அல்லடி செங்கி! நீ அந்தப்பயம் பயப் படவேண்டாம். ராதை வெளியில் சொல்ல மாட்டாள். அவளும், அவரைப்பற்றியும் என்னைப்பற்றியும் சொல்லவந்தவள் தான். நான்தான் வாயைப்பிடுங்கி வரவழைத் தேன்... அதுசரி, நீ சொல்; அவர் என்ன சொன்னர்?"

செங்கமலத்தின் உள்ளம் கலக்கத்தையும் அச்சத்தையும் மறந்தது. மீண்டும் உல் லாச உணர்ச்சி ஒன்றை அடைந்தது. பழைய ஸ்தாயியில் சென்று பேசினுள்.

"உன்னிடம் தனி அன்புதான் அவ ருக்கு; "பாமா ஏன் வரவில்லை?" என்று கேட்டார். அதுகூடப் பெரிதில்லை. நிகழ்ச்சி நிரல் எழுதிய இந்தக்கடிதத்தைக் கண்டவுடன் 'பாமா எழுத்தா?' என்று கேட்டார். நீயே சொல், அது எப்படித் தெரியும் அவருக்கு?"

ஒரு கணம் யோசித்தாள், பாமா. அவளுக்குத் தான் எழுதிய கடிதம் நினை வுக்கு வந்தது உடனே அவள் சொன் னுள்.

"போடி! நீங்களே பேச்சுப்பராக்கில் என் எழுத்து என்று சொல்லியிருப்பீர்கள், பிறகு மறந்திருப்பீர்கள்!"

"ஆகா! பெரிய மந்திரவாதி. கண்டு பிடித்துவிட்டாள்! அசடே! நாங்கள் சொல்லவில்லையடி ஒன்றும்....!"

"பிறகு நீயே சொல்லேண்டி! எப்படித் தெரிந்ததாம்?"

"நான் சொல்லட்டுமா?"

ஒரு கணம் பாமா திடுக்கிட்டாள். ஒரு கால் அவரே சொல்லியிருப்பாரோ?

இருந்தாலும் துணிவை வரவழைத்துக் கொண்டு சொன்னுள்.

"எங்கே சொல்லேன் பார்க்கலாம்,"

"கோபித்துக் கொள்ளாதே!"

"இல்லை சொல்!"

"அவருக்கு உன் நினைவு அப்படி இடையருததாக ஆகிவிட்டது!" கோபித் துக் கொள்வாள் பாமா என்றுதான் நினைத்தாள் செங்கமலம். ஆனல், அவள் கோபித்துக் கொள்ளவில்லை. அது மட்டுமா? பாம்பிருக்கும் என்று திறந்தால் மணம் கொண்டு மலர்மாலை வெளி யேறிற்று. முள் குத்தும் என்று பயந்த இடத்தில் பட்டு உணர்ச்சி இதயத்தைக் கிசு கிசு மூட்டிற்று.

அவள் தணிவான குரலில் கேட்டாள்;

"ஏன் பொருமையாயிருக்கிறதா?"

செங்கமலம் ஒரு கணம் வாயடைத்து விட்டாள். பிறகு பதில் சொல்ல முயன்ற நேரம் யாரோ கூப்பிடவே கூட்டம் நடக் கும் மேடைக்குச் சென்றுவிட்டாள். பாமா வும் அரங்கத்தின் பின்புறமுள்ள அறைக் குச்சென்று வீணையின் நரம்புகளைத் தட விக்கொடுத்து, முறுக்கிவிட்டுத், தட்டிப் பார்த்து அதைவேண்டிக்கொள்ளத் தொடங்கினுள். வீணை, முதல் நிகழ்ச்சி யாக வைத்திருந்தார்கள்.

மேடையில் சென்றடைந்தாள் பாமா. எதிரே பார்த்தாள். ஹால் கொள்ளாத கூட்டம். அவளுக்கு ஒரு அச்சம்— ஏன் இரண்டு அச்சங்கள். ஒன்று அர்ஜுன னைப் பார்க்கவும், அவர் பேச்சைக்கேட்க வும் இப்படி நெரிந்து வந்திருந்த கூட்டம், தன் பாட்டின் இடைப்பாடைப் பொறுத் துக்கொள்ளுமா? இரண்டாவது : முதன் முதலாக மேடையில் ஏறித் தான் எழுப்பிப் பரவச் செய்யப்போகும் ஒலிக்கணங்கள் சங்கீத உருப்பெற்று கேட்பவர் உள் ளத்தை ஒரு கற்பனைமாயம் செறியும் கனவு உலகத்துக்கு அழைத்துச்செல்ல வல் லனவாக இருக்குமா?

எல்லாரையும் பார்த்த அவள் பார்வை மாலை அர்ஜுனன் கழுத்தில்தான் விழுந் தது. அவள் மனம் அவர் தோற்றத்தில் லயித்தது. அர்ஜுனன் தோற்றத்தைக் கண்டவர்கள் அவர் உடல் தோற்றத்தை மட்டும் காண்கிறதில்லை. அவர் கதை களில் எல்லாம் இழையோடும் இனிய அன்புருவத்தைப் பார்த்தார்கள். அதுவும் பாமாவோ அமர இளமைகொண்ட அழி யாக் காதலின் சங்கீதத் திரு உருவையே கண்டாள். ரோஜா இதழையும், சங்கீதத் தின் ராக உயிர்ப்பையும், அமுதத்தின் இனிமையையும், நிலவின் குளுமையை யும், அழகின் ஒளியையும் கலந்து குழம் பாக்கி மனித வார்ப்பில் ஊற்றி ஆற வைத்து எடுத்த கற்பனை உருவைத்தான் அவள் கண்டாள். அவளுக்கு அவர் புருவங்கள் ஊக்கத்தையும், பார்வை துணி

வையும், மீசைகள் அரணையும், மூச்சுக் காற்று உயிர்ப்பையும் தந்து கொண்டிருப்பன போன்று ஒரு பிரமை ஏற்பட்டு, அதுவும் அழியாமல் அவள் மூச்சுக்காற்றுடன் ஓடிக்கொண்டும் இழைவதென இருந்தது. அவள் துணிவாக நாத தேவதையை அழைத்தாள்; பாதம் வருடி அவளுடன் உறவாட ஆரம்பித்தாள்.

"காக்கவா என் முருகா" என்று பாடினுள், "சொல்லடி தோழி என் நிலையை!" என்று பாடினுள். எல்லாவற்றிலும் அவள் கொண்ட கருத்து ஒன்று தான். அவை குறிப்பிட்டதெல்லாம் அர்ஜுனனின் அன்புதான். அவள் பாட்டில் ஏக்கம் இருந்தது. நாதத்தில் அன்பின் மென்மை பேசிற்று. உள்ளமே நாதமாக மாறும்போது சங்கீதம் வலுக்கொண்டு எழுவதற்குக் கேட்பானேன்? ஐந்து நிமிடம் கேட்பார்களோ என்ற அச்சத்தை ஊட்டின. அதே பெண்களுக்கிடையே அவள் அன்று ஒருமணி நேரம் கச்சேரி செய்தாள். வந்திருந்தவர்களும் கட்டடமும் இணைந்து விட்டார்களோ என்று எண்ணும்படி அவர்கள் லயித்து விட்டார்கள். துரைசாமி கூட அந்த ஒருமணி நேரமும் ஏதோ ஒரு புனித உலகில் நடமாடினர். பாடியவள் உடலழகை மறந்தார். குரலினிமையை மறந்தார். இந்த நாத உலகத்தின் எந்தப் பகுதியும் தட்டாத உயரத்தில் அவர் பறந்தார்.

பிறகு நடவடிக்கைகள் தொடங்கியபோது அவர் பேசுவதை விடாமல் கேட்டாள்பாமா.

"அந்தச் சங்கீதத்துக்குப் பிறகு என் பேச்சா?" என்று அவர் உளமாரச் சொன்ன போது எல்லோருமே கைதட்டி வரவேற்றூர்கள். அன்று அவர் சங்கீதத்தைப் பற்றியே பேசினர். அந்தப் பேச்சும் பாமா மனதில் ஒரு புது வெளிச்சத்தை நிலை நாட்டிற்று. இனம்புரியாத ஒரு துடிப்பைக் கொண்டு அவளைத் துளைத்துக்கொண்டிருந்த அவள் உணர்ச்சிகளுக்கு ஒரு தெளிவையும் அமைதியையும் தந்தன. அவர் சொற்கள், தெரியாமலா 'சங்கீதம் இல்லாதவன் கொலைகாரன்! என்றான் ஷேக்ஸ்பியர்'. அதற்குப் பொருள் என்ன? சங்கீதக் கலை கொலைகாரனையும் நல்லவனுக்கிவிடும் என்ற கருத்தைத் தானே அழுத்தமாகத் தெரிவித்திருக்கிறான் அந்த அமர கவிஞன்.

உள்ளபடி துரைசாமி நினைத்தார்—இந்தக் கலைக்கு இருப்பிடத்தை சாதாரண மனிதப் பிண்டமாக எண்ணி நடந்துகொள்ள முடியுமா? இந்தக் கலைக் கோயிலை சாதாரண மான உடலமைப்பாக எண்ணி நாம் அவமதிப்போமா? நமக்கு மனம் வருமா?

இப்படி எல்லாம் அவர் பேசும்போது உண்மையிலேயே அங்கு குழுமியிருந்த எல்லோரும் ஒரு புனித இன்பத்தை அனுபவித்தனர்.

செங்கமலம் வந்தனம் சொல்ல எழுந்த போது எல்லோரும் கைதட்டித் தம் பாராட்டுதலைத் தெரிவித்தபிறகு அவள் தன் கடமையைச் செய்யமுடிந்தது.

எல்லோரும் எழுந்து கலைய ஆரம்பித்தனர்

தனித் தனியாக நின்று ஒவ்வொருவரும் துரைசாமியையும், பாமாவையும் பாராட்டினர். அநேக பெண்கள் போகவே மனமில்லாமல் இருவரையும் சூழ்ந்துகொண்டனர். ஒருவாறு கூட்டம் கலைந்து இடம் கிடைத்த போது துரைசாமிக்கு ஒருபுறத்தில் பாமா, மறுபுறத்தில் செங்கமலமும் நின்றுகொண்டிருந்தனர். மூவருடைய ஆறு கண்களும் உணர்ச்சிகளின் உயர்ந்த அலை மோதும் கடல்களாக இருந்தன.

செங்கமலம் கைகூப்பினுள். நாத்தழுதழுக்க 'வந்தனம்' என்றாள்.

'பாராட்டு' என்ற அவர் அவள் கூப்பிய கைகளைப் பிடித்தார். இப்பொழுது பாமா, விகற்பமாக எண்ணவில்லை. அந்த நேரம் அவ்வளவு புனிதமாக இருந்தது.

திரும்பி "பாமா!" என்றார்.

"வேண்டாம், ஒன்றும் சொல்லாதீர்கள் . !"

"இல்லை, ஆனாலும்...!"

"வேண்டாம், நீங்கள் எது சொன்னலும், கண்ணாடியில் விரிசல் விழுந்துவிடும். சுவர்க்கத்தில் நரகக் காற்று அடித்துவிடும். ஒளியுலகில் ஒரு விளக்கு அணைந்துவிடும்...!"

"சரி..." என்றவர் நகர்ந்தார். செங்கமலம் கல்லூரியினுடைய மோட்டார் நின்றிருந்த இடத்துக்குச் சென்றாள்.

எதிரே நின்ற மோட்டாரின் அருகிலிருந்த சொக்கலிங்கம், பர்வதவல்லி, மோகன், மோகன நால்வரும் வந்தனர். பாமா அவர்களைத் துரைசாமிக்கு அறிமுகப் படுத்தினுள். துரைசாமி வணக்கம் செலுத்தினர். அவர்கள் ஒரே குரலில் "நீங்கள் நம்முடைய வீட்டுக்கு ஒருமுறை வரவேண்டுமே!" என்றார்கள்.

"ஆகா, கண்டிப்பாய்! இந்தத் தேவதை இருக்கிற இடத்துக்கு வர எவ்வளவோ கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!"

அதற்குள் திரும்பிப் பார்த்தார். ரஜனியும் அமுதலிங்கமும் 'அப்பா' என்றனர்.

"நீங்கள் வந்தீர்களா?"

"ஆமாம், நீங்கள் அழைத்துவரச் சொன்னீர்கள் என்று அந்த மோட்டார் டிரைவர் தான் சொன்னார்."

துரைசாமி பாமாவைப் பார்த்தார்.

பாமா தலையைக் குனிந்துகொண்டாள்.

ஒன்றும் பேசாமல் துரைசாமி தன் குழந்தைகளுடன் கல்லூரி மோட்டாரில் ஏறிக் கொண்டார்.

போகும்போது பாமாவின் உடலழகைப் பாராட்டுவதா, புத்தித்திறமையைப் பாராட்டுவதா, கலை மேன்மைக்கு மனம் அழிவதா என்று பிரித்து அறிய முடியாமல் திண்டாடிப் போனார் அவர்.

"ஏண்டி! உங்கள் அம்மாவையும் அழைத்து வரக் கூடாதோ?"

ரஜனி முணுமுணுத்தாள்.

அமுதலிங்கம் சொன்னான். "அம்மாவும் வந்துவிட்டால் நீங்கள் திரும்பி வரும்போது சாப்பாடு...?"

"ஏன் ஓட்டலில் சாப்பிட்டு விட்டுப் போகிறது!"

மீண்டும் ரஜனி முணுமுணுத்தாள்.

"என்ன ரஜனி!"

"நீங்கள் கூப்பிட்டால் அம்மா வருவார்களா? தானாக வருவார்களா?"

"அதுவும் சரிதான். இனிமேல் எங்கே யாவது போனால் அவளையும் அழைத்துப் போக வேண்டும்!"

3. பெண்ணும் பெற்றவர்களும்

பாமா பரீட்சைக்குத் தயார் செய்து கொண்டிருந்தாள். அன்று தமிழ்ப் புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள். அவள் புத்தி எப்பொழுதுமே கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனம் கொண்டது. ஆங்கிலப் புத்தகமும் தயார் செய்திருக்கிறார்கள். தமிழ்ப் புத்தகமும் தயார்செய்திருக்கிறார்கள்; இரண்டுக்கும் எவ்வளவு மாறுபாடு!

ஆங்கில மொழியின் அருமை, அதன் நடையின் பெருமை தெளியப் புரியும்படி எழுதப்பட்ட கட்டுரைகளும், கதைகளும் ஆங்கிலப் புத்தகத்தில் அச்சிடப்பட்டிருந்தன. அவற்றைப் படிக்கும்போது அறிவு விசாலமானது மட்டுமல்லாது களங்கமற்ற கருத்துக்களும் பவுன் நகையில் நற்கற்கள் போல் பதிந்தன. ஆனால், தமிழ்ப்புத்தகத்திலோ?

இச் சொல் வடமொழியா, தென்மொழியா என்ற ஆராய்ச்சி! அதை எழுதியிருக்கும் நடையோ? மாற்றி மாற்றி பொருளின் புன்மை, எழுதியவரின் உள்ளத்தில் குழப்பம், நடையின் மிளகாய் நெடி இவற்றின் மேலேயே கருத்துச் செல்கிறது. அப்படி அமைந்திருக்கிறது மொழியும் நடையும்!

இந்த ஆராய்ச்சிகளில் முழுகி ஒரு வெறுப்புக் காட்டும் புன்னகையைத் தேடி எடுத்து நாற்றமெடுத்த அதன் சிப்பித்தோல்களைநீக்க முயன்று கொண்டிருந்தாள் பாமா. நல்ல முத்து ஏதாவது கிடைக்கலாம் என்று!

அந்த சமயம் சொக்கலிங்கம் கேட்டார்:

"அம்மா பாமா! உனக்குக் கடைசிப் பரீக்ஷை என்றைக்கு?"

"ஏப்ரல் 30-ம் தேதி முடிகிறது! ஏன் அப்பா கேட்கிறீர்கள்?"

"கொடைக்கானலுக்குப் போய் மே மாதம் பூராவும் தங்குகிறோம்!" சரி அப்பா என்றாள். அடுத்த கட்டுரை அவளுக்கு இனிக்கும் கட்டுரையாக அமைந்திருந்தது.

* * * *

கட்டுரை இனிமையாக இருந்தாலும் அவள் தந்தையும் தாயும் அடுத்த அறையில் பேசிக் கொண்டிருந்ததைக் கவனிக்காமல் இருக்கமுடியவில்லை.

"இந்த வருஷம் கொடைக்கானல் போகத்தான் வேண்டுமா?"

"ஆம், போய் ஒரு மாதம் இருந்துவிட்டு வந்தால் நல்லது என்றுதான் எண்ணுகிறேன். ஏன் கேட்கிறாய்?"

"இல்லை!"

"சும்மாச் சொல்!"

"அங்கே போய்த் தங்கிவிட்டால் ஏற்பாடு எல்லாம் செய்யவேண்டாமா?"

"எதற்கு ஏற்பாடு...நீ என்ன புதிர் போடுகிறாய்?"

"ஒன்றுமில்லை, பாமாவுக்கு இந்தக் கோடையில் திருமணம் முடித்தால் நல்லது என்று எண்ணுகிறேன்."

"அவளுக்கு வயது என்ன ஆகிறது தெரியுமா?"

"தெரியும், இந்த ஆண்டுக்குப் பதினேழு முடியப்போகிறது!"

மீண்டும் சற்றுநேரம் மௌனம் நிலவியது. பாமா கவனித்தாள்.

"ஊம். மாப்பிள்ளை பார்த்திருக்கிறாயா?"

"மாப்பிள்ளை பார்த்திருப்பது என்ன? தேடினால் பையன்கள் கிடைக்காமல் போகிறானா?"

"கிடைப்பான். ஆனால், நல்ல பையனாகக் கிடைக்கவேண்டும். அவளுக்கும் மனதுக்குப் பிடிக்கவேண்டும்!"

"வல்லி! பாமா விருப்பம் இல்லாமல் நான் எதையும் முடிவு செய்யத் தயாரில்லை. என்னைக் கேட்டால் அவளைப் படிக்க வைக்கவே ஆசைப்படுவேன். அதற்காக அவளுடைய எண்ணத்துக்கும் ஆசைக்கும் குறுக்கே வரமாட்டேன். அவள் விருப்பத்தைத் தெரிந்துகொள். அப்படியே செய்து விடுவோம்." பர்வதவல்லி பேசவில்லை.

பாமா சத்தம் செய்யாமல் புத்தகத்தை வைத்தாள். அவர்கள் கண்களில் படாமல் கீழே இறங்கும் வழியைத்தேடி நகர்ந்தாள்.

(தொடரும்)



பெண்களுக்கு மட்டும்

எஸ். விஜயா

தெரிந்து கொள்ளுங்கள்

(1) கீரைகளை, நியூஸ்பேப்பரை நனைத்து அதில் சுற்றி வைத்திருந்தால் அவை வாடுவதில்லை.

(2) மாங்காய், கத்தரிக்காய், வெள்ளரிக்காய், வெண்டைக்காய் போன்ற காய்களை ஒரு மூங்கில் கூடையிலிட்டு மூடி ஈரத்துணியால் அக்கூடையைச் சுற்றிக் கட்டிவிட்டால் அவை வாடுவதில்லை.

(3) தக்காளிப் பழங்கள் கெட்டுப் போகாதிருக்க, அவைகளை இரவு நேரங்களில் உப்பு கலந்த ஜலத்தில் போட்டு வைக்கலாம்.

(4) பித்தளை அல்லது வேறு பாத்திரங்களில் கரிபற்றி அகலாவிடில் வேண்டிய ஜலத்தில் வினிகர் கலந்து அதில் அப்பாத்திரத்தை ஊறப் போடவும். கரி எல்லாம் மாயமாக அகன்று விடும்.

குழந்தை வளர்ப்பு

இது கோடைகாலம். எங்கும் அம்மை பரவுவதென்பது இக்காலத்தில் இயல்பாகும். அம்மையிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்ற அம்மை குத்துவது ஒரு முறையாகும். சுத்தமாகச் சுகாதாரமுறையில் நாம் குழந்தைகளை வளர்ப்போமேயானால் பொதுவாக அம்மை குழந்தைகளை அண்டுவதில்லை.

அம்மை குத்துவதால் பொதுவாகப் பெரும்பாலான குழந்தைகளுக்கு நன்மையே ஏற்பட்டாலும், சில குழந்தைகளுக்குத் தீமையும் ஏற்படாமலில்லை. அம்மைவைத்த காரணமாகப் பல குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு மெலிந்து போவதையும், சில மரணமடைவதையும்கூட நாம் காணுகிறோம்.

'எக்ஸிமா' (Eczema) என்ற சருமப்படை நோய் உள்ள குழந்தைகளுக்கு அம்மை வைத்தால் குழந்தைகள் பலவித நோய்களுக்கு உள்ளாகின்றன. ஆகையால், அவ்விதமான நோய்உள்ள குழந்தைகளுக்கு அந்நோய் நீங்கியபிறகே அம்மைவைத்தல் நல்லது. மிகவும் நாசுக்கான அல்லது அடிக்கடி நோய் வாய்ப்படும் குழந்தைகளுக்கும் அம்மை வைப்பதால் தீமையே நேரிடுகிறது. ஆகையால், அவ்விதமான குழந்தைகளுக்கும் அம்மை வைக்காதிருப்பதே நல்லதாகும்.

அம்மைவைக்கப்பட்ட இடத்தைக் காற்றுப் படும்படி திறந்து வைத்திருக்கவேண்டும். மூடிவைப்பதோ கட்டுப்போடுவதோ கூடாது. சில குழந்தைகளுக்குக் காய்ச்சலேற்படும். சிடுசிடுஎன இருக்கும். சரியாக எதுவும் சாப்பிடாது அழுதுகொண்டே இருக்கும். அம்மை வைத்த 4, 5 நாளில் புண்ணாகும். பத்து நாட்களுக்குள் அப்புண் ஆறாதுபோனால், டாக்டரிடம் காண்பிக்கவேண்டும். காய்ச்சலுக்கும் டாக்டர்களிடம் ஆலோசனை கேட்பதே நல்லது.

ஆகாரம் மூலம் அழகு

நீங்கள் அழகு சாதனங்களில் பணத்தை விரயம் செய்யவேண்டியதில்லை. உணவு மூலமாகவே அழகு பெறலாம். எப்படி?

கோமளசருமத்திற்கு: உங்கள் சருமம் மிருதுவாகவும், கோமளமாகவும், வெண்மையாகவும், பளபளப்பாகவும் இருக்கவேண்டுமானால் அதற்கு, நீங்கள் சாப்பிடும் உணவில் வைட்டமின் ஏ. பி. ஸி. மூன்றும் இருக்க வேண்டியது அவசியம். பால், தயிர், மோர், வெண்ணெய், மீன். மாமிசம் ஆகியவைகளில் வைட்டமின் ஏ. அதிகமாக இருக்கிறது. காரட்கிழங்கு, முட்டை, வெள்ளாட்டு ஈரல் ஆகியவைகளில் வைட்டமின் பி. மிகுதியாக உள்ளது, ஆரஞ்சு, கீரைகள் முதலியவைகளில் வைட்டமின் ஸி. மிகுதியாக இருக்கிறது. இவ்விதம் மேலே கூறிய மூன்றுவிதமான வைட்டமின்கள் அடங்கிய ஆகாரங்களைப் புசிக்க வசதி இல்லாதவர்கள், மூன்று வகை வைட்டமின் மாத்திரைகளை வாங்கி வைத்துக்கொண்டு உபயோகிக்கலாம். அத்திப்பழம், அன்னாசிப்பழம் இரண்டிலும் மாக்

ளிசியம், அயடின் சத்துக்கள் அதிகமாக உள்ளன. இச்சத்துக்கள் சருமத்தை மிருது வாக்கும் இயல்புடையவை. ஆகையால், இவ்விரண்டு பழங்களும் வழக்கமாகச் சாப் பிடுவது உங்கள் அழகுக்குத் துணை செய்வ தாகும்.

அழகிய கேசத்திற்கு

உங்கள் கேசம் அழகாகவும், மினுமினுப்பா கவுமிருப்பதற்கு வைட்டமின் பி. அவசியம். நிலக்கடலை, பால், முட்டை, ஈஸ்ட், ஆட்டு ஈரல், ஆகியவைகளில் இவ்வைட்டமின் மிகுதி யாக இருக்கிறது. கேசத்தைக் கரு கரு என் றாக்கும் இயல்பு திராட்சை, பாதாம் பருப்பு, பார்ஸ்லி கீரை, கிஸ்மிஸ் ஆகியவைகளுக்கு உண்டு. பளபளப்புக் கொடுக்கக்கூடிய சக்தி முட்டைக்கோசு, வெங்காயம், காலிபிளவர், பூசணி, ஆகியவை பெற்றிருக்கின்றன. நீண்டு வளரச் செய்யும் ஆற்றல் தேங்காய், மீன் இரண்டுக்கும் உண்டு. பொதுவாகக் கந்தக சத்து மிகுதியாக உள்ள ஆகாரங்களை உட்கொண்டால் கூந்தல் நீண்டு வளருகிறது.

அழகிய நகத்திற்கு

நகங்களை அழகாகவும், பளபளப்பாகவும், உறுதியாகவும் செய்யும் ஆற்றல் புரத சத் துக்கு உண்டு. வெங்காயம், முட்டைக்கோசு, பால், மீன், மாமிசம், பார்ஸ்லி கீரை ஆகி யவை இதற்கு உதவுகின்றன. மிகவும் மிருது வான நகமாக இருந்தால் அதை உறுதியான தாக்க வைட்டமின் பி காம்ப்லெக்ஸ் மாத் திரைகள் சாப்பிடலாம்.

பளிச்சிடும் பல்லிற்கு

இதற்கும் புரதசத்து அவசியம். நக அழகுக்குக் கூறிய ஆகாரங்களோடு கால்ஷி யம் மாத்திரைகள், காட்லிவர் ஆயில், ஆரஞ்சு, எலுமிச்சை, செலரி, தக்காளி, காரட், பூண்டு ஆகியவைகளும் சேர்த்துக் கொள்ளலாம். புளோரின் சத்துக்கு பல்லை வெள்ளையாக்கும் இயல்பு இருக்கிறது. ஆகை யால், இச்சத்து அடங்கியுள்ள ஆகாரங்களை உட்கொண்டால் பற்கள் பால்போல் வெள்ளை யாகிவிடும். பால், தேங்காய்ப் பால், மீன் ஆகியவைகளில் இச்சத்து அதிகமாக அடங்கி யுள்ளது.

பாகற்காய் பக்குவ முறைகள்

பாகற்காயில் கொம்புப்பாகல், மிதிபாகல், பழுபாகல், படுபாகல் எனப் பல ஜாதிகள் உண்டு. இவற்றில் கொம்புப்பாகற் காயின் நீளம் சுமார் ஓரடிவரையிருக்கும். இதில் பச்சை, வெள்ளை இரண்டுவிதமான காய் கள் உண்டு. மிதி பாகல் என்பது சுமார் ஓரங்குல நீளமுள்ள சிறுகாய்களாக இருக் கும். பழுபாகல் என்பது திண்டுக்கல் பக்கம் விசேஷமாகப் பயிராகும் ஒருவகை ஜாதி. இதன்காய்கள் சுமார் மூன்றங்குல நீளமிருக் கும். படுபாகல் என்பது வேதாரணியம் பக்கம் மிகுதி. அதன் காய்கள் சுமார் இரண் டங்குல நீளமுள்ளதாக இருக்கும்.

இவற்றில் கொம்புப்பாகல், பழுபாகல் இரண்டும் நம் நாடு முழுவதும் பயிராகின் றன. கொம்புப்பாகலை ஹிந்தியில் கரேலா, வங்காளியில் கரலா, குஜராத்தியிலும் மராத்தியிலும் கர்லா, அஸ்ஸாமியில் கக்ரால், தாவர சாஸ்த்திரத்தில் Momordica Charintia எனச் சொல்லுவார்கள். பழு பாகலை ஹிந்தியில் கோல்கந்த்ரா, பஞ்சா பில் தர்கரிலா, அஸ்ஸாமியில் பட்கரிலா, குஜராத்தியிலும் மராத்தியிலும் குர்தோலி, தாவர சாஸ்த்திரத்தில் Momordicadioica எனச் சொல்லுவார்கள்.

கொம்புப்பாகலின் இலைச்சாறு வாந்தி உண்டாக்கவும், வயிற்றுக்கிருமிகளை வெளி யேற்றவும் பயன்படுகிறது. உள்ளங்காலில் சாற்றைப்பூசினால் கால்எரிச்சல் நீங்குகிறது. காய்ச்சாறு பாம்புகடியை குணப்படுத்து கிறது. நீரழிவு, குஷ்டம், மூலம் போன்ற நோய்களைச் சுகப்படுத்தவும் இது உதவு கிறது. பழுபாகலின் வேரைத்தட்டிப்பிழிந்த சாறு பாம்புகடி, தேள்கடி இரண்டையும் குணப்படுத்துகிறது. வேரை அரைத்து காய்ச்சலுக்கு உடலின்மேல் பூசினால் காய்ச் சல் தணிகிறது. வற்றலை நயமாகத் தூள் செய்து பொடிபோல் உறிஞ்சினால் மூக்கி லுள்ள சளி எல்லாம் வெளியேறிவிடுகிறது.

சமீப காலத்தில் நடத்திய சோதனைகள் மூலம் காயில் காரடின், குளுகோசைடுகள், சாபொனின், அல்கலாய்டுகள், மோமோரி டிசைன் ஆகிய இரசாயனப் பொருள்கள் அடங்கி இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. கொம்புப் பாகலில் ஜலம், புரதம், கொழுப்பு, உலோகம், மாவு, கால்ஷியம், பாஸ்பரஸ், இரும்பு ஆகிய சத்துக்கள் முறையே 92.4, 1.6, 0.2, 0.8, 0.8, 4.3, 0,02, 0.07, 2.22, சத விகிதமும், மிதி பாகலில் அதே சத்துக்கள் முறையே 83.2, 2.01, 1.0 1.0, 1.4, 1.7, 0.99, 0.05. 1.4, 0.935 சத விகிதமும் அடங்கியுள் ளன. ஆகையால், கொம்புப் பாகலைவிட மிதி பாகலே சிறந்ததாகும்.

பிரியாணி

பாகற்காய் துண்டுகள் அரைக்கால் படி, நறுக்கிய வெங்காயம் அரைக்கால் படி. தக் காளிப்பழம் பெரிதாக இரண்டு, எலுமிச்சம் பழம் இரண்டு, மல்லிக்கீரை, பச்சைமிளகாய், இஞ்சி, உப்பு, மஞ்சள்பொடி, சீரகம், பெருங் காயம், மல்லிவிரை ஆகியவை கொஞ்சம், தேங்காய்த் துருவல் ஒரு மூடி, நெய் அல்லது எண்ணெய் வீசம்படி, புலவு எனப்படும் பிரியாணி அரிசி கால்படி, சிறிது கறிமசால்

பட்டை, பால் அல்லது மோர் அரைக்கால் படி ஆகியவை இதைத் தயாரிக்கத் தேவை.

பாகற்காயை சிறு துண்டுகளாக நறுக்கி, அல்லது தேங்காய்த் துருவியில் துருவி உப்பும் மஞ்சள்பொடியும் அதோடு சேர்த்துப் பிசைந்து சுமார் 2 மணி நேரம் வெயிலில் வைக்கவும். அரிசியை 2 மணி நேரம் ஜலம் விட்டு ஊறவைக்கவும். நறுக்கிய வெங்காயத்தை நெய்விட்டு சிகப்பாக வதக்கவும். பாகற்காய் துண்டுகளை நீரைவடித்து நெய் விட்டு சிகப்பாகத் தனியே வதக்கவும். ஆறியதும் வெங்காயத்தோடு அதை ஒன்றாகக் கலந்து வைத்துவிடவும். பிறகு ஒரு பெரிய பாத்திரத்தில் பெருங்காயத்தையும் சீரகத்தையும் பொரித்து அதில் பாகற்காயையும் வெங்காயத்தையும் கொட்டவும். இரண்டு தக்காளிகளையும் நான்கு நான்காக துண்டு செய்து அவற்றையும் அதில் போடவும். பிறகு மற்ற மசாலைப் பொருள்கள், கறிமசால் பட்டை முதலியவைகளைச் சேர்க்கவும். கடைசியாக அரிசியைக் களைந்து கொட்டி போதுமான ஜலமும் உப்பும் சேர்த்து ஒரே சீராக மந்தமான சூட்டில் வேகவிடவும். அரிசி வெந்ததும் பால் அல்லது மோரை அதில் கொட்டி கிளறி இறக்கிவிடவும். தேங்காய்த் துருவலை வதக்கி அதில் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து விட்டு அதைத் தொட்டுக்கொள்ள சட்னியாக உபயோகிக்கலாம். இந்தப் பிரியாணி உடல் நலத்துக்கு மிகவும் சிறந்தது.

லட்டு

மூன்று வீசம்படி பாகற்காய்த் துருவல், அரைக்கால்படி தேங்காய்த் துருவல், மூன்று வீசம்படி கோதுமை மாவு, மூன்று வீசம்படி இடித்த சர்க்கரை, சிறிது ஏலம், கிராம்பு, கிஸ்மிஸ், முந்திரிப்பருப்பு, நெய் முதலியவை தேவை. கோதுமை மாவு மிகவும் நயமாக இருத்தல் கூடாது.

கோதுமை மாவை முதலில் நெய்விட்டுப் பொன் நிறமாக வறுக்கவும். தேங்காய்த் துருவலையும் நெய்விட்டு வதக்கிக்கொள்ளவும். பாகற்காய்த் துருவலையும் அதேபோல் நெய் விட்டு வதக்கவும். பிறகு மேலே கூறிய மூன்று பொருள்களையும் ஈயம் பூசிய ஒரு தாம்பாளத்தில் ஒன்றுசேர்க்கவும். பிறகு இடித்த சர்க்கரை, கிஸ்மிஸ், ஏலம், கிராம்பு,

தென்னிந்தியாவில் விநியோகிப்பவர்கள்:-
சானெட் ஏஜன்ஸீஸ் (மதராஸ்)
114, ஆதியப்ப நாய்க்கன்தெரு, சௌகார்பேட்டை, சென்னை-1

முந்திரிப்பருப்பு, போதுமான நெய் எல்லாமாகச்சேர்த்துப் பிசைந்து லட்டாக பிடிக்கவும்.

சகோதரிகள் சொன்னவை:

பச்சடி

அரை ராத்தல் பாகற்காயை வறுத்து, ஒரு மூடி தேங்காய், 3 மிளகாய் இரண்டையும் அம்மியில் வைத்து அரைத்து வறுத்த பாகற்காயில் அவற்றைக் கலந்து போதுமான உப்பும் சேர்த்துக்கொள்ளவும், பிறகு எல்லாவற்றையும் நல்ல தயிரில் கலந்து கடுகு தாளிதம் செய்யவும்.

கோஸ் மல்லி

நான்கு பாகற்காயை நறுக்கி, 3 எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து, ஒரு மிளகாய், சிறிது இஞ்சித் துண்டு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து சிறிது உப்பு சேர்த்துக்கொள்ளவும். அரைமணிநேரம் ஊறியபிறகு இதை உபயோகிக்கலாம்

—டி. எஸ். கோமதி, கொல்லம்.

வடை

பாகற்காய் 4, ரவை வீசம்படி மைதா அரைக்கால்படி, பச்சைமிளகாய் 8, சீரகம் ½ டீஸ்பூன், நெய் 4 டீஸ்பூன், கொப்பரை பாதி, போதுமான எண்ணெய், சிறிது மல்லிக்கீரை, உப்புவேண்டும்.

ரவையை சிறிது நெய்விட்டு மணம்வரும் வரை வறுத்துக்கொள்ளவும். பாகற்காய், கொப்பரை இரண்டையும் கொப்பரை சீவியால் சீவி அவற்றோடு மைதா, வறுத்தரவை, சீரகம், நறுக்கியமல்லிக்கீரை, பச்சைமிளகாய். உப்பு, சீரகம், சிறிது நெய், வேண்டிய ஜலம்சேர்த்துப் பிசைந்து வடையாகத் தட்டி எண்ணெயில் வேகவைத்து எடுத்துக்கொள்ளலாம். பாகற்காய் கசப்பு பிடிக்காதவர்கள் கழுநீரில் உப்பு மஞ்சள்பொடி சேர்த்து அதில் அக்காயைப்போட்டு வடித்து பிறகு உபயோகிக்கலாம்.

—குமாரி ஆர். வேதவல்லி, ஸ்ரீரங்கம்.

வறுவல்

காய்களை மெல்லிய வில்லைகளாக நறுக்கவும். சிறிது புளியைக் கரைத்து அதில் உப்பு, மஞ்சள்பொடி, மிளகாய்ப்பொடி, சிறிது மோர் எல்லாம் சேர்த்துக் கலக்கி அதில் நறுக்கிய காய் வில்லைகளைப்போட்டு நன்றாகக் கிளறி பிசைந்து வைத்து விடவும். பிறகு அடுப்பில் எண்ணெய் வைத்து சூடு ஏறியதும் பிசைந்து வைத்துள்ள காய் வில்லைகளை மறுபடியும் பிசைந்து ஜலம் இல்லாது அமுக்கிப் பிழிந்து எண்ணெயில் போட்டு வறுத்தெடுத்துக் கொள்ளவும். கசப்பிருக்காது.

—ஸ்ரீமதி ராஜம்-ஸ்ரீநிவாஸன்,
திருத்துறைப்பூண்டி

கொஜ்ஜு

10 இளம்காயை விரல் நீளத்திற்கு மெல்லியதாய் நீள வாட்டத்தில் நறுக்கிக்கொள்ளவும். பச்சைமிளகாய் 20-ஐ நீள வாட்டத்தில் பிளந்துகொள்ளவும். ஒருசேர் புளியைக் கெட்டியாகக் கரைத்துக்கொள்ளவும். கற்சட்டி அல்லது ஈயம் பூசிய பாத்திரத்தை அடுப்பில் வைத்து 5 பலம் எண்ணெய் விட்டு கடுகு 1 டீஸ்பூன், கடலைப்பருப்பு 2 டீஸ்பூன், உளுத்தம்பருப்பு 2 டீஸ்பூன், சிறிது காயம் இவைகளைக் காயும் எண்ணெயில் போட்டு லேசாக வறுத்து அதோடு நறுக்கிய காய், பிளந்த பச்சைமிளகாய் சேர்த்து அவற்றையும் துவள வதக்கவும். பிறகு கரைத்த புளி, சிறிது உப்பு, மஞ்சள்பொடி ½ டீஸ்பூன், எலுமிச்சம்பழ அளவு வெல்லம் எல்லாம் சேர்த்துக் கொதிக்கவிடவும். பிறகு 1 டீஸ்பூன் கடலைப்பருப்பு, 1 டீஸ்பூன் உளுத்தம்பருப்பு, 2 டீஸ்பூன் தனியா, ½டீஸ்பூன் மிளகு ½டீஸ்பூன் வெந்தயம், 3 டீஸ்பூன் எள் இவைகளை வறுத்து இடித்து அப்பொடியை அடுப்பைவிட்டு இறக்கப்போகும் சமயம் காயில் போட்டுக் கிளறி சிறிது கறிவேப்பிலை சேர்த்து இறக்கி விடவும். லேகிய பதத்தில் இறக்க வேண்டும். ஜாடியில் பிறகு பத்திரப்படுத்தலாம். ஒருமாதம் வரை கெட்டுப் போகாதிருக்கும்.

என். பாலாம்பாள், திருப்பத்தூர் (வ. ஆ)

வற்றல்

உப்பும் பச்சைமிளகாயும் விழுதாய் அரைத்து கெட்டித்தயிரில் அவற்றைக் கலக்கவும். காயை வில்லைகளாக நறுக்கித் தயிரில் போட்டு சிறிது நேரம் ஊறவைத்து வெயிலில் உலர்த்தவும். இரவானதும் பாத்திரத்தில் எஞ்சி உள்ள தயிரில் காய்களை மறுபடியும் பிசறி மறுநாள் மறுபடியும் காய வைக்கவும். இவ்விதம் தயிரெல்லாம் வற்றல் உறிஞ்சும்வரை இரவில் பிசறி பகலில் காய வைக்கவும். நன்றாகச் சுருங்கி உலர்ந்ததும் டப்பிகளில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு தேவையானபோது எண்ணெயில் பொரித்துக் கொள்ளலாம்.

உப்பு, மிளகாய்வற்றல், புளி, சிறிது பெருங்காயம், சிறிது மஞ்சள்பொடி, சிறிது மல்லிக்கீரை எல்லாவற்றையும் விழுதாக அரைத்து பாகற்காய் வில்லைகளோடு பிசறி ஊறவைக்கவும். மற்ற விவரங்கள் மேலே தயிருக்குச் சொன்னது போலவேதான்.

ஊறுகாய்

இளம்பிஞ்சுக்காயை பொடியாக நறுக்கி சிறிதளவு புளித்த கெட்டித் தயிரில் சுமார் அரைமணி நேரம் ஊற வைக்கவும். வாணலியில் நெய்விட்டு கடுகு, பச்சைமிளகாய் தாளிதம் செய்து தயிரில் ஊறிய காயை அலம்பி அதில் போட்டு, போதுமான உப்பு சேர்த்து வதக்கவும். ஆறின பிறகு எலுமிச்சம்பழம் பிழிந்து உபயோகிக்கவும்.

பொரிச்ச குழம்பு

பழுத்தகாயை பொடியாக நறுக்கி வதக்கிக் கொள்ளவும். பயத்தம்பருப்பை வேக வைத்து உப்பு, மஞ்சள்பொடி சேர்த்து அதோடு வதக்கிய காயைப்போட்டு வேக விடவும். சிறிது மிளகு, மிளகாய்வற்றல், தேங்காய்த் துருவல் சேர்த்து வறுத்து விழுதாய் அரைத்து லேசாக புளி கரைத்து எல்லாவற்றையும் கொதிக்கும் குழம்பில் கொட்டி கறிவேப்பிலை, கடுகு உளுத்தம் பருப்பு தாளிதம் செய்யவும்.

துவையல்

பழுத்தகாயை பொடியாக நறுக்கி சிவக்க வதக்கவும். கடுகு, உளுத்தம்பருப்பு, மிளகாய்வற்றல், காயம் ஆகியவைகளை எண்ணெயில் தாளிதம்செய்து கொள்ளவும். உப்பு, புளி, தேங்காய்த் துருவல், தாளிதம் செய்த மிளகாய் முதலியவைகளை எல்லாம் சேர்த்து விழுதாய் அரைத்து, கடுகு, உ. பருப்பை தனியே அரை குறையாக அரைத்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

ஸ்ரீமதி. சாரதா, அரவன்காடு (நீலகிரி)

பிட்லா

தேவையான சாமான்கள்:— பாகற்காய் 10 பலம் (பெரியது), து. பருப்பு ½ ஆழாக்கு, புளி ஒருஎலுமிச்சையளவு, க.பருப்பு, தனியா இவை வகைக்கு 2 தேக்கரண்டி, மிளகாய் வற்றல் 9, மிளகு 5 அல்லது 6, தேங்காய் 1 மூடி, எண்ணெய் 2 கரண்டி, பெருங்காயம், கடுகு, உளுத்தம்பருப்பு, மஞ்சள் பொடி, உப்பு, கறிவேப்பிலை, கொத்தமல்லி சிறிது வேண்டும்.

செய்யும் விதம்:— துவரம்பருப்பை நன்றாக வேகவைத்துக்கொள்ளவும். பிறகு பாகற்காயை நீர்ஊற்றிக்கழுவி நீளவாட்டில் அரிந்து உள்ளிருக்கும் விதைகளை அகற்றி விட்டுக்குறுக்குவாட்டில் சிறிய அரைவட்டங்களாக அரிந்துகொள்ளவும். ஒரு பாத்திரத்தில், (ஈயமுள்ளதாக இருக்கவேண்டும்) புளியைக்கரைத்து ஊற்றி தேவையான அளவு உப்பும் சிறிது மஞ்சள்பொடியும் போட்டு, அரிந்து வைத்துள்ள காயையும்போட்டு வேகவைக்கவும். பிறகு வாணலியில் மிளகாய் வற்றல், மிளகு, க. பருப்பு, தனியா, பெருங்காயம், முதலியவற்றை சிறிது எண்ணை ஊற்றி சிவக்க வறுத்துக் கொள்ளவும். தேங்காய் மூடியைத் துருவி அதில் பாதியளவுத்துருவலையும் லேசாக வறுத்துக்கொண்டு, வறுக்கப்பட்ட எல்லாவற்றையும் அம்மியில் விழுதுபோல் அரைத்துக்கொள்ளவும். பாகற்காய் புளித்தண்ணீரில் நன்றாக வெந்ததும், வேகவைத்த துவரம்பருப்பையும், அரைத்த மிளகாய் விழுதையும் கொட்டி நன்றாகக் கிளறவும். குழம்புநன்றாகக் கொதித்தவுடன் கறிவேப்பிலை கொத்தமல்லியைக் கழுவிப் போட்டு கீழே இறக்கிவைக்கவும். ஒரு வாணலியில் 1 கரண்டி எண்ணை ஊற்றி கடுகும் உளுத்தம்பருப்பும் தாளிதம் செய்து அதில் மீதி வைத்திருக்கும் தேங்காய்த்துருவலைப்போட்டு சிவக்க வறுக்கவும். நன்றாக வறுத்ததும் அதையும் குழம்பில் கொட்டி மூடவும். இதுதான் பாகற்காய் 'பிட்லா' என்று சொல்லப்படும் ஒருவகைக் குழம்பு.

—குமாரி ஆர். செல்லமணி, சென்னை. 10

மாங்காய், மாம்பழம் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கும் பல உணவு வகைகளைப்பற்றி மே இதழில் விவரங்கள் வெளி இடுவதாக இருக்கிறோம். சகோதரிகள் தங்களுக்குத் தெரிந்த புதுமையான முறைகளை 15-4-60 க்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி எழுதி அனுப்பினால் அவற்றையும் சேர்த்து வெளியிடுகிறோம்.



சிறுவர் பகுதி

எஸ். விசாலாட்சி

தெரிந்து கொள்ளுங்கள்.

கிருஸ்துமஸ் தீவின் கடற்கரையில் ஒரு வகை நண்டுகள் வசிக்கின்றன. அந்த நண்டுகளுக்குத் தாகமெடுத்தால் அங்கே கடற்கரை ஓரமாக ஏராளமாக உள்ள தென்னை மரங்களில் ஏறி, தங்கள் கொடுக்கால் தேங்காயின் மேல் மட்டையை உரித்து, ஓட்டையும் உடைத்து, தண்ணீரைப் பருகுகின்றன. இதனால் அங்கே தென்னைத் தோட்டக்காரர்களுக்கு ஏராளமான நஷ்டமேற்படுகிறது. அந்த நண்டுகளை ஒழிக்க எவ்வளவோ வழிகளைக் கையாண்டும் பயனில்லை.

* * * *

அன்னங்கள் ஒன்றோடொன்று சண்டையிடும் போது தங்கள் சிறகை விரித்துக் கொண்டு, சிறகால் ஒன்றை ஒன்று மோதும். இப்படி அவை மோதும் போது மனிதன் எவனாவது குறுக்கே சென்றால் அவற்றின் சிறகால் ஒரே வீச்சு போதும், மனிதனின் கை முறிந்துவிடும். அவ்வளவு வலுவுள்ளவை அன்னங்கள்.

* * * *

தமிழ் நாட்டில் கொண்டாடப்படும் காமதகனப் பண்டிகையே வட நாட்டில் ஹோலி எனக் கொண்டாடப்படுகிறது. காமன் எரிந்த நினைவாகக் காமன் பண்டிகை கொண்டாடப்படுவதாக நம்பக்கம் கூறுகிறார்கள். ஹோலிகா எரிந்த நினைவாக ஹோலி கொண்டாடுவதாக வட நாட்டார் கூறுகிறார்கள். ஹிரண்யன் தன் மகன் பிரஹலாதனை கொழுந்து விட்டெரியும் அக்னிஜ்வாலையில் வீசிய போது ஹிரண்யனின் தங்கையான ஹோலிகா அக்னியில் பிரவேசித்து, தான் எரிந்து சாம்பலாகி பிரஹலாதனைக் காப்பாற்றியதாகக் கதை.

* * *

நாம் ஒருவரையொருவர் பிரியும் போது விடைபெற்றுக் கொள்ள "நான் போய் வருகிறேன்" எனக் கூறுகிறோமல்லவா? அதே மாதிரி இங்கிலீஷ்காரர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியும் போது விடைபெற்றுக் கொள்ள "ஐ வில் சீ யு இன் டிம்பக்டு" (I will see you in Timbaktu) — அதாவது டிம்பக்டுவில் நான் உன்னைச் சந்திக்கிறேன் எனக் கூறுவது வழக்கம். ஆனால், டிம்பக்டு என்னும் நகரம் சஹாராப் பாலைவன மத்தியில் உள்ள பிரஞ்சு சூடானின் தலை நகரம்! அங்கு சாதாரணமாக யாருமே போக முடியாது!

யார் சொல்லுவது சரி.

(1) அர்ஜுனனுக்கு கிருஷ்ணர் கீதா உபதேசம் செய்த இடம் குருக்ஷேத்திரம் என்கிறான் சுரேஷ். இல்லை ஜோதிஸார் என்கிறான் ரமேஷ். இவர்களில் யார் சொல்லுவது சரி?

(2) உலகிலேயே மிக உயரமான பறவை நெருப்புக் கோழி என்கிறான் ராஜு. இல்லை, அன்னம் என்கிறாள் ராஜி. இவர்களில் யார் சொல்லுவது சரி?

(3) சிறுத்தைக்கு மரம் ஏறத் தெரியும் என்கிறாள் ஆஷா. சிறுத்தையில் சிறிய சிறுத்தை, (Cheetah) பெரிய சிறுத்தை (Panther) என்று இரண்டு வகை உண்டு. சிறிய சிறுத்தைதான் மரம் ஏறும். பெரிய தற்கு மரம் ஏறத் தெரியாது என்கிறாள் உஷா. இவர்களில் யார் சொல்வது சரி?

விடை மற்றொருபக்கம்)

300 வருட விஞ்ஞான வளர்ச்சி.

ஆண்டு	கண்டுபிடிப்பு	கண்டுபிடித்தவர்
கி.பி. 1660	தூரதிருஷ்டி	லிவின் ஹோக்
,, 1665	புவி ஈர்ப்பு	நியூடன்
,, 1765	இஞ்சின்	ஜேம்ஸ் வாட்
,, 1800	மின்சார பாட்ரி	வோல்டா
,, 1810	அணுக்கொள்கை	டால்டன்
,, 1839	போட்டோ கிராபி	டைகரே-நீன்ஸ்
,, 1876	டெலிபோன்	பெல்
,, 1892	மோட்டார் கார்	துர்ப்பி
,, 1895	எக்ஸ்ரே	ரோன்ஜன்
,, 1896	கம்பியில்லாத்தந்தி	மார்கோனி
,, 1896	விமானம்	லாங்லே
,, 1905	ரிலேடிவிட்டி கொள்கை	ஐன்ஸ்டீன்
,, 1926	டெலிவிஷன்	பேயர்
,, 1957	ஸ்புட்னிக்	ரஷிய விஞ்ஞானிகள்

இன்றல்ல! நேற்றல்ல!

50 ஆண்டுகளாகப் புகழ்பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(Regd.)

தலைவலி, ஜலதோஷம், கைகால்வலி, ஜுரம் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து.

இது வீட்டில் இருந்தால் உங்கள் அருகே ஒரு டாக்டர் இருப்பது போலாகும்.

புட்டி 1-க்கு விலை 75 காசுகள்

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ

(ஸ்தாபிதம்: 1909)

த. பெ. எண் 99 ... 214 & 215 மேலமாசிவீதி, மதுரை

திருச்சி, தஞ்சை இவ்விரு ஜில்லாக்களில் உள்ளவர்கள் மட்டும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்

தபால் பை எண் 172 .... 213, மேலமாசி வீதி, மதுரை - 1.

பேராசைப் படேல்......

பூங்குடி என்பது உறையூருக்குத் தெற்கே ஒரு சிறு கிராமம். சோழமன்னன் கிள்ளி உறையூரிலிருந்து ஆண்ட காலத்தில், அக் கிராமத்தில் காளியண்ணன் என்ற ஒரு இடையனிருந்தான். அவன் பெயர்தான் காளியே தவிர அவன் மிகவும் அப்பாவி.

காளிக்கு ஆடு மேய்ப்பதுதான் தொழில். பகலெல்லாம் ஆடு மேய்ப்பான். மாலையானதும் வீடு திரும்புவான்,

ஒருநாள் மாலை. சூரியன் மேற்குவானில் மறையும் நேரம். காளி தன் ஆடுகளை மேய்த்து விட்டு அவற்றைத் தன் வீடு நோக்கி ஓட்டிக்கொண்டு வந்தான். அப்பொழுது பாதையோரமாக ஒரு புதரடியில் பளிச்சென்று, ஏதோ மின்னுவது அவன் கண்ணில் பட்டது. நெருங்கிச் சென்று பார்த்தான். அந்திநேர சூரிய ஒளிபட்டு ஏதோ ஒரு கல் தகதகத்தது. அந்த மின்னும் கல்லை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தோன்றியது அவனுக்கு. தன் தோளில் கிடந்த துண்டை எடுத்து அதன் ஒரு மூலையில் அக்கல்லை முடிந்து மறுபடியும் துண்டை தோளில் போட்டுக்கொண்டு வீடு நோக்கி நடந்தான்.

வீடு சென்றதும் அவனுடைய கடைசிக் குழந்தை அவனிடம் வந்தது. துண்டில் உள்ள முடிச்சைப் பார்த்து "இந்த முடிச்சில் என்ன அப்பா இருக்கிறது?" எனக் கேட்டது. விஷயத்தைச்சொன்னான் காளி. தனக்கு அக்கல் வேண்டும் எனக் கேட்டது குழந்தை. அதனிடம் அவன் அதைக் கொடுத்தான். பளிச்சிடும் கல்லைப்பெற்ற குழந்தை விளையாடக் குதித்தோடியது.

சிறிது நேரம்தான் ஆகி இருக்கும். அவன் மூத்த பையன்கள் இருவரும் அவன் முன்வந்து நின்றனர். "தங்கைக்கு மாத்திரம் மின்னும் கல் கொடுத்திருக்கிறாயே. எங்களுக்கு எங்கே? அவள் மட்டும் என்ன அவ்வளவு உயர்த்தி?" எனக் கேட்டனர். "அவள் குழந்தை" என காளி ஏதேதோ சமாதானம் சொல்லிப் பார்த்தான். பையன்கள் கேட்பதாக இல்லை. இதற்கு என்ன செய்வதென்றே காளிக்குப் புரியவில்லை.

அக்கல் உள்ளவரை கலகம் அடங்கப் போவதில்லை. அதைப்பறித்து எங்கேயாவது வீசிவிட்டால்தான் மீண்டும் அமைதி தோன்றும் என்ற முடிவுக்கு வந்தான் காளி.

காளி கல்லை வீசியெறியப் போனபோது அவன் மனைவி குறுக்கிட்டாள். "இவ்வளவு நல்ல கல்லை ஏன் தூக்கி எறிய வேண்டும்? நம் வெள்ளை கழுத்தில் கட்டினால் எவ்வளவு அழகாக இருக்கும்" என்றாள். வெள்ளை என்பது அவர்கள் ஆடுகளுள் எல்லோருக்கும் பிரியமான ஒரு அழகிய சிறு ஆடு. அவள் கூறியபடியே வெள்ளையின் கழுத்தில் அக்கல்லைக் கட்டினான் காளி.

மறுநாள் காலையில் தன் ஆடுகளை எல்லாம் வழக்கம்போல் மேய்க்க ஓட்டிச் சென்றான் காளி. வழியில் ஒரு செட்டியார் எதிர்ப்பட்டார். அவர் காளியின் ஆடுகளைப் பார்த்தார். வெள்ளையின் கழுத்தில் கட்டியிருந்த கல் அவர் கண்ணில் பட்டு விட்டது. உடனே அக்கல்லைத் தான் எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என அவருக்கு ஆசை பிறந்தது. அந்தக் கல் காளிக்குச் சொந்தமல்ல; அதை அவன் வாங்கி இருக்கவும் முடியாது எனப்புரிந்து கொண்டார் செட்டியார்.

"வெள்ளை ஆட்டை விலைக்குக் கொடுக்க முடியுமா" எனக் காளியைக் கேட்டார் செட்டியார். "அந்த ஆடு எனக்குமட்டுமல்ல. என் குடும்பத்தில் எல்லோருக்குமே பிரியமான ஆடு. ஆகையால் அதை விலைக்குக் கொடுப்பதற்கில்லை" என்றான் காளி.

"உனக்கு விவரம் தெரியாததால் அப்படிச் சொல்லுகிறாய். வெள்ளையாடு உன் ராசிக்கு ஒத்துவராது. அதுவும் அதன் கழுத்தில் ஒரு கல்லைக் கட்டி வைத்திருக்கிறாயல்லவா? அந்தக் கல் ஆகவே ஆகாது. அந்தக் கல் உள்ளவரை உன் குடும்பத்தில் சண்டை சச்சரவு நடந்துகொண்டே இருக்கும்?"

"ஆமாம், செட்டியாரையா! நீங்கள் சொல்லுவது உண்மைதான். நேற்று இந்தக் கல்லை நான் எடுத்துப் போனதுமே என் பிள்ளைகளிடையே கலகம்," என விவரத்தைச் செட்டியாரிடம் எடுத்துச் சொன்னான் காளி. இவ்வளவு பிடி கிடைத்தால் போதாதா செட்டியாருக்கு. காளிக்குத்

தீங்கு செய்யாதபடி தான் மந்திரம்போட்டு அந்தக்கல்லை வீசி விடுவதாகக் கூறி வாங்கிக்கொண்டார்.

கல்லை மறைவான இடத்திற்கு எடுத்துப் போய் நன்கு சோதனை செய்து பார்த்தார் செட்டியார். முதல்தரமான வைரக்கல், விலை பத்தாயிரம் வராகனுக்குக் குறையாது. தன் அதிர்ஷ்டத்தை நினைத்துச் சந்தோஷப் பட்டார் செட்டியார். அச்சமயம் பார்த்து எங்கிருந்தோ சிலர் வந்து சூழ்ந்து பிடித்துக்கொண்டு விட்டனர் செட்டியாரை.

செட்டியார் வசம் இருந்த கல் உறையூர் அரண்மனையில் திருட்டுப்போன வைரக் கல். திருடனைத் துரத்தி வந்தபோது அவன் தப்புவதற்காக அதைப் புதரில் வீசி விட்டு மறைந்துவிட்டான். அது மண்ணில் மறைந்து கிடந்து எப்படியோ ஒரு நாள் தெய்வாதீனமாய் காளி கையில் சிக்கியது. அதையே செட்டியார் மோசடி செய்து பிடுங்கிக்கொண்டார்,

திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு அரச சபையில் நின்ற செட்டியார், "தான் அக்கல்லைத் திருடவில்லை என்றும், காளியே தனக்கு விலைக்கு விற்றதாகவும்" கூறினர். அரசனின் சேவகர்கள் காளியைக் கைது செய்து அரச சபையில் நிறுத்தினர். காளி நடந்தது ஒன்றையும் மறைக்காமல் சொன்னான். தான் செட்டியாரிடமிருந்து காலணு வாங்கியதுமில்லை. விற்றதுமில்லை என்ருன். காளி சொன்னது அரசனுக்குச் சரி என்றே பட்டது.

அரசன் செட்டியாரைப் பார்த்துக் கேட்டான். "காளி இடையன். மிகவும் ஏழை என்பது உமக்குத் தெரியுமல்லவா?"

"தெரியும் மகாராஜா!"

"அவனுக்கு இவ்வளவு விலையுயர்ந்த வைரம் சொந்தமாக இருக்க முடியாது என்பதும் தெரியுமல்லவா?"

"தெரியும் மகாராஜா!"

"காளிக்குச் சொந்தமானதல்ல எனத் தெரிந்திருந்தும் அந்த வைரத்துக்கு விலை கொடுத்து வாங்கியது குற்றம்தானே?"

இதற்கு என்ன சொல்வது எனச் செட்டியார் திகைத்தார்

"சேவகர்காள்! இந்தக் குற்றத்திற்குத் தண்டனையாக முதலில் செட்டியாருக்கு இங்கேயே நூறு சவுக்கடி கொடுங்கள். காளியை விடுதலை செய்யுங்கள் என்று கட்டளையிட்டான் அரசன்.

மறு நிமிடமே சேவகர்கள் செட்டியாரைச் சபை நடுவே நிறுத்தி மாறி மாறி ஒன்று இரண்டு ... என சவுக்கை செட்டியார்மீது வீச ஆரம்பித்தனர். செட்டியார் அலறினர், கத்தினர். ஆனல், என்ன பயன்?

குழந்தைகளே! காளிக்கு விலை உயர்ந்த வைரக்கல் கிடைத்தும் அவனிடம் அது தங்கவில்லை. எதற்கும் அதிர்ஷ்டம் என்பது ஒன்று வேண்டும் என்று தெரிகிறதல்லவா?

காளியிடமிருந்து அதை அபகரித்த செட்டியாருக்கும் நன்மை ஏதும் விளையவில்லை. அக் கல் காளியிடமிருந்தால் தீமை விளையும் என்று கூறிய மோச வார்த்தைகள் அவருக்கே பலித்துவிட்டன. அரச சபையில் கிடைத்த சவுக்கடிகளை அவர் மறக்கமுடியுமா? பேராசை கூடாதென்பது இதனுல் விளங்குகிறதல்லவா?

யார் சொல்லுவது சரி!

(சரியான விடை)

(1) ரமேஷ் சொல்லுவது தான் சரி. அர்ஜுனனுக்குக் கிருஷ்ணர் கீதா உபதேசம் செய்த இடத்தின் பெயர் ஜோதிஸார். குருக்ஷேத்திரத்தின் அருகே உள்ளது. அங்கே ஒரு சர்வ கலாசாலை அமைக்க ஏற்பாடாகி வருகிறது.

(2) இருவர் சொல்லுவதும் தவறு. உலகிலேயே மிக உயரமான பறவை நியூஸிலண்டில் உள்ள மாவோ என்பதாகும். அதன் உயரம் 12 அடி. நெருப்புக் கோழியின் உயரமோ எட்டடிதான்.

(3) ஆஷா சொல்லுவதுதான் சரி. சிறுத்தையில் பெரியது, சிறியது என இரண்டு ஜாதிகள் இருந்தாலும், இரண்டுக்கும் மரம் ஏறத் தெரியும். வேட்டைக்காரர்கள் அவற்றைத் துரத்திச் சென்ருல், இலை அடர்ந்த உயரமான பெரிய மரங்களில் ஏறி அவை மறைந்துகொண்டுவிடும்.

நீரழிவைப் போக்கும் - - - - பஞ்ச மூலிகைகள்

அ. ராம்கோபால்

மேக நோயில் இருபதுவகை உண்டு. அதில் மது மேகமும் ஒன்று என ஆயுர் வேத சாஸ்திரம் கூறுகிறது. மதுமேகம் என்பதே நீரழிவாகும். இந்த நீரழிவை ஆங்கிலத்தில் "டயாபிடிஸ்" (Diabetes) எனக் கூறுவார்கள். டயாபிடிஸில் இரண்டு வகை உண்டு. டயாபிடிஸ் மெல்லிடஸ் (Diabetes Mellitus) டயாபிடிஸ் இன்ஸிபிடஸ் (Diabetes Insepidus) என்பவையே அவை.

டயாபிடிஸ் மெல்லிடஸ் என்ற நோயில் மூத்திரம் அடிக்கடி போகும். அப்படிப் போகும் மூத்திரத்தில் சர்க்கரையும் கலந்திருக்கும். அடிக்கடி தாகம் ஏற்படும். சோர்வு உண்டாகும். வாய் இனிக்கும். உடல் மெலியும். மூத்திரம் போகும்போது எரிச்சல் உண்டாகும். டயாபிடிஸ் இன்ஸிபிடஸ் நோயில் அடிக்கடிமூத்திரம் போகும். ஆனல், அதில் சர்க்கரை இருக்காது. ஆகையால், தாகம் மட்டும் அதிகமாக எடுக்கும். இந்த இரண்டு விதமான நீரழிவு நோய்களில்முதலில் சொன்ன மெல்லிடஸ் நோயே மிகவும் பயங்கரமானது. தீமை செய்யக்கூடியது. ஆகையால், மேல் நாட்டு வைத்தியத் துறையிலாகட்டும் இந்திய வைத்தியத்துறையிலாகட்டும் மெல்லிடஸ் நீரழிவைப் பற்றியே அதிக அக்கறை காட்டப்பட்டுவருகிறது.

நாம் சாப்பிடும் உணவுகளில் கார்போ ஹைடிரேட் (Carbo-Hydrate) என்னும் சத்து முக்கியமாக அடங்கியிருக்கிறது. நம் உடல் நலத்துக்கும், உடல் வலுவுக்கும் இச் சத்து முக்கியமாகத் தேவைப்படுகிறது. ஆனல், இச் சத்து அப்படியே ரத்தத்தில் கலந்து விட முடிகிறதில்லை. நாம் சாப்பிடும் உணவில் உள்ள இச் சத்தோடு வயிற்றில் உள்ள ஒரு வகை ரசாயனப் பொருள் கலக்கிறது. அப்படிக்கலந்தால் அச்சத்து குளுகோஸ் (Glucose) என்னும் ஒருவகை சர்க்கரையாக மாறுகிறது. அந்தக் குளுகோஸ் சர்க்கரைதான் இரத்தத்தில் கலக்கும் இயல்புடையது.

நாம் சாப்பிடும் உணவில் அடங்கியுள்ள கார்போஹைட்ரேட் சத்துக்கள் இவ்விதம் குளுகோஸாக மாறினலும், அந்தக் குளுகோஸ் முழுவதும் இரத்தத்தில் கலந்து விடுவதில்லை. சிறிதளவே கலக்கிறது. இவ்விதம் கலந்ததுபோக அதிகப்படியாக உள்ள குளுகோஸை கிளிகோஜன் (Glycogen) என்னும் ஒரு வகையான கரையாத சர்க்கரையாக மாற்றி கல்லீரல் தன்னிடம் சேர்த்து வைக்கிறது. பிறகு குளுகோஸ் தேவைப்படும்போது இவ்விதம் அது சேர்த்து வைத்துள்ள கிளிகோஜன் குளுகோஸாக மாறிப் பயன்படுகிறது. கல்லீரல் இவ்விதம் தன் காரியத்தைச் சரியாக எக்காரணத்தாலாவது செய்ய இயலாது போனல் அதிகப்படியான குளுகோஸ் கிளிகோஜனுக மாற்றப்படாது குளுகோஸாகவே இரத்த மூலம் மூத்திரக்காயை (Kidney) அடைந்து அங்கிருந்து மூத்திரத்தின் வழியாக வெளியே தள்ளப்படுகிறது. இதையே நாம் நீரழிவு வியாதி என்கிறோம். ஆங்கில வைத்தியர்கள் இதையே கிளிகோசூரியா (Glycosuria) எனச் சொல்லுகிறார்கள். டயாபிடிஸ் என்பது சாதாரண பொதுமக்களிடையே இந்நோய்க்கு வழங்கும் பெயராகும்.

இந்நோய்க்கு ஆங்கில வைத்தியத் துறையில். 1923-ல் டோரொன்டோ (Toronto) விஞ்ஞானிகளான பான்டிங், பெஸ்ட் (Banting and Best) என்னும் இருவர் ஒரு சிகிச்சை முறையைக் கண்டு பிடித்தனர். இன்சுலின் (Insulin) என்ற பொருளை ஊசிமூலம் நோயாளியின் உடலுள் செலுத்துவதே அச்சிகிச்சையாகும். குளுகோஸை மூத்திரத்தோடுவெளியேருது தடுக்கும் ஆற்றல் இன்சுலினுக்கு உண்டு. ஆனல், தினசரி ஊசிமூலம் இன்சுலினை உடலுள் செலுத்திக்கொண்டே இருக்க வேண்டும். இந்தக் குறைபாடால் இன்

சுவின் வைத்திய முறை அவ்வளவு தூரம் பிராபல்யம் அடைய இயலவில்லை.

ஆயுர்வேத சாஸ்திரத்தில் நெடுநாளாகவே இதற்குப் பலவித சிகிச்சை முறைகள் உண்டு. ஆனால், அவையும் அவ்வளவு தூரம் திருப்திகரமான பலன் தருவதாக இல்லை. பழங்களுள் பப்பாளி, கொய்யா, காய் கறிகளுள் பாகல், கொம்புப் புடலை, தானியங்களுள் ராகி ஆகியவை இந் நோயின் உபாதையை குறைக்கின்றன என்பது நீண்ட கால அனுபவம் மூலம் தெரியவந்துள்ள உண்மைகளாகும். சமீபத்தில் ஆயுர்வேதம், அல்லோபதி இரண்டு துறையிலும் புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள நம் இந்திய டாக்டர்கள் சிலர் நீரழிவைக் குணப்படுத்தும் இயல்புடைய இந்திய மூலிகைகள் சிலவற்றைக் கண்டறிந்திருக்கிறார்கள். இவ்விதம் இதுவரை கண்டறியப்பட்டுள்ள மூலிகைகள் ஐந்தாகும். அவையாவன:

(1.) கோவைக்காய்

இதைத் தாவர சாஸ்திரத்தில் Cephalandra Indica, Coccinia Indica எனச் சொல்லுவார்கள். சம்ஸ்கிருதத்தில் பிம்பா, ஹிந்தியிலும், பஞ்சாபியிலும் கந்தூரி, வங்காளியில் தெலகுச்சா, மராத்தியில் பிம்ப, தெலுங்கில் தொண்டகாய என இதற்குப் பெயர்.

லெப்டினண்ட் கர்னல் சோப்ரா எம். டி., ஐ. எம். எஸ். அவர்களும், அவர் உதவியாளர் சிலரும் இதை இரசாயனக் கூறுபாடு செய்ததில் என்ஸைம் (Enzyme) ஹார்மோன் (Harmone) அல்கலாய்டு (Alkaloid) அமிலேஸ், (Amylase) ஆகியவை இதில் அடங்கியிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இதன் இலைச்சாறு, வேரைத் தட்டிப் பிழிந்த சாறு இரண்டிற்கும் நீரழிவைக் குணப்படுத்தும் இயல்பு இருக்கிறது. டாக்டர் ஆர். எம். கோரி, டாக்டர் எம். ஸி. கோஷ் எம். டி, ஆகிய இருவரும் ஏராளமான நீரழிவு நோயாளிகளுக்கு இதைக் கொடுத்து ஏற்கனவேயே வெற்றி கண்டுள்ளனர். இதன் வேர்சாரம் (Tincture of roots) 5–10 துளிகள் வீதம் தினசரி மூன்று வேளை கொடுத்து அவர்கள் அவ்விதம் நற்பலன் கண்டுள்ளனர்.

(2) நாவல்

நாவலில் ஜம்பு நாவல், நரி நாவல், பெரும் நாவல், வெள்ளை நாவல் எனப் பல ஜாதிகள்

உண்டு. இவற்றை முறையே தாவர சாஸ்திரத்தில் Syzgium Cumini, S. Operculatum, S. Jamboo, S. Hemispherium எனச் சொல்லுவார்கள்.

இவற்றில் ஜம்பு நாவல், பெருநாவல் இரண்டின் விதையிலும் வேரிலும் நீரழிவைக் குணப்படுத்தும் பண்பு இருக்கிறது. சரகர், சக்ரதத்தர் உள்ளிட்ட பல ஆயுர்வேத மேதைகள் நீரழிவுக்கு நாவற்கொட்டை நல்லதொரு மருந்து எனக் கூறியுள்ளனர். நம் நாட்டில் பிரபல அல்லோபதி வைத்தியர்கள் பலர், நாவற்கொட்டையைப் பலவிதமாகச் சோதித்து நீரழிவுக்கு அதை மருந்தாக உபயோகிக்கத்தலைப்பட்டிருக்கின்றனர். டாக்டர் ஆர். என். கோரியின் Materia Medica of India Part II, கர்னல் ஆர். என். சோப்ராவின் Indigenous Drugs of India என்ற புத்தகங்களில் நீரழிவுக்கு நாவற்கொட்டையின் உபயோகத்தைப்பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

டாக்டர் போரிக் என்பவர் எழுதியுள்ள அல்லோபதி மெட்டிரீயா மெடிக்கா, பக்கம் 629-ல் நாவற்கொட்டையைப் பற்றி காணப்படும் குறிப்பு பின் வருமாறு:

"டயாபிடிஸ் மெல்லிடஸ் சிகிச்சையில் நாவற்கொட்டை மிகுந்த பயனளிக்கிறது. இதைப் போன்று துரிதமாகவும், நிச்சயமாகவும் நீரழிவுக்கு பலனளிக்கும் மருந்து வேறு எதுவுமில்லை. மூத்திரத்தில் சர்க்கரை அளவை துரிதமாக மட்டுப்படுத்துவதோடு நீரழிவு நோயின் மற்ற இலட்சணங்களையும் மாற்றுகிறது. நாவற்கொட்டையின் சூரணம் வேளைக்கு 10 கிரெய்ன் வீதம் தினசரி மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் இவ்வித நற்பலன் ஏற்படுகிறது. இதன் வேர் கஷாயமும் நல்ல பலன் அளிக்கிறது."

நம் நாட்டில் மட்டுமல்ல; நாவல் வளராத மேல்நாடுகளிலும் கூட பல பெரிய பெரிய மேல்நாட்டு டாக்டர்கள் நீரழிவுக்கு நாவற்கொட்டை, நாவல் வேர் கஷாயம் பிரயோகம் செய்து நல்ல பலன் கண்டிருப்பதோடு வெகுவாக அதைப் புகழ்ந்துமிருக்கிறார்கள்.

(3) கருப்பு மருது

கருப்பு மருது ஒரு காட்டு மரமாகும். அதை ஹிந்தியிலும், பஞ்சாபியிலும் ஆசன், வங்காளியில் பியாசால், மராத்தியில் அஸ்ன, அஸ்ஸாமியில் அமரி, தாவர சாஸ்திரத்தில் Terminalia tomentosa எனக் கூறுவார்கள். நம்நாட்டில் ராஜபுதனம் நீக்கி மற்ற எல்லாப் பகுதிகளிலும் இம் மரம் வளர்கிறது.

இம் மரத்தின் பட்டைக்கு இருதயத்தை பலப்படுத்தும் இயல்புண்டு. பட்டைக் கஷாயத்தால் ஆருத ரணங்களைக்கழுவினால் அவை ஆறுகின்றன. இந்த மரத்தின் கட்டைக்கு நீரழிவைக் குணப்படுத்தும் இயல்பிருக்கிறது. கீழ்க்கண்ட விதம் ஊறல் நீர் தயாரித்துச் சாப்பிட்டால் நல்ல பயன் ஏற்படுகிறது.

நல்ல இருண்ட நிறமுள்ள கட்டையை உரலில் இட்டு இடித்துச் சலித்து தூளாக வைத்துக்கொள்ளவும். தினசரி படுக்கப் போகும்போது இந்தத் தூளில் 2 தோலா நிறுத்தெடுத்து ஒரு கண்ணாடி டம்ளரில் போட்டு அந்த டம்ளரில் வீசம்படி சுடு ஜலத்தை ஊற்றி சுத்தமான மெல்லிய துணி ஒன்றால் அதன் வாயை மூடி அப்படியே வைத்துவிடவும். மறுநாள் காலையில் எழுந்ததும் நீரோடு சேர்த்துப் பவுடரையும் நன்கு பிசைந்து வடிக்கட்டி நீரை மட்டும் பருகவும். இதேபோல் காலையில் இரண்டு தோலா பவுடரை இதேவிதமாக ஊறப்போட்டு மாலையில் வடிக்கட்டிச் சாப்பிடலாம். வியாதியின் கடுமை குறைந்ததும், காலையில் மட்டும் இவ்விதம் சாப்பிட்டால் போதுமானது. இது பலருக்கு நற்பலன் அளித்துள்ள அனுபவ பூர்வமான ஒரு முறையாகும்.

(4) சிறு குறிஞ்சா

இதை சம்ஸ்கிருதத்தில் மேஷசிரிங்கி, ஹிந்தியில் மேராசிங்கி, வங்காளியில் மேஷசிங்கி, மராத்தியில் காவாலி, தெலுங்கில் போதபத்திரி, தாவர சாஸ்திரத்தில் Gymnema Sylvestre எனச் சொல்லுவார்கள்.

இதன் இலைக்கு நீரழிவைக் குணப்படுத்தும் இயல்பிருக்கிறது. இலையில் Anthraquinone Compound அடங்கியிருப்பதாகச் சோதனை மூலம் தெரியவந்துள்ளது. நீரழிவு மட்டுமல்ல, மூத்திர சம்பந்தமான எல்லா நோய்களுக்குமே இதன் இலை ஒரு அருமருந்து என சுசுருதர் கூறியுள்ளார். அவர் நூலில் 'குணமார்' என இதைக் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் நூறாண்டுகளுக்கு முன்பு டாக்டர் எல்வொர்த் (Dr. Elworth) என்னும் பிரபல பிரிட்டிஷ் டாக்டர் ஒருவர் இந்த இலையை மென்றுவிட்டு வாயில் எந்தவிதமான இனிப்பைப் பிறகு மென்றாலும் இனிப்பே இருப்பதில்லை எனக் கண்டார். இதைப் பற்றிப் பிறகு பல டாக்டர்கள் சோதனை செய்ததில் இனிப்பு மட்டுமல்ல, கொய்னா போன்ற மிகக் கசப்பான ருசியும் தெரிவதில்லை என்பது புலனாயிற்று. கர்னல். ஆர். என். சோப்ரா, எம். டி. எழுதியுள்ள Indigenous Drugs of India என்ற புத்தகத்தில் இச் செடியின் அற்புத குணத்தைப் பற்றி பல விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன,

இதன் இலை நீரழிவுக்காரர்கள் மூத்திரத்தில் காணும் சர்க்கரையைக் குறைப்பதோடு மட்டுமல்ல; அவர்கள் பலஹீனத்தையும்

போக்குகிறது. இதன் இலைகளை உலர்த்திச் சூரணமாகச் செய்து வைத்துக் கொண்டு தினசரி நோயின் கடுமைக்கு ஏற்றாற்போல் 30—60 கிரெய்ன் அதாவது 2 - 4 கிராம் சாப்பிட்டு வந்தால் நல்லபலன் ஏற்படுகிறது.

இந்தச் செடி நம் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மலைகள், மேற்குத் தொடர்ச்சி மலை, கொங்கணம், வடகன்னடம், கர்னுடகம், தட்சிண பீடபூமி பகுதியில் மட்டுமே வளர்கிறது. வடநாட்டில் வளர்வதில்லை.

(5) உலத் கம்போல்

இதை ஹிந்தியிலும் வங்காளியிலும் உலத் கம்பல் எனவும், மராத்தியில் உலத் கம்போல் எனவும், தாவர சாஸ்திரத்தில் Abroma angusta என்றும் கூறுவர். இது வடநாட்டில் உத்தரப் பிரதேசம் தொடங்கி அஸ்ஸாமில் காசியா குன்றுகள் வரை 4000 அடிக்குக் குறைவான பகுதிகளில் மட்டும் வளர்கிறது. நம் தமிழ் நாட்டில் எங்கும் வளர்வதில்லை. இது வேண்டியவர்கள் டேராடூன் வன ஆராய்ச்சிக் கழகம், அலிபூர் தாவர சாஸ்திரத்தோட்டம் போன்றவைகளுக்கு எழுதிப் பெறலாம்.

இந்தச் செடியின் வேர்க் கஷாயம் பெண்களுக்குச் சூதக சம்பந்தமான நோய்களைப் போக்குவதோடு கருப்பாசயத்தைப் பலப்படுத்தும் அற்புத இயல்பும் பெற்றிருக்கிறது. ஆயுர்வேத நூல்களில் நீரழிவுக்கு இதை மருந்தாக உபயோகிக்கும்படி எங்கும் கூறப்படவில்லை. ஆனால், பிரபல கல்கத்தா டாக்டரான டாக்டர் டி. என். ராய் எம். டி. (Dr. D. N. Roy, M. D;) முதன் முதலாக இதை நீரழிவுக்குப் பிரயோகம் செய்து பார்த்தார். அற்புதப் பயன் கிட்டியது. அதன் பிறகு கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அவர் ஆயிரக்கணக்கான தன் நோயாளிகளுக்கு இதைக் கொடுத்து நீரழிவைக் குணப்படுத்தியுள்ளார். அவரைத் தொடர்ந்து வேறு பல டாக்டர்களும் இம்முறையைக் கையாண்டு நற்பயன் கண்டுள்ளனர். இதன் வேர்க் கஷாயத்தை (Tincture Ulat Kambol) வேளைக்கு 5-10 துளி வீதம் தினசரி 3 வேளை சாப்பிட்டு வந்தால் மூத்திரத்தில் உள்ள சர்க்கரை குறைகிறது. எரிச்சல் அடங்குகிறது, தாகம் தணிகிறது, உடல் தேறுகிறது.

28565

திரை உலகம்

விச்வம்

விமர்சனம்

ராஜமகுடம்

ராஜமகுடத்திற்காக எத்தனையோ போராட்டங்கள் சரித்திரத்தில் நிகழ்ந்துள்ளன. திரைப்படச் சரித்திரத்திலும் மகுடப் போராட்டக் கதைகளுக்குக் குறைவில்லை. அத்தகைய கதைகளில் ஒன்று வாகினியின் "ராஜமகுடம்."

காந்தார தேச மன்னன் மர்மமாகக் கொலை செய்யப்பட்டுவிடுகிறான். இளவரசன் பிரதாபன் குரு ஆசிரமத்திலிருந்து தலைநகர் வருகிறான். வரும் வழியிலேயே துரோகியின் ஆட்களால் தாக்கப்படுகிறான். அவர்களிடமிருந்து தப்பி நாடோடி வேடம் பூண்டு நகர் வந்து சேருகிறான். தந்தையைக் கொன்றதும், தன்னைத் தாக்கியதும் சித்தப்பாவும் சேனாதிபதியுமான பிரசண்டன் சூழ்ச்சிதான் என்பதைத் தெரிந்துகொள்கிறான். நேரடி நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும்போது தாயின் விவேகம் குறுக்கிடுகிறது. நாடு முழுவதும் பிரசண்டன் கையிலிருக்கும் போது துரோகத்தைத் தந்திரத்தாலும் பொறுமையாலுந்தான் வெல்ல முடியும் என்று போதிக்கிறாள் தாய்.

பிரதாபனுக்கு மகுடாபிஷேகம். பிரதாபனைக் கொல்லும் நோக்கத்தோடு அவன் பானத்தில் விஷம் கலந்துவிடுகிறான் பிரசண்டன். ஒருவருக்கும் தெரியாமல் விஷப் பானத்தைக் கொட்டிவிட்டு, குடித்ததாக பாவனை செய்து பைத்திய வேஷம் போடுகிறான் பிரதாபன்.

இளவரசன் பிரதாபன் பெயரால் பிரசண்டன் மக்களைக் கொன்று குவிக்கிறான். மக்கள் இளவரசனுக்கெதிராகப் புரட்சி செய்கின்றனர். அரண்மனையில் பைத்திய வேஷம் போடும் பிரதாபன், மாறுவேஷத்தில் புரட்சிக் கூட்டத்தில் புகுந்து அதன் தலைவனாகிறான். அக்கூட்டத்தில் உள்ள பிரமீளா என்ற பெண்ணின் காதலையும், அதன்மூலம் பழைய தலைவன் பொறாமையையும் பெறுகிறான். முகமூடியணிந்து கருநாகம் என்ற புனைபெயரில் பிரசண்டனை எதிர்க்கிறான்.

மைனாவதி யாருக்கோ வலை வீசுகிறார்

இப்பேர்ப்பட்ட கதைகளின் முடிவுதான் தெரியுமே. பொல்லாதவனுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி; நல்லவர்களுக்குச் சோதனை மேல் சோதனை. கடைசியில் தீமை ஒழிந்து நன்மை நாடாளுகிறது.

கதையின் கருத்து பழமையானதுதான். ஆனால், திருப்பங்கள் முற்றிலும் புதியவை. மர்மமும் (Suspense) ஆச்சரியமும் (Surprise) நிறைந்த கதைத் தொகுப்பு. புதுமையான குண விசேஷங்கள் நிறைந்த கதா பாத்திரங்கள். (குறிப்பாக பிரசண்டன், பிரமீளா, புரட்சித் தலைவன், கதாநாயகனின் தாய்.)

பிரசண்டனாக ஸ்ரீ எஸ். வி. சகஸ்ரநாமம் நடிக்கிறார். மன்னிக்கவும், நடிக்கவில்லை. பிரசண்டனாகவே வாழ்கிறார். “நான் பொல்லாதவன்; என்னைக் கண்டு எல்லோரும் பயப்படவேண்டும்” என்று முத்திரை குத்திக் கொண்டதுபோல எப்பொழுது பார்த்தாலும் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக்கொண்டு, விரைந்து நடந்து கொண்டு, முறைத்துப் பார்த்துக்கொண்டு, வசனங்களை கர்ஜிக்கும் முத்திரை வில்லனில்லை. கனிந்த பேச்சு, அதற்குள் 'கல்மிஷமான திட்டம்; உதட்டில் குறுநகை; உள்ளத்தில் பெரும்பகை; சாதுபோல் வேடம் போட்டு சாகசச் செயல் புரியும் வில்லன். பேசாமல் நடிக்கும் சில கட்டங்கள் அபாரம். வில்லன் நடிப்புக்கே ஒரு புரட்சி, ஒரு இலக்கணம் சகஸ்ரநாமத்தின் நடிப்பு. சுருக்கமாக ஷேக்ஸ்பியரின் 'இயாகோ' நினைவுக்கு வருகிறது. இத்தகைய நடிப்பு தமிழ்த்திரையில் இடம்பெற்றுவிட்டதே ஒரு சாதனை.

பிரமீளாவாக ராஜசுலோசனா வெகு அற்புதமாய் நடித்துள்ளார். முரட்டுத்தனமும் உள்ளக் கனிவும் ஒருங்கே அமையப்பட்ட பாத்திரம், வெற்றிதான்.

புரட்சித் தலைவனாக பாலாஜி, பாராட்டும் அளவுக்கு நடித்திருக்கிறார். இன்னும் கொஞ்சம் லாகவம் தேவை.

கண்ணாம்பாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ராஜமாதாவின் பாத்திரம் வழக்கம் போல் கதறும் பாத்திரமல்ல. கடைசிக் கட்டத்தில் கதறினாலும் முன் பகுதியெல்லாம் குணச்சித்திரமே.

கதாநாயகன் என். டி. ராமராவ் நடிப்பு கனகச்சிதம். பைத்திய வேஷம் போட்டு கோமாளிக் கூத்தடிப்பது சிரிப்பூட்டுகிறது; இடையே வீராவேசங்கொண்டு சவால் விடுவது மயிர்க்கூச்செறிகிறது; காதல் கட்டங்கள் வழக்கம்போல்; சண்டைக் கட்டங்கள் வெகு இயற்கை. அவருக்குக் குரல் தானங் கொடுத்திருப்பவர் சில இடங்களில் பிசிறடிக்க அலறியிருக்க வேண்டியதில்லை.

மகாலிங்கத்தோடு நாட்டியமாடுவது
வேறு யாருமில்லை; குலதெய்வந்தான்.

வில்லன் மகன் பகிரங்கமாக வந்து ராஜ மகுடத்தை அடையத் துடிக்கும் ராஜ கோபால் கோமாளியா? காரியவாதியா? தவறு நடிகருடையதா? பாத்திரத்தினுடையதா? புரியவில்லை.

வாகினியின் வெற்றிச் சின்னத்தில் கறை பட்டுவிட்டது. காதல் வளர்த்தி நீட்டப் படவில்லை; காமங்கூட அளவோடு கண்ணியத்தோடு இருக்கிறது; சண்டையில் அசம்பாவிதமில்லை; காமிக் காதல் ஜோடியில்லை; வில்லனின் வீர கர்ஜனையில்லை; பொதுவாக திரையுலகின் காலப்போக்கையும், "விசிலடிச்சான்"களுக்கு என்ன தேவை என்பதையும் மேதை ஸ்ரீ பி. என். ரெட்டி புரிந்துகொள்ளாததுதான் கறை.

ஜலக்கடலோரம் ஜனக்கடல்

கிழக்கே ஜல அலை! மேற்கே ஜனத்தலை! மார்ச்சு மாதம் 20உ திருவல்லிக்கேணி கடற்கரையில் கூடியிருந்த ஜனக்கூட்டம் உண்மையில் ஜனக்கடல்தான்!

முதல் முழக்கம் செய்த வீரபாண்டிய கட்டப்பொம்மன் வரலாற்றைப் படமாக்கி வெற்றி முழக்கமும் செய்த பத்மினி பிக்சர்சின் அதிபர் டைரக்டர் நடிகர் ஸ்ரீ டி. ஆர். பந்துலு, நடிகர் திலகம் ஸ்ரீ சிவாஜி கணேசன் ஆகியவர்கள் சமீபத்தில் எகிப்து சென்று வெற்றி வாகை சூடியது உலகமறிந்ததே. அவர்களுக்குப் பாராட்டு விழா சென்னைக் கடற்கரையில் நடந்தது.

நடிகர் திலகம், ஸ்ரீ டி. ஆர். பந்துலு, திருவாங்கூர் சகோதரிகள் பத்மினி, ராகினி, இசை டைரக்டர் ஸ்ரீ ஜி. ராமனாதய்யர் ஆகியவர்கள் பாராட்டப்பட்டார்கள்.

உள்ளன்போடு கலைஞர்களை வரவேற்று, உவகையோடு பாராட்டிப் பேசினர் பலர்.

பழம் பெரும் நடிகர் ஸ்ரீ தியாகையா—ஆம் நாகையாவைத்தான் குறிக்கிறேன்—கலைஞர்களைப் பாராட்டினார். நடிகர் திலகத்திற்கும் பத்மினி, ராகினி சகோதரிகளுக்கும் தந்தை போலும், தாய்மாமன்போலும், ஆசிர்வாதம் பொழிந்தார்.

ஸ்ரீ ஜெமினி கணேசன் சார்பில் ஸ்ரீமதி சாவித்திரி கணேசன் பேசினார். "என்னென்னவோ சொல்லவேண்டும் என்று திட்டம் போட்டேன். ஆனால், ஒன்றும் சொல்ல வரவில்லை" என்றார். எத்தனை உண்மையன்பு சிவாஜி அண்ணாவிடம்!

ஸ்ரீமதி சௌந்திரம் கைலாசம், ஸ்ரீ சாரங்கபாணி, ஸ்ரீ ஏ. கே. வேலன், ஸ்ரீ கே. ஏ. தங்கவேலு, ஸ்ரீ கே. ஆர். இராமசாமி, ஸ்ரீ ராமையா, சிலம்புச் செல்வர் முதலியோர் புகழ்மாலை குவித்தார்கள். ஒவ்வொரு வார்த்தைக்கும் ஜனக்கடல் எழுப்பிய கரகோஷமும், ஆரவாரமும் ஜலக்கடலலையைத் தோற்கடித்தன.

கடைசியில் நடிகர் திலகம் பேசினார். சிம்மக்குரல் எழுப்பவில்லை, வீர கர்ஜனை புரியவில்லை. அடக்கமே உருவாக, பண்பே வார்த்தைகளாகப் பேசினார். புகழ்மாலைக் குவியலில் சிக்கித் திணறும்போது வேறு என்ன செய்யமுடியும்?

"வெற்றி எட்டுத் திக்கும் எட்ட கொட்டு முரசே" என்று பாடினார் பாரதியார். சிவாஜி கொட்டியேவிட்டார்.

கலைமகள் பிக்சர்ஸ்: ... ... கனவு பலித்ததம்மா:

ஜாவர் சீதாராமன் கதை வசனம் எழுதும் இப்படத்தில் டி. ஆர். மகாலிங்கம், ஜாவர், எஸ். வி. சகஸ்ரநாமம், கண்ணாம்பா, பண்டரிபாய், மைனாவதி, குலதெய்வம் ராஜகோபால் முதலியவர்கள் நடிக்கிறார்கள். மைனாவதி மாறுபட்ட குண விசேஷமுடைய இரு பாத்திரங்களில் சக்கைபோடு போடுகிறார்.

Edited & Published by N. R. Ramanujan, B. A. & Printed by S. Rangaswami, B. A., at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

குடும்பத்தில்
உள்ள
ஒவ்வொருவருக்கும்
நல்லது

கிருமி நாசினியான வேப்ப எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்டதும், மனோகரமான மணம் தருவதுமான மார்கோ மிக மெல்லிய சருமமுடையவர்களுக்கும் உத்தமமானது. மார்கோ சோப்பின் இளகும் சத்து நிறைந்த நுரை சரீரத்தின் துவாரங்களில் ஆழமாகப் புகுந்து சென்று, சருமத்திலுள்ள எல்லா அழுக்குகளையும் போக்கி சுத்தப்படுத்துகிறது. இதன் தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் சோதிக்கப்பட்டுள்ள மார்கோ சோப் உங்களுக்கு அதிக சுகத்தையும், நாள்முழுதும் அதிகத் தூய்மை உணர்ச்சியையும் அளிக்கிறது.

மார்கோ சோப்

குடும்பத்துக்கு உத்தமமான சோப்

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட். கல்கத்தா-29

CMC-15 TM

JEYRAD
RADIO



எங்கும் எப்பொழுதும் குதூகலமளிப்பது ஜெராட் ரேடியோ

மாடல்-A 96

6-வால்வுகள் – AC–ஆல்வேவ் 3-பாண்ட்கள்

நிகர விலை ரூ. 295/- (உள்ளூர் வரிகள் தனி)

தயாரிப்பவர்கள் :

ஜெராட் எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரீஸ்,
38, தங்கசாலை வீதி, மதராஸ்-3

அத்தாக்ஷி பெற்ற விற்பனையாளர்கள்:

திருவாரூர்: பாலன் எலக்ட்ரிகல்ஸ், விஜயபுரம்
தஞ்சாவூர்: ரேடியோ ஹவுஸ், கீழராஜ வீதி
திருச்சி: ரேடியோ ஹவுஸ்

சுபிக்ஷத்தின் ராஜபாட்டையில் ஒரு கிராமத்தின் தோற்றம்

சென்ற கோடையில் *சமர்கோபால்பூர் கிராமத்திலிருந்து ஒரு உற்சாகமூட்டும் செய்தி கிடைத்தது. அதாவது தேசீய சேமிப்பின் சரித்திரத்தில் ஒரு மகத்தான சாதனையை அக் கிராமம் சாதித்துள்ளது. தங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள் சிறந்து விளங்க, புகழத்தக்க விவேக தேசாபிமானமும், உள்ளூர் நபரின் திறமையான தலைமையில் நிர்வாகமும், சுய உதவி, கூட்டுறவு ஊக்கமும் ஏற்கனவே அக் கிராம மக்களிடம் அதிகமாக இருந்ததால், சேமிப்புப் பணியில் அவர்கள் முழு முயற்சியுடன் ஈடுபட்டனர். மொத்தம் 94,000 ரூபாய் வசூல் செய்து மற்ற பஞ்சாப் கிராமங்களில் ஆன வசூலை முறியடித்தனர். 415 குடும்பங்களில் 397 குடும்பங்கள் சேமிப்புப் பணியில் ஈடுபட்டன. ஒவ்வொரு ஆண், பெண், குழந்தையும் தங்கள் தங்கள் பங்கை நிறைவேற்றினர். லம்பர்தாரின் மனைவி 6000 ரூபாய் மதிப்புள்ள தன் நகைகளை தேசீயத் திட்ட சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்ய அளித்தது இந்த வெற்றிச் செய்தியின் சிகரமாக விளங்கியது.

பின்பற்ற ஒரு உதாரணம்

* சமர்கோபால்பூர்
ரோதக் ஜில்லா, பஞ்சாப்
ஜனத் தொகை: 2668. அநேகமாக ராஜபுத்திரர்கள்.
மொத்த விஸ்தீர்ணம்: 5418 ஏக்கர்.
விளைச்சல் நிலம்: 4558 ஏக்கர்.
பாசன வசதி உள்ளது: 1945 ஏக்கர்.
முக்கியப் பயிர்கள்: கோதுமை, பருப்புவகை, சோளம், கம்பு, கரும்பு, அமெரிக்கப் பருத்தி முதலியவைகள்.
இரண்டு டிராக்டர்கள், மாதிரிப் பண்ணைகள், 85 எருக் குழிகள், 6 பாசனக் கிணறுகள் மற்றும் திருந்திய விவசாய முறை ஆகிய அபிவிருத்தி வசதிகளை அக் கிராமம் அடைந்துள்ளது.

உங்கள் சேவை
நாட்டிற்குத் தேவை
சேமித்து
செழுப்படையுங்கள்
தேசீய
சேமிப்புப் பத்திரங்களில்
முதலீடு
செய்யுங்கள்

தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

DA 59/581